

# அருந்தவம்

கந்தையா அருந்தவபாலன்

மணிவிழாச் சிறப்புமலர் - 2016

# அருந்தவம்

## மணிவிழா மலர்



2016

# அருந்தவம்

# மணிவிழா மலர்

**வெளியீடு**
மணிவிழாக்குழு

**பதிப்பாசிரியர்கள்**
**ச. லலீசன்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.
**அ.அகிலதாஸ்,**
பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணக் கல்வி வலயம்.

**வடிவமைப்பும் அச்சுப்பதிப்பும்**
கரிகணன் (தனியார்) நிறுவனம்
இல.681, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**பக்கங்கள்**
198

இந்த மலரில் வெளியிடப்பட்டிருக்கும் கட்டுரைகள் மற்றும் ஆக்கங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களுக்கு அவற்றை ஆக்கியோர்களே பொறுப்புடையவர்கள்.

# உள்ளே...


## 1. ஆசியியல் 01-09

- நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்
- வதிவிட ஆச்சாரியார், சின்மயா மிஷன்
- சிவஸ்ரீ க. கிருபானந்தக்குருக்கள்
- அருட்பணி ப. யோ. ஜெபரட்ணம்,
- அருட்தந்தை யோ. பிரான்சிஸ்
- அருட்பணி நே. து. ஜெயநேசன்
- மௌலவி M. H. M. ஹஸ்ஸான்
- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

## 2. வாழ்த்தியல் 10-63

- பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன், (எதிர்க்கட்சித் தலைவர்)
- பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சோ. சேனாதிராசா
- பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்
- நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன், முதலமைச்சர், வடமாகாணம்.
- சீ. வீ. கந்தையா சிவஞானம், அவைத்தலைவர், வடக்கு மாகாணசபை.
- அமைச்சர் த. குருகுலராசா
- அமைச்சர் பொ. ஐங்கரநேசன்
- வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா
- சட்டத்தரணி கேசவன் சயந்தன்
- தமிழ் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
- அரசாங்க அதிபர் நா. வேதநாயகன்
- துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் (செல்வி) வசந்தி அரசரட்ணம்
- பௌதிக பேராசிரியர் க. கந்தசாமி
- பேராசிரியர் தி. வேல்நம்பி
- பேராசிரியர் பசுபதி சிவநாதன்
- ஓய்வுபெற்ற ஆசிரியர் இ. நந்தகுமாரன்
- பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்
- பேராசிரியர் மா. சின்னத்தம்பி
- பொருளியல் துறை தலைவர் திரு. சிதம்பரநாதன் உதயகுமார்
- கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன்
- மாகாணக்கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார்
- தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார்
- தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ. சாந்தசீலன்
- வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் க. கனகேஸ்வரன்
- மாவட்டச் செயலகக் கணக்காளர் செ. ரகுநாதன்
- தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச. அமிர்தலிங்கம்
- யாழ்ப்பாணக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. அகிலதாஸ்
- சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் வ. நடராசா
- இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் சரா. புவனேஸ்வரன்
- இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின்

- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் ஐ. தயானந்தராஜா
- யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் ந. ஜெயகுமாரன்
- கிராமியக் கல்வி அபிவிருத்தி நிறுவனப் பொருளாளர் இ. குணநாதன்
- மாநகரசபை கணக்காய்வுப் பரீட்சகர் திருமதி விஜயஸ்ரீ பிறேமதாஸ்
- சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் ந. சிவபாலன்
- வடமாகாண மனித உரிமைப் பணிப்பாளர் கலாநிதி வை. சிவராசா
- ஓய்வு நிலை ஆசிரியர் ஐ. கமலநாதன்
- திருக்கணித முகாமையாளர் கா. சிவஞானசுந்தரம்
- கவிஞர் த. நாகேஸ்வரன்

## 3. பதிவியல் 64-100

- திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்களின் வாழ்க்கைத் தடத்திலிருந்து...
- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் மு. நாகேந்திரராசா
- யாழ். கல்வி வலயம் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. அ. அகிலதாஸ்
- வடமாகாண சிரேஷ்ட பள்ளிக் கல்வியியலாளர் ஒன்றியச் செயலாளர் ச. சிவனேஸ்வரன்
- பிரதேச செயலர் காரைநகர் திருமதி. தேவந்தினி பாபு
- யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் அ. கயிலாயபிள்ளை
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுநிலை உதவிப் பதிவாளர் யோகேஸ்வரன் ஜெயக்குமார்
- சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் நடராசா சர்வேஸ்வரன்,
- கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன்
- லயன் மருத்துவர் க. சி. அருளானந்தம்
- தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் மு. ஆனந்தராசா
- இலங்கை திறந்தபல்கலைக்கழகப் பிராந்திய உதவிப்பணிப்பாளர் கிருஷ்ணபிள்ளை கந்தவேள்
- யா / கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலை அதிபர் ஆ. தங்கவேலு
- தென்மராட்சி இலக்கிய அணி அமைப்பாளர் அ. கம்பநேசன்
- யா / டிறிபேக் கல்லூரி மாணவி (உ/த 2017) செல்வி பவித்ரா குகனேஸ்வரன்

## 4. பொதுவியல் 101-189

- கலாநிதி செல்லத்துரை சேதுராஜா
- தீவகக் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொன்னம்பலம் அருணகிரிநாதன்
- தென்மராட்சி ஓய்வுநிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பி. முத்துலிங்கம்,
- பகுதி நேர விரிவுரையாளர் மு. வரதராஜன்
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறை தலைவர் சிதம்பரநாதன் உதயகுமார்
  ஆசிரியர் திருமதி கௌதமி உதயகுமார்
- கலாநிதி செ.சந்திரசேகரம்
- பொருளியல் ஆசிரியர் வே. கருணாகரன்
- Senior Lecturer V.Paranthaman,
- அபிவிருத்தி உத்தியோகத்தர் சி. மதீஸ்வரன்
- Dr.S.K.Kannathas

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.

தொலைபேசி: 021 222 2870

## ஆசிச்செய்தி



கல்வி சார் பெருந்தகையீர், திரு. க. அருந்தவபாலன் இன்று மணிவிழாக் காண்பதையிட்டு மன மகிழ்ச்சியடைகின்றோம். எல்லோருக்கும் கல்வி என்னும் வகையில் நீண்ட காலமாகக் கல்விப் பணியாற்றி பல பாடசாலைகளில் கல்விப் பணிக்குப் பல சாதனைகளைப் படைத்தமை இறைவனுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. மனித வாழ்வின் கல்வியே கண்ணெனத் தகும் என்னும் வாக்குக்கு அமைய ஒழுக்கமான கல்விக்கும், உயர்வான கல்விக்கும் ஆசிரியனுடைய பணி மிக மகத்தானது. இவ்வரிசையில் அருந்தவபாலனுடைய பணி தரமான மாணவர்களை உருவாக்குவது சிறப்பாக அமைந்துள்ளது.

இன்று மணிவிழாக் காணும் திருவாளர் அருந்தவபாலன், கல்விக்கும் ஏனைய சமய, சமூகப் பணிகளுக்கும் தன்னை ஈடுபடுத்த இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். மணிவிழா நாயகனை வாழ்த்தி விழா எடுக்கும் அன்பு உள்ளங்களை வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்

CHINMAYA MISSION OF SRI LANKA
(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
32, - 10TH LANE, COLOMBO 03, SRI LANKA TEL : + 94 11 2591344
SHRI BHAKTA HANUMAN TEMPLE & ASHRAM, WAVENDON HILLS, RAMBODA, SRI LANKA. TEL : +94 52 2259645.
web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org


# ஆசிச்செய்தி



சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் ஆசிரியர், பிரதி அதிபர், அதிபர் எனத் தொடர்ந்து 1990 ஆம் ஆண்டில் இருந்து சேவையாற்றி. பின்பு தென்மராட்சிக் கல்வி வலயத்தில் கடமையாற்றி, இம் மாதம் 18 ஆம் திகதி ஓய்வு நிலையை அடைய உள்ள திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் கல்விப் பணியுடன் பல சமூகஞ்சார் பணிகளையும் மேற்கொண்டுள்ளமை அவரது சேவை மனப்பான்மையைக் குறித்து நிற்கின்றது.

அத்துடன் போதைப் பொருள் விழ்ப்புணர்வு மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமையத்தின் (Dasco) தலைவராகவும் மற்றும் பல கல்வி, கலாசார பண்பாட்டு, சமூக மேம்பாட்டு அமைப்புகளுக்கு உந்து சக்தியாகவும் நிகழ்ந்து வருவது பெருமைக்குரிய விடயம். இப்படிப்பட்ட சிறப்புக்களையும், பெருமைகளையும் உடைய இவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து, ஈழத்தமிழர்களுக்கான விடிவுக்கு ஒரு விடிவெள்ளியாகத் திகழ, அதன் மூலம் தன்னுள் இருக்கும் அளப்பரிய ஆற்றலை உணர வாழ்த்துகின்றோம்.

மேலும் மணிவிழா சிறக்கவும், மணிவிழா நாயகனின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் ஆசிவேண்டி எல்லாம்வல்ல பரம் பொருளையும் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரையும் பிரார்த்திக்கின்றேன்.

இறைபணியில்,
தீர்க்க ஆயுஷ்மான் பவ!

**பிரம்மசாரி ஜாக்ரத சைதன்யா,**
வதிவிட ஆச்சாரியார், சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்.


**Resident Acharyas** : Br. Darshan Chaitanya , Br. Jagrat Chaitanya and Bramacharini Mahima Chaitanya
**Committee:** Mr.S.Mahenthiran(President), Mr.S.Balasubramaniam (Vice President), Mr.Lasantha Salgado (Secretary), Mr.M. Gopalakrishnan(Treasurer), Mr.T.Someswaran, Mr.T.Vimalendran, Mrs.M.Mody, Mrs.S.Duraiswamy, Mr.C.Rajadurai, Mr.S.Rajendran, Mr.K.Nadesan, Mr.S.Selvarajah, Ms.S.Sivagnanasunderam, Mr.T.Parthiban, Mr.K.Ketheeswaran,

# ஆசிச்செய்தி



இலங்கையில் கற்காலப் பண்பாட்டு யுகத்தினை முடிவுறுத்திச் செப்புக் காலத்தையும் இரும்புக் காலத்தையும் குறிக்கும் பெருங் கற்கால யுகத்தினைத் தொடக்கி வைத்தவர்கள் குமரிக்கண்டத்து நாவலந்தீவைச் சார்ந்த புராதன தேசிய இனமான நாகர்கள் என அழைக்கப்பட்ட தமிழர்களேயாவர். பண்டுதொட்டுக் கல்வியின் முக்கியத்துவத்தைப் போற்றிய தமிழர் வழிவந்தவரான திருவள்ளுவர்,

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே உலகுக்கு உணர்த்தியுள்ளார். அந்த வகையில் இன்னாளில் மணிவிழாக் காணுகின்ற திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் தான் கல்விச் செல்வத்தைப் பெற்றுக் கொண்ட சொந்த ஊரைச் சார்ந்த அறிவாலயங்களின் பக்தர்களை மாணவச் செல்வங்கட்குக் கல்விச் செல்வத்தை மீள அளிக்கின்றதான மகத்தான சேவையைச் சுமார் மூன்று தசாப்தங்கட்கு மேலாகச் செய்து கொண்டிருக்கின்றார். அவரது சேவை இன்றியமையாததும் காலத்தின் கட்டாயத்தேவையுமாகும். அந்த வகையில் உதாரணபுருஷராகத் திகழும் திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கட்கு மணிவிழா எடுப்பது மிகவும் சாலச் சிறந்ததாகும். அந்த வகையில் குறித்த மணிவிழாக் குழுவினரைப் பாராட்டுவதுடன், இவ்விழா நாயகனான திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் தமது குடும்பத்தினர் சகிதம் நீடூழி வாழப் பிரார்த்தித்துப் பாராட்டி, ஆசிகூறி, வாழ்த்தி அமைகின்றேன்.

"சர்வ ஜனஹா சுகினோபவந்து"

**சிவஸ்ரீ க. கிருபானந்தக்குருக்கள்**
தலைவர்,
அகில இலங்கைச் சைவக்குருமார், அர்ச்சகர் சபை,
தலைவர், யாழ் மாவட்ட சர்வமதக் குழு.

## ஆசிச்செய்தி



மணிவிழாக் காணும் கல்வியியலாளர் திரு. க. அருந்தவபாலன் அவர்கட்கு இறையாசியுடன் கூடிய என் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக சாவகச்சேரியின் புகழ் மிகு டிறிபேர்க் கல்லூரியில் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக அர்ப்பண மிகு பணியாற்றி இன்று தென்மராட்சிக் கல்வி வலயத்தில் பதவிநிலை அலுவலராகப் பணியாற்றும் திரு. க. அருந்தவபாலன் அவர்கள் கல்விக்காகவும், சமூக நீதிக்காகவும் தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர். அவரது தூர தரிசனம் மிக்க சிந்தனைகள், அன்பான அணுகுமுறைகள், நீதிக்காகக் குரல் கொடுக்கும் பாங்கு, சிறப்பான தலைமைத்துவ ஆளுமை, ஆழமான தமிழ் தேசிய உணர்வு இவையனைத்தும் அவரை சமூகத்தில் மேன்மையுற வைத்துள்ளன.

மக்கள் மனதினை வென்றெடுத்த மக்கள் பணியாளன் அருந்தவபாலன் அவர்கள் பணிவோய்வு பெற்றாலும் அவரது பணிகளுக்கு முடிவில்லை. எனவே இத்தருணத்தில் அவர் நலமுடன் வளமுடன் - சிறப்புடன் வாழ வாழ்த்துவதுடன் இவரது குடும்பத்தினரையும் இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**அருட்பணி ப. யோ. ஜெபரட்ணம்,**
குருமுதல்வர்,
யாழ். மறைமாவட்டம்.

# ஆசிச்செய்தி



"கல்வி உயிரினும் ஓம்பப்படும்"

ஈழத்தின்வடபால்பலவளங்களும், பூக்கனிகளும்நிறைந்ததென்மராட்சியின், யாழ்/ நுழைவாயிலில் அமைந்துள்ள, கிராமத்தின் நுணாவில் பகுதியில் நீண்டதொரு பாரம்பரிய பரம்பரை கொண்டு வாழ்ந்து கல்விப்பணி, சமூகப்பணி, மனிதநேயப்பணி பல புரிந்து மணிவிழாக் காணும் அன்புக்கும் பெரு மதிப்பிற்கும் உரிய திரு. க. அருந்தவபாலன் அவர்களை இந் நன்நாளில் வாழ்த்துவதிலும் இறையாசீர் வேண்டுவதிலும் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்வியின் நல்லதோர் ஆசானாக மனித நேயத்துடன் ஒழுக்கம் நிறைந்த உருவாக்கத்திற்கு நல்லதோர் குருவாக அன்பொழுகப் பண்புடன் எல்லோரையும் கனம் பண்ணி கனிவுடன் கருத்துரைக்கும் சான்றோனாகக் கல்லூரியே கண்கண்ட தெய்வமாக, கண்மணிபோல் கல்லூரி மாணவச் செல்வங்களைக் கருத்துடன் கண்காணித்து அவர்களின் பிற்புலம் அறிந்து வாழ்வில் அவர்கள் செழித்திட உழைத்திட்ட உத்தமரை! ஆலய விழாக்களில் மாணவச் செல்வங்களின் ஆற்றல்களைக் கணக்கிட, நேரம் காலம் பாராது கண்விழித்து களிப்புடன் அவர்கள் மனம் மகிழ்ந்திட கண்டு களித்திடும் சேவைச் செம்மலே தமிழ் இனத்தின் இதயத்துடிப்பாய் போரின் வடுக்களைத் தாங்கி நிற்கும் கொள்கைப் பிடிப்பாளரே! கருத்தாழம் மிக்க பேச்சும் நாபுரளா வாக்கும், ஒழுக்கம் நிறைந்த நல் வாழ்வும் நிறைந்த உத்தமரை! இத்தகைய தகைமைகளின் மணி மகுடமாக விளங்கும் மணிவிழா நாயகன் திரு. க. அருந்தவபாலன் அவர்களை இன் நன்நாளில் இறையாசீர் வேண்டி நல்வாழ்த்துக்கள் கூறி நிற்கின்றேன்.

**அருட்தந்தை யோ. பிரான்சிஸ்**
புனித லிகோரியாஸ் ஆலயம்,
சாவகச்சேரி.

# ஆசிச்செய்தி



எண்ணென்று சொல்லப்படுவதும் எழுத்து என்று சொல்லப்படுவதும் இவ்வுலகில் வாழும் மக்களுக்குக் கண்ணென்று வள்ளுவப்பெருந்தகை கூறுகிறார். உலகில் மனிதம் மாண்புறக் கல்வி என்னும் கண் சிறப்புப் பெறுகிறது. இச்சிறப்பை அறிபவர்கள் குருவாகப் போற்றப்படுகின்றனர். அவ்வாறு போற்றுதற்குரியவராய் மதிப்புக்குரிய திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் விளங்குகிறார். தனது மேன்மை மிக்கப்பணியில் ஆசிரியர், அதிபர் என்ற நிலையில் சேவைசெய்து பல மாணவர்களை உலகின் கண்களாக்கியிருப்பது மேன்மையே.

இறைபற்றுடையவராய் இருந்து எல்லாரும் விரும்பத்தக்க திறமை வாய்ந்த ஆளுமை உடையவராய் தன் சேவைக்காலத்தை முடித்து நிற்பது நம் எல்லோருக்கும் மகிழ்வானது மாத்திரம் அல்ல, இறைவன் கொடுத்த மேன்மைமிக்க பணியைச்செய்து நிறைவுசெய்வதானது இறைவன் அடையும் மகிழ்ச்சியாகும். எனவே நீண்ட ஆயுளும், ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் பெற்று வாழ இறைவன் அருள் புரிவராக.

**அருட்பணி நே. து. ஜெயநேசன்**
தென்னிந்திய திருச்சபை,
சாவகச்சேரி.

# ஆசிச்செய்தி



யா/ சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்களினது பணியினைப் பாராட்டி வெளியிடும் நூலுக்கு ஆசியுரை எழுதச் சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

எமது பிரதேச மாணவர்களை வழப்படுத்துவது ஆசிரியர்களது பாரிய பொறுப்பும் கடமையுமாகும். இவ் ஆசிரியர்களை வழிப்படுத்தி யா/ சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் வளர்ச்சிக்கும் அதனோடிணைந்த பிரதேச வளர்ச்சிக்கும், அதிபராக மட்டுமல்லாது பல வழிகளிலும் திகழ்ந்தவர் திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் என்றால் மிகையாகாது.

கல்வி கற்ற பாடசாலையிலேயே ஆசிரியராக, அதிபராகப் பதவியுயர்வு பெற்று ஓய்வு பெறும் இவருக்கான நூல்வெளியீடு, காலத்தின் கட்டாயமாகும். இவரை வாழ்த்துவதோடு இம்மலர் சிறப்புற அமைய எல்லாம்வல்ல அல்லாவினை வேண்டுகின்றேன்.

**மௌலவி M. H. M. ஹஸ்ஸான்**
முகைதீன் ஜும்மா பள்ளி வாசல்,
தனங்களப்பு வீதி,
சாவகச்சேரி.

# ஊருக்குத் தொண்டாற்றும் உயர்ந்த அன்பன்



உலகுய்ய அறிவுலகில் எழுச்சி ஓங்க
உதித்தபெரும் சூரியனாய் இளையோர்தம்மை
வலம் வந்து காத்திட்ட வல்லானுக்கு
வயதாகி மணிவிழாவைக் காணும் செய்தி
உளம் சேரப் பேருவகை வந்ததம்மா!
ஒப்பற்ற மணிவிழாவும் உயர்க! என்றே
நலம் மிக்க கம்பனவன் தாள்கள் பற்றி
நட்போடு வாழ்த்துகிறேன் நலங்கள் ஓங்க!

ஒப்புக்கு தொழிலாக பலரும் இங்கே
ஒரு பயனும் இல்லாமல் இளையோர்தம்மை
தப்புக்கு வழிகாட்டி கல்வி சொல்லித்
தவறாக வழிநடாத்தும் கொடுமை கண்டோம்
நட்புக்கு உரியரென இனமே காட்டி
நல்லவராய் மாணவரை ஈர்த்து, உண்ட
உப்புக்கு நன்றிதனை மறவா நின்று
உயர்த்துகிற பெருமனிதன் நிலைத்து வாழ்க!

கூர் மூக்கு நிமிர்ந்த நடை கொள்கை தன்னில்
குன்றாது நிலைநிற்கும் உயர்ந்த நோக்கு
ஆருக்கும் அஞ்சாமல் அயர்வே இன்றி
அசையாது நடக்கின்ற அரிய போக்கு

பேருக்கு எத்தொழிலும் செய்யாமற்தன்
பேர் பதித்த அறிவாளன் பேணிக் காத்து
ஊருக்கும் தொண்டாற்றும் உயர்ந்த அன்பன்
ஒப்பற்ற அறிவோன்தன் உயர்வு ஓங்க!

மல்லாலே வதைபட்டு போரில் மாண்டு
மனம் நொந்து வாழ்விழந்து நின்றார்தம்மை
எல்லோரும் கைவிடுதல் தகுமோ? என்று
எழுச்சியுடன் தன் தொழிலை எடுத்து வீசி
வல்லாராய் அரசியலில் புகுந்தே எங்கள்
வாழ்வுயர்த்த வந்தவரின் பெருமை என்னே!
பல்லாண்டு அவர் வாழ்ந்து பயனே செய்க!
பண்புடையார் பல வெற்றி கொண்டே வாழ்க!

பாராளு மன்றுக்குள் இவரே வந்து
பலருக்கும் வாழ்வில் ஒளி தருவாரென்றே
ஆராரோ கனவு பல கண்டே நின்றார்
அத்தனையும் நிமிடத்தில் வீணே ஆச்சு
தாராரோ பதவி எனத் தவித்திடாமல்
தன்பாட்டில் மக்கட்குத் தொண்டே ஆற்றும்
பேரான பெருமனிதன் தன்னை அங்கு
பெரியவர்கள் அனுப்பிடுவார் நம்பி நின்றோம்.

கண்ணியமாய்க் கம்பனது கழகம் தன்னை
கருத்தினிலே வைத்தெம்மில் அன்பு காட்டும்
புண்ணியனை வாழ்த்துகிறோம் பொலிக என்றே
போற்றுகிறோம் மென்மேலும் உயர்வு கொள்க!
எண்ணிறந்த ஆண்டு பல இனத்திற்காக
ஏந்தலிவன் தொண்டாற்ற வேண்டுமென்றே
விண்ணிலுறை இறையவனை வேண்டி நின்றோம்
வெற்றி பல தொடர்ந்திடுமாம் விரைவில் காண்பீர்!

**கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்**







J DRIEBERG COLLEG
PRIZE DAY
24.09.2011

# வாழ்த்தியல்









# பன்முக ஆளுமை கொண்டவர்



கல்விப் பணியில் ஏறத்தாழ 32 ஆண்டுகளாகப் பல்வேறு பதவித் தரங்களிலும் பணியாற்றி வருபவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரித் தொகுதிக் கிளைத் தலைவருமான திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்களது மணிவிழாவினையொட்டி ஆசிச் செய்தியொன்றினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

திருவாளர் கந்தையா திருமதி கனகம்மா கந்தையா ஆகியோரின் புதல்வனாக 1956 ஆம் ஆண்டு சாவகச்சேரியில் பிறந்த திரு. அருந்தவபாலன் அவர்கள், தனது ஆரம்பக் கல்வியை யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், க. பொ. த (உ/ த) கல்வியை யா/ டிறிபேர்க் கல்லூரியிலும், கற்று யாழ். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி, அங்கு பொருளியல் துறையில் சிறப்புப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

1984 ஆம் ஆண்டு ஆசிரிய நியமனம் பெற்ற அவர் கொழும்பு - 13 இல் அமைந்துள்ள புனித அந்தோனியார் ஆண்கள் வித்தியாலயத்தில் தனது கல்விப் பணியை ஆரம்பித்தார். 1989 ஆம் ஆண்டு முதல் கொழும்பு - 15 இல் அமைந்துள்ள தெமட்டகொட தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் பணியாற்றிய அவர், 1990 ஆம் ஆண்டு தொடக்கம் தான் கல்வி கற்ற யா/ டிறிபேர்க் கல்லூரியில் கற்பிக்கும் வாய்ப்பைப் பெற்றதுடன், 1995 ஆம் ஆண்டு முதல் அதே கல்லூரியின் பிரதி அதிபராகவும் தொடர்ந்து 2005 ஆம் ஆண்டு முதல் அதிபராகவும் பதவி உயர்வுகளைப் பெற்று, நெருக்கடியான காலகட்டங்களிலும் அக் கல்லூரியின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் 2015 வரை அளப்பரிய பங்காற்றி வந்துள்ளார். தற்போது தென்மராட்சிக் கல்வி பணிமனையில் இணைக்கப்பட்டுள்ள அவர், தனது கல்வித் துறைசார் பணியை மென்மேலும் சிறப்பாக மேற்கொண்டு, அசாதாரண சூழ்நிலைகளால் பின்தங்கிவிட்ட எம் தமிழர்

கல்வித் தரத்தை மேம்படுத்த தன்னாலான பங்களிப்பை வழங்க வேண்டும் என இத்தருணத்தில் வாழ்த்துகின்றேன்.

மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் அக்கறை காட்டி வந்த அதேவேளை, தனது தொழில்சார் தகைமைகளை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கில் கல்வியியல் முதுமாணிப் பட்டம், பட்டப்பின் கல்வி டிப்ளோமா மற்றும் பட்டப்பின் கல்வி முகாமைத்துவம் ஆகிய கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்துள்ளார். இத்தகு கற்கைகளுக்கு மேலதிகமாகத் தற்போது திறந்த பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவனாக சட்டமாணி கற்கையை மேற்கொண்டு வருகின்றார்.

நீண்ட காலக் கல்விப் பணியுடன் தனது பங்களிப்பை மட்டுப்படுத்தாத திரு. அருந்தவபாலன் அவர்கள், யாழ் மாவட்ட போதைப்பொருள் விழிப்புணர்வு மற்றும் சிறுவர் பாதுகாப்பு மையத்தின் தலைவராகவும், யாழ் மாவட்ட விடிவெள்ளி சமூக மேம்பாட்டு அமையத்தின் முதன்மை இயக்குநராகவும், யாழ்ப்பாணக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவராகவும் மற்றும் உலக தமிழ்ப் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளையின் இணைப்பாளராகவும் சமூகஞ்சார் பங்கு பணிகளை மேற்கொண்டு வருவது மகிழ்ச்சிக்குரிய நிகழ்வுகளாகும் மேலும், தென்மராட்சி அதிபர் சங்கத் தலைவராக இரு தடவைகள் (2008 - 2010 மற்றும் 2013 - 2014) பங்காற்றியதுடன், சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்தின் தலைவராகவும் (1993 - 1997) யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் துணைத் தலைவராகவும் (1995 - 1997) செயற்பட்டு அவ்வமைப்புகளின் சிறப்பான செயற்பாட்டிற்கு உறுதுணையாக விளங்கியுள்ளார்.

இத்தகைய கல்வி மற்றும் சமூகஞ்சார் பணிகளுடன் நின்றுவிடாத திரு. அருந்தவபாலன் அவர்கள், தமிழ் மக்களின் விடிவுக்கான அரசியல் பணியிலும் தனது தடத்தைப் பதித்து எமது கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரித் தொகுதிக் கிளைத் தலைவராகச் செயற்பட்டு வருகின்றார். கடந்த இரு தடவைகள் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தல்களின் போது எமது கட்சியின் ஒரு வேட்பாளராகப் போட்டியிட்டு கணிசமான மக்கள் ஆதரவைப் பெற்றிருந்தார். அவர் தொடர்ந்தும் மக்கள் சேவையில் ஈடுபட்டு அங்கீகாரத்துடனான அரசியல் பணியாற்றும் வாய்ப்பைப் பெற வேண்டும் என்பதே எனது அவாவாகும்.

பன்முக ஆளுமை கொண்டு விளங்கும் திரு. அருந்தவபாலன் அவர்கள், தனது அறுபதாவது அகவையில் அடியெடுத்து வைப்பதையிட்டு நடைபெறும் மணிவிழா நிகழ்வு சிறப்புடன் நடந்தேறவும், அவ்விழா தொடர்பில் வெளிவரவுள்ள மலர் அவர் தம் வாழ்வின் பெறுமானங்களைத் தாங்கி வரும் கனதியான ஆவணமாக அமையவும் எல்லாம்வல்ல நல்லூர்க் கந்தனையும், கோணேஸ்வரப் பெருமானையும், பத்திரகாளி அம்பாளையும் இறைஞ்சுவதுடன், எமது உளம் நிறைந்த நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இரா. சம்பந்தன், பா. உ., (எதிர்க்கட்சித் தலைவர்)**
திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும்

# கல்வியாளருக்கு மணிவிழா வாழ்த்து



சாவகச்சேரி "டிறிபேர்க்" கல்லூரி அதிபராக, நல்லாசிரியராக தலைமைத்துவப் பண்புகள் நிறைந்த ஒரு ஆசிரிய ஆசானுக்கு மணிவிழா எடுப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி.

கால் நூற்றாண்டுக்கு மேலாக டிறிபேர்க் கல்லூரியில் அதிபராயிருந்த காலத்திலும் கூட மிக நெருக்கமாகப் பழகவும், பொது வாழ்வில் வேலை செய்யவும் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கான போராட்டங்களிலும், போர்க் காலங்களில் அனைத்துச் செயற்பாடுகளிலும் ஒரு கல்வியாளராக, ஜனநாயகவாதியாக, நின்று துணிவுடன் தலைமை தாங்கி எம்முடன் செயற்பட்ட ஒரு தகைமை வாய்ந்த மனிதர் பற்றி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காக, விடிவுக்காக ஜனநாயக வழிகளில் தந்தை செல்வா ஆரம்பித்த அறவழிப் போராட்டங்களிலும் தமிழரசுக் கட்சி மாநாடுகளிலும், தீர்மானங்களிலும் நடவடிக்கைகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து உழைத்தவர் அருந்தவபாலன்.

ஓர் ஆசிரியனாக. அதிபராக, கல்வியாளனாக, ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்பிய சமுதாயத் தலைவனாக தலை நிமிர்ந்து நின்று பல பட்டங்களையும், பொறுப்புக்களையும் பெற்று அயராது உழைத்து மக்கள் மனதில், கல்வியாளர் மத்தியில், மாணவ சமுதாயத்தில் நன் மதிப்பைப் பெற்றிருந்தவர் அருந்தவபாலன் அவர்கள்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக பொதுத்தேர்தலில் நின்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் பெருமளவு மக்களின் செல்வாக்கையும், வாக்குகளையும் பெற்றிருந்தார். இருப்பினும் இப்போதுள்ள தேர்தல் முறையில் சொற்ப வாக்குகளினால் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாமற் போய்விட்டது. அதனால் எல்லோர் மனதிலும் ஒரு பாதிப்பு ஏற்பட்டது. ஆனால் எதிர்வரும் ஆண்டுகளில் தென்மராட்சி பிரதேசத்திலிருந்து யாழ் தேர்தல் மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினராக, தமிழர் தலைவனாக மிளிருவார் என நம்புகிறேன்.

இன்று பெருந்தகையாய் மணிவிழா நாயகனாய் பாராட்டும், வாழ்த்துக்களும் பெறும் அருந்தவபாலன் அவர்கள் வரலாற்றில் சான்றாண்மை பெற்றுப் பெருவாழ்வு வாழவும், வளம் பெறவும், வெற்றி பெறவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

**மாவை. சோ. சேனாதிராசா**, பா. உ

# தென்மராட்சியின் உன்னத தலைவர்



ஆசிரியராய், அதிபராய், சமூகத் தொண்டராய் உன்னத சேவை நல்கும் திரு க. அருந்தவபாலன் அவர்கள் மணிவிழாக் காண்பதையிட்டு மகிழ்வடைகின்றேன். தென்மராட்சி மண்ணின் உயர்வே தனது இலட்சியம் எனத் தனது இளவயதில் இருந்தே கொள்கைப் பற்றுடன் வாழ்ந்து வருபவர் அவர்.

கால்நூற்றாண்டிற்கும் மேலாக சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் அதிபராக அரும்பணியாற்றிய பெருமை அவரைச் சாரும். தமிழ்த் தேசியத்தின் உணர்வுசார் முன்னெடுப்புக்களை நெருக்கடி மிக்க காலப்பகுதியில் துணிந்து முன்னெடுத்தோருள் அவரும் ஒருவர். இதனால் பல சவால்களையும் எதிர்கொண்டார்.

இவரது காலத்தில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி கல்வி, விளையாட்டு எனப் பல தளங்களில் முன்னிலை பெற்றமையை நான் அறிவேன். இது அவரது கல்விசார் ஆளுமைக்கான சான்று ஆகும். இதேபோல நல்லதோர் குடும்பத் தலைவனாக தனது தடத்தைத் திரு அருந்தவபாலன் பதிவு செய்துள்ளார். அவரது நான்கு பிள்ளைகளும் சிறந்த கல்வியாளர்களாக மிளிர்கின்றனர்.

தமிழ் மாணவர்களின் கல்வி சிறப்புற வேண்டும். நலிவுற்ற மக்களின் வாழ்வு எழுச்சி பெற வேண்டும் என்ற அவரது கனவை ஈடேற்ற இன்று அருந்தவபாலன் அறக்கொடை நிதியத்தையும் ஆரம்பிக்கின்றார் என அறிகின்றேன். அவரது எண்ணங்கள் யாவும் ஈடேற என வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நீண்ட நெடிய கல்விப் பணிகளால் பெற்ற அனுபவத்தால் யாழ். மாவட்ட போதைப்பொருள் விழிப்புணர்வு மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமையத்தின் தலைவராகவும் யாழ். மாவட்ட விடிவெள்ளி சமூக மேம்பாட்டு அமையத்தின் முதன்மை இயக்குநராகவும் யாழ்ப்பாணக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவராகவும் உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளையின் இணைப்பாளராகவும் சமூகப்பணிகளை ஆற்றி வருகின்றார். சட்டத்துறையின் மீது நாட்டங்கொண்டு அதற்குரிய பட்டக் கல்வியையும் மேற்கொண்டு வருகின்றார்.

மக்கள் பணியாற்றுவதில் அவர் அடையும் திருப்தியும் மகிழ்வும் அளவிடற்கரியது. அன்பர் பணியாற்ற என்னை ஆளாக்கி விட்டு விட்டால் இன்ப நிலை தானே வந்து சேரும் பராபரமே என்ற தாயுமானவரின் வாக்கு இவ்விடத்தில் பொருத்திப் பார்க்கத்தக்கது.

மணிவிழாக் காணும் திரு. க. அருந்தவபாலனின் சமூகப் பணிகள் சிறப்புறவும் அவர்தம் எண்ணங்கள் ஈடேறவும் எனது நல்வாழ்த்துக்கள்.

**சி.சிறீதரன், பா.உ.**

யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்,

கிளிநொச்சி

# வடமாகாண முதலமைச்சரின் வாழ்த்து



சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் முன்னைநாள் அதிபரும் சமூக மேம்பாட்டு ஆர்வலரும் அரசியல்வாதியும் ஆகிய திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் அறுபது வயதை எட்டி மணிவிழாக் காணுகின்ற இச்சந்தர்ப்பத்தில் அவரின் மணிவிழா சார்பாக வெளியிடப்படவிருக்கின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் பெரு மகிழ் வடைகின்றேன்.

'தோன்றில் புகழுடன் தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று'

என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைவாக புவியில் பலர் தோன்றி மறைகின்ற போதிலும் சிலரின் வாழ்க்கை மக்களால் என்றும் நினைவு கூரப்படுகின்றது. அந்த வகையில் திரு. அருந்தவபாலன் அவர்களும் இப் புவியில் பொதுப் பணிக்கு என்றே தோன்றியவர். 1956 இல் அவதரித்து ஆசிரியப் பணியில் சிறப்புற செயற்பட்டது மட்டுமன்றி மனம் கவர்ந்த ஆசிரியை திருமதி சாந்தினி அவர்களைக் கரம்பிடித்து அறிவுசால் மக்கள் நால்வரை ஈன்றெடுத்தார். அவர்கள் சிறந்த கல்விமான்களாக இருவர் சிங்கப்பூரிலும், மற்றைய இருவர் அவுஸ்திரேலியாவிலும் பணியாற்றுகின்றனர். பிள்ளைகளின் சிறப்பில் மகிழ்வுற்று தனது கடமை முடிந்து விட்டது என அமைதியான வாழ்வை முன்னெடுக்க விழையாது தான் சார்ந்த தமிழ் சமூகத்தினரதும், நலிவுற்ற மக்களதும் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் சமூகப் பணிகள் பலவற்றில் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார். அரசியல் ரீதியாகவுந் தமிழ் மக்களுக்கு ஒரு விடிவைத் தேடித்தர வேண்டும் என்ற நோக்கில் இரு முறை பாராளுமன்ற தேர்தல்களில் போட்டியிட்டார். இரு தேர்தல்களிலும் ஒரு சில வாக்கு வித்தியாசங்களில் வெற்றியிலக்கை எட்ட முடியாது போன போதும் அவர் அதனை ஒரு பொருட்டாகக் கொள்ளாது அதனைத் தோல்வியாக எண்ணி துவண்டு விடாது தமது அரசியல் பயணத்தில் தொடர்ந்திருப்பது எம் அனைவரையும் மகிழ்வுறச் செய்கின்றது.

நல்லவர்கள், வல்லவர்கள், தகமை உடையவர்கள் தேர்தல்களில் வெற்றியீட்டுவது மிக அவசியம். எனவே தொடர்ந்து தேர்தல்களில் பங்கு பற்றுவது அவசியமாகின்றது. அவர் தோல்வியைத் தழுவிய போதும் அவர் சார்ந்த மக்கள் அவரைத் தோல்வியுறச் செய்யவில்லை என்றே அவர் நம்புகின்றார். அவர் தொடர்ந்தும் அரசியல் பயணத்தில் ஈடுபட்டு வருவது பாராட்டப்பட வேண்டியது. இவரின் அரசியல் பிரவேசமும் செயற்பாடுகளும் ஏனைய அரசியல் புது முகங்களுக்கு ஒரு பாடமாக அமைவன. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்!

மணிவிழாக் காணுகின்ற புகழ்பூத்த அதிபர் திரு. க. அருந்தவபாலன் அவர்களின் சமூக அரசியற் பணிகள் எந்த வித குறைவுமின்றித் தொடரவும் நீண்ட ஆயுளும் நிறைந்த தேக ஆரோக்கியமும் அவர் பெற்று குடும்பத்தினருடன் நீடூழி வாழவும் வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

**நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன்**
முதலமைச்சர், வடமாகாணம்

# வடமாகாண அவைத்தலைவரின் வாழ்த்து



*பொதுவாக யாழ்ப்பாண மாவட்டத்தினதும் குறிப்பாக தென்மராட்சி மக்களதும் பெருமதிப்புக்குரியவராக விளங்கும் புகழ்பூத்த பொருளியல் ஆசானும், கல்லூரி அதிபருமான திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் மணிவிழாக் காண்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.*

*இவரது கல்விப்புலம்சார் சேவையைப் பலரும் பாராட்டுவது அவரது துறைசார் ஆற்றலுக்கும் அர்ப்பணிப்புக்குமான சான்றாகும். எம்மைப் பொறுத்தவரை இவரது அரசியல் மற்றும் சமூகம் சார்ந்த சேவைகளும் பாராட்டுக்குரியவை. எந்த விடயத்தையும் துணிச்சலுடனும், தைரியமாகவும் எடுத்துக் கூறும் இவரது இயல்பு மிகவும் சிறப்பானது.*

*ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெறுவதன் பின்பு கனதியான அரசியல், சமூகப்பணிகள் இவருக்காகக் காத்திருக்கின்றன. அவற்றையெல்லாம் வெற்றிகரமாக நிறைவேற்றவும் நிறைவான வாழ்வு கிட்டவும் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.*

**சீ. வீ. கந்தையா சிவஞானம்**
அவைத்தலைவர்,
வடக்கு மாகாணசபை.

# வடமாகாணக் கல்வி அமைச்சரின் வாழ்த்து



திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் தென்மராட்சிப் பகுதியில் 21ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிரசித்தி பெற்ற கல்வியியலாளர். தனது உயர்தரப் படிப்பினைக் கற்றுக்கொண்ட டிறிபேர்க் கல்லூரியில் தனது சேவையின் பெரும் பகுதியில் 25 வருடங்கள் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும், 10 ஆண்டுகள் அதிபராகவும் கடமையாற்றி இளைப்பாறியவர்.

ஒரு ஆசிரியருக்கு இருக்க வேண்டிய பண்பாகிய சாந்தகுணம் இவரிடமுண்டு. தன் மென்மையான அணுகுமுறை மூலம் மாணவரினதும், பெற்றோர்களினதும் நன்மதிப்பினை டிறிபேர்க் கல்லூரியில் பெற்றுக் கொண்டவர். 1950, 1960 களில் கொடிகட்டிப் பறந்த இக் கல்லூரி 30 ஆண்டு போரின் காரணமாகப் பாரிய விமானத் தாக்குதல்களால் சின்னாபின்னமாக்கப்பட்டது. இக் கல்லூரியின் அனைத்துக் கட்டடங்களும் போரினால் சேதமடைந்த நிலையிலும் கல்லூரி தன் பழைய, மேலோங்கிய நிலைக்குச் செல்லச் சிறந்த வழிகாட்டலை எதிர்பார்த்திருந்த போது, 2005 ஆம் ஆண்டில் அதிபராகப் பதவியேற்ற திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் 1 வருடங்களில் இக் கல்லூரி பழைய உயர் நிலைக்குச் செல்லக் கூடிய பயணத்தினை ஆரம்பித்து வைத்தவர்.

தனக்குக் கிடைத்த இந்த அதிபர் பதவியின் மூலம் தென்மராட்சிப் பகுதியில் இவரின் பேரும் புகழும் எட்டுத்திக்கும் பரவியது. இந்தச் செல்வாக்குடன் இவர் இரண்டு பாராளுமன்றத் தேர்தல்களைச் சந்தித்த போது, மிகக் கூடிய வாக்குகள் பெற்ற போதிலும், மிகச் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகவில்லை. எனினும், தோல்வியைத் துச்சமென மதித்து தனது இறுதி ஒரு வருட காலத்தைத் தென்மராட்சிக் கல்வி வலயத்தில் மிக நேர்த்தியாக நிறைவு செய்து ஓய்வு பெறுகிறார்.

திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் டிறிபேர்க் கல்லூரிக்கு ஆற்றிய சேவை என்றென்றும் பேசப்படும் என்பதில் ஐயமில்லை. இவர் தன் இளைப்பாற்று வாழ்வில் மக்கள் சேவைக்குத் தன்னை அர்ப்பணித்து மேலும் பல உச்சங்களைத் தொட இறைவன் இவருக்கு நீடிய ஆயுளையும் சிறந்த உடல் ஆரோக்கியத்தையும் வழங்கப் பிரார்த்திப்பதுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**த. குருகுலராசா,**

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.

# ஆசிரியர் அருந்தவபாலன் அவர்களுக்கு அகவை 20 அனுபவம் 40 வருடங்கள்



அருந்தவபாலன் அவர்கள் ஓர் நல்லாசிரியர், பல்லாயிரக்கணக்கான மாணவர்களை நெறிப்படுத்தி அவர்களின் உயர்வுக்குக் காரணமாக அமைந்தவர். ஆசிரியராக, அதிபராக, கல்வி நிர்வாகியாக வடபுலத்தின் கல்விப் புலத்தைச் செழுமைப்படுத்தியவர்.

அருந்தவபாலன் அவர்கள் ஓர் சமூகப்பற்றாளர். ஒருவர் மற்றவர்களுக் காகவும் மற்றவர்கள் ஒருவருக்காகவும் என்ற கோட்பாட்டில் உதித்த கூட்டுறவுத்துறை முதல் போதைப்பொருள் எதிர்ப்பு அமைப்புக்கள் வரை பிரதிபலன் பாராச் சேவைகளை வழங்கிவருபவர்.

அருந்தவபாலன் அவர்கள் ஓர் தீவிரத் தமிழ்த்தேசியப் பற்றாளர். தமிழ்மக்கள் தங்கள் தேசிய அடையாளங்களோடு, நாம் யார்க்கும் குடியல்லோம் என்ற இறுமாப்போடு இந்த மண்ணில் வாழவேண்டும் என்ற நோக்கில் அரசியற் பணிகளை ஆற்றிவருபவர்.

அருந்தவபாலன் அவர்கள் ஓர் மென்சொல்லாளர். தடித்த வார்த்தைகளை அவர் உதடுகள் ஒருபோதும் உச்சரிப்பது இல்லை. முரண்கருத்துடையவர்களுடன் கூட வார்த்தைகளில் சூடேற்றி அவர்தம் மனங்களை நோகடிக்காமல் தன் கருத்துக்களைப் பரிமாறவல்ல நயத்தகு நாகரிகம் தெரிந்தவர். இதனால், ஏராளமான நண்பர்கள் வாய்க்கப்பெற்றவர்.

அருந்தவபாலன் அவர்களின் நட்பு வட்டத்தினுள் நானும் ஒருவன் என்பதில் பெருமையுறுகின்றேன். மணிவிழாக்காணும் அவரை வாழ்த்துவதில் உவகையுறுகின்றேன்.

அருந்தவபாலன் அவர்கள் அறுபது வயதுகளைத் தொட்டபோதும் அவர் நாற்பது வருட அனுபவங்களைக்கொண்ட இருபது வயது இளைஞனாகவே தோற்றமளிக்கிறார்.

அவர் மென்மேலும் உயர்வுபெற்று நூற்றாண்டு விழாக் காணவும், அவர்தம் சேவைகளால் இம்மண்ணும் மக்களும் மாண்புறவும் நான் வணங்கும் இயற்கை என்னும் பேரிறைவனை இறைஞ்சுகிறேன்.

**பொ. ஐங்கரநேசன்,**
அமைச்சர்,
விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி,
உணவு வழங்கல், நீர் வழங்கல் நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு,
வடமாகாணம்.

# மக்கள் மனதில் அழியா இடம் பிடித்தவர்



"தோன்றிற் புகழோடு தோன்றுக" எனும் திருவள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு இசைய புகழோடு வாழ்ந்துவரும் உயர்திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் மணிவிழாக் காணும் இத்தருணத்தில் அவரைச் சிறப்பித்து வெளிவரும் மணிவிழா மலருக்கான வாழ்த்துரையை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

வாழும் காலத்தில் நாம் ஆற்றும் சேவைகளும், நற்பணிகளும் காலம் கடந்தும் எம் புகழையும், பேரையும் நிலைநிறுத்தும். அவ்வகையில் இன்று மணிவிழாக் காணும் அருந்தவபாலனும் அவர்தம் பணிகளும் என்றும் மங்காப்புகழையுடையது.

ஆசிரியராகத் தன் தொழிலை ஆரம்பித்துப் படிப்படியாகப் பதவி உயர்வு பெற்றுத் தமிழ்க் கல்விச் சூழலுக்குத் தன் அளப்பரிய சேவையை ஆற்றியதோடு, தான் வாழும் சமூகத்திற்கும் தன்னாலான மகத்தான சேவைகளை ஆற்றி வருகிறார்.

அரசியல் நீரோட்டத்தின் ஆழ, அகல, நெளிவு சுழிவுகளை நன்குணர்ந்து அதன் ஓட்டத்தில் நிலைத்துப் பயணிக்கும் இவர் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சாவகச்சேரித் தொகுதியின் தலைவராகி அரசியல் பணியாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. தனது ஆசிரிய தொழிலினூடாகவும் சமூக சேவைகளினூடாகவும் சாவகச்சேரி மக்கள் மனதில் அழியா இடத்தை திரு. க. அருந்தவபாலன் அவர்கள் பெற்றுள்ளார்.

இவரது அரசியல் பயணத்தில் சவால்களையும், சறுக்கல்களையும், ஏமாற்றங்களையும் சந்தித்தும் மனந்தளராது தனது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வது அவரின் அர்ப்பணிப்பின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகின்றது.

இந்த மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துவதோடு இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து எம்மினத்திற்கும், நாட்டிற்கும் சேவையாற்ற வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

**சி. தவராசா,**
எதிர்கட்சித் தலைவர்,
வடக்குமாகாண சபை.

# அருந்தவபாலன் - ஓர் தைரியமான தலைமைத்துவம்



சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் முன்னைநாள் முதல்வரும் அரசியல் சமூக செயற்பாட்டாளருமான உயர்திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்களின் மணிவிழாவை முன்னிட்டு இவ்வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். தளராத மனமும் தைரியமான தலைமைத்துவப் பண்பும் நிறைந்த ஒரு சிறப்பு ஆளுமைக்குச் சொந்தக்காரனாகவே அவரை நான் அடையாளப்படுத்துகின்றேன்.

அரசியல் சமூக செயற்பாட்டாளர் என்ற வகையில் உயர்திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் மக்களின் மனதில் நிரந்தர இடம் பிடித்துக் கொண்ட ஒருவர். பல நெருக்கடியான காலகட்டங்களிலுங்கூட தான் கொண்ட கொள்கைகளிலிருந்தும் எடுத்த முடிவுகளிலிருந்தும் சற்றேனும் பின்வாங்காதவராக இருந்தமை பலரதும் கவனம் ஈர்க்கப்படுவதற்குரிய காரணங்களில் பிரதானமானதாக இருக்கக்கூடும்.

பாராளுமன்றத்தில் மக்களுக்கான பிரதிநிதித்துவம் வழங்கக்கூடிய சந்தர்ப்பங்கள் அவரைத் தேடிவந்த போதிலும் அவை மிகச்சிறிய வித்தியாசங்களில் கைகூடாமல் போனமை மக்கள் அவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதற்குக் கொடுத்து வைக்கவில்லையோ என்ற ஏக்கத்தை எல்லோர் மனதிலும் ஏற்படுத்தியிருந்தாலும் இன்றுவரை மக்கள் அவரைத் தங்களது பிரதிநிதியாகவே கருதுகிறார்கள். இது வெறுமனே தேர்தலில் போட்டியிட்டதால் மட்டும் வந்ததல்ல. மாறாக அவர் தனது பணிகளினூடு எவ்வளவு தூரம் மக்களின் மனதில் இடம்பிடித்திருக்கின்றார் என்பதன் வெளிப்பாடு என்றுதான் சொல்ல வேண்டும்.

மக்கள்சேவை என்பது அரசியல்ரீதியானதலைமைத்துவத்தினால்மட்டுமே ஆற்றப்படமுடியும் என்று இன்னமும் நம்பிக்கொண்டிருப்பவர்களின் கருத்தை தானே ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்து மாற்றியமைத்துக்காட்டி தனது சமூகச்செயற்பாடுகளை கல்விவளர்ச்சி, போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் வறியவருக்கான வாழ்வாதார உதவிகள் என்ற பல்வேறு தளங்களிலும் விரிவாக்கஞ் செய்து இன்று வரை சளைக்காது செயலாற்றும் ஓர் சிறந்த கருமவீரன் உயர் திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள்.

எதிர்காலத்திலும் அவர் தனது பணிகளைச் செய்யக்கூடிய உடல்வாகோடும் மனத்திண்மை யோடும் எல்லாவிதமான சிறப்புக்களையும் பெற்று நீடூழி வாழவும் மணிவிழாவும் மலரும் சிறக்கவும் வாழ்த்துகிறேன்.

**சட்டத்தரணி கேசவன் சயந்தன்,**
வடக்குமாகாண சபை உறுப்பினர்.

# ஆளுமை மிக்க கல்வியாளரும், தேசப்பற்றுமிக்க அரசியல் தலைவரும்



அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய உயர்திரு கந்தையா அருந்தவபாலன் அவர்களது மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமையடைகின்றேன். தென்மராட்சி மண்ணின் பெருமைக்குரிய சிந்தனையாளர்களில் திரு. கந்தையா அருந்தவபாலன் தனித்துவமானவர். ஈழமண்ணின் கல்வி எழுச்சிக்காக அயராது உழைத்தவர். சாவகச்சேரியின் புகழ் பூத்த கல்விச்சாலையாக விளங்கும் டிறிபேக் கல்லூரியின் தனித்துவம் மிக்க ஆசிரியராக அதிபராக போற்றுறு பணியாற்றியவர். தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில் அர்ப்பணிப்போடு செயலாற்றியவரும் உன்னதமான மனிதர் உயர்திரு கந்தையா அருந்தவபாலன் அவர் அகவை அறுபதை நிறைவு செய்தாலும் இன்றும் இளமைத்துடிப்பு மிக்க அரசியல் செயற்பாட்டாளராக தமிழ்த்தேசியத்தை வலுப்படுத்துவதற்காக பாடுபட்டு வருபவர். அவர் எதிர்காலத்திலும் அத்தகைய பற்றுறுதியோடு அரசியல் பயணத்தினைத் தொடரவும் தென்மராட்சி மண்ணின் மக்களுக்கு சேவையாற்றவும் தமிழ்த்தேசத்தின் அரசியல் விடுதலைக்காக பாடுபடவும் அவருக்கு இறையாசி வேண்டி வாழ்த்தி மகிழ்கிறேன்.

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்,
தலைவர், தமிழ் தேசிய மக்கள் முன்னணி.

# யாழ். மாவட்ட அரச அதிபரின் வாழ்த்து



திருவாளர் உயர்திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் மணிவிழாக் காணும் இவ்வேளை மணிவிழா நாயகனை வாழ்த்துவதில் பெரும் மகிழ்வடைவதோடு மணிவிழா மலர் மலர்ந்து நறுமணம் பரப்ப என் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

திரு. க. அருந்தவபாலன் அவர்கள் யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் பிறந்தவர். யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் க.பொ.த. சாதாரண தரம் வரையும் பின்னர் யா/ டிறிபேர்க் கல்லூரியில் உயர்தரத்தினையும், யாழ் பல்கலைக்கழகத்தில் பொருளியலில் சிறப்புப் பட்டத்தினையும் பெற்றுக் கொண்டவர். முதுகல்வியியல் பட்டப்பின் கல்வி முகாமைத்துவம் ஆகிய துறைகளில் சிறந்த தொழிற்றகைமையினை உடையவர்.

இவர் சிறந்த ஆசிரியராக, அதிபராகப் பல உயர்வுகளைக் கண்டு மாணவர்களின் கல்விப் பணிக்கு அரிய சேவையை வழங்கியவர். சிறந்த சமூகப் பணிகளிலும் பொதுச் சேவைகளிலும் முனைப்புடன் தனது சேவையை வழங்கிக் கொண்டிருப்பவர். கல்வி மேம்பாட்டுப் பேரவை, உலக தமிழ் பண்பாட்டு இயக்கம், தென்மராட்சி அதிபர் சங்கம், விடிவெள்ளி சமூக மேம்பாட்டு அமையம், யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை ஆகிய நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக அயராது உழைத்தவர்.

அவரது சேவை சமூகத்திற்குத் தொடர்ந்து வழங்க எல்லாம்வல்ல இறை பரம்பொருளை வேண்டுவதோடு அவரது சேவையைப் பார்புகழும் வகையில் மணிவிழா மலர், இதழ் விரிக்கப் பணியாற்றும் மணிவிழாக் குழுவினருக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

திரு. க. அருந்தவபாலன் அவர்கள் தனது நிறைவான சேவையினைச் சமூகத்திற்குத் தொடர்ந்து வழங்கவும் நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழவும் வாழ்த்துகின்றேன்.

**நா. வேதநாயகன்,**
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

# யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்து



தென்மராட்சி மண்ணின் அருந்தவப் புதல்வன் திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்களது சேவையைக் கௌரவித்து அறுபதாவது வயதில் இப்பிரதேச நல் உள்ளங்களால் மேற்கொள்ளப்படுகின்ற மணிவிழாவையொட்டி வெளியிடப்படும் அருந்தவம் என்ற மணிவிழா மலரிற்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

தென்மராட்சி பிரதேசத்தில் சாவகச்சேரி நகரில் திரு. திருமதி கந்தையா தம்பதிகள் செய்த அருந்தவத்தால் கிடைத்த 5 பிள்ளைகளில் ஒருவராக 1956 ஆம் வருடம் ஆவணித் திங்கள் 18 ஆம் நாள் பிறந்த அருந்தவபாலன் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் பின்னர் உயர்தரக் கல்வியை யா/டிறிபேர்க் கல்லூரியிலும் கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்று பொருளியல் சிறப்புக் கற்கைநெறியினை பேராசிரியர் பாலகிருஸ்ணன், பேராசிரியர் இராசரத்தினம், பேராசிரியர் நித்தியானந்தர் போன்றோரிடம் முறையாகக் கற்று அவர்களது முன்மாதிரிகளைத் தன்னகத்தே உள்வாங்கி சிறந்த பொருளியல் ஆசிரியராகக் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பணியாற்றி பல மாணவர்கள் பொருளியல் பாடத்தில் சிறந்த பெறுபேற்றினைப் பெறுவதற்கு வழிசமைத்து பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பிய பெருமை அருந்தவபாலனுக்குரியதாகும்.

திரு. அருந்தவபாலன் அவர்களது மாணவர்களில் இருவர் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளர்களாகப் பணியாற்றுகின்றனர். இது அவர் மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்கி விட்டுள்ளமைக்கான சான்றாகும். அதுமட்டுமன்றி இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள், கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் திட்டமிடல் சேவை அதிகாரிகள், கணக்காளர்கள், கணக்காய்வாளர்கள், வங்கி முகாமையாளர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் எனப் பல துறைகளில் இவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் பிரகாசிப்பதன் ஊடாக திருவாளர் அருந்தவபாலன் அவர்கள் கடந்த 3 தசாப்தங்களுக்கு மேலாக ஆற்றிய சேவையின் அறுவடைக்கான அணிகலன்களாகத் திகழ்கின்றார்கள்.

தனியே ஆசிரியப் பணியில் மட்டும் வெற்றியடையாது சிறந்த அதிபராக சிறந்த சமூக சேவையாளனாக குறிப்பாக வறிய மாணவர்களின் காப்பாளனாக பல கோணங்களில் தனது சேவையைச் சமூகத்துக்கு ஆற்றி வரும் அருந்தவபாலன் அவர்கள் தென்மராட்சிப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு எதிர்காலத்தில் பல்வேறுவழிகளிலும் பணியாற்றுவதற்கான வாய்ப்புக்கிடைக்க வேண்டும் எனவும் அதற்காக அவர் நீடூழி வாழ வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

**சிரேஷ்ட பேராசிரியர் (செல்வி) வசந்தி அரசரட்ணம்**

துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

யாழ்ப்பாணம், இலங்கை.

# வாழ்த்துச்செய்தி



திரு.கந்தையா அருந்தவபாலன் தென்மராட்சியில் வசிக்கின்ற எல்லோராலும் நன்கு அறியப்பட்டதோர் கல்வியாளனும் அரசியல் பிரமுகரும் ஆவார். அவரது மணிவிழாவுக்கு இச்செய்தியை எழுதுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். சாதாரண குடும்பமொன்றில் பிறந்து சமூகத்தில் இன்றைய அவரது உயர் நிலைக்கு சொந்த முயற்சியே காரணமென்பதில் இரண்டு கருத்து இருக்க முடியாது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் பட்டதாரியான திரு.அருந்தவபாலன் அவர் கல்வியியலில் P.G.D.E படிப்பை மேற்கொண்டிருந்த காலப்பகுதியிலேயே எனக்கு அறிமுகமானார். இதன் பின்னர் அவரது செயற்பாட்டையும் அதனூடான வளர்ச்சியையும் உயர்ச்சியையும் நன்றாக அவதானிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. தான் எடுத்த பணிக்கு தனது முழு மனத்துடன் அர்ப்பணிப்பாகச் செயற்படுவதும் தனது முழுச் சக்தியை அர்ப்பணிப்புக்குச் செலவழிப்பதும் அவரது வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் காரணமெனில் மிகையாகாது. மேலும் திரு அருந்தவபாலன் நம்பக்கூடிய சமூக செயற்பாட்டாளன், சமூக உணர்ச்சியுடன் செயற்படுபவர் என்றும் கூறலாம். அவருக்குக் கொடுக்கப்படும் சமூகப்பொறுப்புகளை நடுநிலை பிறழாது முழுமனத்துடன் செயற்படுவதைப் பல முறை கவனித்துள்ளோம்.

இவர் நம்பிக்கைக்கு உரியவர். அரசியலில் இவரது எதிர்க் குழுவில் உள்ளவர்களும் இவரை நம்புவதும் மதிப்பதையும் நான் நன்கு அறிவேன். இந்த வகையில் அருந்தவபாலன் வாழ்வின் குறிக்கோளில் வெற்றிபெற்றவர் என்றே கூறுவேன்.

வரும் காலத்தில் திரு.அருந்தவபாலன் அவரது அரசியல் அபிலாசைகளை அடைவார் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கையுள்ளது. அவருக்கு அரசியலில் கிடைக்கும் சந்தர்ப்பம் தென்மராட்சியின் வளர்ச்சிக்கு வழிசமைக்கும் என்று உறுதியாகக் கூற முடியும். திரு.அருந்தவபாலன் தனது வரும் காலத்தை எமது இளம் சமூகத்தை நெறிப்படுத்தவும் சமூக வளர்ச்சிக்கும் செலவழிக்க வேண்டும் என்று வேண்டுவதுடன், இதற்கு வேண்டிய உடலுறுதியையும் மனவுறுதியையும் அவருக்குக் கொடுக்க வேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றேன். அவரும் அவரது குடும்பமும் சகல பாக்கியங்களும் பெற்று இசை பட வாழ்வில் மிளிர வாழ்த்தி இச்செய்தியை முடிக்கின்றேன்.

**பௌதிக பேராசிரியர் க. கந்தசாமி,**

யாழ். பல்கலைக்கழகம்.

# பல்லாண்டு வாழ்க!



திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்களது அறுபது அகவை நிறைவையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். வாழ்க்கையின் ஒருவட்டம் நிறைவடைந்து அடுத்த சுற்றுத் தொடங்கும் இன்றைய தினத்தில் அதனைச் சிறப்பாக நிறைவு செய்தமையையிட்டு அனைவருமே பேருவகை அடைகின்றோம். அவர் கொண்டிருந்த ஆளுமையை மீட்டுப்பார்க்கும் பொழுது அவரது வாழ்க்கையின் பெருமையை உணர முடிகிறது. அத்தகைய பெருமைக்குரிய வாழ்வை சிறப்பாக வாழ்ந்த கந்தையா அருந்தவபாலன் அவர்களுக்கு மணிவிழா எடுப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைவதுடன் அதனை ஒழுங்குசெய்யும் நண்பர்களையும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அஞ்சா உள்ளமும், சுறுசுறுப்பான சுபாவமும் அவரது அணிகலன்களாகும். தமிழ்மொழி மீதும் தேசியத்தின் மீதும் மிகுந்த பற்றுக் கொண்டவர். அவர் க.பொ.த. உயர்தர வகுப்பை நிறைவு செய்து பல்கலைக்கழகம் பிரவேசித்து பொருளியல் சிறப்புத் (B. A (Hons)) தேர்ச்சிபெற்றவர். அத்துடன் கல்வியை நிறுத்திக்கொள்ளாமல் தொடர்ந்து முதுகல்வியில் (M .Ed), பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE), பட்டப்பின் கல்வி முகாமைத்துவம் (PGDEM) ஆகிய பட்டங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளார். கொழும்பு புனித அந்தோனியார் ஆண்கள் வித்தியாலயம், தெமட்டகொட தமிழ் மகா வித்தியாலயம், யா/டிறிபேர்க் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகக்கடமையாற்றியமை அவருக்கு ஆசிரியத்தொழிலில் ஆளுமையைக் கொண்டுவந்தது. இதன் காரணமாகப் பிரதி அதிபர் மற்றும் அதிபராக உயர்த்தப்பட்டு யா/டிறிபேர்க் கல்லூரியில் சேவையாற்றினார். என்றுமே கவர்ச்சியான தோற்றமும் சுறுசுறுப்பான செயற்பாட்டையும் கொண்டிருந்தமையால் தனது பதவியில் எல்லோராலும் விரும்பப்பட்டார்.

திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் தனியே ஆசிரியப்பணியில் மட்டுமன்றி சமூகம்சார் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். போதைப்பொருள் விழிப்புணர்வு மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமையம், விடிவெள்ளி சமூகமேம்பாட்டு அமையம், கல்வி மேம்பாட்டுப் பேரவை, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் ஆகிய சமூகசேவை கொண்ட அமையங்களில் தலைவராகவும், முதன்மை இயக்குநராகவும் இருந்து சமூகத்திற்கு அளப்பரிய சேவையை ஆற்றிவருகிறார்.

தனது பதவிக்கு ஏற்றாற்போல் மனையாளையும், பிள்ளைகளையும் பெற்றுக்கொண்டார் எனக் கூறினால் அதில் மிகையேதும் கிடையாது. பிள்ளைகள் கல்வியில் அக்கறை காட்டி, தந்தையின் வழிகாட்டலில் சிறந்த கல்விமான்களாக வந்திருப்பது கண்டு மனம் பெருநிறைவடைந்துள்ளது. அவர் மேலும் மக்களுக்குப் பணியாற்ற நல்ல ஓய்வும் உடலாரோக்கியமும் இறைவனால் வழங்கப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் சமூகத்தால் விரும்பப்படுகின்ற அதே நேரம் மதிக்கப்படுகின்ற மனிதராகப் பல்லாண்டுகள் வாழ்ந்து மணிவிழா மட்டுமல்ல பவளவிழா, அமுதவிழா, நூற்றாண்டுவிழா என்பவற்றைக் காணவேண்டும் என வாழ்த்தி, நிறைவு செய்கின்றேன்.

**பேராசிரியர் தி. வேல்நம்பி,**
பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# நான் கண்ட அருந்தவபாலன்



1980 ஆம் ஆண்டுகளிலிருந்து அருந்தவபாலனை நான் நன்கு அறிவேன் தென்மராட்சியிலிருந்து விவேகமும் துடிப்புமுள்ள நல்ல மாணவன் ஒருவர் விரிவுரை மண்டபத்தில் இருப்பதை அவதானித்தேன் பொருளியலை சிறப்புப் பாடமாகக் கற்கும் தகுதி இருப்பதை முதலாம் ஆண்டு பரீட்சைப் பெறுபேற்றினூடாக முதலில் வெளிப்படுத்தினார். பின்னர் பொருளியலை சிறப்புப் பாடமாகக் கற்பதற்குப் பொருளியல்துறை அனுமதியளித்தது. பொருளியல்துறையின் சிறப்புக்கலை மாணவனாக இருந்தகாலத்தில் கட்டுரை வகுப்புக்களிலும் கருத்தரங்குகளிலும் சராசரி மாணவர்களிற்கு மேலானவர் தான் என்பதை பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தி எல்லா விரிவுரை யாளர்களினதும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். மாணவர் குழுச் செயற்பாட்டில் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்று நடாத்தும் திறன் உடையவராக இருந்தார். இதுதான் பிற்காலத்தில் சமூகம் சார் செயற்பாட்டில் தனது வாழ்க்கைக் காலத்தில் பெரும்பகுதியைச் செலவிடுவதற்குக் காரணமாக இருந்ததோ என எண்ணத்தோன்றுகிறது. தமிழிலும் தமிழர் வாழ்வியலும் அவர்தம் உரிமைப் போராட்டத்திலும் தன்னை இணைத்துக்கொண்டதால் அவர்பட்ட துன்பங்களை தென்மராட்சி மக்கள் நன்கறிவர். நெருக்கடி காலத்தில் மக்கள் நலன்சார்ந்த கூட்டுறவு சங்கத்தின் தலைவராக இருந்து தென்மராட்சிமக்களுக்கு அவர் ஆற்றிய சேவையை என்றும் மறக்கலாகாது.

கொழும்பிலும் பின்னர் சாவகச்சேரியின் றிபேர்க் கல்லூரியிலும் ஆசிரியப் பணியைச் செவ்வனே செய்தார் என்பதற்கு அவரிடம் உயர்தர வகுப்பில் பொருளியலைக்கற்ற மாணவர்களில் பலர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியது நல்லசான்றாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இன்றைய பொருளியல் விரிவுரையாளர்களாகிய திரு. உதயகுமார், கலாநிதி சந்திரசேகரம் போன்றோர் அவரிடம் உயர்தர வகுப்பில் பொருளியலைக் கற்றவர்கள் என்பதை அறியும்போது பெருமையாக உள்ளது இவையெல்லாம் அவர் நல்லாசிரியன் என்பதற்குச் சான்றாகும்.

அருந்தவபாலன் நல்ல குடும்பத்தலைவன்; மனைவிக்கு நல்ல கணவன்; பிள்ளைகளுக்கு நல்ல தந்தை என்பதற்கெல்லாம் சான்றாக அவரது பிள்ளைகள் எல்லோரும் நல்ல கல்வியைக்கற்று அவுஸ்திரேலியாவிலும் சிங்கப்பூரிலும் பொறியியலாளராகவும் மற்றும் உயர்பதவியில் இருக்கின்றமை மகிழ்ச்சியைத் தருகின்றது. மணிவிழாக் கண்டாலும் அவர் சேவை சமூகத்திற்கும், பாடசாலைச் சமூகத்திற்கும், ஆசிரியர் சமூகத்திற்கும் மேலும் விரிவடையவேண்டும். அவர் சமூகத்தொண்டன் என்பதால் அவரது சேவை என்றென்றும் கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இவரும் அவர்தம் குடும்பமும் என்றும் மகிழ்வோடு நீண்டகாலம் வாழ வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர் பசுபதி சிவநாதன்**

முன்னாள் கலைப்பீட பீடாதிபதி, பொருளியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# வானுயர்ந்து வளமுடன் வாழ்க



திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் அறுபதாவது அகவையில் அவரது மணிவிழா மலருக்கு அவருடைய குடும்ப நண்பராகிய எனக்கு வாழ்த்துச் செய்தி எழுதும் வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மிகவும் களிப்படைகின்றேன். எனது பல்கலைக்கழக இறுதியாண்டில் முதல் முதலாக அருந்தவபாலன் அவர்களைப் புகுமுக மாணவனாகச் சந்தித்தேன். பின்னர் அவர் என்னுடைய தங்குமறை நண்பராகச் சிலகாலம் இருந்தார். அன்றுமுதல் இன்றுவரை அவருடனான நட்புத் தொடர்கிறது. எங்கள் இருவருக்குமிடையிலான நட்பு பின்னர் குடும்ப நட்பாகப் பரந்து விரிந்து வளர்ச்சி கண்டது. நான் பல்கலைக்கழகப் படிப்பை முடித்து தொழில் பெற்று கொழும்பு நகரில் பணியாற்றியபோது அவரும் படிப்பை முடித்து ஆசிரிய தொழில் பெற்று கொழும்பில் பணியாற்றினார். அப்போது அடிக்கடி சந்திக்கின்ற வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றன.

அவர் பொருளியல் பாடத்தையும் அவரது துணைவியார் புவியியல் பாடத்தையும் சிறப்புப் பாடமாகத் தெரிவு செய்து பல்கலைக்கழகத்தில் திறமைச்சித்தியுடன் பட்டம் பெற்று பூர்த்தி செய்தமையால் தென்மராட்சியில் உள்ள பல மாணவர்களுக்கு க.பொ.த உயர்தர வகுப்பில் இந்த இரண்டு பாடங்களையும் போதித்து வந்தனர். அது மட்டுமல்லாமல் பல மாணவ மாணவியர்கள் பல்கலைக்கழகங்களுக்கு செல்வதற்கும் காரணமாக இருந்தனர். வீட்டிலிலேயே மாணவ மாணவியருக்கு மேலதிககற்பித்தலுக்கான வகுப்புக்களை நடாத்தி அதிக புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழகம் புகுவதற்கு வழிசமைத்தனர். அவர்களது மாணவர்கள் பலர் இன்று ஆசிரியர்களாகவும் பல்வேறு பதவிகளிலும் இருந்து பணியாற்றுகின்றனர். அதேபோல அவரது பிள்ளைகளும் பட்டங்கள் பெற்று அவுஸ்திரேலியாவிலும் சிங்கப்பூரிலும் வேலை செய்கின்றார்கள். கடைசி மகன் பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருக்கின்றார். அவர் மாணவ சமுதாயத்திற்கு ஆற்றிய பணி அளப்பரியது.

மாணவர்களுக்கு மட்டுமல்ல தென்மராட்சி சமூகத்திற்கே பல்வேறு சமூக நிறுவனங்களில் பொறுப்பான பதவிகளை அலங்கரித்து அவற்றின் மூலம் அவர் பாரிய சேவையாற்றியுள்ளார். தமிழ்த் தேசியத்தின் மீது நம்பிக்கை கொண்டவர் அதனாலேயே பிராந்திய, தேசிய அரசியலில் ஈடுபாடு கொண்டு தேர்தல்களில் போட்டியிட்டார். பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அவர் பதவி மோகம் கொண்ட சிலரது சூழ்ச்சியால் சொற்ப வாக்குகளில் வெற்றியை இழந்தார். அரசியல் அதிகாரம் இல்லாத போதும் அவர் தனது

தென்மராட்சி மக்களுக்கு ஆற்றிவருகின்ற பணியைத் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறார். அது தான் அவரது குணம்.

அவர் தன்னையும் வளப்படுத்தி மற்றவர்களையும் செழிப்புறச் செய்தவர் பட்டதாரி ஆசிரியராகத்தனது தொழிலை ஆரம்பித்தவர் தொழில்வாண்மையைப் பெருக்கிக் கொள்வதற்காக, பட்டப்பின் கல்வி டிப்ளோமா, முதுகல்விமாணி, பட்டப்பின் கல்வி முகாமைத்துவம் எனப் பல்வேறு பட்டங்களைப் பெற்று சிறந்த கல்விமானாகவும், கல்வி நிர்வாகியாகவும் திகழ்ந்தார். அவரது நிர்வாகத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி தென்மராட்சியில் மிகச் சிறந்த கல்லூரியாகத் திகழ்ந்தது. அவர் தொடர்ந்து தனது கல்வித் தகைமையை உயர்த்துவதில் குறியாக இருப்பது அவருக்கு கற்றல் கற்பித்தலில் உள்ள ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது. அவர் திறந்த பல்கலைக்கழகத்தில் சட்ட மாணவனாக இருப்பது இதற்குச்சான்றாகும். சட்ட மாணிப் பட்டம் பெற்று ஒரு சட்டவாளராக சத்திய பிரமாணம் செய்ய வேண்டும் என்பது ஆசை.

அது மட்டுமல்ல. அரசியலில் அவருக்குள்ள ஆர்வம் மென்மேலும் அவரை அதன்பால் ஈர்க்கவேண்டும். தென்மராட்சி மக்களின் பங்களிப்புடன் அவர் நிச்சயமாக அரசியலில் அதிகாரம் பெறுவார். அதன் மூலம் மக்களுக்காகச் சிறந்த பணியாற்றுவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. திரு. க .அருந்தவபாலன் தம்பதிகளுடனான எனது குடும்ப நட்பு நாட்டின் பிரச்சினைக் காலங்களில் மேலும் வலுப்பெற்றது. யாழ்ப்பாணக் கோட்டைத் தாக்குதலுக்கு உட்பட்ட காலங்களில் சாவகச்சேரியில் அவரது இல்லத்தில் தான் எனது குடும்பம் அடைக்கலம் பெற்றது. அதே போல 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இடப் பெயர்வின் போதும் அவரது இல்லத்தில் தான் எனது குடும்பம் அடைக்கலம் புகுந்தது. அவர்களும் இன்முகத்துடன் எங்களை வரவேற்று உபசரித்தனர். அதை என்றென்றும் மறக்கமுடியாது.

திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்களைப் பற்றியும் அவரது குடும்பத்தைப் பற்றியும் நிறைய எழுதலாம். ஆனால் வாழ்த்துச் செய்தி என்பதால் மேலும் விரிவுபடுத்த விரும்பவில்லை. திரு.க. அருந்தவபாலன் அவர்கள் அறுவதைத் தாண்டி இன்னும் பல வருடங்கள் நீடுழி வாழ்ந்து தமிழ் சமூகத்திற்கும் குறிப்பாக தென்மராட்சி சமூகத்திற்கும் மேலும் பல நற்பணிகளைச் செய்து நெடி துயர்ந்து தலை நிமிர்ந்து வாழ இறைவன் அருள் பாலிக்க வேண்டும் என்று அவர் கமலப் பாதங்களில் வேண்டுகின்றேன். இந்தச் சந்தர்ப்பத்தைத் தந்த மணிவிழாக் குழுவினருக்கும் எனது நன்றிகள் எனது குடும்பத்தாரின் வாழ்த்துக்களையும் தெரியப்படுத்துகின்றேன்.

**இ. நந்தகுமாரன்**
குடும்ப நண்பன், ஓய்வுபெற்ற பேராசிரியர்

# மணிவிழா நாயகனின் "அடக்கத்தின் கோலம்"



நண்பன் கந்தையா அருந்தவபாலனின் அறுபதாவது அகவையை முன்னிட்டு வெளிவரும் மலரில் "நினைவுப் பதிவு"என்றவட்டத்திற்குள் நின்றுஎன்னையும் பதிவுசெய்துகொள்வதுஎனக்குப் பெரும் மனமகிழ்வைத் தருகிறது.நாம் இருவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஒருசாலை மாணவர்கள். அது35 ஆண்டுகள் கடந்த உறவு. 1979 இல் நான் முதலாம் ஆண்டுமாணனாக இருந்தபோதுதென்னிலங்கைப் பல்கலைக்கழகத்தில் இருந்து திரு.அருந்தவபாலன் என்றமாணவன் எமது பல்கலைக்கழத்திற்கு மாற்றலாகிவருவதான செய்தி தென்மராட்சி மாணவர்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டது. இதற்கு மாணவ நிலையில் அவருக்கிருந்த ஆளுமை, தலைமைத்துவப் பண்பு இதற்கும் அப்பால் இளமையிலேயே சமூகநலனில் கொண்டிருந்த ஈடுபாடு என்பன காரணம் என்பதை பின்னர் எம்மால் புரிந்து கொள்ளமுடிந்தது. இத்தகைய பின்புலம் தான் அவர் இன்று தமிழர் மத்தியில் நன்கு பரிட்சயமான கல்விப் புலமையாளன், சிறந்த சமூகசேவகன், நேர்மையான அரசியல்வாதி எனப் படிப்படியாக வளர்ந்துள்ளமைக்கு காரணமாகும்.

கடந்த காலங்களில் எமது தமிழ்ப்பாடசாலைகளின் சிறந்த அதிபர்களாகப் பலராலும் போற்றப்பட்ட கலாநிதி சேதுராஜா, திரு.சிவனேஸ்வரன், திரு.அகிலதாஸ், திரு.இராஜரட்ணம், திரு.ஞானதேவிகன், திரு.அருணகிரிநாதன் போன்ற அதிபர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஒரு சாலை மாணவர்களாக எம்முடன் கல்விகற்று சிறந்த பட்டதாரிகளாக வெளியேறியவர்கள்.அவர்கள் தாம் அர்ப்பணிப்புடன் பாடசாலையின் வளர்ச்சிக்கு பணியாற்றியதற்கு சகதோழன் அருந்தவபாலனே முன்னுதாரணமாக இருந்தான் என என்னிடம் கூறிவந்தமை திரு. அருந்தவபாலன் மீதுநட்பு நிலை தாண்டிமதிப்பு நிலை உருவாகக் காரணமாகியது. அவர் யாழ்- டிறிபேக் கல்லூரியில் ஏறத்தாழ பத்துஆண்டுகள் ஆரியராக,அதிபராக இருந்த காலத்தைகல்லூரி வளர்ச்சியின் உன்னத காலமாகப் பார்க்கிறேன். சரிந்து கொண்டிருந்த கல்லூரியைநிமிர வைத்ததில் திரு. அருந்தவபாலனுக்கு முக்கிய பங்குண்டென்பதில் இருவேறு கருத்திருப்பதாகத் எனக்குத் தெரியவில்லை.

ஆசிரிய வாண்மையுள்ள திரு. அருந்தவபாலன் தனது கல்விப் பணிகளுக்கு அப்பால் சமூகநலனில் கொண்டிருந்த ஈடுபாடு அவருக்கு தென்மராட்சி மக்களிடையே நிலையான புகழைத் தேடிக் கொடுத்தது எனலாம். ஏறத்தாழ ஏழுக்கு மேற்பட்ட சமூக நிறுவனங்களில் இயக்குநர், தலைவர், இணைப்பாளர் போன்ற பதவிகளில் இருந்து இதய சுத்தியுடன் அவர் பொருளாதார வளம் குன்றியமக்களுக்கும், மாணவர்களுக்கு ஆற்றியபணிகள் போற்றுதலுக்குரியது. அசாதாரண சூழ்நிலையில் பல்வேறு அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் மத்தியிலும் ஜனநாயகவரம்பிற்கு உட்பட்ட நிலையில் தன் கடமைகளை துணிச்சலுடன் முன்னெடுத்த ஒருவர் என்பதை நாம் அறிவோம். ஒளிவுமறைவு இன்றி தனக்குச் சரிஎன்றுபட்டதை துணிச்சலுடன் கூறும் பண்பு கொண்ட திரு. அருந்தவபாலன் தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை விமர்சிக்க தயங்கியது கிடையாது.

சாவகச்சேரி தொகுதி இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைவராக இருக்கும் திரு. அருந்தவபாலன் கட்சியின் நம்பிக்கைக்குரிய நல்லதொண்டர்களில் ஒருவர். கடந்தகால அரசியலில் அவருக்கு ஏற்பட்ட பின்னடைவுகளை அவரைநேசிக்கும் மக்களுக்கு நியாயப்படுத்த முடியாவிட்டாலும், அதனால் திரு. அருந்தவபாலன் சிறிதும் பிசகாமல் மக்கள் மீதும், கட்சி மீதும் கொண்ட பற்றுக்காரணமாக தொடர்ந்து ஆற்றிவரும் பணிகள் அரசியல் தெரிந்த பலருக்குப் புதிய அனுபவமாகத் தோன்றுகிறது. 2017 இல் உலக தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் மாபெரும் தமிழ் மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறஉள்ளது. அம்மகாநாட்டின் தலைவராக திரு. அருந்தவபாலன் தெரிவு செய்யப்பட்டிருப்பது அவரதுசமூகப் பணிகளுக்கு கிடைத்திருக்கும் மிகப்பெரியஅங்கீகாரமாகும். இன்றுநடைபெறும் மணிவிழா திரு. அருந்தவபாலன் அறுபதாவது வயதை அடைந்ததன் அடையாளமாக இருப்பினும் நான் அவரை இருபது வயது இளைஞனாகவே பார்க்கிறேன். அந்த இளைஞனின் நோக்கம், இலட்சியம் எதிர்காலத்தில் நிறைவேற இறைவனைப் பிராத்திக்கிறேன்.

**பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்,**
தொல்லியல் இணைப்பாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# பேராற்றல் கொண்ட பெருந்தலைவனாக வளர்க



திருவாளர் கந்தையா அருந்தவபாலன் அவர்களது சமூகத்திற்கான சேவையைக் கௌரவிக்கும் முகமாக எனது வாழ்த்தைத் தெரிவிப்பதில் மகிழ்கின்றேன்.

கல்வியியலில் முதுமாணிப்பட்டம் பெற்ற பொருளியல் சிறப்புப் பட்டதாரியான அருந்தவபாலன் புகழ்பூத்த அமெரிக்க மிஷனின் பாடசாலையாகச் செயற்பட்ட தென்மராட்சி டிறிபேர்க் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றி ஒய்வு பெற்றுள்ளார்.

சமூகமும், நண்பர்களும், அவரது மாணவர்களும் அவரது சேவையை வரலாற்றில் பதிவு செய்யும் வகையில் அவரது மணிவிழா நிகழ்வையொட்டி மலர் வெளியிடுவது பெருமைப்படத்தக்கது. எனது மாணவராகவும், நண்பராகவும் விளங்கும் அருந்தவபாலன் பல்வேறு பரிமாணங்கள் கொண்டவர். பெரிய விடயங்களை உறுதியுடனும், துணிவுடனும் நிறைவேற்றும் உள்வைரம் நிறைந்த தலைவர் அவர். ஆனால் தனிப்பட்ட உறவுகளில் உன்னதமும், இனிமையும் நேசமும் பொங்கப் பழகும் பேராற்றல் கொண்டவர்.

பாடசாலையின் தலைவராக மட்டுமன்றி அரசியல் தலைவராகவும் விளங்குவதற்குரிய அனைத்துத் தகுதிகளும் நிரம்பிய முழுமையான ஆளுமை கொண்டவர். அவரது உடல்வலிமை, நேர் கொண்ட பார்வை, சரியானதை சரியான சபைகளில் வெளிப்படுத்தும் மொழியாற்றல், அறிவுப்புலமை, மனவைராக்கியம் என்பவற்றின் புதையலாகப் பல இடங்களில், பல நிலைகளில் அவரைப் பார்த்து வியந்தவன் , மகிழ்ந்தவன், பெருமைப்பட்டவன் நான்.

குளத்தில் தண்ணீர் இல்லாத காலத்திலும் "நீர் வரும்; குளம் நிறைந்து வழியும்" என்ற நேர்மறைச் சிந்தனையுடன் காத்திருக்கும் உன்னதமான பறவை அவர்.

"தென்றலைத் தீண்டியதில்லை; ஆனால்
தீயைத் தாண்டியிருக்கிறேன் எனது
வாழ்க்கைப் பாதையில் பின்னோக்கிப் பார்த்தால்
நான் கடந்து வந்த காட்டாறுகளைக் கணக்குப் பார்க்க முடியும்"

கலைஞர் கருணாநிதியின் பராசக்தி திரைப்பட வசனம் இது. இதற்கு அப்படியே பொருந்தக் கூடிய மனிதனுக்குரிய பெயர்தான் அருந்தவபாலன். "வெளியே மட்டும் வைரம் கொண்ட புல்" போன்ற பல சோடை போன தலைவர்களையும் நான் சந்தித்திருக்கின்றேன். ஆனால் உள்வைரம் நிறைந்த கருங்காலி போன்ற சுய நேர்மை கொண்ட தலைவனாகவே அருந்தவபாலனை நான் பார்க்கிறேன். நண்பர் அருந்தவபாலன் இன்னும் பல தசாப்தங்கள் ஆரோக்கியமும், செல்வமும், துணிவும் நிறைந்து வாழவேண்டும். எமது எதிர்கால சமூகத்திற்குத் தலைமை தாங்கும் வாய்ப்பை இறைவனும் சமூகமும் வழங்கவேண்டும். என ஆசி கூறி மகிழ்கிறேன்.

**பேராசிரியர் மா. சின்னத்தம்பி**

# தென்மராட்சி மண்ணின் கலங்கரை விளக்கு



வளங்கொளிக்கும் தென்மராட்சியின் சாவகச்சேரியில் 1956 ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் 18 ஆம் நாள் திரு. சங்கரப்பிள்ளை கந்தையா மற்றும் திருமதி கந்தையா கனகம்மா தம்பதிகளிற்கு அருந்தவப்புதல்வனாய் பிறந்த திரு அருந்தவபாலன் அவர்கள் இரு ஆண் மற்றும் இரு பெண் சகோதரர்களையும் உடன்பிறப்புக்களாக் கொண்டு ஆரம்பக்கல்வி தொடக்கம் சாதாரண தரம் வரை யா / சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் உயர் தரக் கல்வியை யா /டிறிபேர்க் கல்லூரியிலும் முறையாகக் கற்று 1977 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்று பொருளியல் பாடத்தில் சிறப்புப் பட்டத்தினை பெற்றதுடன் 1984 இல் கொழும்பு புனித அந்தோனியார் ஆண்கள் வித்தியாலயத்தில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்து 5 வருடங்கள் அங்கு கற்பித்து 1989 தொடக்கம் 1990 வரை கொழும்பு தெமட்டகொட வித்தியாலயத்தில் ஆசிரியராகச் சேவையாற்றி 1990 இல் தான் கல்வி கற்ற கல்லூரியான யா / டிறிபேர்க் கல்லூரியில் ஆசிரியராகப் பணியை ஆரம்பித்த திரு அருந்தவபான் ஆசிரியர் அவர்கள் 1995-2005 வரை கல்லூரியின் பிரதி அதிபராகவும் 2005 - 2015 வரை அதிபராகவும் பல சிக்கலான காலகட்டங்களிலும் துணிச்சலுடன் துடிப்பாகவும் சிறப்பாகவும் பணியாற்றி கல்லூரியின் அடைவுமட்டங்களைப் பல வழிகளில் மேம்பாடு காணச்செய்த பெரும் சாதனையாளனும் தென்மராட்சி மண்ணின் கலங்கரை விளக்குமான திரு.அருந்தவபாலன் அவர்களை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

திரு. அருந்தவபாலன் அவர்கள் ஓர் சிறந்த முன்மாதிரியான ஆசிரியர் ஆவார். இவர் 1984 தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரை புகழ் பூத்த பொருளியல் ஆசிரியராக இருந்து பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு வழிசமைத்ததுடன் பல மாணவர்களின் மனங்களில் தனக்கென நீங்கா இடம்பிடித்துக் கொண்ட நல்லாசானும் ஆவார். இத்தகைய சிறந்த வழிகாட்டியான திரு. அருந்தவபாலன் அவர்களது துணைவியாரான திருமதி சாந்தி அருந்தவபாலன் அவர்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியல் பட்டதாரியும் சிறந்த புவியியல் ஆசிரியராகவும் இருந்து சமகாலத்தில் தனது பணியை கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களுக்கும் வழங்கி அவர்களும் பல்கலைக்கழகம் செல்ல வழிசமைக்க அருந்தவபாலன் அவர்கள் உறுதுணையாக இருந்துள்ளார்.

திரு.அருந்தவபாலன் அவர்கள் ஓர் சிறந்த குடும்பத்தலைவன் ஆவார். திரு.அருந்தவபாலன் அவர்களதும் இவரது துணைவியாரதும் தன்னலமற்ற சேவையின் பயனாக இவர்களது நான்கு பிள்ளைகளும் சிறந்த கல்வியாளர்களாக மிளிர்கின்றனர். இவர்களில் மூன்று மகன்களில் பார்த்தீபன் இலங்கையிலும் சித்தார்த்தன் சிங்கப்பூரிலும் தனஞ்சயன் அவுஸ்திரேலியாவிலும் மேற்படிப்பினைக் கற்று வருவதும் ஏக புதல்வியான திருவதனி தனது கணவரான திரு.தேவானந்த் அவர்களுடன் இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்து சிறப்பாக அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருவதும் சிறந்த குடும்பத் தலைவனா வாழ்ந்து வருவதற்கான சான்றுகளாகும்.

திரு.அருந்தவபாலன் அவர்களது கல்விப் பணியானது மிக நீண்டதாகும். இவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் பலர் இன்று பல துறைகளில் குறிப்பாக இலங்கை நிர்வாகசேவை, இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை திட்டமிடல் சேவை போன்றவற்றில் சிறந்த அதிகாரிகளாக, பல்கலைக்கழக விரிவுரையாளர்களாக, கணக்காளர்களாக, கணக்காய்வு பரீட்சகர்களாக, பாடசாலை அதிபர்களாக,

ஆசிரியர்களாக, வங்கி முகாமையாளர்களாக,... எனப் பலதுறைகளில் பதவி வகித்து வருகின்றமை இவரது கல்விப்பணியின் சிறந்த அறுவடைக்கான சான்றுகளாக உள்ளன.

திரு.அருந்தவபாலன் அவர்களது சமூகப் பணியானது மிக அகன்றது குறிப்பாக மிகவும் வறிய மக்களின் கல்வி நிலையினை மேம்படுத்துதற்கு வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதுடன் கற்றலுக்கான வசதிகளை உருவாக்கிக் கொடுத்தல் என்ற வகையில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபையின் துணைத்தலைவராக 1995-1997 காலப்பகுதியிலும் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக 1993-1997 காலப்பகுதியிலும் தென்மராட்சி அதிபர் சங்கத்தின் தலைவராக 2008-2010 மற்றும் 2013-2014 காலப்பகுதியிலும் பணியாற்றியதுடன் யாழ்ப்பாண மாவட்ட கல்வி மேம்பாட்டு பேரவையின் தலைவராகவும் பல வழிகளில் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து போதைப் பொருள் விழப்புணர்வு மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமையத்தின் (DASCO) தலைவராகப் பணியாற்றி வரும் அருந்தவபாலன் உலக தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக்கிளைக்கான இணைப்பாளராகப் பணியாற்றி வருவதுடன் விடிவெள்ளி சமூக மேம்பாட்டு அமையத்தின் முதன்மை இயக்குநராகவும் பணியாற்றி வருவதுடன் தென்மராட்சிப் பிரதேசத்தில் காணப்படுகின்ற வறிய மாணவர்களின் கல்வி மற்றும் வாழ்வாதார மேம்பாடுகளுக்குப் பங்களிப்பு செய்வதற்காக வறிய மாணவர்களின் ஒளிமயமான எதிர்காலத்தினைக் கவனத்தில் கொண்டு தூரநோக்கு சிந்தனையுடன் உருவாக்கப்பட்டுள்ள அருந்தவபாலன் அறக்கட்டளை என்பதும் இவரது சமூகப்பணிகளுக்கான சான்றாதாரங்களாக உள்ளன.

திரு.அருந்தவபாலன் அவர்களது அரசியல் பணியானது மிகவும் பெறுமதியானது தமிழ் மக்களின் உரிமைகளுக்காக நீண்ட காலமாக அச்சமின்றி மிகவும் துணிச்சலோடு குரல் கொடுத்துவரும் தமிழர் மீதும் தமிழ் மண்ணின் மீதும் தீவிர பற்றுக் கொண்ட ஒரு சாதனையாளன் ஆவார். தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருந்த காலகட்டங்களிலும் கூட துணிச்சலுடன் குரல் கொடுத்த செயல்வீரன் ஆவார். இதனால் எல்லோரது மனதிலும் நீங்காத இடம் பிடித்துக்கொண்ட அரசியல் பணியாளன் ஆவார். இந்த வகையில் இதற்கான சான்றாக எமது சமூகத்திற்கு சேவை செய்வதற்காக 2010 இல் நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலிலும் 2015 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலிலும் களமிறங்கிய போதிலும் சிலவாக்குகளால் பாராளுமன்றம் செல்லும் வாய்ப்புக் கிடைக்காமல் போனாமை மட்டுமன்றி, தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றம் செல்வதற்கான வாய்ப்பு அதிகம் இருந்தும் அதுவும் கூட கைநழுவிச் சென்றமையானது, தென்மராட்சி சமூகத்தினரிடம் மட்டுமன்றி ஒட்டுமொத்த தமிழ்பேசும் மக்களது மனங்களிலும் நெடுந்துயரத்தினையே ஏற்படுத்தியுள்ளது. அமரர் கௌரவ முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் ரவிராஜ் அவர்களது இழப்பின் பின் கடந்த இரண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தல்களிலும் தென்மராட்சி சார்பாக பிரநிதித்துவப்படுத்தக் கூடிய வாய்ப்பு கைநழுவிச்செல்கின்றமை எல்லோரது மனங்களிலும் தாங்கமுடியாத வலியாகவே உள்ளது. இந்த வலியை நீக்குவதற்கான பரிகாரமாக எதிர்காலத்தில் நிச்சயமாக தென்மராட்சி பிரதேசத்தில் இருந்து பாராளுமன்றம் சென்று எமது பிரதேசத்திற்கு சேவை செய்வதற்கான வாய்ப்பும் அங்கீகாரமும் எமது ஆசானும் சிறந்த சமூக சேவையாளனும் துணிச்சல் மிக்க அரசியல் வாதியுமான திரு.அருந்தவபாலன் அவர்களுக்குக் கிடைக்கும் எனவும் அதனால் எமது பிரதேசம் மட்டுமன்றி முழுத்தமிழ்ச் சமூகமும் தலைநிமிர்ந்து நிற்க வழிசமைக்கும் என்ற நம்பிக்கையுடனும் எமது ஆசானின் கல்விப்பணி 60 வயதுடன் ஓய்வு பெற்றாலும் சமூகப்பணியும் அரசியல் பணியும் நீண்ட காலம் தொடர வேண்டுமென எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரனின் பாதார விந்தங்களை வேண்டி மனதார வாழ்த்துகின்றேன்.

**திரு. சிதம்பரநாதன் உதயகுமார்**
*தலைவர், பொருளியல்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.*

# வாழ்த்துச்செய்தி



கல்விச் சமூகத்திற்கு அரும்பணியாற்றி தனது அறுபதாவது வயதில் அரச சேவையிலிருந்து ஒய்வுபெறும் திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் இதுவரை காலமும் கல்விச் சமூகத்திற்கு வழங்கிய சேவையைப் பாராட்டி வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் க.பொ.த. (சா/த) கல்வியை யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை யா/ டிறிபேர்க் கல்லூரியிலும் பயின்றார். அதனைத் தொடர்ந்து தனது பட்டக் கல்வியை யாழ்.பல்கலைக்கழகத்தில் பயின்று கலைப்பட்டதாரிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து பட்டப்பின் கல்வி டிப்ளோமா, பட்டப்பின் கல்வி முகாமைத்துவம் பூர்த்தி செய்து, பின்னர் முதுகல்வியியல் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். 1984ஆம் ஆண்டு முதல் இவர் ஆசிரியராக, அதிபராக 32 வருட காலமாக மாணவர் சமுதாயத்துக்கு அர்ப்பணிப்பு மிக்க சேவையினை வழங்கியுள்ளமை பாராட்டத்தக்கதாகும். சிறந்த ஆளுமையும், தலைமைத்துவத்தையும் தன்னகத்தே கொண்ட இவர் பாடசாலை அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் பாடசாலையின் அபிவிருத்திக்குப் பெரும் பங்காற்றியிருந்தார்.

கல்வியில் மட்டுமல்லாது பல சமூகப் பணிகளில் ஈடுபட்டு சமூகத்திற்கு அரும்பணியாற்றியுள்ள இவர் தனது ஒய்வு காலத்தில் மேலும் பல சமூக, சமயப் பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இ. இரவீந்திரன்,**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.

# வாழ்த்துச் செய்தி



தென்மராட்சி கல்வி வலயத்தில் பணியாற்றும் திரு. க. அருந்தவபாலன் அவர்களது மணிவிழாவையொட்டி வெளியிடப்படும் மலரிற்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பொருளியல் சிறப்புப் பட்டதாரியாகவும் அதே பல்கலைக்கழகத்தில் தொழிற்றகைமைக்கான முதுகல்விமாணிபட்டத்தையும், தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி முகாமைத்துவப் பட்டத்தையும் பெற்றவராவர். தனது ஆசிரிய பணியைக் கொழும்பில் ஆரம்பித்து சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நிறைவு செய்தார். இவர் டிறிபேர்க் கல்லூரியில் ஆசிரியராக, அதிபராக இருந்த காலப்பகுதியில் மாணவர்களின் கல்வி அடைவு ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்றவராக விளங்கினார். கல்லூரியின் கல்வி மேம்பாட்டிற்காகக் கல்விச் சமூகத்தின் நல் உறவைப் பேணி தேவையான பௌதிக வளங்களைப் பெற்று பாடசாலையின் உன்னத வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தார்.

கல்விப்பணியுடன் பல்வேறு சமூகப்பணிகளில் ஈடுபட்டார். குறிப்பாகப் போதைப் பொருள் விழிப்புணர்வைப் பாடசாலைகள் தோறும் முன்னெடுத்து பலரது பாராட்டுக்களையும் பெற்றார். கல்விமேம்பாட்டுப் பேரவையின் தலைவராக இருந்து பாடமேம்பாட்டுத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்தினார்.

அகவை அறுபதில் ஓய்வுவெறும் மணிவிழா நாயகன் தனது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு நன்றிகளையும், பாராடுக்களையும் தெரிவிப்பதோடு இவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் தொடர்ந்து சமூகப்பணிகளில் ஈடுபடவும் நீடூழி வாழ வாழ்த்துகிறேன்.

**செ. உதயகுமார்**
மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.

# மாண்புறு மனிதத்தை மனம் நிறைய வாழ்த்துகின்றேன்



தென்மராட்சி மண்ணின் சிறந்ததொரு தலைமைத்துவப் பாங்கு கொண்ட கந்தையா அருந்தவபாலன் அவர்களின் கல்விப்பணியின் ஒய்வையொட்டி தென்மராட்சி சமூகத்தால் முன்னெடுக்கப்படும் மணிவிழா மலருக்கு வரிவடிவங்களாய் வாழ்த்துரைப்பதில் நிறைவடைகின்றேன்.

தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளராய் நான் கடமையேற்ற போது மிகச்சிறந்த நிர்வாக மற்றும் ஒழுக்க விழுமியங்களோடு சிறப்பாக இயங்கிய யா/ சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் அதிபராக அறிமுகமானார். நிமிர்ந்த நடை நேர் கொண்ட பார்வை, கொள்கையில் உறுதி, தடம்மாறாத் தலைமைத்துவம் போன்ற பண்புகளைத் தனதாக்கி தனது கல்விப்பணி, சமூகப்பணி என்பவற்றை வினைதிறனாக மேற்கொண்டதை நான் அவரிடம் கண்டுகொண்டேன்.

தென்மராட்சியின் பிரபல்யமான பொருளியல் ஆசானாகத் திகழ்ந்து பல நூற்றுக்கணக்கான மாணவர்களை நன் மாணாக்கராக உருவாக்கியதோடு தமிழ்பேசும் மாணவர்களினதும் மக்களினதும் உரிமைக்காக அன்றும் இன்றும் உழைத்து வருவதை யாவரும் அறிந்ததே. அமைதியான நடத்தை, ஆழமான அறிவு, விளம்பரம் தேடா உயர் குணம், சிறந்த எளிமையான பேச்சாற்றல், மொழிப் புலமை, நேர முகாமைத்துவம், அர்ப்பணிப்பு என்பன அவருடைய சிறந்த வாண்மை மிக்க தலைமைத்துவத்தின் அணிகலன்களாகும்.

பொருளியல் சிறப்பு பட்டதாரியாக யாழ் பல்கலைக்கழகத்தில் கற்று வெளியேறி ஆசிரியப் பணியில் நுழைந்த பட்டப்பின் கல்வி, முதுகல்வியியல், பட்டபின் கல்வி முகாமைத்துவம் வரை தனது வாண்மையை வளர்த்து கொழும்பில் 6 ஆண்டுகள் ஆசிரியராகவும் கடமையாற்றி, தொடர்ந்து யா/டிறிபேர்க் கல்லூரியில் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிகராக சுமார் 25 ஆண்டுகள் சேவையாற்றி கல்லூரியின் காலத்தின் பதிவாய்

அமைந்துள்ளார். கல்விப்புலத்திற்காகத் தனது சேவையை சுமார் மூன்று தசாப்பதங்களுக்கு மேல் வழங்கியதுடன் சமூகப் பணிகளில் போதைப் பொருள் விழிப்புணர்வு மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமையத்தின்(DASCO) தலைவராகவும், விடிவெள்ளி சமூக மேம்பாட்டு அமையத்தின் முதன்மை இயக்குநராகவும், தென்மராட்சி அதிபர் சங்கத்தின் தலைவராகவும் மற்றும் சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கத்தின் தலைவராகவும், உலகத் தமிழ் பண்பாடு இயக்கத்தின் இலங்கைக்கிளையின் இணைப்பாளராகவும் பல்பரிமாணங்களில் பரிணமித்து சமூகஞ்சார் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி சேவையாற்றியுள்ளார். அந்த வகையில் தென்மராட்சி மண்ணில் கல்வி மற்றும் சமூக அரசியல் அபிவிருத்தியின் ஒரு குறியீடாக விளங்கியுள்ளார் என்றால் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

அவ்வாறான ஆளுமை கொண்ட மனிதம் தனது கால வயதின் நீட்சியில் பயணித்து கல்விப்புலத்திலிருந்து ஓய்வுபெற்று செல்கின்ற இவ்வேளையில் தனது கல்வி மற்றும் சமூக அரசியல் பரப்பில் நிலையான தடம் பதித்து எமது சமூகத்தின் தேவையறிந்து தனது சேவையை வழங்கி ஆயிரம் பிறைகண்டு ஆனந்தமாய் இல்லாளுடன் இனிய மகவுகளுடன் மற்றும் உறவுகளுடனும் வாழ வாழ்த்தி அமைகின்றேன்.

**க. கிருஷ்ணகுமார்,**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.

# மணிவிழா நாயகனின் நிறைவான சேவைக்கு ஒரு வாழ்த்து



தென்மராட்சி மண்ணின் மத்தியிலே அமைந்துள்ள பல கல்வியாளர்களை உருவாக்கி வரும் யா/ சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றி சேவையிலிருந்து ஓய்வு பெறும் ஒரு சிறந்த அதிபரின் சேவையைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமிக மகிழ்வடைகின்றேன். அதிபர் திரு. க. அருந்தவபாலன் அவர்கள் தனது 32 வருட சேவைக் காலத்தில் 11 வருடகாலம் ஆசிரியராகவும் 10 வருடங்கள் உப அதிபராகவும் 10 வருடங்கள் அதிபராகவும் சேவையாற்றி இறுதியாக தென்மராட்சிக் கல்வி வலயத்தில் தனது நிறைவான சேவையைப் பூர்த்தி செய்துள்ளார். பொருளியற்றுறையில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றதுடன் முதுகல்வியியல், பட்டப்பின் கல்வி, கல்வி முகாமைத்துவம் எனப் பல உயர் பட்டங்களைப் பெற்று ஓர் சிறந்த ஆளுமையுடைய அதிபராகத் திகழ்ந்துள்ளார். மேலும், டிறிபேர்க் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறுகளை மாணவர் பெற வித்திட்டதுடன், பல மாணவர்கள் உயர்தரப் பிரிவில் நற்பெறுபேறுகளைப் பெறுவதற்கும் வழிகோலியுள்ளார். கல்லூரிக்குள்ளே விளையாட்டு மைதானம் உருவாவதற்குப் பாடுபட்டதுடன் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் அயராது உழைத்துள்ளார். பாடசாலை நிர்வாகச் செயற்பாடுகளை மேம்படுத்தி தன்னைப் பாடசாலை வளர்ச்சிக்காக அர்ப்பணித்துள்ளார்.

அதிபர் அவர்கள் தனது கல்விப்புல சேவையுடன் மட்டுமல்லாது கல்வி மேம்பாட்டுப் பேரவை, விடிவெள்ளி சமூக மேம்பாட்டு மையம், சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம், போதைப் பொருள் விழிப்புணர்வு மற்றும் சிறுவர் பாதுகாப்பு மையம் போன்ற அமைப்புக்களில் பல பதவிகளினூடாகத் தனது சேவையை வழங்கியதுடன் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையின் இணைப்பாளராகவும் இருந்துள்ளார். தென்மராட்சி அதிபர் சங்கத் தலைவராக இருந்து அத்தியாவசியக் கோரிக்கைகள், தேவைகள் நிறைவேறுவதற்கு வழிகோலியுள்ளார். அனைவருக்காகவும் நீதிக்காக உரக்கக்குரல் கொடுக்கும் ஓர் அதிபராகவும் விளங்கியதுடன் சமூக சேவையாற்றுவதில் ஆர்வம் உள்ளவராக, ஓர் சமூக சேவையாளனாகத் திகழ்ந்து வருகின்றார் என்றால் அது மிகையாகாது.

இவ்வாறாகப் பல சேவைகளை மேற்கொண்டு கல்விச் சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்து, தனது நிறைவான சேவையிலிருந்து ஓய்வுபெறும் திரு. அருந்தவபாலன் அதிபர் அவர்களது ஓய்வுக் காலம் சிறக்க வாழ்த்துவதோடு அவரது சமய, சமூகப் பணி தொடர வேண்டி இம் மலர் நறுமணம் வீசி புகழ் மணம் பரப்பிட எனது வாழ்த்துக்ளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி அ. சாந்தசீலன்,**
பிரதேச செயலர்,
தென்மராட்சி.

# குன்றில் ஏற்றிய தீபம்



'தோன்றின் புகழோடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'.

என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கு இலக்கணமாக வாழ்ந்து வரும் திரு. க. அருந்தவபாலன் அவர்கள் புகழ்பூத்த ஒரு பேராசானாகவும் சிறந்த பேச்சாளனாகவும் ஒரு சமூக சீர்திருத்தவாதியாகவும் விளங்குகிறார். பல மனித தர்மங்களான நேர்மை, தன்னடக்கம், பிறரிற்கு உதவும் மனப்பாங்கு, இனிமையாகப் பேசுதல், மாணவர்களுடன் அன்பாகப் பழகுதல், பக்தி, செய்நன்றி மறவாமை, செயல் வீரர் போன்ற இன்னோரன்ன நல்ல குணாம்சங்களைத் தன்னகத்தே கொண்டு செயற்பட்டு வருவதனை நம்மால் காண முடிகிறது. இத்தகைய நற்பண்புகளை தன்னகத்தே கொண்ட மாமனிதராக விளங்கும் எமது பேராசான் அவர்கள் 18.8.2016 ஆம் திகதியன்று அறுபது வயதினைப் பூர்த்தி செய்து மணிவிழா கொண்டாடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இற்றைக்கு மூன்று தசாப்தத்திற்கு முன்பு தென்மராட்சி பிரதேசம் மிகவும் கல்வியில் பின்தங்கிய பிரதேசமாகக் காணப்பட்டது. இப்பிரதேசத்திலே கல்வி சார்ந்த செயற்பாடுகள் குறைவாகவே காணப்பட்டது. மணிவிழா நாயகன் யாழ் பல்கலைக்கழகத்தில் பொருளியல் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தினைப் பெற்று 1984ஆம் ஆண்டு அதே பிரதேசத்தில் புகழ்பூத்த பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றிபின் அதிபராகவும் கடமையாற்றி மேலதிக வகுப்புக்களை ஆரம்பித்து தென்மராட்சி மாணவர்களின் உயர்கல்விக்கு உந்து சக்தியாகவும் விளங்கினார். இவரிடம் கல்வி கற்ற பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் இன்று பல்வேறு உயர் அரச பதவிகளிலும், ஆசிரியர்களாகவும் விளங்குகின்றனர். இதனால் இன்று தென்மராட்சி பிரதேசம் கல்வித்துறையில் குன்றிலேந்திய தீபம் போன்று சுடர் விட்டுப் பிரகாசிப்பதனை அவதானிக்க முடிகிறது.

மேலும் சமூகம் சார் பணிகளில் விடிவெள்ளி சமூக மேம்பாட்டு அமையத்தின் முதன்மை இயக்குநராகவும் கல்வி மேம்பாட்டு பேரவை, உலக தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கை கிளை இணைப்பாளராகவும் தென்மராட்சி பல நோக்கு கூட்டுறவு சங்கத் தலைவராகவும் இருந்து பல்வேறு சமூகப் பணியாற்றி தென்மராட்சி பிரதேச அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்துள்ளார்.

மேலும் சிறுவர்கள் தொடர்பாகவும் சமூகத்தில் வாழ்கின்ற பல்வேறு மட்டத்தினர் தொடர்பாகவும் கூடிய கரிசனை செலுத்தி இன்றைய காலத்தின் தேவைக்கேற்ற வகையில் பல விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்தியுள்ளார். உதாரணமாக போதைப் பொருள் தொடர்பான கருத்தரங்குகளை பல பிரதேச செயலகப் பிரிவில் தானே நேரில் சென்று நிகழ்த்தியுள்ளார். அத்துடன் சிறுவர் உரிமை, சிறுவர் பாதுகாப்பு தொடர்பான எண்ணக்கருக்களையும் பாடசாலை சிறார்களிற்காக தொடர்ச்சியாக நிகழ்த்தி வருவதனை அறிய முடிகிறது.

இவருடைய அரசியல், பொருளாதார செயற்பாடுகளை நோக்கும் போது அரசியல் யாப்பு அவை தொடர்பான மாற்றங்கள், அரசியல் சிந்தனைகள், ஜனநாயகம் தொடர்பான கருத்து வெளிப்பாடுகள் போன்றவற்றை மக்கள் மனதில் நன்கு பதியக்கூடிய முறையில் நடைமுறைப்படுத்துவதனை காணக்கூடியதாக உள்ளது. பொருளியல் பட்டதாரியான இவர் பொருளாதார நுணுக்கங்களையும் அளவுகோல்களையும் மாணவர் மனதில் நன்கு பதியக் கூடிய முறையில் தனியார் கல்வி நிறுவனங்களில் செயற்படுத்தி வந்தமையை அறிய முடிகிறது. மற்றும் சமூக ரீதியாக பொருளாதாரத் திட்டங்களை வகுத்து நல்ல ஆலோசனைகளைக் கூறுதல், தனது பாடசாலைகளில் அவற்றினை பிரயோகப்படுத்துதல் போன்ற நல்ல கைங்கரியங்களையும் செய்து வருவதனை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

இவருடைய அறக்கொடைகளை நோக்கும் போது முன்பள்ளி சிறார்களிற்கு கற்றல் உபகரணங்களை வழங்குதல், வறிய சிறார்களிற்கு இலவசமாகக் கல்வி கற்பித்தல், முதியோர்களிற்கு உகந்த தர்மங்களை செய்தல் போன்ற நிகழ்வுகளிற்கு நிதியை வாரி வழங்குதல் போன்ற செயற்பாடுகளைச் செய்து வருகின்றார். மேலும் இவ் அமைப்பின் ஊடாக தென்மராட்சி, பளை, பூநகரி பிரதேசத்திலுள்ள முன்பள்ளி சிறார்களிற்கு கற்றல் உபகரணப் பொதிகளை வழங்கியுள்ளார்.

இவ்வாறு மகத்தான பணியாற்றி மணிவிழா காணும் உயர்திரு க. அருந்தவபாலன் அவர்களிற்கு மணிவிழா எடுப்பதில் மணிவிழாக் குழுவினராகிய நாம் பேருவகை அடைவதுடன் அவருடைய ஓய்வுக் காலத்தில் மேலும் சமூகப் பணியாற்றி குடும்ப சமேதரராய் நீடூழி காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். மேலும் தனது மணிவிழா நாளன்று வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களிற்கு உதவும் முகமாக மணிவிழா நாயகனால் ஆரம்பிக்கப்படவுள்ள அறநம்பிக்கை நிதியம் வெற்றியுடன் செயற்பட இறைவனைப் பிரார்த்தித்து எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

**க. கனகேஸ்வரன்**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
வடமராட்சி கிழக்கு

தலைவர்,
மணிவிழாக்குழு.

# தென்மராட்சி மண் பெற்றெடுத்த நல்லாசான்



சாவகச்சேரியில் 1956 ஆம் திரு சங்கரப்பிள்ளை கந்தையா மற்றும் திருமதி கந்தையா கனகம்மா தம்பதிகளிற்குப் புதல்வனாகப் பிறந்த திரு அருந்தவபாலன், புவியியல் பட்டதாரி ஆசிரியரான சாந்தி அவர்களை திருமணம் செய்து இல்லறத்தில் நான்கு புதல்வர்களைப் பெற்று அவர்களை சிறந்த நிலைக்குக் கொண்டு வந்த ஓர் சிறந்த குடும்பத்தலைவனாக விளங்கும் அருந்தவபாலன் ஆசிரியர் அவர்கள் மாணவர்களின் மனங்களில் நீங்க இடம்பிடித்த நல்லாசான் ஆவார். இவரிடம் 198-89 காலப்பகுதியில் கல்வி கற்கும் வாய்ப்புக்கிட்டியமை எமது அதிஸ்டமாகும்.

இவரிடம் கல்வி கற்ற என்போன்ற பலர் இன்று கணக்காளர்களாக மட்டுமன்றி கணக்காய்வு பரீட்சகர்களாக பல்கலைக்கழக விரிவுரையாளர் களாக இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளாக.... எனப் பல பதவிகளில் பணியாற்றி தமக்கும் எமது ஆசானுக்கும் எமது தென்மராட்சி பிரதேசத்துக்கும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

திரு அருந்தவபாலன் ஆசிரியர் அவர்களிடம் உள்ள சிறந்த கற்பித்தல் திறன் மாணவர்களுடன் உள்ள ஆரோக்கியமான உறவுநிலை தனது மாணவர்களின் முன்னேற்றங்களில் எப்போதும் அக்கறையாக உள்ளமை மாணவர்களின் முன்னேற்றத்தைக் கண்டு இரட்டிப்பு மகிழ்ச்சி அடைவது இவரது தனிப்பட்ட பண்பாகும். தான் கல்வி கற்ற யா / டிறிபேர்க் கல்லூரியில் 5 வருடங்கள் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் 10 வருடங்கள் அதிபராகவும் இருந்து பணியாற்றி சிறந்த ஓர் நிர்வாகி என்பதை நிரூபித்துள்ளார்.

வறிய மாணவர்களின் எதிர்காலம் கருதி அயராது உழைக்கும் உத்தமசீலர் ஆக விளங்கும் இவர் அருந்தவபாலன் அறக்கட்டளை ஒன்றை உருவாக்கி தென்மராட்சி பிரதேசத்தில் வாழ்கின்ற வறிய மாணவர்களின் எதிர்கால வாழ்வாதாரம் மற்றும் கல்வி மேம்பாட்டுக்காக

பாடுபடும் இவரது முயற்சி வெற்றி பெற எல்லோரும் கைகொடுக்க வேண்டும். மேலும் திரு அருந்தவபாலன் அவர்கள் கல்விப் பணிக்கு அப்பால் சமூகப்பணிகளைப் பரந்தளவில் காலத்தின் தேவை கருதி ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் போதைப் பொருள் விழப்புணர்வு மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமையத்தின் (DASCO) தலைவராக இருந்து இன்று முக்கிய சவாலாக உள்ள போதைப் பாவனைகளில் இருந்து எமது இளம் சந்ததியைக் பாதுகாப்பதில் பங்கெடுத்துவரும் இவர் விடிவெள்ளி சமூக மேம்பாட்டு அமையத்தின் முதன்மை இயக்குநராகவும், கல்வி மேம்பாட்டு பேரவையின் தலைவராகவும் உலக தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், இலங்கைக்கிளையின் இணைப்பாளராகவும் பணியாற்றி வருகின்றமை இவரது சமூகப்பணியின் எடுத்துக்காட்டாகும்.

திரு. அருந்தவபாலன் அவர்கள் கல்விப்பணி மற்றும் சமூகப் பணியுடன் நின்று விடாது நொந்து போயுள்ள எமது தமிழ்பேசும் மக்களிற்காகத் துணிந்து குரல்கொடுத்து வரும் வகையில் சிறந்த அரசியல் பணியிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி வருவதும் எமது பிரதேசத்தின் பலமாக உள்ளது. இத்தகைய பல்துறை ஆற்றல் கொண்ட கல்விப்பணியாளன், சமூகப்பணியாளன் மற்றும் அரசியல் பணியாளன் திரு அருந்தவபாலன் அவர்களது அறுபதாவது அகவையில் வெளியிடப்படும் அருந்தவம் என்ற மணிவிழா மலரில் வாழ்த்துத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன். மேலும் எமது ஆசானின் எதிர்காலம் ஒளிமயமாக அமைய எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டி வாழத்துகின்றேன்.

செ. ரகுநாதன்,
கணக்காளர், மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாண மாவட்டம்.

# வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் முன்னாள் அதிபரும் எனது நண்பனுமாகிய திருவாளர் கந்தையா அருந்தவபாலன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கற்ற அதே காலத்தில் அவரும் கற்றார். அப்போது துடி துடிப்புள்ள இளைஞனாகச் செயற்பட்டார். எதற்கும் துணிந்து நல்ல செயல் இடம்பெறுவதற்காகத் தட்டிக் கேட்பதில் வல்லவராக இருந்தார். மேலும் கற்பித்தலில் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா என்னுடன் சேர்ந்து கற்கும் காலத்தில் எதையும் துணிந்து சிங்கள சகோதரர்களுடன் வெளிப்படையாகக் கதைக்கும் வல்லமை பொருந்தியவராகச் செயற்பட்டார். அப்போது சகல விரிவுரையாளர்களது மனதையும் கவர்ந்த ஒருவராகவும் காணப்பட்டார். எமது கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்களை, ஆசிரியர் பயிற்சிக்காக அனுப்பும் போது நிறைவான ஒத்துழைப்பைத் தந்து மாணவர்களைச் சரியாக நெறிப்படுத்திய பெருமை அவரைச் சாரும்.

இவர் 1984 இல் ஆசிரியராக இணைந்து பல்வேறு பாடசாலைகளில் கடமையாற்றி பின் பிரதி அதிபராகி அதே பாடசாலையான சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் அதிபராகத் தனது கடமையைத் தொடர்ந்தார். இக்காலப்பகுதியில் கல்லூரியின் பௌதிக வளங்களை மாத்திரமின்றி ஏனைய வளங்களையும் விருத்தி செய்ததோடு கல்லூரியின் சிறந்த நிலையை இலங்கையின் பல பாகங்களிற்கும் தெரியும்படி செய்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் சமூகத்தின் பல்வேறு பரிமாணங்களில் தன்னை ஈடுபடுத்தி சமூக மேம்பாட்டிற்கு அர்ப்பணித்தவர். அத்துடன் இன்றைய இளைஞர்கள் மத்தியில் சவாலாக இருக்கின்ற போதைப்பொருள் பாவனைக்கு எதிராக குரல்கொடுக்கின்ற போதைப்பொருள் விழிப்புணர்வு சிறுவர் பாதுகாப்பு அமையத்தின் தலைவராகச் செயற்பட்டு எமது மக்களின் கலாசார விழுமிய நியமங்களைக் காப்பாற்றி வருகின்றமை யாவருக்கும் தெரிந்ததே. மேலும் சாவகச்சேரி தொகுதியின் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்து தமிழ் மக்களின் விடிவிற்காகத் தன்னையே அற்பணித்து சில சிக்கல்களையும் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் தென்மராட்சி அதிபர் சங்கத்தின் தலைவராக இருந்து அதிபர்களின் நிர்வாகம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தவர். இவரின் வழிகாட்டலில் பல பாடசாலைகள் புத்துயிர் பெற்று எழுந்தன. சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியை உன்னத நிலைக்குக் கொண்டு வந்த பெருமை திரு. க. அருந்தவபாலன் அவர்களையே சாரும், சாந்தமுகமும் செயற்றிறனும் கொண்ட இவர் மாணவர்கள், ஆசிரியர்கள், பழையமாணவர்களின் விருப்புக்குரிய அதிபராகத் திகழ்ந்தார்.

மேலும் தன் பிள்ளைகளைப் பொறியியல் துறை, தகவல் தொழில்நுட்பத்துறை, விவசாயத்துறை என்பவற்றிற்கு உயர் கற்கைக்கு இட்டது போல தனது பாடசாலை மாணவர்களின் கல்விசார் செயற்பாடுகளுக்கும், இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து கல்லூரித் தாய்க்கு அளப்பரிய சேவையாற்றி மணிவிழாக்காணும் மாண்புறு பெருமகன் இன்றுபோல் என்றும் நிறைவாக வாழ்வதோடு தொடர்ந்தும் கல்விப்பணியையும், சமூ கப்பணியையும் யாழ் சமூகத்திற்கு வழங்க வித்தக விநாயகர் பாதம் பணிந்து எனது வாழ்த்துக்களை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம் சார்பாகத் தெரிவிக்கின்றேன்.

**ச. அமிர்தலிங்கம்,**<br>
பீடாதிபதி.<br>
தேசிய கல்வியியற் கல்லூரி,<br>
யாழ்ப்பாணம்.

# தென்மராட்சி மண்ணிற்கு வளம் சேர்ப்பவர்



தென்மராட்சி மண்ணின் மைந்தன் ஆருயிர் நண்பன் கந்தையா அருந்தவபாலன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நண்பன் அருந்தாவிற்கும் எனக்குமிடையிலான தொடர்பு 1978 இல் ஆரம்பமானது. இத்தொடர்பு பல மட்டங்களில் இன்று வரை தொடர்கின்றது. தென்மராட்சி கல்விப்புலத்தில் தனித்துவமிக்க பொருளியல் ஆசிரியராகத் தன்னைத் வெளிப்படுத்தியவர். தனது சேவையை கல்லூரி மட்டத்திலும் அதற்குப் புறம்பாகவும் பொருளியல் பாடத்தைக் கற்பித்தார். பொருளியல் சார் நூல்களையும், கட்டுரைகளையும் வெளியிட்டார். தென்மராட்சிப் பாடசாலையில் உள்ள ஆசிரியர்கள், அதிபர்கள் பலர் இவரது மாணவர்களாவர். மேலும், சிறப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொருளியல் துறையின் தற்போதைய தலைவர் உட்பட இரண்டு சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இவரது அன்புக்குரிய மாணவர்கள் ஆவர். இது அவரது பொருளியல் பாடம் சார் பரம்பரை ஒன்றை உருவாக்கியுள்ளதற்கான சான்றாகும். இலங்கையின் பல பாகங்களிலும் கல்வி நிர்வாக சேவை, நிர்வாக சேவை, கணக்காளர் சேவை மற்றும் கணக்காய்வு சேவை போன்ற தீவுரீதியான பல தரப்பட்ட சேவைகளில் உயர் பதவிகளில் வகிப்பவர்கள் பலரும் அவரது மாணாக்கர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வடபுலத்தின் பள்ளிகளை முகாமைத்துவம் செய்வதில் வெற்றி கண்ட அதிபர்கள் பலர் எமது தோழர்கள், நண்பர்கள் என்றால் மிகையாகாது. அந்த வகையில் தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆபத்தின் விளிம்பில் பல மாணவர்களைக் கொண்ட யா/ டிறிபேர்க் கல்லூரியின் அதிபராக இருந்து பல காத்திரமான மாற்றங்களை மேற்கொண்டார். இக் கல்லூரிக்குரிய பாரம்பரியங்களையும், மரபுகளையும் பேணுவதிலும், பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தினார். மாணவர்களின் ஆளுமை

வளர்ச்சி, ஆசிரியர்களுக்கான ஆளுமைத்திறன்கள், இணைப்பாடவிதான செயற்பாடுகள் கல்வி அடைவு மட்டத்தைப் படிப்படியாகக் கட்டியெழுப்புதல், சமூக உறவை வளர்த்தல் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகள் மூலம் கல்லூரியின் தரத்தை வெளிப்படுத்தி சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்ற அதிபராக விளங்கினார்.

சமூகப்பணிகள் பலவற்றைத் தனது தலைமைத்துவத்தின் மூலம் நெறிப்படுத்தினார். சமூகத்தின் முக்கிய சவாலாக பேசப்படுகின்ற போதைப் பொருள் விழிப்புணர்வை (DASCO) பாடசாலை மட்டங்களில் எடுத்துச் செல்வதிலும் சுவரொட்டிகளை வெளியிட்டும் போதை அற்ற சமூகத்தை உருவாக்குவதில் முழுவீச்சுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவராக இருந்து பேரவை உருவாக்கப்பட்ட நோக்கத்தை செயலுருவாக்கம் செய்வதில் செயற்றிட்டங்களை முன்னெடுத்துச் செல்கிறார். குறிப்பாக மாணவர்களின் பாட அடைவை மேம்படுத்துவதிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் பயனுறுதித்தன்மையை வலுப்படுத்துவதிலும் கூடிய கரிசனையெடுத்து வருகின்றார்.

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக்கிளையின் இணைப்பாளராக இருந்து 2017 ஆம் ஆண்டு உலகத் தமிழ பண்பாட்டு எழுச்சி மகாநாட்டை இலங்கையில் நடாத்துவதற்கு தேவையான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றார். தென்மராட்சிப் புலத்தின் கல்வி, சமூக, அரசியல் செயற்பாடுகளில் முன்னின்று முழுவீச்சுடன் செயற்படும் நண்பர் "அருந்தா" நீண்ட காலம் உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ்ந்து சமூக, அரசியல் தளத்தில் பிரகாசிக்க வாழ்த்துகின்றேன்.

**அ. அகிலதாஸ்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணக் கல்வி வலயம்,
செயலாளர், கல்வி மேம்பாட்டுப் பேரவை, யாழ்ப்பாணம்.

# கல்லூரி தலைமைத்துவத்திற்கு முன்னுதாரணமானவர்



தென்மராட்சியின் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட சாவகச்சேரி நகரத்தில் உள்ள பிரபல பாடசாலையின் வாண்மை மிக்க ஆசிரியராக, ஆளுமை மிக்க அதிபராகக் கடமையாற்றி அகவை அறுபதில் ஒய்வு பெறும் திருவாளர் கந்தையா அருந்தவபாலன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் வரணி மகா வித்தியாலயத்தில் பொருளியல் ஆசிரியராக இருந்த காலத்தில் டிறிபேர்க் கல்லூரியின் பொருளியல் ஆசிரியராகவும் நான் அதிபராக இருந்த போது சக அதிபராகவும் அறிமுகமாகியவர்.

திரு. க. அருந்தவபாலன் அவர்கள் தனித்துவ ஆளுமை மிக்கவர். தான் கற்பிக்கும் பாடத்தில் விசேட ஞானம் உள்ளவர். தலைமைத்துவத்தின் நுட்பங்களை அறிந்து தனது அதிபர் பதவியை அலங்கரித்தவர். பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து பன்மைச் சமூகத்தின் மத்தியில் வெற்றிகரமாகக் கல்லூரியை வழிநடாத்தியவர். இதனால்தான் தலைமைத்துவத்தின் வெற்றி கல்லூரியின் வெற்றியாக அமைந்தது.

அதிபர் அவர்கள் தற்துணிவும் உயர்ந்த சிந்தனையும் கொண்டவர். எடுத்த காரியத்தைப் பின்னோக்கிச் செல்லாது முன்னோக்கிச் செலுத்துவதில் வெற்றி கண்டவர். கால ஓட்டத்தில் மாற்றத்தின் கருத்துக்களை உள்வாங்கி தனது வாண்மையை செழுமைப்படுத்தி தொழிலை மேன்மைப்படுத்தியவர். கல்விப் புலத்துடன் இவற்றை நிறுத்தி விடாது பொது வாழ்விலும் தன்னைத் தடம்பதித்துக் கொண்டவர். குறிப்பாக தமிழர் உரிமைக்காக அரசியலில் களமிறங்கிய பெருமைக்குரியவர்.

பல்துறை ஆளுமையும் ஆற்றலும் கொண்ட திரு. க. அருந்தவபாலன் அவர்கள் காலத்தின் கட்டளையின் பேரில் அகவை அறுபதாகினும் தோற்றத்தால் இளமை குன்றாது காண்பது போல் என்றும் அவர் வாழ்வு தொடர்ந்தும் சிறக்க எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வ. நடராசா**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
சாவகச்சேரி.

**இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்**
**CEYLON TAMIL TEACHERS' UNION**
தலைமைப் பணிமனை. 131.கண்டி வீதி. யாழ்ப்பாணம்.
Head Office. 131.Kandy Road. Jaffna.(Reg.NO:REGD:NO:5001)
**Email:tamilteachers@gmail.com Web: www.tamilteachers.com**

# சமூகப் பொறுப்புள்ள சேவையாளன்



*பிரதேச மக்களாலும் ஆயிரக்கணக்கான மாணவர்களாலும் அன்பாக நேசிக்கப்பட்ட மதிப்பார்ந்த கந்தையா அருந்தவபாலன் அவர்கள் மிகவும் கண்ணியமான ஒரு சமூக முன்னோடி.*

*எத்தகைய எதிர்பார்ப்புகளும் இன்றி சுயநலமில்லாமல் எமது இனத்தின் உரிமைக்காகக் குரல் உயர்த்தும் இனப்பற்றாளன்.*

*பொருளியல் துறையில் சிறப்புப் பட்டம் பெற்று நல்ல ஆசானாக, சிறந்த நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்ட அதிபராகப் பல்வேறு பரிமாணங்களில் மிளிர்ந்து தமிழர்தம் விடுதலைப் பணியில் இணைந்த திரு. க. அருந்தவபாலன் அவர்கள் மிகவும் மதிப்பிற்கு உரியவர்.*

*நல்ல மனையாளோடு, நான்கு குழந்தைகளைப்பெற்று, நால்வரையும் நல்ல நிலையில் வளர்த்தெடுத்து நல்ல தந்தைக்கான பொறுப்புக் கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றி சிறந்த குடும்பத்தலைவன் என்ற பண்பையும் பெற்றுக் கொண்டார்.*

*இவரது அறுபதாவது அகவையில் வாழ்த்துச் சொல்வதில் மகிழ்ச்சி அடைந்து நீண்ட ஆயுளோடு தமது கல்விப்பணி, சமூகப்பணி, விடுதலைப்பணி என்பவற்றைத் தொடர எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.*

**சரா. புவனேஸ்வரன்**
பொதுச் செயலாளர்,
விரிவுரையாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

ලංකා ගුරු සංගමය
இலங்கை ஆசிரியர் சங்கம்
CEYLON TEACHERS' UNION
65/4, 'ගුරු මැදුර' චිත්තම්පලම් ඒ. ගාඩිනර් මාවත, කොළඹ 02.
65/4, 'குரு மதுர' சித்தம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 02.
65/4, 'Guru Medura' Chittampalam A. Gardiner Mawatha, Colombo 02.
Tele/Fax: 0112458058 | E-mail : ceylonteachers@gmail.com
ලි.ප. අංකය. / பதிவு இல. / Regd No. 984

# ஆளுமைகளையும் சமூக சிந்தனைகளையும் தன்னகத்தே கொண்டவர்



பல ஆளுமைகளையும் சமூக சிந்தனைகளையும் தன்னகத்தே கொண்ட திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் கல்வித்துறையில் ஆற்றிய பங்களிப்பு மதிப்புக்குரியது. சிறந்த ஆசிரியராக, சிறந்த அதிபராக, தனது பரந்த சிந்தனைகளூடாக -கல்விச் சமூகத்துக்கு அவராற்றிய பணியில் மணிவிழாக் காண்பது என்பது மகிழ்ச்சிக்குரியதும் பாராட்டப்படவேண்டியதுமாகும். தனது பாடசாலை முகாமைத்துவத்தில் - பணியாற்றிய ஆசிரியர்களுடன் முரண்படாத ஒரு அதிபராக சேவையை ஆற்றி - அதில் வெற்றியையும் கண்டு -பாடசாலைகளை இணைந்த முகாமைத்துவத்தினூடாக வெற்றிப் பாதைக்கு இட்டுச்சென்றமையானது - அவரது சிறந்த தலைமைத்துவத்துவத்தின் வெளிப்பாடாகும். "தலைவனாக இருக்க விரும்புபவன் முதலில் தொண்டனாக இருக்கவேண்டும்" என்னும் இயற்பியல் விதிக்கு அமைவாக -தன் கீழ் பணியாற்றிய ஊழியர்களிடத்தில் கரிசனையும், அன்பும் கொண்டு அவர்களின் சுக துக்கங்களில் பங்குகொண்ட அதிபருக்கு - அவரது மணிவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்து தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இனிவரும் இவரது ஓய்வுப் பொழுதுகளும் - சமூக செயற்பாடுகளிலேயே மேலோங்கவும் - தனது வளர்ச்சியினூடாக - சமூகத்தின் வளர்ச்சியினையும் - மிக நேர்மையான வழியில் கொண்டு செல்லவும், நீடிய ஆயுளும் மகிழ்ச்சியும் நீடிக்கவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

**ஜோசப் ஸ்ராலின்,**
பொதுச்செயலாளர்,
இலங்கை ஆசிரியர் சங்கம்.

# மணிவிழா நாயகனே வாழ்க!



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒன்று சேர்ந்து இன்று வரை என்னில் தாக்கம் செலுத்தும் எனது அருமை நண்பர் குழாத்தில் ஒருவனாக, தன்னுடைய பல்துறை ஆளுமைகளையும் தான் வாழும் சமூகத்திற்காகப் பிரயோகித்து அச்சமூகத்தை எழுச்சியுற வைத்ததனூடாக அச்சமூகத்திலே ஒரு மதிப்பு மிகுந்த மனிதனாகத் திகழ்கின்ற எனது அன்பு நண்பனும் தென்மராட்சி அதிபர் சங்கத்தலைவருமாகிய உயர் திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிகவும் பெருமை யடைகின்றேன்.

எமது மக்கள் பல் வகையிலும் இன்னல்களை எதிர்கொண்ட போதெல்லாம் தனது உயிரையும் துச்சமென மதித்து மக்களோடு மக்களாக வாழ்ந்த ஒரு வீரப் புதல்வனின் வரலாறு எழுதப்படுகின்ற போது அவரைப் பற்றிய அவரது நண்பர்களின் பதிவுகள் முக்கியமானதாகும்.

சிறந்த பொருளியல் ஆசிரியராக, புகழ் பூத்த அதிபராக, தென்மராட்சிப் பிரதேசத்தின் மதிப்பு மிகு கல்வியாளனாக, கூட்டுறவு இயக்கத்திற்குப் பெருமை சேர்த்த குழுத்தலைவனாக, தான் சார்ந்த சமூகத்தின் எழுச்சிக்கான இயக்கங்கள் பலவற்றின் தலைவனாக, தமிழர் தம் பண்பாட்டுப் பாரம்பரியத்திற்கு வலுச்சேர்ப்பவனாக, தமிழர் அரசியல் இருப்பிற்கு உரம் கொடுப்பவனாக எனப் பல்வகைச் சேவையால் தனது முத்திரையைப் பதித்த நண்பன் அருந்தவபாலன் அவர்களை இம்மண் பெற்றது பெறும்பேறு எனக் கருதுகின்றேன்.

பிறர் நலன் கருதி வாழ்கின்ற பல நல் உள்ளங்கள் இன்றும் எம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பதனால் தான் இன்னும் எமது சமூகம் சிறிதளவாவது நிம்மதியடைகின்றது. அந்த வகையில் கடந்த காலத்தில் சிறப்பாகப் பணியாற்றிய தாங்கள் அகவை அறுபதைக் கடந்தும் தங்கள் பணி தொடரவும் தங்களின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் துணை நின்று ஊக்கப்படுத்துகின்ற தங்கள் துணைவியார் சாந்தினி அருந்தவபாலன் மற்றும் தங்கள் பிள்ளைகள் அனைவரும் நலமே வாழவும் இறைவனை வேண்டுகின்றேன்.

**ஐ. தயானந்தராஜா,**
அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
தலைவர், வடமாகாண அதிபர் சங்கம்.

# டிறிபேர்க்கின் புகழதிபர்



யாழ்/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் வரலாற்றில் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றிருப்பவர் திரு. க. அருந்தவபாலன் அவர்கள். பாடசாலையின் மாணவராக, ஆசிரியராக, பகுதித்தலைவராக, உப அதிபராக, அதிபராக பலநிலைகளிலும் அவரது ஆளுமை வெளிப்பட்டிருக்கிறது.

கல்லூரியின் வளங்களைக் கட்டியெழுப்புதல், பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளை அதிகரித்தல், இணைப்பாடவிதான செயற்பாடுகளை ஊக்குதல், மாணவர் ஒழுக்கத்தை மேம்படுத்தல் எனப் பல வகைகளிலும் அவரது உயரிய பணிகள் தொடர்ந்தன.

டிறிபேக் கல்லூரியின் அதிபராக அவர் விளங்கிய காலத்தில் - வலயத்தின் வேறு பாடசாலைகளில் நான் அதிபராகக் கடமையாற்றினேன். திரு. அருந்தவபாலன் அவர்களின் பேச்சு, நிர்வாகத்திறன் என்பவற்றைக் கண்டு நாம் எல்லோரும் வியந்ததுண்டு.

''சொலல் வல்லான் சோர்விலான் அஞ்சான்'' என்னும் வள்ளுவன் வாக்கை உணர்ந்து நடப்பவர். கல்வியுலகில் தன் கடமைகளால் மிக்குயர்ந்த அவர் - அரசியலிலும் கால்பதித்து நிற்கிறார். பிரதேச நலன்சார்ந்த பல அமைப்புக்களிலும் அங்கத்துவம் பெற்றுள்ள அவர் - அரசியலிலும் எண்ணிய எண்ணியாங்கு பெற்று - திண்ணியராக வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

எங்கள் பாடசாலை சார்பிலும் - என் பாடசாலை சமூகத்தின் சார்பிலும் - தனிப்பட என் சார்பிலும் - உயர்திரு.க. அருந்தவபாலன் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டிறிபேக் கல்லூரியை மேம்படுத்திய நல்லதிபராக குறிப்பாக தென்மராட்சி இடப்பெயர்வுக்குப் பின்னரான காலத்தில் - கல்லூரியை அற்புதமான வளர்நிலைக்கு ஆக்கிய செயல்வீரராக விளக்கும் அவரது பணிகள் - கல்லூரி வரலாற்றில் என்றென்றும் நன்றியுடன் பதிவு செய்யப்படும்.

திரு.க.அருந்தவபாலன் அவர்கள் - தன் இனிய மனை, மக்கள், உறவுகள் சூழ- மேலும் பல உயர்ச்சிகளைப் பெற்று வாழ - எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன். வாழ்க திரு. க. அருந்தவபாலன் அவர்கள். வளர்க அவர் பணிகள்.

**ந. ஜெயகுமாரன்,**
அதிபர்,
யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.

# துணிச்சல் மிக்க தமிழ் உணர்வாளனே வாழி!



அகவை அறுபது கண்டு மணிவிழாக் காணும் நண்பன் திரு கந்தையா அருந்தவபாலன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அக மகிழ்வு அடைகின்றேன். நாம் இருவரும் தென்மராட்சி மண்ணில் பிறந்தாலும் 1984 ஆம் ஆண்டு கொழும்பு மட்டக்குளியில் முதன் முதல் அவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த நாள் முதல் இருவரும் அன்பு எனும் நட்புரிமைக் கயிற்றினால் பிணைப்புண்டோம். இருவரும் பட்டதாரி ஆசிரியர்களாக முதல் நியமனம் பெற்று கொழும்பில் எமது அரச கல்விப் பணியை அருகருகே உள்ள பாடசாலைகளிலே தொடர்ந்தோம். நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனாய் பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்... இன்றும் தொடர்கின்றது எமது நட்புரிமை.

அரச நியமனம் பெறுவதற்கு முன்னரே நல்ல ஆசிரியராக பணியாற்றியவர் அருந்தவபாலன் அவர்கள் க. பொ. த (உ/த) வகுப்புக்களில் பொருளியல் பாடத்தைக் கற்பிப்பதில் தனித்துவம் மிக்கவராக மிளிர்ந்தவர். அவரிடம் கல்வி கற்ற பலர் இன்று அரச, அரசசார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களில் உயர் பதவிகளை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றனர்.

நண்பனது அரச கல்விச் சேவையில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் சேவையாற்றிய காலமாகும். அங்கு ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக என பல படி நிலைகளில் கால் நூற்றாண்டு காலம் பணியாற்றிய பெருமைக்குரியவர். அதிபராக குறித்த கல்லூரியில் கடமையாற்றிய காலத்தில் பாடசாலை நிகழ்வுகளில் பார்வையாளனாக பல சந்தர்ப்பங்களில் பங்கு பற்றியிருக்கிறேன். நிகழ்வுகளில் திட்டமிடல் ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் முதலான பண்புகள் இழையோடி இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. மாணவர்களின் அரங்க நிகழ்வுகளில் அவர்களுக்கு தமிழ் உணர்வுகளும் ஆங்கில மொழி விருத்தியும் முக்கியம் பெற்றிருந்ததைப் பார்த்து பலரும் களிப்புற்றனர். அதிபர் அருந்தவபாலனின் துணிச்சல் மிக்க தமிழ் உணர்வு என்றும் பாராட்டப்பட வேண்டியது.

மாணவர்கட்கு கல்வியுடன் ஒழுக்கத்தையும் வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டவர். இணைக் கலைத்திட்ட செயற்பாடுகள் ஊடாக

தலைமைத்துவப் பண்புகளை மாணவரிடம் வளர்ப்பதில் வெற்றி கண்டவர். இன்று எமது சமூகத்தைச் சீரழித்துக் கொண்டிருக்கும் போதைவஸ்து பாவனையை முற்றாக ஒழிக்க பல்வேறு செயற்றிட்டங்களை தென்மராட்சியில் முன்னெடுத்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருப்பவர் அதில் வெற்றியும் கண்டவர் மணிவிழா நாயகன்

"இதனை இதனால் இவன்முடிக்கு மென்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்" (குறள் - 517)

என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஒப்ப நண்பன் அருந்தவபாலனின் துணிச்சல் மிக்க தமிழ் உணர்வையும் மண்பற்றையும் கண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி அவரை தென்மராட்சிக் கிளையின் தலைவராக்கியது. தென்மராட்சியின் தமிழ் அணங்கே வாழி! இன்று போல் என்றும் இளமைத் துடிப்புடன் மனைவி, பிள்ளைகளோடு இன்புற வாழ்ந்து கல்விப் பணியும், தமிழ்ப் பணியும் ஆற்ற இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இ. குணநாதன்,
பொருளாளர்,
கிராமியக் கல்வி அபிவிருத்தி நிறுவனம்

ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

# எமது ஆசானுக்கு ஒரு வாழ்த்து



தென்மராட்சியின் சிறந்த பொருளியல் ஆசானும், அதிபருமாகிய எனது மதிப்பிற்குரிய, ஆசிரியர் உயர் திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்களின் மணிவிழா குறித்து வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவர் எமக்கு சிறந்த கல்வியைப் புகட்டி, எமது உயர்வுக்கு வழிவகுத்த ஆசான் ஆவார். இவரினது கற்பித்தலானது மனதில் இலகுவில் பதியக்கூடிய முறையிலும், எளிய உரை நடையிலும் காணப்படுகின்றது. இவருடைய நிமிர்ந்த தோற்றமும், புன்னகை பூத்த முகமும், மற்றவர்களை மதிக்கும் பண்பும் எல்லோரையும் கவரக்கூடியதாக உள்ளது. இவர் தன்னைச் சார்ந்த மாணவர்களைச் சிறந்த ஆளுமைமிக்க, தலைமைத்துவப் பண்புகளிற்கு மாற்றிய பெருமைக்குரியவராவார்.

இவர் சாவகச்சேரிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்த காலத்தில் எனக்குப் பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிப் பதற்காக, தானாக முன்வந்து ஆலோசனையை வழங்கியதுடன், சங்க ஊழியரின் ஒத்துழைப்பையும், பெற்றுத்தந்து சிறந்த முறையில் கட்டுரையை வடிவமைப்பதற்கு உதவியவராவார்.


சாவகச்சேரி இந்துவின் பழைய மாணவரான இவருடன், நானும் பழைய மாணவர் சங்கத்தில் அங்கத்துவம் பெற்று, தொடர்ந்தும் பழக வாய்ப்பு கிடைத்தமையையிட்டு நான் மிகவும் பெருமைப்படுகின்றேன்.

இவர் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய போது அவரது பாடசாலைக்குக் கணக்காய்வு மேற்கொள்வதற்காக நாம் சென்ற வேளையில் எமக்கு ஏற்படும் ஐயங்களுக்கு விரிவான பதில்களை வழங்கியும் தனக்குச் சரியானது என்று கருதும் விடயங்களைத் திடமாகக் கூறியும் ஒத்துழைப்பை வழங்கியவராவார்.

இவ்வாறான சிறந்த புத்திஜீவியும் ஆளுமையும் கொண்டவரும் தமிழ்ப் பற்றாளருமாகிய எமது ஆசான் உயர்திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்பாகவும் மகிழ்ச்சியாகவும் அமைவதுடன் இன்னும் பல ஆண்டுகள் சிறந்த ஆரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி விஜயஶ்ரீ பிரேமதாஸ்,**
கணக்காய்வுப் பரீட்சகர்,
அரச கணக்காய்வு உப அலுவலகம், மாநகரசபை, யாழ்ப்பாணம்.

# உறுதிமிக்க தலைவன்



"என் கடன் பணி செய்து கிடப்பதே"

என்பதை வாழ்க்கையின் நெறியாகக் கொண்ட மாவீரன் திரு. க. அருந்தவபாலன், மனித நேயமும் எல்லோரையும் தன்பால் கவரும் வசீகரமும் பேச்சுத்திறனும் தன்னம்பிக்கை மிக்க புன்னகையும் குறிப்பறிந்து உதவி செய்யும் பாங்கும் தனது கொள்கைகளில் உறுதியும் அவரின் தனிப்பண்புகள். அவருடன் பழகிய அனைவருக்கும் இவை அனுபவமாகும்.

எமது மன்றத்தின் முன்னேற்றத்திற்கு மிக நீண்டகாலமாக சிறப்பான முறையில் உதவி வருபவர். மன்றம் பின்னடைவுகளைச் சந்திக்கின்ற வேளைகளில் அதற்கு உரிய தீர்வுகளை எட்டுவதற்கு அர்ப்பணிப்புக்களுடன் செயற்படும் ஒரே நபர் மணி விழா நாயகன்.

அவரின் சேவை எமது மன்றிற்கும் எமது தென்மராட்சி மண்ணிற்கும் தொடர்ந்தும் ஆற்றுவதற்கும் அவரும் அவர் குடும்பமும் எல்லா வளங்களுடனும் சிறப்புற வாழ்வதற்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ந. சிவபாலன்**

தலைவர்,

சாவகச்சேரி கைத்தொழில்

வணிகர் மன்றம்.

# தன்னலம் கருதாத சேவையாளர்



திருவாளர் உயர்திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் மணிவிழாக் காணும் இவ்வேளையில் திகட்டாத தேனில் மை எடுத்து நல்ல தெள்ளு தமிழ் சொல் எடுத்து கொஞ்சும் அழகு வார்த்தை சேர்த்து அவருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

அகவையில் அறுபதைக் காண அன்பின் வடிவமாய் அரும்புதல்வனாய் வந்துதித்தவர் நல்லதொரு ஆசானாய், அதிபராய்க் கடமையாற்றி கல்விப்பணியிலும் மற்றும் சமூகப்பணியிலும் தன் சேவைக் காலத்தை அர்ப்பணித்தவர். மாணவர்களின் நலன்களிலும், அவர்களின் கல்வி மேம்பாட்டிற்கும் பெரும் துணையாக இருந்தவர். ஆசிரியர்களின் செயற்பாடுகளை வழிநடாத்துவதிலும் வல்லமை வாய்ந்தவர். எந்தவொரு விடயமும் சரியெனக் கருதினால் அந்த விடயத்தை முன்வைப்பதில் எந்தத் தயக்கமும் காட்டாது முன்வைத்து வெற்றியும் கண்டவர்.

இவர் கல்வித்துறையில் மட்டுமல்லாது அரசியல் துறையிலும் வல்லமை படைத்தவராகத் திகழும் வேளையில் பல சட்ட நுணுக்களைப் பயில்வதில் ஆர்வமாகச் செயற்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது. மக்கள் நலனுக்காகத் தன்னலம் கருதாது அரும்பாடுபட்டு சேவையாற்றும் இவர் மணிவிழாவைக் கொண்டாடும் இத்தருணத்தில் அவரை வாழ்த்தி அவர் தொடர்ந்தும் தமது சமூக, கல்விப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு சமூகத்திற்குப் பெரும் பணியாற்ற முத்துமாரியம்மனை பிரார்த்தித்து நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துக் கூறுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.


**கலாநிதி வை. சிவராசா**
பிரபல வர்த்தகர்,
வடமாகாண மனித உரிமை பணிப்பாளர்.
செயலாளர், கைத்தொழில் வணிக மன்றம்,
சாவகச்சேரி.

# வாழ்த்துவதால் பெருமையடைகின்றேன்



மணிவிழா நாயகனை; என் நண்பனை அகவை அறுபதில் வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன். மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். வாழ்த்துவதற்கேற்ற தகைமைகள் பல அவரிடமுள்ளதால் அவரை வாழத்த விளைகின்றேன்.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்" (குறள்:69) என்றவள்ளுவர் வாய் மொழிக்கேற்ப பெற்றோர்க்குப் பெருமை தேடிக்கொடுத்த கந்தையா - கனகம்மா தம்பதிகளின் அருந்தவப்புதல்வனுக்கு, உடன் பிறப்புகளுக்கு உதவிகள் பல புரிந்த உத்தமனுக்கு, வாழ்த்துக்கள்.

கஸ்டங்கள் மத்தியிலே கல்விபயின்று தென்மராட்சியிலிருந்து பல்கலைக்கழகம் சென்று பொருளியல் சிறப்புப் பட்டத்துடன் வெளியேறினார். மேலும் தனது வாண்மை விருத்திக்காக பட்டப்பின் கல்வி, முதுகல்வியியல் பட்டப்பின் கல்வி முகாமைத்துவம் போன்ற பட்டங்களைப் பெற்று பிறந்த மண்ணுக்குப் பெருமை தேடிய பெருந்தகைக்கு வாழ்த்துக்கள் பல.

தடைகள் பல தகர்த்தெறிந்து காதல் மனையாள் சாந்தினியைக் கரம்பிடித்து வள்ளுவன் கூறிய இல்லறம் கண்ட இல்லானுக்கு, "தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் காணப் படும்" என்ற வாக்கிற்கிணங்க, தான் பெற்ற நான்கு பிள்ளைகளையும் உயர் கல்வி வரை உயர்த்தி நன்னிலையில் அவர்கள் வாழ வழியமைத்த தந்தைக்கு வாழ்த்துக்கள்.

கல்லூரிகளில் சிறந்த ஆசிரியராக, பிரதி அதிபராக, நல்ல அதிபராக ஆளுமை புலமையுடன் கற்பித்தலிலும் நிர்வாகத்திறனிலும் தனக்கென தனியிடம் பிடித்த அதிபர் அருந்தவபாலனுக்கு, தென்மராட்சியிலே பெரிய கல்வி நிறுவனமாக அருண் கல்வி நிலையத்தை அமைத்து பலரை பல்கலைக்கழகம் அனுப்பிய கல்வி நிலைய இயக்குநருக்கு வாழ்த்துக்கள்.

இவர் சமுதாய மறுமலர்ச்சிக்கு, போதைப் பொருள் விழிப்புணர்வுக்கு, சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கைக்கு என்று மக்கள் மத்தியிலே வலம் வந்த சமூக சேவையாளன். இன்பியல் துன்பியல் நிகழ்வுகளில் மக்களோடு கரம் கோர்த்து நின்று மக்களுக்கு உதவிகள் புரிந்த மனிதநேயப் பண்பாளன். கூட்டுறவு சங்கத் தலைமைப்பதவியை ஏற்று சேவைகள் செய்த செயல்வீரன் அகிம்சை வழியில் தீர்வு பெற விளைந்து அரசியல் புகுந்து போதனை செய்யும் தலைவர். இவ்வாறான சாதனையாளனது எழுச்சிக்கும் உயர்ச்சிக்கும் தோள் கொடுத்து பக்க பலமாக இருக்கும் அவரது இல்லத்தரசி சாந்தினிக்கும் வாழ்த்துக் கூறவேண்டும்.

அகவை அறுபதையடைந்தாலும் ஓய்வுக் காலத்தில் தென்மராட்சி மண்ணுக்கும் மக்களுக்கும் சேவைகள் செய்ய உடற்பலத்தையும் மனத்திடத்தையும் அவர்களுக்கும் அவர் குடும்பத்தினருக்கும் அருள வேண்டும் என இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**ஐ. கமலநாதன்**
ஓய்வு நிலை ஆசிரியர்
(யாழ். இந்துக் கல்லூரி)

# மணிவிழாவுக்கு ஒரு மகுடம்



கழனியும் கனியும் தெங்கும் பனையும் ஒருங்கு உறவாடி வளம் நல்க செழித்திட்ட தென்மராட்சிப் பதியின் கல்விப் பயிர் செழிக்க உழைத்து இன்று அகவை அறுபதை எட்டியதால் ஓய்வை ஏற்றாலும் ஓயாது நாட்டு மக்களின் பொருட்டுப் பணியாற்றும் நல் மனப்பாங்குடன் செயலாற்றி வருபவருமான அதிபர், நல்லாசிரியர் திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்களின் மணிவிழாக் குழுச் செயலாளரும் பள்ளியில் ஒரே வகுப்பில் கல்வி கற்ற நண்பனும் என்ற வகையில் மணிவிழா நாயகனை வாழ்த்துவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி எண்ணி மனம் புளகாங்கிதம் அடைகின்றேன்.

1967ஆம் ஆண்டு 6ஆம் வகுப்பிலே யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் மணிவிழா நாயகனை பள்ளி நண்பனாக நான் சந்தித்தேன். அன்று தொட்டு இன்றுவரை அந்த நட்பு எவ்வித குறைவுமின்றி இருந்துள்ளமை உண்மை நட்புக்கு ஒரு எடுத்துக்காட்டு எனலாம். பொருளியல் பாடத்தில் பாண்டித்தியம் மிக்க நண்பர் அவர்களின் மாணவர் பரம்பரை இன்று இலங்கையில் பல்வேறு நிலைகளிலும் உயர் பதவியில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில் திரு. க. அருந்தவபாலன் அவர்களின் மாணவர்களால் முன்னெடுக்கப்படுகின்ற மணிவிழாவில் "அருந்தவம்" என்ற நாமம் தாங்கி வெளிவரும் இம்மலர் சிறக்க மனதார இறைவனை வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

கல்வியாளர்களாக உயர்ந்து நிற்கின்ற பெரியோர்கள் அதற்குரிய தகுதியோடு பிறக்கின்றார்கள் என்றே கூறலாம். பிறக்கும் போதே இவர் இவ்வாறு இருப்பார் என்று எழுதப்பட்டு விடுகின்றது. அது அவரவர் வினைப்பயன் என்கின்றது சைவசித்தாந்தம். அந்தவகையில் நண்பர் அருந்தவபாலன் அவர்களின் சேவையை நாம் புரிந்து கொள்ள முடியும் தனக்குக் கிடைத்த கல்வியாளன் என்ற வாய்ப்பை மக்கள் நலனுக்காகப் பயன்படுத்தத் துடிக்கும் விழா நாயகனை நான் வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

நல்லாசிரியராக, நல்லதிபராக, பெற்றாராக, நண்பராக, மகனாக, கணவனாக, நல்மனிதனாக என்று தனக்குக் கிடைத்த அத்தனை நடிபங்குகளையும் செவ்வையாக வெளிப்படுத்தியதன் பயனே இந்த மணிவிழாவும் மணிவிழா மலரும் வெளிவருவதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்கியது எனின் மிகையல்ல. உண்மையான சேவையாளன் அவனியில்

வாழ்கின்றபோதே மதிக்கப்படவேண்டியவனாகின்றான். அவ்வாறு மதிக்கத்தவறும் சமூகம் தடம்மாறிப் பயணிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. எனவே இத்தகைய மணிவிழாக்கள் சரியான பாதையில் சமூகத்தை வழிநடாத்துவதற்குக் கட்டியம் கூறுவதாக அமையும், அமைய வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

எனவே மேனாள் அதிபருக்கு நடாத்தப்படும் இம்மணிவிழா மிகவும் பெறுமதி வாய்ந்ததாகும். உடம்பெடுத்துப் பூமியில் பிறந்த ஒவ்வொருவரும் தமது உடம்பு கொண்டு ஆற்றவேண்டிய சேவையின் மகத்துவத்தை அறிந்து செயலாற்றுவாராயின் இவ்வுடல் அழியும்போது எவ்வித துன்பமும் கவலையும் ஏற்படமாட்டாது.

"அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்
பெரும்பயனு மாற்றவே கொள்க - கரும்பூர்ந்த
சாறு போற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோது போற் போகுமுடம்பு"

என்ற நாலடியார் வாக்கைச் சிரமேற்கொண்டு ஒழுகுபவர்கள் ஒருபோதும் துன்பமடைய மாட்டார் என்பது திண்மமாகும். அத்தகையதொரு வாழ்வியலுக்குள் ஏறக்குறைய முக்காற் பங்கை நிறைத்துள்ள மணிவிழா நாயகன் இன்னும் பல்லாண்டுகள் சுகநலத்தோடு கல்விப்பணியாற்ற வேண்டும் என்று இறைவனை வேண்டித் துதிக்கின்றேன்.

அத்தோடு இம்மணி விழாவை மனமுவந்து ஏற்றுக் கொண்ட மணிவிழா நாயகனுக்கும் விழாவை ஒழுங்குபடுத்துவதில் என்னோடு தோள்நின்ற அனைத்து அன்புள்ளங்களுக்கும் குறிப்பாக விழா நாயகனின் மாணவர்களுக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்து மகிழ்ந்தமைகின்றேன்.

**கா. சிவஞானசுந்தரம்**
மணிவிழாச் செயலாளர்,
திருக்கணித முகாமையாளர்,
சாவகச்சேரி.

ஆசிரியராகவும், உப அதிபராகவும், அதிபராகவும்
யாழ் / சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அதியுன்னத பணியாற்றி
சாவகச்சேரி கல்வி வலயத்தில் ஆரம்பக்கல்வி
உதவிப்பணிப்பாளராகக் கடமை செய்து

18. 08. 2016ஆம் நாளன்று
“மணிவிழா” காணும்
உயர்திரு கந்தையா அருந்தவபாலன் அவர்களின்
பணியுவந்து - பாராட்டி - வாழ்த்தி
தென்மராட்சி சமூகம் இணைந்து வழங்கும்

# பாராட்டுப் பாமலர்

காப்பு

கடவுளெங்கே எனக்கேட்பான்! கடமையே கடவுளென்பான்!
உடல்பொருள் ஆவியெல்லாம் ஊருக்கென்றான் - திடமனத்தான்
அண்ணலருந் தவபாலன் அற்புதங்கள் நாம்பாட
விண்ணிறைந்த மேதை நீ காப்பு.

பாலன் - தவபாலன் பகருமருந் தவபாலன்
பாச டிறிபேக்படைத்த பண்பின் செல்வன்
சீலன் - செயல்வீரன் சேவையினா லுயர்ந்து நிற்கும்
செம்மல் செந்தமிழர் சேனைத் தலைவன்
காலன் என நிற்பான் கயமை கடிந்தோட்ட
கற்றோர் இதயங்கள் களிக்கும் தீரன்
ஞாலன் புகழுமவன் நற்றமிழ்போல் நாநிலத்தில்
நலங்கள் பலவோங்க நன்நூ றாண்டே

உள்ளதை உள்ளபடி உரைக்கும் உயர்வாளன்
உயிர்துச்ச மெனமதித்து உண்மை சொல்வோன்
வெள்ளைத் தளைய மலர்நீட்டம் என்றபடி

வேண்டியயா வையும் கொண்ட வெற்றி வீரன்
கள்ளம் கபடமின்றி கருதியதை நவிலுமவன்
கயமையால் வீழ்ந்தகதை நாங்கள் அறிவோம்!
அள்ளும் புகழ் கொண்டு அரசாளும் மன்றுற்று
அண்ணன் குரலொலிக்கும் அறமே வெல்லும்!

இதுதான் தர்மமென இடித்துரைக்கும் இயல்பாளன்
இதனால் இடர்பலவும் இவர்ந்து வென்றோன்
எதுதான் வந்தாலும் எனதுகல் லூரியென்ற
எண்ணத்தால் டிறிபேக்கை ஏத்தும் அண்ணல்
முதுபே ரறிஞனவன் முந்து பொருளியலாசான்
முனைதவத்தாள் "சாந்தியை'' தன் வாழ்வில் பெற்றான்
அதுவே தான் அகல்வெற்றி அருஞ்சாந்தி மக்களோடு
'அருந்தவபாலன்' மண்ணில் பல நூற்றாண்டே!

குலமோங்க அறமீயும் குறளாய் வாழ்க!
குவலயத்தில் கம்பகவிக் குவைபோல் வாழ்க!
நிலமோங்கு நிலைபேறாம் யாவும் பெற்று
நினைந்தவெலாம் நினைந்தபடி நினைந்தே வாழ்க!
பலமோங்கு பாலனெங்கள் பாசச்செல்வன்
பகலவன்போல் ஒளிகமழ்ந்து பாரில் வாழ்க!
நலமோங்க நாடெல்லாம் நவின்று வாழ்த்த
நாயகனே அரியதவ பாலா வாழ்க! வாழ்க! வாழ்க!

**தென்மராட்சி மக்கள்,**
**விழாக்குழுவினர் சார்பில் மணிவிழாவில் வழங்கப்பட்ட**
**வாழ்த்துப்பாமாலை**



**கவிஞர் த. நாகேஸ்வரன்**

# மணிவிழாக்குழுவின் சந்திப்பு







# பதிவியல்










கண்கண்ட தெய்வம் (அன்னை)



அமரர் கந்தையா கனகம்மா







## திரு.கந்தையா அருந்தவபாலன் அவர்களின்

# வாழ்க்கைத் தடத்திலிருந்து...

பிறப்பு : *1956.08.18*

முகவரி : *நுணாவில் மத்தி, சாவகச்சேரி.*

பிறந்த இடம் : *பெருங்குளம், சங்கத்தானை வீதி, சாவகச்சேரி.*

பெற்றோர் : *தந்தை : சங்கரப்பிள்ளை கந்தையா*

*தாய் : கந்தையா கனகம்மா*

சகோதரர் : *2 சகோதரர்கள் மற்றும் 2 சகோதரிகள்*

மனைவி : *சாந்தினி (மகேசன்) (புவியியல் பட்டதாரி ஆசிரியர்)*

பிள்ளைகள் : *1. திருமதி திருவதனி தேவானந்த்* (MSc. Agri) *அவுஸ்திரேலியா*

*2. அ. தனஞ்சயன்* (Dip. In IT) *அவுஸ்திரேலியா*

*3. அ. சித்தார்த்தன்* (MSc. Eng.) *சிங்கப்பூர்*

*4. அ. பார்த்தீபன் (மாணவன்)* (Mech. Eng.)

கல்வி : *க.பொ.த. (சா / த) வரை யா / சாவகச்சேரி இந்துக்கல்லூரி*

*க.பொ.த. (உ / த) வரை யா / டிறிபேக் கல்லூரி*

உயர் கல்வி : *யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**கல்வி மற்றும் தொழிற்றகைமைகள் பட்டம் :**

பொருளியல் சிறப்புக்கலை (BA. Hons)

முதுகல்வியியல் மாணி (M.Ed.)

பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE)

பட்டப்பின் கல்வி முகாமைத்துவம் (PGDEM)(NIE)

சட்டத்துறை மாணவன் இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

**பதவிகள் ஆசிரியர் :**

*1984-1989 வரை புனித அந்தோனியார் ஆண்கள் வித்தி. கொழும்பு -3*

*1989-1990 வரை தெமட்டகொட தமிழ் ம.வி. கொழும்பு -09*

*1990-1995 வரை யா /டிறிபேக் கல்லூரி*

**பிரதி அதிபர்** : *1995-2005 வரை யா / டிறிபேக் கல்லூரி*

**அதிபர்** : *2005- 2015 வரை யா / டிறிபேக் கல்லூரி*

**இணைப்பு** : *2015 முதல் ஓய்வு பெறும் வரை தென்மராட்சி கல்வி வலயம்*

**சமூகஞ்சார் பணிகள்**

*தலைவர் , போதைப் பொருள் விழிப்புணர்வு மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமையம் (DASCO)*

*முதன்மை இயக்குநர், விடிவெள்ளி சமூக மேம்பாட்டு அமையம்*

*தலைவர், கல்வி மேம்பாட்டுப்பேரவை, யாழ்ப்பாணம்*

*இணைப்பாளர் , உலக தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், இலங்கைக்கிளை*


*தலைவர், தென்மராட்சி அதிபர் சங்கம் 2008- 2010 மற்றும் 2013-2014.*

*தலைவர் , சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 1993-1997 வரை*

*துணைத்தலைவர் , யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை 1995-1997*

**அரசியல்** : *தலைவர் இலங்கை தமிழரசுக் கட்சி, சாவகச்சேரித் தொகுதி*

*பொதுச்சபை உறுப்பினர், இலங்கைத் தமிழரசுக்கட்சி*



## டிறிபேர்க்கின் அதிபர் அருந்தவபாலன்



மு. நாகேந்திரராசா
ஓய்வு நிலை அதிபர்,
யா/டிறிபேர்க் கல்லூரி,
சாவகச்சேரி.

கல்வியானது என்றும் அழியாத சொத்து என யாழ்ப்பாண மக்கள் மதிப்பதுண்டு. எமது மாகாணத்தின் புவியியல் அமைப்பும் அவ்வண்ணம் கருதுவதற்குக் காரணமாக விளங்கியது. எம் மக்களின் நிலைமையைக் கண்டே ஆங்கிலேயர் காலத்தில் மிசனறி பாடசாலைகள் பல யாழ் மண்ணில் தோற்றம் பெற்றன. அந்த வகையில் தோற்றம் பெற்ற கல்லூரிகளில் டிறிபேர்க் கல்லூரியும் ஒன்று தென்மராட்சிக்குக் கல்விச் செல்வத்தை வழங்கி மக்களுக்குச் சேவை செய்வதில் 1875 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னின்று தொண்டாற்றியது இக் கல்லூரி.

இக் கல்லூரியின் நூற்றாண்டு காலப் பகுதியிலேயே திரு. க. அருந்தவபாலன் அவர்கள் எனது மாணவனாகக் கலைப் பிரிவில் சேர்ந்தார். இந்த வகுப்பில் திறமையான மாணவர்கள் பலர் இவருடன் சேர்ந்து படித்தனர். இதனால் கற்பித்தல் இலகுவாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. இவர்கட்கு அரசியல், இலங்கை வரலாறு, புவியியல் பாடங்களைக் கற்பித்தேன். எனது துணைவியாரும் இம் மாணவர்களுக்கு ஐரோப்பிய வரலாறு கற்பித்தார். இவர்களிடம் காணப்பட்ட ஆர்வமும் உற்சாகமும் எங்களுக்குக் கற்பித்தலில் விருப்பத்தை ஏற்படுத்தின. வகுப்பறைக் கல்வியுடன் ஏனைய நிகழ்வுகளிலும் முன்னின்று செயற்பட்டனர். இவர்களிடம்

கூட்டு முயற்சி காணப்பட்டது. க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் இவர்களின் சிறந்த பெறு பேறு எங்களுக்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் அளித்தது.

திரு. க. அருந்தவபாலன் அவர்கள் பல்கலைக்கழகம் சென்று பொருளியல் பாடத்தில் சிறப்புப்பட்டம் பெற்று தேர்ச்சியடைந்தார். 1984 ஆம் ஆண்டு கொழும்பு மாவட்டத்தில் ஆசிரியராக நியமனம் பெற்று சிறப்பாகப் பணியாற்றினார்.

1990 ஆம் ஆண்டிலே நான் கல்லூரியின் உப அதிபர் பதவி ஏற்ற வேளையில் திரு. க. அருந்தவபாலன் அவர்கள் ஆசிரியராக இடமாற்றம் பெற்று வந்திருந்தார். எனது மாணவர் எமது கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைந்தேன். அவர் ஆசிரியத் தொழிலில் சிறப்பாகக் கடமையாற்றி வருவதைக் கேள்விப்பட்டிருந்தேன். ஓர் ஆசிரியருடைய பணியின் சிறப்பை தரத்தின் உயர்வைக் கணிக்கும் அளவு கோல்களில் அவ்வாசிரியரால் உருவாக்கப்பட்ட ஏனைய ஆசிரியர்களே முதலிடமும் முக்கியமும் பெறுகின்றனர் என்ற உண்மையை உணர்ந்தேன்.

எமது கல்லூரியில் அவர் பொருளியல் பாடத்தைப் பிரதான பாடமாகக் கற்பித்து, மாணவர்களை அப்பாடத்தில் நூறு சதவீத சித்தியை அடையச் செய்திருந்தார். இதனால் மாணவர் மத்தியில் உயர் மதிப்பைப் பெற்றிருந்தார். அவர் உயர்தர வகுப்பு மாணவர்களால் மட்டுமன்றி கல்லூரியில் ஏனைய வகுப்பு மாணவர்களாலும் மதிக்கப்பட்டார். தமிழ், சமூகக்கல்வி, சமயம் போன்ற பாடங்களைக் கற்பித்து, அவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக உழைத்தார்.

அவர் கல்லூரியின் மீது கொண்ட பற்றுதலாலும் கற்பித்தலில் காட்டிய ஆர்வத்தினாலும் கல்லூரியின் ஒழுக்காற்றுக்குழு, விளை யாட்டுக்குழு, சமயக்குழு, பாட இணைப்பாளர் குழு என்பவற்றில் இடம்பெற்று, கல்லூரி நிர்வாகத்துக்குத் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கினார். இக்காலத்தில் மாணவர், ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர்கள் யாவரும் கல்லூரி மேம்பாட்டுக்காகப் பாடுபட்டு உழைத்தனர். இதனால் கல்லூரியில் நீண்ட காலம் தடைப்பட்டிருந்த விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள், மாணவர் மன்றங்கள், பழைய மாணவர் சங்கம் என்பன புத்துயிர்ப்புப் பெற்றன. இதனால் புதிய மாணவர் சேர்வும் அதிகரித்தது. கல்விப் பெறுபேறுகளும் படிப்படியாக அதிகரித்து வரலாயிற்று.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையிலும் எமது கல்லூரி, தனது கல்விச் செயற்பாடு களை சிறப்பாகத் தொடர்ந்து நடாத்தி வந்ததை நினைத்துப் பார்க்கின்றேன். இவ்வாறு செயற்பட இக்காலப்பகுதியில் கடமையாற்றிய ஆசிரியர்களே முக்கிய காரணமாவார்கள். இவர்களுள் திரு க. அருந்தவபாலன், திரு. ச. மார்க்கண்டு ஆசிரியர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் எல்லோரிடமும் அன்பாகப் பழகுவதால் பலரின் நட்பைப் பெற்றனர். தங்களது தன்னலமற்ற சேவையால் மற்றவர்கட்கு உதவி செய்தார்கள். இதனால் கல்லூரி மாணவர்கள் நன்மைகளை அடைந்தார்கள்.

1995 ஆம் ஆண்டு நான் அதிபராகப் பொறுப்பேற்ற வேளையில் கல்லூரியின் உப அதிபராகத் திரு. க. அருந்தவபாலன் அவர்களைத் தெரிவு செய்தேன். இதனை ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர் ஏகமனதாக ஏற்றார்கள். இதனைக் கல்வி இலாகாவிற்கு விண்ணப்பித்து அவரது நியமனத்தை உறுதி செய்தேன். இவர் உப அதிபராகப் பதவி ஏற்ற காலத்திலிருந்து கல்லூரியின் ஒவ்வொரு நிகழ்விலும் என்னுடன் ஒத்துழைத்தார். இதனால் கல்லூரியின் செயற்பாடுகள் சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்ததை பாடசா லையின் இக்காலப்புள்ளி விபரங்கள் சாட்சி பகரும்.

# பணிகளின் பதிவுகள் சில...



















இக்கால வேளையில் வடபுலத்தில் இராணுவ நடவடிக்கைகள் தினமும் நடைபெற்ற வண்ணமே இருந்தன. இதனால் கல்லூரி நடவடிக்கைகள் இடைக்கிடை தடைப்பட்டன. எமது கல்லூரி மட்டு மல்லாமல் வடமாகாணச் சகல பாடசாலைகளும் இப்பாதிப்புக்களுக்குள்ளாகின.

இப்பாதிப்புக்களால் ஒரு கட்டத்தில் யாழ்குடா நாட்டிலிருந்து மக்கள் தென்மராட்சியை நோக்கி இடம் பெயர்ந்து வந்தனர். தென்மராட்சி மக்கள் அம்மக்களுக்கு தங்க இடம் கொடுத்து அவர்களுக்கு தேவையானவற்றை முடிந்தவரை செய்து கொடுத்தனர். எமது பிரதேசப் பாடசாலைகள் யாவும் இடம்பெயர்ந்த மக்களுக்கு இடம் கொடுத்து ஆதரித்தன. இம் முயற்சிகளில் கல்வித்திணைக்களத்துக்கும் பாடசாலைகளுக்கும் இணைப்பாளராக விளங்கியவர் எமது கல்லூரி உப அதிபர் திரு. க. அருந்தவபாலன் அவர்களே ஆவார். வடபுலத்துப் பாடசாலைகள் எமது பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளுடன் இணைந்து பாடசாலைகளை நடாத்த கல்வித் திணைக்களம் எடுத்த முயற்சிகள் யாவற்றுக்கும் திரு. க. அருந்தவபாலன் அவர்கள் உயிர்ப்புடன் செயற்பட்டார். இச் செயற்பாடுகள் எல்லோராலும் மதிக்கப்பட்டன. வடபுலத்துக் கல்வி மேம்பாட்டுக்காகக் கல்வியியலாளர்களுடன் இணைந்து செயற்பட்டார்.

இராணுவம் சாவகச்சேரிக்கு வர இடம் பெயர்ந்த மக்களுடன் தென்மராட்சி மக்களும் வன்னி நோக்கி நகர்ந்தனர். நாமும் நகர்ந்தோம். ஆனால் கிளாலியைக் கடக்க முடியாமல் உயிர் தப்பி அலைந்து நண்பர்களினது வீடுகளில் தங்கி ஊர் மீண்டோம். பல்வேறு கெடுபிடிகள் சோதனைகள் மத்தியில் கல்லூரிக்குச் சென்றோம். எமது கல்லூரியின் பெரும் பகுதியை இராணுவம் முள்வேலி அமைத்துத் தனதாக்கிக் கொண்டிருந்தது. ஆரம்பப் பிரிவு வகுப்புக்கள், தளபாடங்கள், விளையாட்டு மைதானம் என பலவற்றை இழந்து ஏங்கினோம். உப அதிபர் திரு. க. அருந்தவபாலனதும் ஏனைய ஆசிரியர்களினதும் முயற்சியால் கல்விச் செயற்பாட்டை மீள ஒழுங்கமைத்தோம். இடைக்கிடை இராணுவப் புலனாய் வாளர்களால் விசாரணைகள் நடை பெற்றன. உப அதிபரைத் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தினர். எதற்கும் அவர் கலங்காது மீண்டும் வந்தார். 2015 ஆம் ஆண்டு டிறிபேர்க் கல்லூரி சஞ்சிகையில் ஆசிரியர் திரு. ச. மார்க்கண்டு அவர்கள் அதிபர் க. அருந்தவபாலன் பற்றி எழுதிய கவிதை வரிகள் 'தமிழ் தேசியத்தை வரித்துக்கொண்டதனால் நாட்டுத் தேசியத்தால் நலிவுகள் பட்டவர்' ஞாபகத்துக்கு வருகின்றது.



இக்காலப் பகுதியில் அவர் பட்ட கஷ்டங்கள் துன்பங்களை எழுத்தில் முழுமையாக வடிக்க முடியாது. கஷ்டங்கள் மத்தியிலும் அவர் தன் கல்லூரிக் கடமைகளைச் சிறப்பாகவே செய்து மாணவர் கல்வி மேம்பாட்டுக்குப் பாடுபட்டார். தொடர்ந்து கல்லூரிச் செயற்பாடுகளை பல்வேறு கஷ்டங்கள் மத்தியில் நடாத்தினோம். காலங்கள் உருண்டோடின. 2000 ஆம் ஆண்டு மே மாத ஆரம்பத்தில் ஷெல் தாக்குதலுடன் இராணுவம் தென்மராட்சி நோக்கி நகர்ந்தது.

தொடர்ச்சியான ஷெல் தாக்குதலால் சாவகச்சேரி நகரம் அழியத் தொடங்கியது. கல்லூரிகள், வைத்தியசாலை, அரச நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், வங்கிகள் ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகின. தென்மராட்சி மக்கள் வடமராட்சி, யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதிகளுக்குச்

சிதறி ஓடினார்கள். நாங்களும் ஓடினோம். நாங்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு இடங்களில் தற்காலிகமாகத் தங்கினோம். கல்லூரிகளை நாம் சென்ற இடங்களில் நடாத்துவதற்கு கல்வித் திணைக்களம் ஆலோசனை வழங்கியது. எமது கல்லூரிச் சமூகத்தைக் கூட்டி ஆலோசனை செய்து மாணவர் தங்கியுள்ள யாழ், நல்லூர்ப் பிரதேசத்தில் கல்லூரியை நடாத்தத் தீர்மானித்தோம். உப அதிபரின் தீவிர முயற்சியால் அவரது நண்பரும் கொக்குவில் இந்துக்கல்லூரி உப அதிபருமாகிய திரு. மு. வேலாயுதபிள்ளை அவர்களது கோண் டாவிலில் அமைந்துள்ள 'நிரு கல்வி நிலையத்தில்' வலயக்கல்விப் பணிப்பாளரின் அனுமதி பெற்று கல்விச் செயற்பாடுகளை நடாத்தினோம். சாவகச்சேரி சென்று கல்லூரியின் முக்கிய ஆவணங்களைப் பெறப் பலமுறை முயற்சித்தோம். ஆனால் முடியவில்லை. இறுதியாக 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி உப அதிபருடன் சென்று கல்லூரியைப் பார்வையிட்டோம். குறுகிய நேர அவகாசத்துள் முக்கிய ஆவணங்களைத் தேடினோம். அவை சேதமடைந்து காணப்பட்டன. எடுக்கக்கூடியவற்றுள் முக்கியமானவற்றை மட்டும் எடுத்து வந்தோம்.

2002 ஆம் ஆண்டு தை மாதம் 5 ஆம் திகதி உப அதிபர், பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ந. ரவிராஜ் ஆகியோருடன் சென்று அங்குள்ள நிலைமைகளை அவதானித்து அழிந்து போன கட்டடங்களைப் படம்பிடித்து வந்தோம். கல்லூரியைச் சாவகச்சேரியில் நடாத்துவதற்குத் தீர்மானித்து, சகலரது ஒத்துழைப்பையும் பெற்று கல்லூரி வளாகம் சுத்திகரிக்கப்பட்டது. உப அதிபர் திரு. க. அருந்தவபாலன் அவர்களின் முயற்சியால் கல்வித் திணைக்கள உதவியுடன் கொட்டகைகள் அமைக்கப்பட்டு, கல்லூரி 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

டிறிபேர்க் கல்லூரியின் புனரமைப்புப் பற்றி உப அதிபருடன் கலந்துரையாடி, கல்லூரி வரலாறு அழிவடைந்த சொத்து விபரங்கள், பெறுமதிகள் எதிர்காலக் கல்லூரி அமையவுள்ள வரை படங்கள் ஒவ்வொன்றுக்கும் ஏற்படும் செலவினங்கள் கணிக்கப்பட்டு சகலதும் அடங்கிய விபரங்களைப் படங்களுடன் டிறிபேர்க் கல்லூரி புனருத்தாரண திட்டத்தை புத்தகமாக வடிவமைத்து கல்வித் திணைக்கள அனுமதி பெற்று சகல வெளிநாட்டு தூதர்களுக்கும் அனுப்பினோம். அதன் பயனாக ஏற்கனவே உதவி செய்த G. T. Z (ஜேர்மனி நிறுவனம்) சுவிஸ், உலக வங்கி (நிகொட்) என்பன மாடிக் கட்டடங்களாக வகுப்பறைகளைக் கட்டித் தந்தன.

யுத்தத்தினால் அழிவடைந்த டிறிபேர்க் கல்லூரியை மீள அமைக்கத் தயாரிக்கப்பட்ட திட்டத்தின் படி வகுப்பறை மாடிக்கட்டடங்கள், விஞ்ஞான ஆய்வு கூடங்கள், விளையாட்டு மைதானம் என்பன குறுகிய காலத்துள் நிறைவு செய்ய உதவியவர்கள் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள், உப அதிபர், பழைய மாணவர், பெற்றோர், ஆசிரியர்கள் என்போரே ஆவர். இக்காலப்பகுதியில் கல்லூரிச் செயற்பாடுகளை முழுமையாக நிர்வகித்தவர் உப அதிபர் திரு. க. அருந்தவபாலன் அவர்களே.

எனது அதிபர் பதவிக் காலத்தில் நாட்டில் ஏற்பட்ட சிவில் யுத்தத்தால் காலத்துக்குக்காலம் இடையூறுகள் ஏற்பட்ட வேளை எனக்கு முழு ஆதரவும் தந்து, தோளோடு தோள் கொடுத்து உதவிய எனது அன்புக்குரிய உப அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கட்கு எனது அன்புகலந்த நன்றியினை இவ்வேளையில் தெரிவிக்கின்றேன்.

2005 ஆம் ஆண்டு நான் பதவியிலிருந்து இளைப் பாறிய போது எனது அன்புக்குரிய திரு. க. அருந்தவபாலன் அவர்கள் அதிபராகப் பதவி ஏற்று டிறிபேர்க் கல்லூரியின் பாரம்பரியத்தைப் பின்பற்றி வளர்த்தெடுத்தார். அவருடைய காலத்தில் டிறிபேர்க் கல்லூரி மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காகப் பல திட்டங்களை அமைத்துப் படிப்படியாக ஒவ்வொன்றையும்

செய்து முடித்தார். கல்லூரி மைதான ஒழுங்கமைப்பு, கல்லூரியின் சுற்று மதில், குழாய் கிணற்றுடன் அமைந்த புதிய பிரமாண்டமான நீர்த்தொட்டி போன்றவற்றை அமைத்துக் கல்லூரியின் தேவைகளை நிறைவு செய்தார். கூடைப் பந்தாட்ட மைதானத்தை திரும்ப அமைத்து பிள்ளைகளுக்குப் பயிற்சியும் வழங்கினார். 1972 இல் இருந்து வெளிவராது இருந்த கல்லூரி சஞ்சிகையை சகலரதும் ஒத்துழைப்பைப் பெற்று 2015 ஆம் ஆண்டு வெளிவரச் செய்து சகலரையும் மகிழச் செய்தார்.



வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பத்தைச் சேர்ந்த கல்லூரிப் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக நிதிகளைச் சேகரித்து அவர்களின் பெயர்களில் நிதியை வங்கியில் வைப்பிலிட்டு அவர்களின் கல்வி மேம்பாடடையச் செய்துள்ளார். அத்துடன் பிள்ளைகளுக்குத் தேவையான காலணிகள், புத்தகப்பை, சீருடை போன்றவற்றைப் பெற்றுக் கொடுத்து உதவினார்.

இத்தகைய செயற்பாடுகளால் மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளில் வெற்றி பெறுவதை காணக்கூடியதாக இருந்தது. விளையாட்டுப் போட்டி, சமயம், ஆங்கிலம், தமிழ், கவின் கலைப் போட்டிகளில் மாணவர்களை ஈடுபடச் செய்து அவர்களை வெற்றி பெறச் செய்தார். இவற்றைக் கல்லூரி பரிசளிப்பு விழாக்களில் கண்டு உணர்ந்தோம். மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்களின் கல்வி மேம்பாட்டிற்காக பல ஆலோசனைகளை வழங்கி ஊக்குவித்தார். ஆசிரியர்களது ஒற்றுமை, கூட்டுப் பொறுப்பு என்பவற்றுடன் குடும்ப இன்ப துன்பங்களில் இணைக்கும் ஆசிரியர்கள் கல்வி சாரா ஊழியர்கள் சபையாகிய வட்ட மேசையை சுதந்திரமாக இயங்கச் செய்து கல்லூரி பாரம்பரியத்தைக் கட்டிப் பாதுகாத்தார்.

டிறிபேர்க் கல்லூரியில் மாணவனாக, ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக (28) இருபத்தெட்டு வருடங்கள் தனது உன்னத சேவையை ஆற்றி, டிறிபேர்க் குடும்பத்தை நேசித்து அங்கேயே வாழ்ந்தார். அவரது துணைவியாரும் எனது மாணவியுமான ஆசிரியை சாந்தினியும் டிறிபேர்க் கல்லூரியில் இவருடன் ஒரே வகுப்பில் கல்வி கற்று, காதல் அரும்பி, பல்கலைக்கழகத்தில் மலர்ந்து, இல்லறத்தில் நுழைந்தவர் ஆவார். பிற்காலத்தில் அவரும் டிறிபேர்க்கில் புவியியல் பாட ஆசிரியையாகக் கடமையாற்றினார்.

காதலர் இருவரும் கருத்து ஒருமித்து வாழ்ந்தனர். ஒரு பெண்பிள்ளையையும், மூன்று ஆண் பிள்ளைகளையும் பெற்றுச் சீரும்சிறப்புமாக வாழக் கல்வி அறிவை ஊட்டி வளர்த்தனர். இன்று அவர்கள் கல்வியில் மேம்பட்டவர்களாக வாழ்கின்றனர். இவர்களும், இன்று மணிவிழாக் காணும் எமது மாணவனும் துணைவியுடன் நீடூழி காலம் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றேன்.



# நாயகன் நடந்து வந்த பாதை



**அ. அகிலதாஸ் (நண்பன்)**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்.கல்வி வலயம்.

திரு.சங்கரப்பிள்ளை கந்தையா, திருமதி கந்தையா கனகம்மா தம்பதிகளின் அருந்தவத்தினால் 1956 ஆம் ஆண்டு ஆவணி 18 ஆம் நாள் சாவகச்சேரி மண்ணில் பிறந்த பாலன் இவன். அக்கா, அண்ணா, தங்கை, தம்பி என குறைவில்லாது நான்குவகைச் சகோதரர்களையும் கொண்ட மூன்றாவது பிள்ளை இவன். வசதிகள் குறைந்த மிக எளிமையான சாதாரண குடும்பம், இத்தகைய குடும்பத்திற்கு இயல்பாக இருக்கும் பலவீனங்களும், பிரச்சினைகளும் இவன் குடும்பத்திலும் இருக்கவே செய்தன. இவற்றையெல்லாம் சவாலாக ஏற்று வளர்ந்த ஒருவன்.

இவனது பாடசாலைக்கல்வி சாவகச்சேரியில் இந்துக்கல்லூரியிலும் பின்; சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும் தொடர்ந்து க.பொ.த (சா/த) வரை இந்துக்கல்லூரியில் கற்று 1973 இல் பரீட்சையில் தேறினான். எனினும் குடும்ப சூழ்நிலை காரணமாக கல்வியைத் தொடர முடியாத நிலை, இரண்டு வருடங்கள் வியாபார முயற்சியில் ஈடுபாடு. எனினும் அவன் பலனோ அல்லது எமது சமூகத்தின் பயனோ மீண்டும் கல்விப்பாதைக்கு வந்து சேர்ந்தான். சாதாரணதரம் வரை விஞ்ஞானப் பிரிவில் கற்று வந்த இவன் உயர்தரத்தில் கலைப்பிரிவில் டிறிபேர்கல்லூரியில் கற்று மிக உயர்ந்த பெறுபேறு பெற்று 1978 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானான். இருமாதங்கள் மட்டுமே அவனால் பேராதனையில் தாக்குப்பிடிக்க முடிந்தது. இதன் பின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றலாகி வந்தடைந்தான்.

பல்கலைக்கழகத்தில் பொருளியல் சிறப்பு பாடநெறி. அதில் இரண்டாம் வகுப்பு உயர்தர (Second upper) சித்தி, 1982 இல் பட்டம் பெற்றாலும் 1984 இலேயே ஆசிரியப்பணி நியமனம்

கிடைத்தது. எனினும் இவன் பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலத்திலிருந்தே உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு பொருளியல் பாடத்தைத் தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கத் தொடங்கிவிட்டான். இவ்வாறு ஈடுபடவேண்டிய தேவையுமிருந்தது. அதற்கான தகுதியும் அவனிடம் நிறையவே இருந்தது.

இவனது முதல் ஆசிரிய நியமனம் கொழும்பு கொட்டாஞ்சேனை புனித அந்தோனியார் ஆண்கள் வித்தியாலயத்தில் அமைந்தது. ஐந்து ஆண்டுகள் அங்கு பணியாற்றி பின்னர் ஒருவருடம் கொழும்பு தெமட்டகொட தமிழ் மகா வித்தியாலயத்தில் பணியாற்றினான். கொழும்பில் பணிபுரிந்த காலத்தில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியையும், திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணி பாடநெறியையும் தொடர்ந்தான். எனினும் அக்காலத்தில் இடம் பெற்ற ஜே.வி. பியின் பிரச்சினைகள் காரணமாகத் தொடர்ந்து இருவருடங்கள் பல்கலைக்கழகங்கள் இயங்க முடியாத நிலையினால் இரண்டு பாடநெறிகளையுமே இவனால் பூர்த்தி செய்ய முடியாது போய்விட்டது.

கொழும்பில் பணிபுரிந்து வந்த காலப்பகுதியில் கொழும்பில் P.U.C, கிளிநொச்சியில் விஞ்ஞானக் கல்வி நிலையம், சாவகச்சேரியில் இவனது சொந்த கல்வி நிலையமான அருண் கல்வி நிலையம் ஆகியவற்றில் பொருளியல் ஆசானாக இருந்து பெருந்தொகையான மாணவர்களையும், புகழையும் பெற்றான். ஒவ்வொரு ஆண்டிலும் 600 இற்கு மேற்பட்ட மாணவர்கள் இவனிடம் பொருளியலைக் கற்று வெளியேறினர். இதன் காரணமாக இவனது செல்வம் மட்டுமல்ல செல்வாக்கும் சமூகத்தில் உயர்ந்தது. இவனது சொந்தக் கல்வி நிலையத்தில 25 சதவீத வறிய மாணவர்கள் இலவசமாகவே கல்வி கற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவனிடம் கல்விகற்ற மாணவர்கள் பலர் இன்று பிரதேச செயலர்களாகவும், இன்றும் வேறு அரச மற்றும் தனியார் துறைகளில் உயர்பதவிகளிலும் பணியாற்றி வருகின்றனர்.

அவ்வாறான மாணவர்கள் ஒன்றிணைந்து எடுப்பதே இந்த மணிவிழா. உயர்தர வகுப்பில் இவனுடன் ஒன்றாகக் கல்வி கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டு புவியியல் பாடத்தை சிறப்பு நெறியாகக் கற்றுவந்த சாந்தினி மகேசன் என்பவரை 1981 இல் திருமணம் செய்தான். இது பள்ளியில் அரும்பி பல்கலைக்கழம் வரை மலர்ந்த காதல் திருமணம், இதன் காரணமே இவன் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து யாழ்.பல்கலைக்கழகத்திற்கு மாற்றலாகி ஓடிவந்தான் என்று இக்காலங்கள் நாங்கள் இவனை நக்கலடித்ததுண்டு. அது உண்மையும் கூட. இவனது வாழ்க்கைத் துணையும் பெயர் பெற்ற புவியியல் ஆசிரியையாகப் பளை மகா வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, டிறிபேர்க்கல்லூரி ஆகியவற்றில் பணியாற்றி சென்ற ஆண்டு ஓய்வு பெற்றுள்ளார்.

1990 இல் கொழும்பிலிருந்து மாற்றலாகி தான் கல்விகற்ற டிறிபேர்க் கல்லூரியில் ஆசிரியராக இணைந்து கொண்டார். இங்கு ஆறு வருடங்கள் ஆசிரியராகவும், 11 வருடங்கள் பிரதி அதிபராகவும் 11 வருடங்கள் அதிபராகவும் இருந்து கடந்த 2015 ஆவணி மாதம் பாராளுமன்றப் பொதுத்தேர்தலுடன் அதிபர் பதவியிலிருந்து விலகி பின்னர் வலயக் கல்விப்பணிப்பாளரின் வேண்டுதலின் பேரில் தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனையில் இணைந்து கொண்டார். டிறிபேர்க்கல்லூரியில் அவரது 28 வருடப் பணிக்காலத்தில் இவர் படைத்த சாதனைகள் அளப்பரியன. ஆசிரியராக இருந்த காலத்திலும் பிரதி அதிபராக இருந்த காலத்திலும், தனது கற்பித்தலூடாக நிறைய மாணவர்களை பல்கலைக்கழக கலை, வர்த்தகத்துறைகளுக்குத் தெரிவு செய்ய வைத்தார். இவரது மதிப்புமிகு ஆசிரியர் திரு. மு. நாகேந்திரராஜா அவர்கள் அதிபராக இந்த போது இவர் பிரதி அதிபராக இருந்தும், பின் அதிபராக இருந்தும் புகழ் மங்கி நின்ற டிறிபேக்

கல்லூரியை மீண்டும் புகழவைத்த பெருமை இவரைச்சாரும், 2000ஆம் ஆண்டு யுத்தத்தினால் முற்றாக அழிவடைந்த கல்லூரியைப் புனரமைத்து பௌதிகவளங்கள், கல்விப்பெறுபேறு, விளையாட்டுக்கள், கலை கலாசார சமயங்கள், ஒழுக்கப்பண்புகள் போன்ற பல்வேறு துறைகளிலும் உயர்நிலைக்கு கொண்டுவந்ததில் இவரது பணி மகத்தானது. தென்மராட்சியின் புகழ்பூத்த அதிபர்களுள் முதன்மையானவராக எல்லோராலும் மதிக்கப்படும் நிலையை இவன் தனது அர்ப்பணிப்பு மிக்க பணியினால் அடைந்து கொண்டான்.

கல்வித்துறையில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா, முதுகல்வியியல்மாணி, பட்டப்பின் கல்வி முகாமைத்துவம் போன்ற பல்வேறு பட்டங்களைப் பெற்ற சிறந்த கல்வியாளன். இவன் அதிபர், ஆசிரியர்க்கான நல்ல வளவாளனும் வழிகாட்டியும் கூட, தொடர்ந்து புதியவை கற்கும் ஆவலுடையவன். இந்த வயதிலும் திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணிப் பட்டக் கற்கையைத் தொடர்ந்து கொண்டிருக்கும் ஒருவன், ஏற்கனவே மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் தொலைக்கல்வி முறையில் 'இதழியலும் தொடர்பாடலும்' கற்கையைப் பயின்றவன்.

இவன் தமிழ்மொழிப்பற்றும் இனப்பற்றும் மிகுந்தவன். இதனால் தன் வாழ்க்கையில் பலவற்றை இழந்தவன். பல துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் உள்ளானவன். இவனுக்காக இவனது தாயாரைக் கூட சிறைவைத்த சம்பவங்களும் உண்டு. இவனுக்கு சிறையும் சித்திரவதையும் புதிதல்ல, நாலாம் மாடிவரை சென்று வந்தவன். பலமுறை சாவிலிருந்து தப்பிப்பிழைத்தவன். இவன் மனம் தளரவில்லை. பல்வேறு சமூகப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றான். முக்கியமான ஒன்றை மட்டும் பதிவு செய்ய விரும்புகிறேன். இவனது நண்பர்களாகிய எம்மில் பலர் இன்று கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளாகப் பணிபுரிகின்றோம். உண்மையில் எம்மிலும் பார்க்க திறமையும் புலமையுமுள்ள இவன் அவ்வாறு இல்லை. நாம் அதிபர் பரீட்சைக்குத் தோற்றிய காலம் ஆனையிறவுக்கான தாக்குதல் நடைபெற்ற காலமாகும். இவனும் அப்பரீட்சைக்குத் தோன்றியிருந்தால் நிச்சயம் ஒரு கல்வி நிர்வாக சேவை அதிகாரியாக வந்திருப்பான். ஆனால் அந்நேரத்தில் காயப்பட்ட போராளிகளைப் பராமரிப்பதும், போராளிகளுக்குத் தேவையான உதவிகளைப் புரிவதுமே தனக்குப் பரீட்சையை விட முக்கியமெனக்கூறி அப்பணிகளிலேயே முழுமூச்சாக ஈடுபட்டான். தன்னைத்துறந்து சமூக நலன் கருதும் அவனது உயர்தரப் பண்புக்கு இது ஒன்றே போதும்.

இவனது இந்தப் பண்பே இவனைத் தற்கால அரசியலுக்குள் இழுத்து வந்தது, இவன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அல்ல. தேர்தலில் கோடி கோடியாய் செலவழித்தவனுமல்ல. ஆனால் சுமார் 43 000 வாக்குகளைப் பெற்றானெனில் மக்கள் அவனை எந்தளவுக்கு நேசிக்கிறார்கள் என்பதை அறியமுடியும்.

"பிறர் தலைதடவ தன்பிள்ளை தானாக வளரும்" என்பது இவனுக்கு நிறையவே பொருந்தும் இவனது நான்கு பிள்ளைகளும் உயர்கல்வி கற்று உயர் நிலையில் இருக்கின்றனர்.

உயர் கொள்கையுடன் வாழ்பவன், உண்மை, நேர்மை நீதி, நியாயம் என்பவற்றிற்கு இவனது வெளிப்படையாகப் பேசும் பண்பு பல எதிர்ப்பாளர்களை உருவாக்குவதுமுண்டு. சம காலத்தில் யாழ். மாவட்டத்தில் பல்வேறு பிரபல கல்லூரிகளில் நண்பர்களாகிய நாம் அதிபர்களாகப் பணிபுரிந்து எமது பணியைச் சிறப்பாக்க உதவியது. பலர் கூறுவதுபோல நாம் ஒரு அணியாகப் பலமாக தொழிற்பட்டது; இன்றும் தொழிற்படுவது எமக்குப் பெருமையாக உள்ளது.

அவனது எதிர்காலம் சிறக்க வாழ்த்துகிறேன். அவனது சமூக அரசியல் பணிகள் மேம்பட என்றும் துணை நிற்போம் என உறுதிகூறுகிறேன்.

# பணிகளின் பதிவுகள் சில...





















# அஞ்சாமை, அர்ப்பணிப்பு, நெஞ்சுரம் ஆகியவற்றின் அடையாளம்



திரு. ச. சிவனேஸ்வரன்
செயலாளர்,
வடமாகாண சிரேஷ்ட பள்ளிக் கல்வியியலாளர்,
ஒன்றியம்.

எனது பல்கலைக்கழக நண்பனும் மணிவிழா நாயகனுமாகிய திரு. க. அருந்தவபாலன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். கல்விப்புலத்தின் ஆசிரியராக, அதிபராக நமது சகபாடியாகப் பணியாற்றிய அருந்தவபாலனின் பணி காத்திரமானது. கல்விப் பணியுடன் சமூகம் சார்ந்த அவரது சேவைகள் நமது இனத்திற்கு வலுவூட்டியது. கல்வி, சமூக செயற்பாடுகளில் நமது நண்பர்கள் பலரும் ஈடுபாடு காட்டி வந்த வேளை நமது இன விடுதலை நோக்கிய அவரின் செயற்பாடுகள் அரசியல் புலத்தின் ஒரு தவிர்க்க முடியாத சமூகத் தலைவராக அவரை உயர்த்தியது.

இலங்கையின் கல்விப்புலத்தில் நமது நண்பர்கள் பலர் பல்வேறு மாவட்டங்களில், பல்வேறு வலயங்களில் அதிபர்களாக சம காலத்தில் பதவி வகித்ததும் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்ட கால கட்டத்தில் கல்வி, சமூகம் சார்ந்த செயற்பாடுகளை நாம் அனைவரும் இணைந்து மேற் கொள்ளும் வேளையில் அருந்தவபாலனின் பங்களிப்பும் வழிகாட்டலும் மிகச் சிறப்பானதாக விளங்கியதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

கல்விப்புலத்திலும் சரி, சமூகச் செயற்பாடுகளிலும் சரி தனக்குச் சரியெனப்பட்டதைத் துணிந்து முன்னெடுக்கும் நெஞ்சுரமும், நேர்மையும், அஞ்சாமையும் இவரின் பல செயற்பாடு களிலும் தொனித்து நின்றதை நான் பார்த்திருக்கின்றேன்.

நமது சமூகம் பல்வேறு துன்பங்களையும், துயரங்களையும் சந்தித்த வேளைகளிலெல்லாம் அஞ்சாமையுடனும், அர்ப்பணிப்புடனும் பணியாற்றிய ஒரு சமூகப் போராளியான அருந்தவ-பாலனின் செயற்பாடுகளையெல்லாம் இங்கு விரிவாகக் குறிப்பிட முடியாத போதும் அவர் கடந்து வந்த பாதை மிகக் கடினமானது. ஆனால் காத்திரமானது என்பதை நாம் அறிவோம்.

இன்று எமது சமூகம் பற்றி ஆழமாகச் சிந்திப்பவர்களில் அருந்தவபாலனும் ஒருவர் என்ற வகையில் நண்பனின் ஓய்வும் நமது சமூகத்திற்கு நன்மையே எதிர்கால சமூக செயற்பாடுகளில் முழு நேர ஊழியனாகச் செயற்படும் வாய்ப்பு தற்பொழுது ஏற்பட்டுள்ளது. இந்த வாய்ப்பை சமூகம் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். யாழ்ப்பாணக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவராக விளங்கும் அருந்தவபாலனின் வடமாகாண சிரேஷ்ட பள்ளிக் கல்வியியலாளர் ஒன்றியத்தின் செயற்பாட்டாளராகவும் விளங்குகின்றார். இன்று மணிவிழாக் காணும் திரு. க. அருந்தவபாலன் நீண்ட ஆயுளுடனும், சுகத்துடனும் தம் குடும்பத்துடன் சீரும், சிறப்புடனும் வாழ எமது உள்ளம் நிறைந்த வாழ்த்துக்கள்.








# நினைவிற் பதிந்த சுவடுகள்




திருமதி தேவந்தினி பாபு
பிரதேச செயலர்,
காரைநகர்

நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையும் தெளிவான சிந்தனையும் மாணாக்கர் மீது மாண்பான பற்றுதலும் தந்தையைப் போலவே அன்பான கண்டிப்பும் தாயைப் போல பாசமான அரவணைப்பும் மிக்க ஆசானாக விளங்கியவர் எமது அருந்தவபாலன் ஆசிரியர் அவர்கள். மணிவிழாக் காணும் எம்மருமை ஆசானுக்கு எம்மினிய வாழ்த்துக்கள் கோடி கோடி.

யுத்தத்தின் மேகங்கள் நம்மைச் சூழ்ந்து நின்று குண்டு மழை பொழிந்து நின்ற பொல்லாத காலத்தில் எம் ஆசானிடம் கற்றிருந்தேன். தென்மராட்சியிலே அடுக்கடுக்காய் குண்டுத்தாக்குதல்கள் நடந்து கொண்டிருந்த போது நாமும் ஒழித்து ஒழித்து இருந்து கல்வி கற்றோம். அப்போதைய காலத்தில் எம் பயம் நீக்கி கற்பித்த பெருமை அவரைச் சாரும். அன்று நாம் ஆதரவற்று பயந்து போய் இருந்திருந்தால் இன்று நாம் முன்னேற்றம் பெற்றிருக்க முடியாது.

''இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர் துன்பம் துடைத்தூன்றும் தூண்'' என்ற வள்ளுவரின் வரிகளுக்கமைய தனது இன்பத்தை விரும்பாத தனது கருமத்தையும் அதன் பயனையும் விரும்பிச் சென்று தன்னைச் சூழ்ந்திருக்கும் உறவுகளின் துன்பம் போக்கி நிலைபேறடையச் செய்யும் தூணாக அவர் செயற்பட்டுள்ளார். ஆசிரியப் பணியுடன் மாத்திரம் நின்று விடாது பிரதேசம் சார்ந்த பொதுப் பணிகளிலும் சிறப்பாக ஈடுபட்டு வந்த ஒரு சிறந்த பண்பாளன் ஆவார். இவரின் காலத்தில் இவரிடம் கல்வி பயிலுவதற்கு நாம் உண்மையில் கொடுத்து வைத்தவர்கள் என்று சக நண்பர்கள் என்னிடம் அடிக்கடி கூறியிருக்கிறார்கள்.



இவரது பாரியாரும் மாணவர்கள் மீது அளவு கடந்த அன்பு மிக்கவர் கணவரின் மாணாக்கர்களையும் தனது மாணாக்கர் போன்று கருதி அறிவுரை கூறி நல்வழிப்படுத்தும் திறன்படைத்தவர். ஆசிரியர் அவர்களின் சாதனைகளுக்கு பக்கபலமாக நின்று உழைத்துக் கொண்டிருப்பவர். எமது ஆசிரியர் தமிழ் மீதும் தமிழ்மக்கள் மீதும் அளவில்லாத பற்றுக் கொண்டவர். ஆசிரியத்துவம் என்ற சொல்லுக்கு பொருளாகி வரலாறு படைத்தவர். யாரையும் நோகடிக்காமல், கடிந்து கொள்ளாமல், சிரித்த முகத்துடன் உலா வருவது அவருக்கே உரிய தனிச் சிறப்பாகும்.

தற்போதைய கால கட்டத்தில் ஆசிரிய மாணவர் உறவு என்பது பெரும்பாலான இடங்களில் வகுப்பறைக் கட்டிடத்தோடு அல்லது பாடசாலையோடு நிறைவடைந்து விடுகின்றது. ஆனால் அருந்தவபாலன் ஆசிரியர் அவர்கள் அவரிடம் கல்வி பெற்றுக் கொண்ட, அவரால் வழி நடத்தப்பட்ட ஒவ்வொரு மாணவனதும் தனிப்பட்ட இன்ப துன்ப நிகழ்வுகளில் தவறாது கலந்து கொண்டும் தேவையான இடத்தில் அறிவுரை வழங்கியும் அவர்களைச் சமூகத்தில் குற்றமற்ற பணி செய்து பெருமையுடன் வாழ்வதற்கு அடித்தளமாக நின்று செயற்பட்ட பெருமகன் என்பது அனைவரும் அறிந்ததே.

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் சமூக அக்கறை, நேரான மனப்பாங்கு என்பவற்றுடன் யாரையும் புண்படுத்தாத் தன்மை கொண்ட பண்பாளனாக இருந்து தனது ஆசிரியர் மற்றும் அதிபர் பதவிக்காலங்களில் சீரிய பண்போடு செயற்பட்ட எம் மணிவிழா நாயகனாம் அருந்தவபாலனை இந்நன்நாளில் நன்றியுடன் நினைவு கூர்ந்து வாழ்த்துகிறேன். இப்புவியினில் நீர் பல்லாண்டு காலம் வாழி! வாழி!



# பல்திறன் ஆளுமையுள்ள பண்பாளன்



அ. கயிலாயபிள்ளை
ஓய்வுநிலை அதிபர்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஆரம்ப வகுப்பு முதல் கற்று வந்த நண்பன் அருந்தவபாலனுடன் 1966 இல் ஐந்தாம் வகுப்பில் நான் சக மாணவனாக இணைந்தமை என் மனக்கண்முன் வருகின்றது. அக்காலம் முதல் இன்று வரை சுமார் ஐம்பது வருடங்கள் மாணவனாக, ஆசிரியராக, அதிபராக, சமூக செயற்பாட்டாளராக மணிவிழா நாயகனின் செயற்பாடுகளை நன்கறிந்தவன் என்ற வகையிலே அவரது மணிவிழா மலருடாக அவரை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

மணிவிழா நாயகன் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அயலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் மாணவப் பருவத்தில் கற்றல் செயற்பாடுகளிலும், விளையாட்டுச் செயற்பாடுகளிலும் துடிப்புடன் செயற்பட்டவர். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆரம்ப, இடைநிலை வகுப்புக்களில் கற்றவர். க.பொ.த உயர்தர வகுப்பினை டிறிபேர்க் கல்லூரியில் கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டு கலைமாணிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார். தனது வாண்மைசார் கற்கைநெறிகளான கல்வி டிப்ளோமா, கல்வி முதுமாணி ஆகியவற்றை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கல்வி முகாமைத்துவ டிப்ளோமாவை தேசிய கல்வி நிறுவகத்திலும் பெற்று சிறந்த வாண்மையாளரானார்.

இவர் ஆசிரியத் தொழிலில் 1984 இல் இணைந்து கொண்டவர். சிறந்த பொருளியலாசிரியராகக் கடமையாற்றி தனக்கென சிறந்த மாணவப் பரம்பரையை உருவாக்கியுள்ளார். சிறந்த பேச்சாற்றல் மிக்கவர், நாட்டுப்பற்றும், பிரதேசப் பற்றும் மிக்கவர். இதனால் கடமைக் காலத்தில் அசாதாரண அரசியல் இருந்த காலத்தில் பல அச்சுறுத்தல்களையும், இன்னல்களையும் சந்தித்தவர். எத்துன்பம் வந்த போதும் தனது கொள்கை இலட்சியம் ஆகியவற்றில் பற்றுறுதியுடன் இருந்தவர். வாழ்வில் உயர்வோ அன்றேல் தாழ்வோ வந்தாலும் சொந்த மண்ணில் இலட்சியத்துடன் வாழவேண்டும் எனும் கொள்கையுள்ளவர்.

1996 ஆம் ஆண்டு இலங்கை ஆசிரியர் சேவை ஆரம்பிக்கப்பட்டது. அச்சேவையின் முதலாம் வகுப்புக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையில் எமது பிரதேசத்தில் சித்தியடைந்து தெரிவு செய்யப்பட்ட சிறந்த ஆசிரியராவார். இது அவரது ஆசிரியத்துவத்திறனுக்கு எடுத்துக்காட்டாகும். சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் ஆசிரியராகச் செயலாற்றி மாணவர் அடைவு மட்ட விருத்திக்கும் ஆளுமை விருத்திக்கும் பணியாற்றியவர். பின்னர் கல்லூரியின் பிரதி அதிபராக இருந்து அதிபர் நாகேந்திரராசாவின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்தவர். யுத்தத்தினால் முற்றாக அழிவடைந்த கல்லூரியை புனர்நிர்மாணம் செய்வதிலும் மீள்கட்டுமானம் மேற்கொள்வதிலும் அதிபருக்கு உதவியளித்தவர்.

திருவாளர் நாகேந்திரராசாவைத் தொடர்ந்து கல்லூரியின் அதிபர் பொறுப்பேற்று ஒரு தசாப்த காலம் அதிபராகச் செயற்பட்டு கல்லூரியின் வளர்ச்சியில் முக்கிய பங்கேற்றார். இரண்டு நூற்றாண்டுகள் கல்விப்பணியாற்றிய கல்லூரியின் சிறந்த அதிபர் வரிசையில் இவரும் முக்கியமானவர். இவரது சமகாலத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றியவன் என்ற வகையில் இவரது திறன்களை நன்கறிவேன். கல்லூரியில் மிக அர்ப்பணிப்புடன் கடமையாற்றி கல்வித்துறை, விளையாட்டுத்துறை அதனுடன் இணைந்த இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், பௌதிக வளவிருத்தி ஆகியவற்றில் அரும்பணியாற்றினார்.

அயல் கல்லூரி அதிபர்களுடன் சகசமாகப் பழகி அவர்களின் வளர்ச்சியிலும் அக்கறை செலுத்தினார். வலயக்கல்வி அலுவலகத்தின் செயற்பாடுகளுக்கும் பூரண ஒத்துழைப்பை வழங்கியவர். இவரது காலத்தில் டிறிபேர்க் கல்லூரியின் மாணவர் தொகை அதிகரித்ததுடன் ஒழுக்கமும் கட்டுப்பாடுமுள்ள நல்ல மாணவர் பரம்பரை உருவாகியது. கல்லூரியின் விளையாட்டு மைதானத்துப் பிரச்சினைக்கு சிறந்த பௌதிக வள முகாமைத்துவத்துக் கூடாகத் தீர்வு கண்டார்.

இவர் சிறந்த வளவாளராகவும் செயற்பட்டு அதிபர்களின் வாண்மை விருத்திக்கு உதவி புரிந்துள்ளார். தென்மராட்சிப் பாடசாலைகளின் அதிபர்கள் சங்கத்தின் தலைவராகவும் செயற்பட்டுள்ளார். நல்ல தொடர்பாடலுக்காக அதிபர்கள் ஆசிரியர்களின் நன் மதிப்பைப் பெற்றவர். கடந்த ஆட்சிக் காலத்தில் இவரது அதிபர் பதவி சம்பந்தமாக நெருக்குதல்கள் வழங்கப்பட்ட போதிலும் அவற்றுக்கு அஞ்சாது முகங்கொடுத்து வெற்றி கண்டு மாணவர்களுக்கும் கல்லூரிக்கும் செய்யவேண்டிய பணியைச் சரிவரச் செய்தமை பாராட்டுதற்குரியது.

கல்லூரியின் வெளிநாடுகளிலுள்ள பழைய மாணவர்களுடன் தொடர்பு கொண்டு பல்வேறு நாடுகளின் பழைய மாணவர் சங்கங்களை புனரமைத்து கல்லூரியின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவிபெற்றுள்ளார்.

இவர் சிறந்த கூட்டுறவாளன், சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சிறந்த தலைவராகச் செயற்பட்டு, சங்கத்தின் சேவையை விருத்தி செய்து, பணியாளர்களும்

பாவனையாளர்களும் பெரும்பயன்பெறச் செய்துள்ளார். இவர் தென்மராட்சி இடப்பெயர்வுக்கு முன் சிறந்த அச்சகத்தை நிர்வாகித்து அச்சுத்துறையிலும் தனது கைவண்ணத்தைப் பதித்துள்ளார்.

விழாநாயகன் தென்மராட்சியின் அரசியல் வெற்றிடத்தினை நீக்குவதற்கான அரசியல் செயற்பாட்டில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வேட்பாளராகக் களமிறங்கியதுடன் மக்களின் ஆதரவைப் பெற்ற ஒருவராகவுள்ளார். கட்சி சார்பான வேலைத்திட்டங்களைச் செய்வதுடன் அதன் தென்மராட்சி அமைப்பாளராகவும் திகழ்கின்றார். தென்மராட்சி மக்கள்



அவர்மீது பெரும் நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் வைத்திருப்பது யாவருமறிந்ததே. சமூக அபிவிருத்தி சார்பான பலவேலைத்திட்டங்களை செய்து வருகின்றார். பாலர் முன்பள்ளி அபிவிருத்தியிலும், ஏழை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதிலும், முன்பள்ளிகளை மேம்படுத்துவதிலும் துடிப்புடன் ஈடுபட்டு வருகின்றார். இளைஞர் யுவதிகளின் சுயவேலை வாய்ப்புச் செயற்றிட்டங்களையும் ஏற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்விதம் பல்திறன் ஆளுமையுள்ள நண்பன் அகவை அறுபதில் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றபோதிலும், இனி அரச கட்டுப்பாடுகள், வரையறைகள் இன்றி எமது மக்களுக்கும் பிரதேசத்துக்கும் சேவையாற்ற வேண்டிய பெரும்பணி காத்துக்கிடக்கின்றது. சமூக சேவையாளனுக்கு ஓய்வு ஏது? விழா நாயகனும் அவரது குடும்பத்தினரும் சகல செல்வங்களுடனும் நோய் நொடியின்றி நீண்ட ஆயுளுடனும் சகலவிதமான செல்வங்களுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.



# பாடசாலைத் தோழனின் வாழ்த்து



**யோகேஸ்வரன் ஜெயக்குமார்,**
ஓய்வுநிலை உதவிப் பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

எனது இளமைக்கால பாடசாலைத் தோழனும் குடும்ப நண்பனுமான திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்களது மணிவிழாவைக் குறித்து வெளியிடப்படும் (அருந்தவம்) சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு .க. அருந்தவபாலன் அவர்களுடன் இளமைக்காலத்திலிருந்து இன்றுவரை நான் நல்லுறவைப் பேணி வருபவன். திரு. அருந்தவபாலன் அவர்களது வாழ்க்கைப் பாதையை மூன்று பிரிவுகளாக பிரித்து நோக்கக்கூடியதாகவுள்ளது. கல்விச்சேவை, சமூக சேவை, அரசியல் சேவை.

இவர் நீண்டகாலம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஆசிரியராகக் கடமையாற்றி, பின்னர் அப்பாடசாலையின் அதிபர் பதவியை ஏற்று பல நன்மாணாக்கர்களை உருவாக்கிய பெருமைக்கு உரித்தானவர் மட்டுமல்ல டிறிபேக் கல்லூரியின் பெருமையை உலகெங்கும் அறியவைத்தவர் திரு. க. அருந்தவபாலன் அவர்கள்.

இவரது சமூகப் பணி நாடறிந்த ஒன்றாகும். இவர் பல பொது அமைப்புக்களினூடாக சமூகத்துக்கு அநேக பயன்தரும் பணிகளை ஆற்றியுள்ளார். குறிப்பாக தென்மராட்சி மக்கள் 2000 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்திருந்தபோது அவர்கள் 2002 ஆம் ஆண்டு மீண்டும் தென்மராட்சிக்கு மீள்குடியேறுவதற்கு "தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கம்" என்ற அமைப்பினூடாக பல காத்திரமான பணிகளை முன்னெடுத்தார். சமீபத்தில் தென்மராட்சி பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட "விடிவெள்ளி" என்ற சமூக மேம்பாட்டு அமையத்தினூடாக தனது பணிகளை சமூகத்துக்கு நல்கி வருகின்றார். தென்மராட்சி மாணவர்களின் கல்வி, கலை, கலாசார, விளையாட்டுத்

திறன்களை மேம்படுத்தும் முகமாக அண்மையில் தென்மராட்சி அபிவிருத்தி கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட "தென்மராட்சி விழா" பெரு வெற்றியடைவதற்கு திரு. க. அருந்தவபாலன் அவர்களது பங்கும் முக்கியமானதாகும். திரு. க. அருந்தவபாலன் அவர்கள் எமது இனத்தின் சுபீட்சத்துக்காக பல அர்ப்பணிப்பான சேவைகளை ஆற்றிவருவது அனைவரும் அறிந்ததே.

இவர் கடந்த இரண்டு நாடாளுமன்ற தேர்தல்களில் போட்டியிட்டு இரண்டுமுறையும் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பைத் தவறவிட்டாலும் திரு.க. அருந்தவபாலன் அவர்கள் மக்கள் நேசிக்கும் ஒரு தலைவராக இருப்பது அவரது திறமைக்கும் அர்ப்பணிப்பான சேவைக்கும் கிடைத்ததொரு இறைவன் கொடையாகும்.

அகவை அறுபதை நிறைவு செய்து இன்று மணிவிழாக் காணும் எனது அன்புக்கினிய நண்பன் நீண்டகாலம் பூரணதேக சுகத்துடனும், மகிழ்ச்சியுடனும் தனது வாழ்க்கைத் துணைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் சகிதம் நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.







# அருமை ஆசான் அருந்தவபாலன்



நடராசா சர்வேஸ்வரன்,
அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**தொடர்பு**

அருந்தவபாலன் ஆசிரியரின் மணிவிழா என்றபோது அது அறுபது அகவைப் பூர்த்திவிழாவா, சேவை நலன் பாராட்டா அல்லது நன்றி கூறல் விழாவா என்ற சிந்தனை எழுந்தது. இவ் விழா தென்மராட்சிச் சமூகம் தமது சமூகத் தலைவனை கௌரவிக்கும் நிகழ்ச்சியாக அமைந்துள்ளது என்பதே உண்மை. விழாநாயகனிடம் கற்று வாழ்வு பெற்றவர்களில் நானும் ஒருவன் என்றவகையில் எமது மதிப்புக்குரிய ஆசானிடம் நாங்கள் கற்ற கால நினைவுகளை மீட்டி அவரின் மாணவனாக உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

**கற்ற காலப்பகுதி**

1989 - 1991 ஆண்டு காலப்பகுதியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நாம் உயர்தரம் வணிகப்பிரிவில் கல்வி கற்றோம். பொருளியல் ஆசிரியர்களுக்கு பாடசாலைகளிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் தட்டுப்பாடு நிலவிய காலப்பகுதியது. சாவகச்சேரியில் வெளியூர் ஆசிரியர்கள், தனியார்கல்வி நிலையங்கள் நடத்தி, கற்பித்த காலம். உள்ளூராசிரியர்களான கமலநாதன் ஆசிரியர், கந்தசாமி ஆசிரியர் ஆகியோரை இணைத்து தனியார் கல்வி நிலையத்தை ஆரம்பித்து பெருந்தொகையான வணிக, கலை பட்டதாரிகளை உருவாக்கிய பெருமை அருந்தவபாலன் ஆசிரியரையே சாரும். அப்போதே தன்னை ஒரு சமூகப் போராளியாக இனங்காட்டிக் கொன்டார்.

**கற்பித்தல் பாங்கு**

வகுப்பறையில் பொருளியல் கற்பித்தலும் அவரின் தூய தமிழ், சிறந்த சொல்லாட்சி, தெளிவான சரளமான நடை என்பன எங்களுடைய தமிழ் அறிவையும், சொல்ல வந்த விடயத்தை தெளிவாக முன்வைக்கும் திறனையும் அள்ளித்தந்தது. அருந்தவபாலன் ஆசிரியர் கற்பித்தவை, கற்பிக்காமல் கற்பித்தவை என பலவற்றை அடுக்கிக்கொண்டு போகலாம். சரியாகக் கூறுவதாயின்

எங்களுக்கு பொருளியலும் கற்பித்தார் என்பதே உண்மை. கற்பிக்கும்போது பாடத்துடன் தொடர்புபடுத்தி பகிடிகளை கூறுவதுடன் வகுப்பை தொடர்ச்சியாக சோர்வில்லாமல் கொண்டுசெல்லக் கூடிய ஒரு அலாதியான கற்பித்தல்பாணி அவருக்கே உரியதாகும். அவர் கூறும் Readers digest Jokes ஐ புரிந்து கொள்ள பலருக்கு கொஞ்ச நேரம் பிடிக்கும். பகிடி கூறி பல நிமிடங்களின் பின் சிரிப்பவர்களைப் பார்த்து "கொஞ்சம் பிந்தி எரிந்தாலும் ரியூப் லைற் வெளிச்சம் கூடத்தானே" என்று சேர் சொல்லும் பாங்கு மீண்டும் ஒரு முறை வகுப்பைச் சிரிக்க வைக்கும். என்னையும் எனது நன்பர்களையும் சாவகச்சேரி நகரசபை நூலகத்திற்குச் சென்று Readers digest என்ற ஆங்கில சஞ்சிகையை துணிந்து புரட்டவைத்த பெருமை அருந்தவபாலன் சேரின் Readers digest Jokes யே சாரும்.

**கற்பிக்கும் விடயத் தெளிவு**

தேவைக்கு அதிகமாக விடயங்களை கற்பித்து மாணவர்களைக் குழப்பாமல் தேவையான விடயங்களைத் தேவையான அளவில்மட்டும் பாடக்குறிப்புக்களாக வழங்குவதில் அவருக்கு நிகர் அவரே. அச்சு வசதிகள் குறைந்த காலத்திலும் அலகு ரீதியாக வினாக்களை தொகுத்து புத்தகமாக வழங்கி கடந்தகால வினாக்களை ஒவ்வொன்றாக எடுத்து எவ்வாறு விடை அமைய வேண்டும் என எமக்கு கற்பித்த பாங்கு மறக்கமுடியாதது. பரீட்சைக்கு முதல் வாரமும் வகுப்பு நடத்தியும், பேப்பர் கிளாஸ் என தனியாக கட்டணம் வசூலித்த காலத்தில் பரீட்சைக்கு மூன்றுமாதங்களுக்கு முன் கலைத்திட்டத்தை பூர்த்திசெய்து இரண்டுமாதங்கள் கடந்தகால வினாக்கள் செய்து ஒரு மாதம் சுயகற்றலுக்காக வகுப்புக்களை நிறுத்தி எம்மை உயர்ந்த பெறுபேறுபெற வைத்தார். இது தற்போதைய தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் அவரிடம் கற்றுக்கொள்ள வேண்டிய விடயம். எந்த எதிர்பார்ப்பும் இன்றி மாணவர் முன்னேற்றத்தை தனது அடைவாக எண்ணி தொழிற்பட்ட ஆசிரியரை நாம் பெற்றோம்.

**தாராள மனப்பாங்கும், சமூக சிந்தனையும்**

தன்னிடம் கல்வி கற்கும் எல்லா மாணவரையும் சமனாக கருதி கல்வி கற்பித்தாலும் கிராமப்புற மாணவர்களையும், வறியமாணவர்களையும் தனியான அக்கறையுடன் வழிப்படுத்துவதும், தேவையுள்ள மாணவர்களை இனங்கண்டு பல்வேறு உதவிகளையும் ஆலோசனைகளையும் இயல்பாகவே வழங்குவது அருந்தவபாலன் ஆசிரியரின் சிறப்பு. டச்சுவீதிக்கு அண்மையில் அமைந்திருந்த தனியார் கல்வி நிலையத்தில் கற்பித்த போது வகுப்பு முடிந்ததும் தூரத்தில் இருந்து வரும் மாணவர்களையும் அழைத்துச் சென்று அவர்களுக்கும் கடையில் தேநீர் வாங்கி கொடுத்து அனுப்பும் தாயன்பு அருந்தவபாலன் சேரிடம் தாராளமாக இருந்தது. இதுவே அவரை மக்கள் பிரதிநிதியாக மலரவைத்தது எனலாம்.

**நிறைவு**

தனது இளைப்பாறலுக்கு முன்பாகவே ஒரு ஆசிரியரிடம் கற்ற பெருந்தொகையான மாணவர்கள் உயர்நிலை அடைந்து அவர்களே தமது ஆசானுக்கு விழா எடுப்பது என்பது மிக அரிது. அவ்வாறான கொடுப்பினை நல்லாசிரியர்களுக்கு மட்டுமே உரித்தானது என்றவகையில் அருந்தவபாலன் ஆசிரியருக்கான இவ்விழா ஆசிரியத்துவத்திற்கே எடுக்கும் விழா என்று கூறினால் அது மிகையாகாது. அருந்தவபாலன் ஆசானிடம் கற்ற மாணவர்கள் சார்பாக அவரை வாழ்த்துகிறேன் "வான் மழை போல், தேன் தமிழ் போல் சிறந்து என்றும் வாழ்க".



# ‘ஒரு பற்றி மன்றம் போட்டுது - மற்றதுகள் வந்திட்டுது’



செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன்,
பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

1990களின் முற்பகுதி. பட்டிமண்டபங்கள் மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்த காலம். தென்மராட்சியை மையப்படுத்தி கவிஞர் த. நாகேஸ்வரனை நடுவராகக் கொண்டு எமது பட்டி மண்டப அணியும் பல ஆலயங்களில் நிகழ்வுகளை முன்னெடுத்தது. அருந்தவபாலன் சேர் ஓர் அணிக்குத் தலைவர். மார்க்கண்டு சேர் மறு அணிக்குத் தலைவர். நான் பெரும்பாலும் அணியின் நடுப்பேச்சாளர். எவ்வித கொடுப்பனவுகளையும் எதிர்பார்க்காது எமது சைக்கிளில் குறித்த நேரத்திற்கு ஆலயத்தில் ஒன்று கூடிவிடுவோம். அருந்தவபாலன் சேரின் அனல் பறக்கும் பேச்சைக் கேட்பதற்கென்றே இரசிகர்கள் வருவார்கள். பதிலுக்குப் புலவர் கீரன் பாணியில் பேசி மார்க்கண்டர் அசத்துவார். டாக்டர் அருளானந்தம் மற்றும் சுந்தரலிங்கம், சடாட்சரம் எனப் பல ஆசிரியர்கள் இப்பட்டிமண்டப நிகழ்வில் இடையிடையே பங்கேற்பர்.

ஆலயங்களில் நேரத்திற்குக் கருமங்கள் இடம்பெறுவது அரிது. அவை நல்லூர் அல்லவே. ஏழு மணிக்குப் பட்டிமண்டபம் என அறிவித்தால் ஏறத்தாழ எட்டரை ஒன்பது மணிக்குத் தான் அது ஆரம்பமாகும். இது எழுதப்படாத ஒரு வாய்ப்பாடு. ஆனால் எங்களில் ஒருவர் நேரத்தில் மிகுந்த கவனம் உடையவர். மீசாலைப் பகுதியில் ஓர் ஆலயத்தில் ஏற்பாடாகியிருந்த பட்டிமண்டப நிகழ்வுக்கு சொல்லப்பட்ட நேரத்திற்குச் சரியாக வந்துவிட்டார். கோவிலில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் மாத்திரம் நின்ற நிலையில் கடுப்பாகிய அவர் ஸ்பீக்கர் கட்டும் கந்தசாமியின் உதவியாளர் செல்லையாவிடம் தனது வரவைப் பதிவு செய்துவிட்டு வீட்டிற்கு நடையைக் கட்டிவிட்டார். அவர் சென்ற சிறிது நேரத்தில் ஏனையவர்கள் அங்கு ஆஜரானோம். எங்கள் வருகையைக் கண்ணுற்ற ஸ்பீக்கர் மனிதர் எம்மருகில் வந்தார். “ஒரு பற்றி மன்றம் போட்டுது. மற்றதுகள் வந்திட்டுது. அப்ப உள்ளதுகளை வச்சு நடத்துங்கோவன்” ஆலோசனையும் தந்தார் அவர். அவர் அன்று உரைத்த பாணி இன்றும் என்னுள் உறைந்(த்)திருக்கிறது. எத்தனை சவால்கள் இருந்தாலும் தென்மராட்சியில் பட்டிமண்டபக் கலையை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற குறி எங்கள் குழுவினரிடம் இருந்தது. அதில் கணிசமான

வெற்றியையும் ஈட்டிக்கொண்டோம். இன்று நான் வாசுதேவா என அடுத்த தலைமுறை எழுச்சி காண இதுவே அத்திபாரமாக அமைந்தது.

பட்டிமண்டபத்தின் ஊடாக நான் படித்த பெரும் மனிதர் அருந்தவபாலன். அவருடைய தோற்றம், சிந்தனை, சொல், செயல் என அனைத்திலும் ஒரு கவர்ச்சி இருக்கின்றமையை அவரை அறிந்தவர் அறிவர். சவால்களை எதிர்கொள்வதில் அவர் வெளிப்படுத்திய ஆளுமை மற்றவர்களுக்குப் பாடமாக அமையக்கூடியது. அரச பணியாளராக இருக்கும் பலர் தேசிய உணர்வு இரத்தத்தில் இருந்தாலும் அதை ஒரு மூலையில் மறைத்து வைத்துக் கொண்டு பணிசெய்வதையே வழக்கமாக்கி இருந்தனர். உயிருக்கு உத்தரவாதம் இல்லாத அல்லது தனிப்பட்ட அசௌகரியங்களை எதிர்கொள்ளத் துணிவு இல்லாத நிலையே இதற்குரிய பிரதான காரணமாகும். ஆனால் தமிழ்த்தேசியத்துக்கான உணர்வெழுச்சியை எதனை எவ்வாறு அணுகவேண்டும் என்பதை அருந்தவபாலன் சேர் தெளிவுற அறிந்திருந்தார். அந்தத் தெளிவினால் ஒரு துணிவு அவரிடம் இருந்தது. இதனால் கருமம் ஆற்றுவதற்குரிய தலைமைப் பொறுப்புக்கள் இவரைத் தேடி வந்தன.

**'இதனை இதனால் இவன் முடிப்பன் என்று ஆய்ந்து**
**அதனை அவன்கண் விடல்'**

என்ற வள்ளுவத்தை அவருடைய வாழ்வியலில் தரிசனமாகக் கண்டேன்.

இலங்கை ஆசிரியர் சேவை உருவாக்கப்பட்ட பின்னர் முதலாம் தரத்திற்கு போட்டிப் பரீட்சை மூலம் ஆசிரியர்களை உள்வாங்குவது என 1990களின் பிற்பகுதியில் அரசினால் ஒரு கொள்கை அமுலாக்கம் மேற்கொள்ளப்பட்டது. முதலாம்தர உள்வாங்குகைக்காகப் பரீட்சை எழுதிய பலருள் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே சித்தியெய்தினர். அவர்களுள் அருந்தவபாலன் சேரும் ஒருவர்.

டிறிபேர்க் கல்லூரியின் நிமிர்வின் பின்னால் அருந்தவபாலன் சேரின் கடுமையான உழைப்பு இருக்கிறது. சமூகத் தலைவராக இயற்கை அவரைத் தேர்ந்தெடுத்த நிலையில் பாராளுமன்ற ஆசனத்தில் இவரை இருத்தி அழகுபார்க்கத் தென்மராட்சி ஆசை கொண்டது. இரண்டு தேர்தல்களில் மிகச்சொற்ப வாக்கு வித்தியாசத்தில் அந்த எதிர்பார்க்கை ஏமாற்றமளித்தமை துரதிஷ்டமே. தென்மராட்சி ஏமாந்ததா? ஏமாற்றப்பட்டதா என்ற விடைகாண முடியாத வினாக்கள் பலர் மத்தியில் இருப்பினும் மக்கள் பணி செய்வதற்கு அத்தவிசுதான் தேவையென்றில்லை என்பதை மெய்ப்பித்து வருகிறார் அருந்தவபாலன். இவை எவற்றையும் பொருட்படுத்தாது வறிய மாணவரின் கல்வி வசதியை மேம்படுத்தல், பொருளாதார நலிவுற்றோர் மத்தியில் உதவிகளை வழங்குதல் என ஒரு சமூகத்தலைவருக்கு இருக்க வேண்டிய அக்கறையுடன் தொடர்ந்தும் பணிசெய்து வரும் அவரது உயர் குணம் எம்மை அவர்பால் தலை சாய்க்க வைக்கின்றது.

கடந்த பொதுத்தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் - அருந்தவபாலன் சேரின் வெற்றி கடைசிநேரத்தில் நழுவிப்போன நிலையில் - அவரது அன்பர்கள் துயரக்கடலில் மூழ்கியிருந்த நிலையில் சாவகச்சேரி மீனாட்சி அம்மன் கோவிலில் ஓர் இறுவெட்டு வெளியீட்டு விழா நடந்தேறியது. சேர் பிரதம விருந்தினர், நான் சிறப்பு விருந்தினர். இது தேர்தலுக்கு முன்னரே குறிக்கப்பட்ட நிகழ்வு. ஆனால் அருந்தவம்சேர் தோல்வியால் துவண்டுபோய் இருப்பாரோ? விழாவுக்கு வருவாரோ? நான் உட்பட பலரும் அன்று குசுகுசுத்த விடயம் அது. என்ன ஆச்சரியம் குறித்த நேரத்திற்கு ஆலயத்திற்கு வருகை தந்து இறுவட்டை வெளியிட்டு உரையாற்றினார் அருந்தவபாலன். அவரது உரையில் தெளிவு இருந்தது. மக்கள் பணி செய்ய எனத் துணிந்து விட்டேன். இதற்குத் தேர்தல் வெற்றி - தோல்வி என எதையும் நான் பெரிதுபடுத்தவில்லை. எம்மண்ணை மையப்படுத்தி எமதுமக்களுக்கான என்பணி தொடரும். அவரது பேச்சில் ஒரு தெளிவும் உறுதியும் இருப்பதைக் கண்டு கொண்டேன். அதுதான் அருந்தவபாலன்.

# அதிபர் அருந்தவபாலன் - என் நோக்கு



**லயன் மருத்துவர் க. சி. அருளானந்தம்**
பிராந்திய இணைப்பாளர், சர்வதேச லயன்ஸ் கழகம்.
தலைவர், செஞ்சிலுவைச் சங்கம், தென்மராட்சி,
தலைவர், முதியோர் சங்கம்.

மணிவிழா நாயகன் அதிபர் அருந்தவபாலன். அரும் + தவம் + பாலன் என்ற குறும்பு மாணவன் என் கல்வித்தாய் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் சுறுசுறுப்பான மாணவனாக இருந்து பின் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலிருந்து யாழ் பல்கலைக்கழகம் சென்று பட்டதாரியாகி, ஆசிரியனாகி, அதிபராகி இறுதிசேவைக்காலம் வலயக்கல்விப் பணிமனையில் பணி புரிந்தார். அவர் பணி ஆவணப்படுத்தல் சிறப்பான காரியம். நான் மாணவனாக இருந்த காலத்தில் தனியார் கல்வி நிலையங்கள் இருந்ததில் அந்நாட்களில் இரசாயன ஆசிரியர் பாலசுப்பிரமணியம் (மட்டுவில்) பண்டிதர் வேலுப்பிள்ளை போன்றோர் மாணவர்களைத் தங்கள் வீட்டுக்கு மாணவர்களை வரவழைத்து கல்வி புகட்டி உணவு கொடுத்து உதவிகள் கொடுத்து அவர்களை ஆளாக்கினார்கள். அருந்தவபாலன் ஆசிரியராகப் பணிபுரியும்போது தனியார் கல்வி நிலையங்கள் பல இருந்தபோதும் பலரை வீட்டுக்கு அழைத்து தனிப்பாடம் சொல்லிக்கொடுத்து உதவி செய்து பலரை ஆளாக்கியுள்ளார். இத்தமிழ் பற்றாளன், கல்வி ஆர்வலன் சமூகத்தொண்டில் ஆர்வத்துடன் யுத்தகாலத்திலும் சரி பின்பும் சரி சாவகச்சேரி லயன்ஸ் கழக செயற்றிட்டங்களுக்கு பாடசாலையைத் தந்தவர். இடப்பெயர்வுகளின்போதும், சுனாமியின் தாண்டவத்தின்போதும் தன் உயரிய பங்களிப்பை வழங்கிய சீமான். சாவகச்சேரி மீள்குடியேற்றம், இந்துக்கல்லூரி புனரமைப்பு, சாவகச்சேரி வைத்தியசாலை புனரமைப்பு போன்றவற்றில் பங்களிப்புச் செய்தவர். மண்ணின் மைந்தன் அமரரான ரவிராஜின் அஞ்சலி நிகழ்வைத் துணிவுடன் முன்நின்று நிகழ்த்தியவர். டிறிபேக் கல்லூரியில் சுனாமி தங்குமையமாக இருந்ததை முன்னிட்டு கண்டி செங்கடகல லயன்ஸ் கழகம் உதவ முன்வந்தபோது வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம், கட்டைக்காடு ரோமன் கத்தோலிக்க வித்தியாலயம் தற்காலிக இடங்களில் நடைபெறுவதால் அவர்கள் கொண்டு வந்த பாடசாலை உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், சீருடைகளை அப்பாடசாலைக்குக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். அவர்களும் அப்பாடசாலைகட்குக் கொடுத்துவிட்டு கண்டி சென்று டிறிபேக் மாணவர்களுக்கான சீருடைகளை நேரே அனுப்பியும் சாவகச்சேரியின் லயன்ஸ் கழகத்தை அழைத்து அவர்கள் மூலம் சீருடைகளை மாணவர்களுக்கு வழங்கவைத்த பெருமான்.

தமிழரின் தன் மானத்தை நிலைநிறுத்த பாடுபாட்டவர். நீதிக்கும், நியாயத்திற்கும், நல்வழிக்கும் குரல் கொடுப்பவர். அரசியல் அந்தஸ்து கிடைக்காவிடினும் தென்மராட்சி அபிவிருத்தியில், இடர்களைவதில், கல்வி வளர்ச்சியில், விளையாட்டுத்துறை வளர்ச்சியில் அயராது உழைப்பவர். கொள்கைக்காக வாழ்நாளைக் கழிக்குமிவர் வாழ்க நீடுழி, வாழ்க வளமுடன்.

# தென்மராட்சியின் மைந்தன் - உன்னதமான பொருளியல் ஆசான்



திரு. மு. ஆனந்தராசா,
விரிவுரையாளர்,
தேசிய கல்வியியற் கல்லூரி.

யாழ். மாவட்டத்தின் பெருநிலப் பரப்பான இயற்கை வளங்களைத் தன்னகத்தே கொண்ட தென்மராட்சிப் பிரதேசத்தின் மத்தியில் உள்ள சாவகச்சேரியில் 1956 ஆம் ஆண்டு திரு சங்கரப்பிள்ளை கந்தையா மற்றும் திருமதி கந்தையா கனகம்மா தம்பதிகளிற்குப் புதல்வனாகப் பிறந்த திரு அருந்தவபாலன் அவர்கள் யா / டிறிபேர்க் கல்லூரியில் கல்வி கற்று 1977 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சென்று பொருளியல் பாடத்தில் சிறப்புப் பட்டத்தினைப் பெற்றதுடன் தன்னுடன் ஒரேகாலத்தில் கல்வி கற்ற புவியியல் பட்டதாரி சாந்தி ஆசிரியர் அவர்களை இல்லறத்தில் வாழ்க்கைத்துணையாக இணைத்து நான்கு குழந்தைகளைப் பெற்றெடுத்து அவர்களையும் சிறந்த கல்வியாளர்களாக வளர்த்தெடுத்துள்ள பெருமைக்குரியவர் எமது ஆசான். திரு அருந்தவபாலன் அவர்கள் யா / டிறிபேர்க் கல்லூரியில் 1990 - 1995 வரை ஆசிரியராகவும் 1995-2005 வரை கல்லூரியின் பிரதி அதிபராகவும் 2005 -2015 வரை அதிபராகவும் பணியாற்றி கல்லூரியின் பெயரை நிலைநாட்டிய பெருமைக்குரிய சிறந்த நிர்வாகி ஆவார்.

இவ்வகையில் 1980 களின் முற்பகுதியில் பொருளியல் சிறப்புக்கலையில் பட்டம், பெற்ற இவர் தொடர்ந்து பட்டப்பின் கல்வி டிப்ளோமா மற்றும் முதுகல்வியியல் மாணி, பட்டப்பின் கல்வி முகாமைத்துவம் என்ற பட்டங்களையும் பெற்றதுடன் கல்விப்பணியில் பல சாதனைகள் படைத்த திரு. அருந்தவபாலன் அவர்கள் தென்மராட்சி அதிபர் சங்கம் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை போன்றவற்றில் முன்னர் இக்கட்டான காலகட்டங்களில் அரும்பணியாற்றியுள்ளமை இவருக்கே உரித்ததான சிறப்பியல்பாகும். மேலும் தற்போது கூட முக்கிய சமூக விழிப்புணர்வுச் செயற்பாடுகளான போதைப் பொருள் விழப்புணர்வு மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமையத்தின் (DASCO) தலைவராகவும் விடிவெள்ளி சமூக மேம்பாட்டு அமையத்தின் முதன்மை இயக்குநராகவும் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவராகவும் உலக தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவராகவும் சிறப்பான முறையில் பணியாற்றி வருவது இவருக்கு சமூகத்தின் மீதுள்ள தீவீர அக்கறையை எடுத்துக்காட்டுகின்றது.

திரு அருந்தவபாலன் அவர்கள் தனது கல்விப்பணி மற்றும் சமூகப் பணியுடன் நின்று விடாது தமிழ் பேசும் மக்களிற்காகத் துணிந்து குரல்கொடுத்து வரும் அரசியல் பணியிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி வரும் தென்மராட்சியின் மைந்தன் பொருளியல் ஆசான் எதிர்காலத்திலும் தொடர்ந்து முழுமையாக எமது பிரதேசத்தின் அபிவிருத்தி நோக்கி தனது சமூகப்பணிகளுடன் அரசியல் பயணத்தையும் தொடர எல்லாம் வல்ல சுட்டிபுரம் அம்பாளின் அருள்பாலிக்க வேண்டி வாழ்த்துகின்றேன்.



# மணி விழாக் காணும் எங்கள் ஆசான்



**கிருஷ்ணபிள்ளை கந்தவேள்,**
பிராந்திய உதவிப் பணிப்பாளர்,
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

எங்கள் பெருமதிப்பிற்குரிய பொருளியல் ஆசிரியர் திரு. கந்தையா அருந்தவபாலன் அவர்கள் தனது ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெறுகின்றார். தென்மராட்சிக் கல்வி வளர்ச்சிப் பாதையில் இவருக்கு கணிசமான பங்கு உண்டு. இவரது ஆசிரியத்துவப் பணியால் பயனடைந்த மாணவர் அனேகர்.

கிராமிய சுயதன்னிறைவுப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் கலை,வர்த்தகத் துறையை உயர்தரத்தில் தெரிவு செய்து அத்துறையில் கற்று மிளிர்கின்ற மாணவர்கள் அதிகம். அவ்வாறான மாணவர்களுக்கு பொருளியலைக் கற்பித்து பல மாணவர்கள் கலை, வணிக, முகாமைத்துவ பட்டதாரியாக மிளிர்வதற்கு வழிசமைத்தவர் எங்கள் ஆசிரியர் என்பது வெளிப்படை.


1980 களின் பிற்பகுதியில் கொழும்பிலிருந்து இடமாற்றலாகி வந்ததன் பின்னர் தென்மராட்சிப் பிரதேசத்தில் 'அருண் கல்வி நிலையம்' என்ற தனியார் கல்வி ஸ்தாபனத்தை நிறுவி 2002 ஆம் ஆண்டு யுத்த இடப்பெயர்வு வரை அந்நிறுவனத்தைத் திறம்பட இயக்கி அதன் மூலம் என்னைப் போன்ற பலமாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தொடக்கப் புள்ளியிட்டவர் எங்கள் ஆசிரியர் என்றால் இது மிகையாகாது.

"எழுத்தறிவித்தவர் இறைவராவார்"என்பது ஆன்றோர் வாக்கு. அதற்கமையப் பல ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் இவரது பங்களிப்பு காத்திரமானது. தென்மராட்சியின் ஒவ்வொரு கிராமத்திலும் பல்நிபுணத்துவம் சார் மாணவர்களை உருவாக்குவதில் இவரது பணி முக்கியம் பெறுகிறது. இவர் ஆசிரியராகக் கொழும்பிலும், ஆசிரியராக உப அதிபராக, அதிபராக யா/ சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும் பணியாற்றி பன்முக ஆளுமையுடன் சிறந்த அதிபராக விளங்கிய போதும் இவரது கல்விப்பணியில் முக்கிய மைல்கல்லாக அமைவது இவரது அருண் கல்வி நிலையம் என்னும் தனியார் கல்வி நிறுவனமும் அதன்மூலம் இவர் மேற்கொண்ட கல்விச்சேவையும் தான் இவரைத் தென்மராட்சி சமூகத்திற்குள் மிளிர வைத்தது என்றால் யாரும் மறுப்பதற்கில்லை. இவர் பொருளியல் கற்பித்ததுடன் இவரது துணைவியார் திருமதி. சா. அருந்தவபாலன் அவர்களைப் புவியியல் கற்பிக்க ஈடுபடுத்தியதுடன் ஆசிரியர் திரு. ஐ. கமலநாதன் அவர்களைத் தனது கல்வி நிலையத்தில் இணைத்து தமிழ், இந்துநாகரிகம், இந்து சமயம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கச் செய்து அருண் கல்வி நிலையத்தை சிறப்புடன் இயக்கி அதன் மூலம் பல மாணவர் சமுதாயத்தைத் தன்னகத்தே உருவாக்கிக் கொண்டார். இதற்கு ஆசிரியர் திரு. ஐ. கமலநாதன் அவர்களோடு கொண்டிருந்த சிறந்த நட்பும் ஒரு காரணமாகும். அத்துடன் இவர் எல்லோரோடும் கொண்டிருந்த பரஸ்பர நட்புறவு பிறிதொரு வகையில் இவரது ஆசிரியத்துவத்திற்குக் கிடைத்த வெற்றியாகும். தொண்ணூறுகளின் மத்தியில் மிகப் பிரபல்யமாக இயங்கிய அருண் கல்வி நிலையம் மிக அதிகளவான மாணவர்களோடு இயங்கியதும் சிறந்த கல்விச் சேவையை வழங்கியதும் இவரது முயற்சிக்குக் கிடைத்த பிறிதொரு வெற்றியாகும். இவ்வெற்றியே பிற்காலத்தில் அவரது புகழை உலகறியச் செய்தது என்பது கண்கூடு.

இவரது வகுப்பறைக் கற்பித்தல் என்பது என்றும் மறக்க முடியாத அனுபவமாக அமைகின்றது. மாணவர்களின் நடத்தைகளையும் அவர்களின் அடைவு மட்டங்களையும் அடிப்படையாக வைத்து பொருளியல் பாடத்தின் அடிப்படைகளை மிக எளிமையாக மாணவர்களுக்கு விளங்க வைத்ததில் இவரது கற்றல் - கற்பித்தல் செயற்பாடானது வெற்றி கண்டது. இதனால் பல மாணவர்கள் கற்றலில் ஊக்கமுடையவர்களாகக் காணப்பட்டனர். மேலும் இவரது ஆசிரியப் பணியில் 'கற்பித்தல் ஆளுமை'(Teaching Personality) மேலோங்கிக் காணப்பட்டது. இதன்வழி அவரிடம்

1. விடயம் சார் அறிவு (Subject Knowledge)
2. ஆழ்ந்த ஞானம் (Wisdom)
3. தனியாள் ஆளுமை (Individual Personality)
4. நேர முகாமைத்துவம் பேணல் (Time Management Factors)
5. மாணவரின் தனியாள் ஆளுமை விருத்தி ஈடுபாடு (Allround Personality of Student)

என்பன மேலோங்கிக் காணப்பட்டது. இத்துடன் மாணவர்களுக்கு கண்டிமையுடன் கூடிய நல் ஆலோசனைகளை வழங்கக் கூடியவராகவும் விளங்கினார். இவரிடம் கற்ற பெரும்பாலான மாணவர்கள் பிள்ளை விருத்திப் பருவத்தைக் கடந்தவர்களாக இருந்ததனால் அவர்களுக்கு நல்ல ஆலோசனை கூறுகின்ற நல்ல நண்பனாகவும் விளங்கினார். இதன் மூலம் குறுகிய காலத்தில் நல்ல மாணவச் சமுதாயத்தை தன்னகத்தே உருவாக்கிக் கொண்டார்.



இதுமட்டுமன்றி இவருடைய கற்பித்தலில் இரண்டு விசேட சிறப்பம்சம் காணப்படுகிறது. அது ஒரு முன்மாதிரியான கற்பித்தல் முறை (Models Teaching) ஆகக் காணப்பட்டது.

இதன்வழி அவருடைய கற்பித்தலில்

1. காட்சித் தொகுப்பு முறைக் கற்பித்தல் (Scenario based teaching- SBT)
2. பிரச்சினை விடுவித்தல் முறை கற்பித்தல் (Problem based Teaching-PBT)

ஆகிய இரண்டு விடயக் கற்பித்தல் முறைகள் இவரால் பின்பற்றப்பட்டது. இதன் மூலம் மாணவர்களின் வினைத்திறன், விளைதிறன் என்பன விருத்தியடைந்து காணப்பட்டதுடன் பயன்தரு ஈடுபாடு(Gainful Engaging) மாணவர்களிடம் ஏற்பட இவரது கற்பித்தல் வழிகோலியது.

இவர் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் ஒரு சிறந்த ஆசிரியராக மட்டுமன்றி தேடலுள்ள ஒரு மாணவராகவும் செயற்பட்டு புதிதாக விடயங்களைத் தேடி அறிந்து கொள்ளும் ஆற்றல் இவரிடம் நிறையவே உண்டு. இதற்கு ஆதாரமாக அமைவது யாதெனில் இவர் தற்போது இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணிக் கற்கை நெறியை இரண்டாம் வருடத்தில் பயின்று கொண்டிருக்கிறார்.

இது மட்டுமன்றி பல ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பணத்தை ஒதுக்கி அவர்களைக் கற்பிப்பதில் அக்கறையுடன் செயற்படுவது பலரிற்கு தெரியாத விடயமெனினும் அத்தகைய பணியை மேலும் வலுப்படுத்த அறக்கட்டளை ஒன்றை அவரது பெயரில் நிறுவ இருப்பது அவரது கல்விச்சேவையை ஆதாரப்படுத்துவதாகவே அமைகின்றது.

இவ்வாறு கல்விப் பணியில் பல சாதனைகளைப் புரிந்து வரும் எங்கள் ஆசிரியர் ஓய்வு பெற்ற பின்னரும் பல கல்விச் சேவைகளைப் புரிய வேண்டும் என்று வாழ்த்துவதுடன் அவரது பொதுப்பணி சிறக்கவும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# தனித்துவமான ஆளுமைமிக்க என் ஆசான் அருந்தவபாலன்



ஆ. தங்கவேலு
அதிபர்,
யா / கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலை.

வானோங்கு புகழ் விளங்கும்
வளம் மலிந்த தென்மராட்சியில்
குளம் நிறைந்து வயல் செழிக்கும்
பெருங்குளப் பதி சிறந்தோங்க
பண்புநிறை கந்தையாப் பெருமகனும்
கனகமொத்த மனமுடையாள் கனகம்மாவும்
அருந்தவப் பேறாய் பெற்ற மைந்தன்
அருந்தவபாலன் ஐயா எங்கள் சொத்து

விளையும் பயிரை முளையிலே தெரியுமென்ற
விஞ்சிய பொருளின் விளக்கமாய் அமைந்தோன்
பிஞ்சிலே புரிந்தது பின்னாளின் பெருமையெல்லாம்
அஞ்சா நெஞ்சமும் அருமையான சிந்தனையும்
கொஞ்சிடும் இன்மொழியும் குறைகாணா உயர்பண்பும்
துஞ்சிடாத் தூய நல் உழைப்பும்
பல்கலைக்கழகத்தில் பலர்போற்றும் மாணவனாய்
கல்வியால் பெருமை கொண்டு பணி செய்யப் புறப்பட்டீர்!

ஆசிரியன் என்பதற்கோர் நல் உதாரணமாய்
மாசிலாக் கல்விப் பணியால் மாணவரை மலர்வித்தீர்
பேராசிரியர்களாய், உயர்கல்விச் சான்றோராய்

போதனையாளர்களாய்; தூயநல் ஆசிரியராய்! அதிபராய்
நல்லதோர் குடிமக்களாய் உருவாக்கிய முத்துக்கள்
எல்லையில்லாதவை இயம்பிட வார்த்தையில்லை
சொல்வதைச் செயலிலும் துணிவோடு நிகழ்த்திடும்
வல்லநல் ஆசானே வாழ்த்துகிறோம் நும்பணியை
பொருளியல் துறையிலே கரைகண்ட பேராசான்
பொருத்தமாய் நுட்பமாய் புரியும்படி போதிப்பீர்!
அருமையாம் போதனையால் அணிவகுத்தார் மாணவர்கள்
பெருமை பெறவாழ்கின்றார் போற்றுகிறோம் நும் பணியை
கனிவான பேச்சாலும் கடின உழைப்பாலும்
மனிதம் போற்றும் புனிதப் பணியாலும்
இனிதாகத் தென்மராட்சியின் இதய ஏட்டினிலே
தனியான தடம்பதித்த கல்விச் சிகரமே!

அதிபர் என்றால் அருந்தவபாலன் ஐயா
அசைக்க முடியாதது உங்கள் முகாமைத்துவம்
துணிவிருக்கும், துணையிருக்கும் நெகிழ்விருக்கும்
தூய்மையிருக்கும், பணிவிருக்கும், கனிவிருக்கும்
கண்ணியமுடன் கனதியும் நிறைந்திருக்கும்
எண்ணியது முடித்திடும் ஏற்றமுறு செயல்திறனிருக்கும்
தண்ணி காட்ட முடியாது தங்களுக்குப் பணியாளர்!
தனித்துவமான தங்கள் ஆளுமைக்கு நிகரேது!

பட்டங்கள் பல பெற்று சட்டமும் தேர்ந்த பின்னும்
பணிவும் இன்சொல்லும் அணியாகக் கொண்டீர் ஐயா
வாழ்வில் எளிமையும் வாழ்வோர்க்கு வகைசொல்லும் பான்மையும்
தாழ்வுயர்வு பாராத தயாள சிந்தனையும்
தரணியிலே எல்லோர்க்கும் இயல்வது அருமையன்றோ
தனித்துவமானதொரு ஆளுமையின் சிகரமே
தோற்றமொன்றே பறைசாற்றும் ஏற்றமுறு தலைவனென்று
மாற்றுக் கருத்துக்கிடமில்லை மக்களின் காவலனே

தமிழை நேசித்தீர் தமிழ் மண்ணை அரவணைத்தீர்
தன் மானம் மிக்கதொரு தமிழனாய் தலைநிமிர்ந்தீர்
அல்லலுறும் மக்களுக்கு ஐயா நீர் வழிகாட்டி
எல்லையில்லா உம் பணியில் தாழ்வுயர்வு பேதமில்லை
சமத்துவ சிந்தனையும் சமூக நன்னோக்குமுங்கள்
வியத்தகு சாதனைக்கு வித்தான ஊட்டங்கள்
தங்கத் தமிழனாய் தமிழ் மக்கள் தலைவனாய்
மங்காத புகழ்பெற்று மன்னவனே வாழி! வாழி!

# விண்ணமுதாய் இனிக்கின்ற விறலோன் வாழ்க !



உயர்ந்த குணம் உள்ளன்பு உதவும் மேன்மை
ஊராரை உயிரெனவே கருதும் பான்மை
நயந்த துறை யாவிலுமே நன்மை தூய்மை
நான் கண்ட நல்லியல்போ அனைத்தும் உண்மை
பயந்தறியாப் பண்பாளன் பாரார் போற்றும்
பாங்கான பெருந் தலைவன் ஆசானாகி
வியந்தவரை வியப்பாலே விளிக்கச் செய்து
வீறார்ந்த புகழ் கொண்டான் வியனாய் வாழி!

அதிபரென அற்புதமாய் ஆற்றல் காட்டி
ஆளுமையின் குறியீடாய் ஆன ஏந்தல்
விதியதனை மாற்றித்தான் தமிழர் வாழ்வின்
வேதனைகள் தீர்க்கவென விரும்பி வந்தான்
கதி இவனே என்றெங்கள் கற்றோர் கூட்டம்
காதலினால் கணக்கின்றி வாக்குச் சேர்த்து
பதியொருவன் தனைக்காணப் பார்த்த வேளை
பாழ்விதியால் பரிதாபம் நிகழ்ந்ததன்றோ

நான் கண்ட அருந்தவத்தோன் இவனை வாழ்த்த
நாவாயிரம் வேண்டும் நான் எங்கே ? போவேன்
தேன் குரலோன் தேவையெனின் சிம்மம் போல்வான்
தேவ பணி செய்திடுவான் என்றும் வாழ்க
கூன் கொண்ட சமூகத்தின் குறைகள் போக்கி
கூராக அது மிளிரத் தன்னைத் தேய்த்து

வான் பார்த்த பூமி நிகர் மக்கள் தேவை
வாட்டமறத் தீர்க்கின்ற வள்ளல் வாழ்க.

இலக்கியத்தால் இளையோர்கள் மனதை மாற்ற
இணைந்து பணி செய்கின்ற அணியை நாடி
துலக்கமுறத் துணை புரியும் தூயோன் வாழ்க
துய்ய தமிழ்ச் சுவை போலே என்றும் வாழ்க
விலக்கிடவே முடியாத அன்பால் மேவி
விண்ணமுதாய் இனிக்கின்ற உறவோன் வாழ்க
வலக்கரமாய் வன்தமிழர் வாழ்வின் ஊற்றாய்
வந்தவனே வரலாறாய் வாழ்வாய் வாழ்க.

காற்றாக உழைப்பவனே கற்றோர் நெஞ்சில்
கண்டிப்பாய் இடம் கொள்வாய் கவலை வேண்டாம்
போற்றாத நாளுண்டோ புவியோர் உன்னை
பொன்னாக்கு அவர் வாழ்வைப் பணியால் என்றும்
ஆற்றாக (த) அல்லல்கள் அடுத்தால்க் கூட
அது நீங்கி உன் வாழ்வு புனிதமாகும்
நேற்றின்று நாளையென உந்தன் பாதை
நிலையான புகழ் கொள்ளும் நெடிது வாழ்க.

மணி விழவு கண்டவனே மண்ணின் ஏறே
மங்காத புகழ் கொண்ட எங்கள் கோவே
துணிவுடமை ஒன்றாலே துயரம் போக்கி
துய்ய புகழ் வாழ்வாக்கி வாழ்க வாழ்க
அணி நூறு அணியாகும் அன்ப உந்தன்
அயராத பணி மேவும் அவனி எங்கும்
மணியான மனைவியொடு மக்கள் இன்பம்
மகிழ்வாக பல நூறு ஆண்டு வாழ்க

வாழ்த்துக்களுடன்

**அ. கம்பநேசன்**

அமைப்பாளர்,

இலக்கிய அணி, தென்மராட்சி

# Our most dedicated Principal



It's a great pleasure to write some words about our most dedicated principal Mr.K.Arunthavabalan and our most favourite teacher Mrs.Shanthini Arunthavabalan. I know, I don't have the age or image or experience to speak about them. But here, I only share my feelings towards them.

Arunthavabalan sir was the pearl of Drieberg. He was our most dedicated principal. I feel very sorry now, that we are missing our best principal of the college. However we can't change the fate. But I am lucky enough to express my views about them. It's my duty to place on record our deep gratitude and appreciation of the services he has given to this school. He has become a landmark in the annals of the institution.

I still remember my first day in school in this college in grade two. He took charge as principal on that day. He was the one who inspired me first to come forward. He guided me all the times like my father. He was my teacher, my principal, my well wisher as well as my role model. He taught me to be happy and confident. Really I never can forget the moment I had with him.

He loves us very much. He has kept a great and affectionate relationship with Drieberg college for more than a quarter of a century. As a good principal with full of commitments, he always taught us to follow discipline and etiquette. He had contributed a lot to our school in the field of education and other recreational works. He made all the events and celebrations in the college very interesting through his dedicated support and creative mind. We can never forget his valuable and effective suggestions during the bad times in the college.

He began his services as principal when the school had collapsed by war activities. During the long years of his service it has flourished into a mighty tree with many branches. He is very much liked by the students because of his gentlemanly behaviour, disciplined nature and the way of dealing with them. He taught students in their own way and gave priorities to their needs. He taught us many things. He showed us how to speak, how to study, how to behave, how to work, how to walk and even how to eat. He always helped us in our difficult times and made us to face more difficult situations. We always respect his selfless, dedicated service. We are always proud of him. He is a wonderful personality and a great role model to everyone.



Today we feel proud that we had been his students. He is the man with a combination of energy, enthusiasm, honesty, love, discipline and inspirations to all the students. He really deserves the praiseworthy words from my thoughts. His discipline and commitment make him different from others. We love him forever.

We will always remember Mr.K.Arunthavabalan in our hearts as the noblest example of the noble profession.

Mrs.Shanthini Arunthavabalan is one of my favorite teachers. She helped me a lot and developed confidence within me. She was my excellent geography teacher who made this boring and difficult subject really very easy and interesting. She has changed our mindset towards studies by telling us ways of effective learning. She treats everyone as her own child. She was like her mother figure for us. She was a friend to us when we needed a friend. However, she was strict in the class room when we were wrong. She is very appreciative and inspiring in nature. She was responsible for supporting me a lot in completing my works. We never can forget her services.

We love them both. We miss both of them and we wish both of them to have a useful period of retirement. Their services are always a need for our society. May God bless them and their family.

At last, a chance for me to say "Thank you" dearest sir and my dear teacher. "Thank you" so much for everything.

Bavithra Kuganeswaran

A/L (2017)

J/Drieberg College

# பொதுவியல்







DRIEBERG COLLEGE





# இலங்கைப் பாடசாலைகளில் மாணவர்களைப் பாதுகாப்பதில் ஆசிரியர்களது விழுமியம் மிக்க செயற்பாடுகளின் முக்கியத்துவம்







உலகின் மனித வள விருத்திக்கான அடிப்படையானது கல்வி, சுகாதாரம் என இரு துறைகளை ஆதாரமாகக் கொண்டதாகும். இதன் முக்கியத்துவம் கருதியே இலங்கை முதலான உலக நாடுகள் பலவற்றிலும் இவ்விரு துறைகளும் முக்கியத்துவடத்துடன் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. மானிட வாழ்வும், வாழ்க்கை முறையும் நிகழ்காலத்துடன் மாத்திரமல்லாது நீண்டு தொடரும் எதிர்காலச் சந்ததிகளின் வாழ்வுக்கும் வாழ்க்கை முறைகளுக்கும் அடிப்படையாக அமைவதாகும். இதேபோன்று கடந்த காலமும் நிகழ்காலத்தை நிர்மாணித்ததன் அடிப்படையாகும். இதன் காரணமாகவே கல்வி, சுகாதாரம் ஆகிய இரு துறைகளும் மானிட நாகரிகத்தின் ஊக்கு விசைகளாகி முக்கியத்துவம் பெறுகின்றன.

இலங்கைப் பாடசாலைக் கல்வி முறைமையானது மனித வள விருத்தியில் ஒப்பீடு செய்ய முடியாத முக்கியத்துவம் பெறுகின்ற அதே வேளையில் ஒப்பீட்டு ரீதியான அறிவியல் சார்ந்த ரீதியிலும் எழுந்தமானமான அறிவியல் சாராத ரீதியிலும் பல வகையான, கூர்மையான விமர்சனங்களுக்கும் உள்ளாகி வருகின்றது. பாடசாலைகளின் பரம்பல், அவற்றின் வள, வசதி நிலைமைகள், கலைத்திட்டம், கற்றல் - கற்பித்தல் நடைமுறை, பரீட்சைகள், ஆசிரிய வாண்மை, ஆசிரிய ஒழுக்க விழுமியம், கல்வி முகாமைத்துவம் முதலான



கலாநிதி செல்லத்துரை சேதுராஜா
Ph.D

அம்சங்கள் இவ்விமர்சனப் பிரிவுகளில் முக்கியமானவையாகும். இவற்றில் இன்று வேகமாக மாறிவரும் உலகளாவிய சூழலில் ஆசிரியத்துவம் என்பது அனைத்துத் தரப்பின ராலும் கூர்ந்து நோக்கப்படுவதாகவும் எளிதில் குறைகூறப்படுவதாகவும் மாற்றம் அடைந்துள்ளமை கல்வித் துறையின் இன்றைய கள நிலைமையாக உள்ளது.

"ஒவ்வொரு மாணவனது வாழ்க்கைக்குப் பின்னாலும் ஒவ்வொரு ஆசிரியர் இருக்கின்றார்" என்பது அனுபவத்தின் மொழிபகர் பிர கடனமாகும். எனவே மாணவர்களின் வாழ்க்கையோடும் வளர்ச்சியோடும் பின்னிப் பிணைந்துள்ள ஆசிரியத் தொழிலானது அனைத்து தொழில்களிலும், அனைத்துத் தொழில்களுக்கும் தலையாயது என்பது வெறும் புகழ்ச்சியன்று. உலகின் அனைத்துத் தொழில்களுக்கும் வாண்மைத்துவம் உள்ளது. ஆயினும் ஆசிரிய வாண்மைத்துவம் என்பது இறைபணியோடு தொடர்புபட்டது எனப் பெரியோர் கூறுவர். ஆசிரியர் என்பவர் அறிவு, திறன், வாழ்க்கை முறை, மானிட அறம், இலட்சியப் பண்பு என்பவற்றின் வழி நின்று மாணவர்களுக்கு வழிகாட்டி மேம்படுத்தும் மேதாவியாவார். இந்நிலைகளில் விரும்பத்தகாத இடைவெளிகள் தோன்றி தொழில் தர்மம் தளம்பலடைகின்ற போதே பிரச்சினைகளும் அவற்றின் வழி யான விமர்சனங்களும் விபரீதங்களும் நடந்தேறுகின்றன. கால மாற்றமும் விரைந்த பூகோளமயமாதல் விளைவுகளும் இப் பிரச்சினைகளை மேலும் முனைப்படைய வைக்கின்றன.

இலங்கைப் பாடசாலைகளில் முனைப் படைந்து வரும் பிரச்சினைகள் பலவற்றிற்கும் பாடசாலை முகாமைத்துவக் குறைபாடுகளும், அதிபர், ஆசிரியர்களது அறிந்திராமை நிலைமைகளும், அக்கறையீனங்களும், தொழில் இலட்சியக் குறைபாடுகளுமே காரணங்களாக இருப்பதாகக் குறை கூறப்படு கின்றது. மாணவர்களுக்குக் கல்வி வழங்குதல் என்பது தனியாகப் பரீட்சைகளுக்கு ஆயத்தமாக் குவதே என்னும் தவறான எடுகோள் ஆசிரியர்களிடமும், பெற்றோரிடமும் வலுப்பெற்றமையே இதன் அடிப்படைக் கண்டறி காரணியாகவுள்ளது. இத்தவறான வலுப்படுத்தலை வலுவிழக்கச் செய்வதும் உண்மையான மானிட விருத்திக்கான காரணி களையும் கருமங்களையும் வலுவூட்டி அமுலாக்க வேண்டியதும் இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

இன்றைய கல்வித்தேவைகளையும் மாணவர் பிரச்சினைகளையும், சமூக நிலைமைகளையும் காலாவதியான கடந்த காலங்களோடு முற்றுமுழுவதுமாக ஒப்பிட்டுக் கருத்துரைப்பதுவும் கவலை கொள்வதுவும் அறிவு பூர்வமாகாது. மானிட அபிவிருத்திச் சிந்தனைகளும் செயற்பாடுகளும் இன்று மிக நுணுக்கமான உணர்வு வெளிப்பாடுகளுடன் முன்னெடுக்கப்பட்டு வருவதனைக் காண முடியும். புதிய உலகமயமாதல் பிரச்சினை களிலிருந்து மனிதர்களைப் பாதுகாப்பதனையும் ஒவ்வொரு மானிட விருத்தி அம்சங்களிலும் தனி மனித சுதந்திரம் பேணப்படுவதனையும் உலகளாவிய ரீதியில் நாகரீக சமூகங்கள் முன்னெடுத்து வருகின்றன. எனவே உலகில் ஓர் உயரிய கௌரவமான இடத்தினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய மானிட வளத்தினை உலகளாவிய ரீதியான நவீன கல்வியினூடாகப் பெற்றுக் கொள்வதற்கான கல்வி முயற்சிகளை முன்னெடுத்து வருகின்ற இலங்கையின் கல்விச் சமூகமானது தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் எம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனித உரிமைச் சட்டதிட்டங்களையும் நியமங்களையும் மதித்துப் பின்பற்றி நடக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

கடந்து விட்ட கல்விக் காலங்களைப் போலல்லாது, தற்காலக் கல்விச்சூழல் பல சிக்கலான பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. நவீன

தொழில்நுட்ப மாற்றங்கள், தகவல் தொழில்நுட்பப் புரட்சி, பல கலாசாரச் சமூக உருவாக்கங்கள் முதலான சூழலினால் இப்பிரச்சினைகள் அன்றாடம் பெருகிய வண்ணமே உள்ளன. நவீன தொழில்நுட்பம் சார்ந்த போதிய அறிவு கொண்டிராத பிரஜைகளும், அதன் வெளியீடுகளையும் விளை பொருட்கள் சேவைகளையும் வசதிகளையும் அனுபவிக்கக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரித்த வண்ணமேயுள்ளன. இதனால் இவ்வாறான பிரஜைகளது பொறுப்புக்குன்றிய செயற்பாடுகளும், சிந்தனைப் போக்குகளும் இன்றைய பல கல்விப் பிரச்சினைகளுக்கும் சமூகப் பிரச்சினைகளுக்கும் மேலதிக காரணங்களாக அமைந்து வருகின்றன. ஓர் பொறுப்பு மிக்க சமூகக் கருமம் என்னும் வகையில் கல்வி வழங்குகின்ற அமைப்புக்களும் அதன் பணியாளர்களும் அதியுச்சமான வாண்மை வெளிப்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டியது கட்டாயமாகின்றது. இலங்கையின் பொதுக்கல்வித்துறையானது சுமார் 42 இலட்சம் மாணவர்களையும் சுமார் 2 1/2 இலட்சம் ஆசிரியப் பணியாளர்களையும் கொண்டுள்ள பாரிய அமைப்பாகும். எனவே இத்துறை சார்ந்த பிரச்சினைகளும் சவால்களும் ஏனைய துறைகளை விடவும் அதிகமானவையாகவும் கனதி மிக்கனவாகவும் இருக்கவே செய்யும். எனவே இன்றைய கல்விப் பணியானது பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் தீர்வுகாண வேண்டிய பாரிய பொறுப்பினைக் கொண்டதென்பதில் எதுவித ஐயப்பாடும் இருக்கமுடியாது. பல்வேறு சூழல் சார், உளவியல் சார், குடும்பம் சார் காரணிகளால் பிரச்சினைகளுக்குள்ளாகி பாடசாலை செல்கின்ற மாணவர்களுக்குப் பாடசாலையே பிரச்சினையாகிவிடலாகாது. இவற்றைக் கையாள்வதற்கான திறன்களையும் அறிவினையும் விதிமுறைகள், சட்ட திட்டங்களை அறிந்திருக்கும் தகுதியினையும் ஆசிரியர்களும் பாடசாலை முகாமையாளர்களும் கொண்டிருத்தல் அத்தியாவசியமாகின்றது. பிரச்சினைகள் ஏதுமற்ற மாணவர்கள் மாத்திரமே பாடசாலைக்கு வருகை தரல் வேண்டும் என்ற எண்ணமும் அதற்கான செயற்பாடுகளும் பாடசாலை முறைமைக் கோட்பாடுகளுக்குப் பொருத்தமற்றவையாகும். இது "நோயற்றவர்களே வைத்தியசாலைக்கு வருதல் வேண்டும்" என்னும் முரண் கோட்பாட்டுக்கு ஒப்பானதாகும். எனவே பிரச்சினைகளின் பெருக்கம் யதார்த்தமானதாகும். பல்வகைப் பிரச்சினைகளையும் தீர்க்கக்கூடிய திறன்களை ஆசிரியப் பணியாளர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமும் வாண்மைத்துவத் தர்மமுமாகும்.

இன்று ஆசிரியத் தொழிலானது பிரச்சினைக்குரியதொன்றாக நோக்கப்படுகின்றது. எமது சமூகப் பாரம்பரியமானது பெற்றோரையும் ஆசிரியரையும் தெய்வங்களாகப் போற்றும் பண்பினைக் கொண்டதாகும். இக்காலத்திலும் ஆசிரியத்துவத்திற்கு இலக்கணமான இலட்சக்கணக்கான ஆசிரியர்களும் அதிபர்களும் இருக்கவே செய்கின்றனர். மிகக்குறைந்த எண்ணிக்கையான ஒரு சில ஆசிரியப் பணியாளர்களது அறியாத்தனமும், பொறுப்பற்றதனமும் கொண்ட செயற்பாடுகளால் ஒட்டுமொத்த ஆசிரியர் குலமும் வெட்கித் தலைகுனிய வேண்டிய சந்தர்ப்பங்களும் அவ்வப்போது ஏற்படுகின்றன. இதனால் ஆசிரியர்கள் தொடர்பான சமூகப்பார்வையும் குறைவுபட்டு முழுக் கல்விக் கட்டமைப்பினையே வலுக்குன்றச் செய்துவிடும் தீர்க்கதரிசனமற்ற செயற்பாடுகளும் விமர்சனங்களும் நீண்ட காலத்தில் கல்வி வழங்கலின் வினைத்திறனைக் குறைத்து விடுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. எனவே ஆசிரியப் பணியாளர்களும் பெற்றோர் உள்ளிட்ட சமூக அமைப்புகளும் கூட்டுச் சமூகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. குறிப்பாக கல்வியை வழங்கும் ஆசிரியப் பணியாளர்கள் அறிவியல் ரீதியான கூடுதல் சமூ

கப்பொறுப்புடையவராகின்றனர். பெற்றோர், சமூகம் என்னும் சாரருடன் ஒப்பிடுகையில் ஆசிரியர்கள் கல்வி கற்றோராகவும், சமூக மேம்பாட்டின் சிற்பிகளகாவும் இருப்பதனால் ஆசிரியப் பணியாளர்கள் தமது சமூகப் பொறுப்புணர்ந்து செயற்படுதல் அவசியமாகும்.

சர்வதேச ரீதியான செல்லுபடியாகும் இற்றைப்படுத்திய கல்வி வழங்கலுக்குப் பொறுப்பான இன்றைய ஆசிரியப் பணியாளர்கள் இன்றைய மாணவர் பிரச்சினைகள், அதற்கான மூல காரணங்கள், சிறுவர் உரிமைச் சட்டங்கள், மனித உரிமைச் சட்ட விதிகள், பாடசாலைகளில் இடம்பெறக்கூடிய தீங்கியல் செயற்பாடுகள் தொடர்பான சட்ட விதிகள் பற்றிய இற்றைப்படுத்திய அறிவினையும் அவற்றைக் கடைப்பிடிக்கும் நேர்க்கணியமான மனப்பாங்கினையும் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும். கல்வி முகாமைத்துவம், நிர்வாகம் என்பவற்றுடன் இவை இரண்டறக் கலந்தவையாகும். இன்று சில பாடசாலைகளில் இடம்பெறுகின்ற முரண் நடத்தைகளுக்கும் நிர்வாகப் பிரச்சினைகளுக்கும் நடைமுறையிலுள்ள சட்ட விதிகள், ஒழுங்கு விதிகள், நியமங்கள், நிர்வாக விதிகள் பற்றி ஆசிரியப் பணியாளர்கள் பூரணமாக அறிந்திராமையும், முகாமைத்துவக் குறைபாடுகளும், இயலாமைகளுமே பெரும்பாலும் காரணங்களாக அமைகின்றன.

பூரண ஆளுமையுடையவர்களாக மாணவர்களை வளர்த்தெடுத்தல் என்பது அவர்களைச் சமூகத்திற்குப் பொருத்தமான பொறுப்புள்ள பிரஜையாக்குவதனை இறுதி இலக்காகக் கொண்டதாகும். இவர்களை உருவாக்குகின்ற மகத்தான பணியினை மேற்கொள்கின்ற ஆசிரியப் பணியாளர்கள் பாடப் பாண்டித்தியம், கற்பித்தல் பாண்டித்தியம் என்பவற்றோடு சமூக விதிகள், சட்ட விதிகள், கல்வி நிர்வாகம், சிறுவர் உரிமைகள், மனித உரிமைகள், ஆசிரிய ஒழுக்க விழுமியக் கோவை விதிகள் முதலானவற்றிலும் பூரண அறிவும் அவற்றினை அமுலாக்கும் ஆற்றலும் கொண்டவர்களாகத் தம்மை வலுப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இவர்களுக்குப் பயிற்சி வழங்கும் கல்வி நிறுவனங்களும் கல்வி நிர்வாகக் கட்டமைப்பினரும் ஆசிரியர்களை இவற்றில் பூரண திறனுள்ளவர்களாகப் பயிற்றுவிப்பதில் கவனம் செலுத்துதல் வேண்டும். குற்றங்கண்டு பிடித்தலையும் குறைகூறுதலையும் குருட்டுத்தனமாக அதிகாரம் செலுத்துவதனையும் மேலிருந்து கீழாக் கல்விக்கட்டமைப்பில் கடத்துவதனையும், வலிந்து திணிப்பதனையும் விடுத்து, இதற்குப் பதிலாக அறிவூட்டுதலையும் வலுப்படுத்துவதனையும் ஆரோக்கியமான விதத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும். வாண்மைப் பயிற்சிகளை வழங்கும் உயர்கல்வி நிறுவனங்கள் இன்றைய பொதுக்கல்விப் பிரச்சினைகளுக்கும் எதிர்காலத்தில் தோன்றக் கூடிய பிரச்சினைகளுக்கும் தீர்வு காணக்கூடிய திறன்களை ஆசிரியர்கள் பெறக்கூடிய வகையில் தமது பயிற்சி நெறி உள்ளடக்கங்களை வகுத்துக் கொள்ளல் வேண்டும்.

ஆசிரியர் என்பவர் பாடசாலைகளில் மாணவர்களின் இடம்சார் பெற்றோர் என்னும் அந்தஸ்தினையும் பொறுப்பினையும் உடையவராவார். (LOCO - Parents) கல்வியமைச்சின் 2012/37 ஆம் இலக்கம் கொண்ட ''ஆசிரியர்களின் விழுமியம் மிக்க செயற்பாடுகள் தொடர்பான ஒழுக்க விழுமிய முறைமை மற்றும் சட்ட தொகுப்பு" என்னும் சுற்று நிருபமானது சட்ட ரீதியான யோசனைகளுக்கு அமைவாக மாணவர்களின் நலனுக்காகச் செயற்படுவதற்கான கடப்பாட்டினை வலியுறுத்துகின்றது. ஆசிரியர்கள் தமக்குரிய ஒழுக்க விழுமியங்களை இடையறாது பின்பற்றி நடப்பதுடன் இருக்கின்ற சட்டக் கோட்பாடுகளை அறிந்து, புரிந்து கட்டாயமாகப் பின்பற்ற வேண்டிய கட்டாயத்தினையும் இச்சுற்று நிருபம் வலியுறுத்துகின்றது. எனவே இதில்

குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களிலும் அறிந்துகொள்ளப்பட வேண்டியவை எனக் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட விதிமுறைகளிலும் ஆசிரியர்கள் பூரண அறிகையுடையவர்களாக இருப்பது கட்டாயமாகின்றது. இந்நாட்டின் பொறுப்புள்ள பிரஜை என்ற வகையிலும் ஆசிரிய வாண்மைத் தொழில் சார்ந்தவர் என்ற வகையிலும் உரிய குற்றவியல் மற்றும் மனித உரிமை, சிறுவர் உரிமை சார்ந்த சட்ட விதிகளையும் நவீன கோட்பாடுகளையும் அறிந்திருத்தல் அவசியமாகின்றது. ஒரு சட்டம் அல்லது ஒழுங்கு விதி நடைமுறையிலிருக்கின்ற வேளையில் அவற்றைப் பிரயோகிக்கக்கூடிய அவற்றுடன்தொடர்புடையகுற்றமொன்றினை அல்லது தவறினை இழைத்துவிட்டு அது பற்றி அறிந்திருக்கவில்லை என வாதாட முடியாது என்பதனை அறிவு ரீதியாக ஏற்றுக்கொள்ளல் வேண்டும். இது சமூகத்திலுள்ள பிரஜைகள் அனைவருக்கும் பொருந்துவதாகும். எனவே அறிவுசார் ஆசிரியப் பணியாளர்கள் இதில் விதிவிலக்கானவர்களல்லர்.

நடைமுறையிலுள்ள ஒழுங்கு விதிகளும் குற்றவியல் சட்டங்களும், மனிதவுரிமை மற்றும் சிறுவர் உரிமைச் சாசனங்களும் சாதாரணகுடிமக்களைப்பாதுகாப்பதற்காகவே உருவாக்கப்பட்டவையாகும். உலகளாவிய ரீதியில் சிறுவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை இல்லாதொழிப்பதே சிறுவர் உரிமை சார் சட்டங்களின் நோக்கமாகும். சிறுவர்களைப் பாதுகாக்கும் பணிகளை சட்டரீதியாகவும் (LOCO - Parents) தார்மீக ரீதியாகவும் (ஆசிரியத்துவம்) மேற்கொள்ளும் கடப்பாடுடைய ஆசிரியப் பணியாளர்களுக்கே இச் சட்டங்களும் சாசனங்களும் வலுச் சேர்க்கின்றன. ஆசிரியப் பணியாளர்கள் இவற்றைத் துணையாகக் கொண்டு வினைத்திறனுடன் பணியாற்ற வேண்டுமேயல்லாது இவற்றைச் சுமையாகக் கொள்ளலாகாது. வளர்ச்சியடைந்த மேற்குலக நாடுகளிலுள்ள ஆசிரியர்கள் போன்று முதல் நிலைச் சமூகப் பாதுகாவலர்களாகவும் மாணவர்களின் பாதுகாவலர்களாகவும் எமது ஆசிரியர்கள் வலுப் பெற்று பரிணமித்தல் வேண்டும். மாணவர்களது பூரண பாது காவலர்கள் தாமே என்னும் மனப்பாங்கு ஆசிரியப் பணியாளர்களிடம் வலுப்பெற்று செயலுருப் பெறுதல் வேண்டும். இதனாலேயே "தரமான ஆசிரியர் மூலம் தரமான சமூகம்" என்னும் நவீன கல்விக்கோசம் செயலுருவாகும்.







# பாடசாலை மட்ட முகாமைத்துவத்தில் ஆசிரியர் செயலாற்றுகைத் தரக்கணிப்பு, ஆசிரியர் பதிவுப்புத்தகம் ஒரு சமகாலப்பார்வை

உலகளாவிய ரீதியில் பாடசாலை மட்ட முகாமைத்துவம் (SBM) என்ற எண்ணக்கரு அண்மைக் காலங்களில் முக்கியம் பெற்று வருகின்றது. பாடசாலை களைத் தன்னாதிக்கமுடையதாக மாற்றுவதும் தீர்மானம் எடுப்பதில் அதிகாரத்தை வழங்கு வதும் இதன் அடிப்படையம்சமாகும். முகாமைத்துவம் என்று குறிப்பிடும் போது வளங்கள் விரையமாக்கப்படாமல் வளங்களை உத்தம அளவில் பயன்படுத்தி நிறுவனத்தின் இலக்குகளை வென்றெடுப்பதற்கான தந்தி ரோபாய செயற்பாடுகள் அனைத்தையும் உள்ள டக்கியதாகும்.

பாடசாலை மட்ட முகாமைத்துவம் என்று கருதும் போது மத்திய, மாகாண நிர்வாக மட்டங்களில் இருந்து தன்னாதிக்கம் நகருகின்ற ஒழுங்கு முறைகளின் தன்மை என குறிப்பிடப்படுகின்றது. "வில்ஸ்ட்வொல் கெற்றா" (1996) என்பவர் பாடசாலை மட்ட முகாமைத்துவம் என்பது அதிகார உறவுத் தன்மையை மத்திய கல்வி முறைக்கும் பாடசாலைகளுக்குமிடை யில் தொடர்ச்சியான பொறுப்பு ரீதியான பாடசாலை மேம்பாட்டை மீள்வரிசைப்படுத்தியமைக்கும் ஓர் அதிகார சக்தி என வெளிப்படுத்தினார். மேலும், இவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "பாடசாலை முகாமைத்துவத்தை மீள்திட்டமிட்டு உள்ளூர் பங்குதாரர்களுக்கும், கல்வியாளர்களுக்கும்,



**பொன்னம்பலம் அருணகிரிநாதன்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
தீவகக் கல்வி வலயம்.

பெற்றோர் மாணவர்களுக்கும் கூடியளவு சமுதாயத்திற்கும் ஆட்சிப்படுத்தும் அதி காரத்தை வழங்குவதாகும்." (1996)

தற்போது பாடசாலை மட்ட முகாமைத்துவ செயற்பாடுகளில் பல புதிய விடயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கல்வியில் பண்புசார், அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு பல நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி (SBTD) ஆசிரியர் தரக்கணிப்பீடு, ஆசிரியர் பதிவுப்புத்தகம் ஆகிய செயற்பாடுகள் ஆசிரியர்களின் வினையாற்றலை அதிகரிக்க புது முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையில் ஆசிரியர் தரக்கணிப்பீடு தொடர்பாக பல சுற்று நிருபங்கள் வெளியிடப் பட்டுள்ளன. 2000/16, 30.03.2000, 2000/47 - 20.11.2000, 2001/22, 20.09.2001 ஆகிய சுற்று நிருபங்கள் மூலம் இச் செயற்பாடு வலி யுறுத்தப்பட்டது. இருந்தபோதும் இதன் அமுலாக்கல் பாடசாலைகளில் கவனம் எடுத்து செயற்படுத்தப்படவில்லை இதனால் எதிர்பார்த்த இலக்குகள் நிறைவேறுவதில் பல பின்னடைவுகள் காணப்படுகின்றன. இன்றைய பாடசாலைச் செயற்பாடுகளில் பல விடயங்கள் ஒன்றோடொன்று தொடர்புபட்டுள்ளன. பாடசாலை அபிவிருத்தித்திட்டம் (SDP) பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி (SBTD) பாடசாலை மேம்பாட்டுத்திட்டம் (PSI), ஆசிரியர் தரக்கணிப்பீடு (Teache Appraisal) ஆசிரியர் அறிக்கைப்புத்தகம் (Teacher Record Book) ஆகிய விடயங்கள் இன்று முதன்மை பெறுகின்றன. ஆனால் பாடசாலையில் இதன் அமுலாக்கம் ஆய்வுக்குரியதாகியுள்ளது.

ஆசிரியர்களின் செயலாற்றுகை தொடர்பாக ஆசிரியர் தரக்கணிப்பில் பின்வரும் விடயங்கள் முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.

1. இணக்கம் காணப்பட்ட செயற்பாட்டின்படி விருத்தி செய்யப்பட வேண்டிய தமது பலம்.
2. வழிகாட்டப்பட வேண்டிய பலவீனங்கள்
3. தனிப்பட்ட மற்றும் வாண்மைத்துவ விருத்தித் தேவைகள்
4. எதிர்கால இலக்குகளில் இணக்கப்பாடு காணுதல்
5. அடைவு பற்றிய மீளாய்வு இடம் பெறுதல்
6. புதிய இலக்குகள் பற்றி கலந்துரையாடல்

இப்படி முறைகள் தரக்கணிப்பு செயற் பாட்டில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஆசிரியர்களின் வாண்மை விருத்தி தொடர் பாக அண்மைக்காலத்தில் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி (SBTD) என்ற விடயம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இது முன்னர் ஆசிரியர் உயர் மட்டச் செயற்பாடு (HOP) என அழைக்கப்பட்டது. இது இன்று புது வடிவம் பெற்றுள்ளது. இது பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

மாணவர்களின் அடைவு மட்ட மேம் பாடு, ஆளுமை விருத்தி ஆகியவற்றுக்கு வழி காட்டக்கூடிய பொறுப்பு மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதற்கு ஆசிரியர்களின் வாண்மை விருத்தித் தேவைகளை இனம் காணுதல், திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் ஆகிய செயற்பாடுகளை உள்ளடக்கியதாக தொடர்ச்சியானதும், ஒருங்கிணைந்ததுமான ஆசிரிய அபிவிருத்திச் செயற்பாடுகளை பாடசாலைகளில் செயற்படுத்துவது பாடசாலை மட்ட ஆசிரியர் மேம்பாட்டுத்திட்டம் எனப்படும்.

ஆசிரியர் செயலாற்றுகை தரக்கணிப்பீட்டு செயல் முறையானது பாடசாலை ஆசிரியர்களால் அமைக்கப்பட்ட பரந்த நோக்கங்களுடன் தனியாள் மற்றும் குழு ஆற்றுகைகளை இணைப்பதனூடாக நிறுவனத்தின் ஆற்றுகையை உச்ச அளவு அடையத்தக்கதாக வடிவமைக்கப்பட்ட ஒரு செயல்முறையாகும்.

மதிப்பிடப்படுபவரின் வேலை வரைவிலக்கணம் தொடர்பாக இலக்குகள், நோக்குகள், பணிகள் தயாரிக்கும் போது ஆசிரியர்களின் பொறுப்புகள் பின்வரும் தலைப்புகளின்கீழ் குறிப்பிடப்பட வேண்டும்.

1. **கற்றல் கற்பித்தல் செயன்முறை**

1.1 கலைத்திட்ட அமுலாக்கம் தொடர்பாக கவனத்துடனும் அக்கறையுடனும் ஈடுபடுதல்.

1.2 பாடத்தை வினைத்திறனுடன் திட்டமிடல்.

1.3 கலைத்திட்டத்தை ஒழுங்கமைத்தல்.

1.4 கட்புல - செவிப்புல உபகரணங்களைத் தயாரித்தல்.

1.5 ஒதுக்கப்பட்ட பாட வேளைகளில் பாடத்திட்டத்தை பூர்த்தி செய்தல்.

1.6 பரிகார செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்

1.7 பாடசாலை மட்ட கணிப்பீட்டுச் செயற்பாடுகளை (SBA) உரிய காலத்தில் நிறைவு செய்தல்.

2. **மாணவர் நலனும் வழிகாட்டலும்**

2.1 தனிப்பட்ட மாணவர் தேவைகளை இனம் காணல், வழிகாட்டல்

2.2 குழுவாக மாணவர் ஆளுமை விருத்தி

2.3 மாணவர் ஒழுக்க விழுமிய செயற்பாடுகள்

2.4 மாணவர்களின் நலனில் கவனம் செலுத்துதல்.

2.5 தேவையான சந்தர்ப்பங்களில் கல்வி தொழில் வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்குதல்.

3. **இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

3.1 இணைப்பாடவிதான வேலைத்திட்டத்தை திட்டமிடல்

3.2 குறிப்பிட்டதொரு இணைபாடவிதானச் செயற்பாட்டிற்கு தலைமையேற்றல்

உ+ம் - மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் / பெருவிளையாட்டுக்கள்

3.3 மன்றச் செயற்பாடுகள்

3.4 சாரணர்/ முதலுதவிக்குழுக்கள்/ சுற்றாடல் முன்னோடிகள்

4. **பாடசாலை - சமூக உறவுகள்**

4.1 பாடசாலையின் தொழிற்பாட்டுத் தன்மையை மேம்படுத்த பெற்றோர், சமூக உறவை ஏற்படுத்துதல்

4.2 சமூகப் பங்குபற்றலை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டத்தை திட்டமிடல்

4.3 மாணவர்களின் கல்வி அடைவு, ஆளுமை தொடர்பாக பெற்றோர்களுடன் கலந்துரையாடுதல்

4.4 மாணவர் கல்வி நோக்கிய பொறுப்புகள் தொடர்பாக பெற்றோருடன் கலந்துரையாடல்

4.5 பாடசாலையையும் - சமூக அபிவிருத்தியையும் இணைத்தல்.

5. **பாடசாலைக்கான விசேட சேவைகள்**

5.1 பாடசாலையின் நிருவாக, முகாமைத்துவ கடமைகள்

5.2 SDS, SDC, SMT, SPC, TEC குழுக்களில் இணைந்து பொறுப்புகளை நிறைவேற்றுதல்.

5.3 ஒழுக்காற்றுக் குழு, பாடசாலை வரவுக்குழு சுகாதார மேம்பாட்டுக் குழு ஆகியவற்றில் பொறுப்பேற்றல்.

5.4 மாணவர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திக்காக முயற்சி செய்தல்.

மேற்படி விடயத்தலைப்புகளில் ஒரு ஆசிரியர் குறிப்பிட்ட ஆண்டில் 01.01.- 31.12 - தமது பணி இலக்குகளைத் திட்டமிட வேண்டும். அதன் அடிப்படையில் செயலாற்றுகை முன்னெடுக்கப்பட வேண்டும். இது காலத்திற்கு காலம் இதன் கண்காணிப்புக்கும் மதிப்பீட்டுக்கும் உட்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாற்றுகைச் செயற்பாடுகள் 04 முக்கிய படி நிலைகளில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அவை பின்வருமாறு:-

**படிநிலை 1 - ஆற்றுகை மதிப்பீட்டுத் திட்டம்**

1.1 குறித்த ஆண்டுக்கான பணிகளின் பட்டியல் இலக்குகள், குறிக்கோள்கள் தயாரிக்கப்படுதல்

1.2 தேவைப்படும் வளங்கள், உதவிகள், பயிற்சித் தேவைகள் என்பவற்றைக் குறிப்பிடுதல்

1.3 செயலாற்றுகைப் பணிகள் நடைபெற்றுள்ளதை அவதானிக்கக்கூடிய குறிகாட்டிகள், ஆவணங்கள் பதிவுகள் என்பவற்றைக் குறிப்பிடுதல்

1.4 மதிப்பீடு செய்பவர், செய்யப்படுபவர்கள் இணக்கப்பாட்டுடன் ஒப்பமிடல்.

**படிநிலை 2 - அவதானிப்புக்கள்**

2.1 வகுப்பறை நடைமுறைகளில் முறைசார்ந்த, முறைசாராத அவதானிப்புகள்

2.2 ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துரையாடல்

2.3 மாணவர்களின் பயிற்சிப் புத்தகம், பரீட்சைப் பெறுபேறுகள் கோவைகள் அவதானித்தல்.

2.4 காலாண்டு முன்னேற்ற மீளாய்வு

2.5 அடைவுகள் தொடர்பாக கலந்துரையாடல் இணக்கப்பாட்டுடன் திருத்தங்கள் மேற்கொள்ளல்

**படிநிலை 3 - வருடாந்த ஆற்றுகை மீளாய்வு**

3.1 மதிப்பிடப்படுபவரால் பட்டியல்படுத்தப்பட்ட அடைவுகள்

3.2 மதிப்பிடப்படுபவரால் செய்யப்பட்ட குறிப்புரைகள்

3.4 தரப்படுத்துநர் சம்மதம்

**படிநிலை 4 - முன்னேற்ற மீளாய்வு**

4.1 நிறுவன முன்னேற்றம் பற்றி மதிப்பிடல்

4.2 ஆசிரியர் கூட்டங்கள் நடத்துதல்

4.3 அபிவிருத்திக்காக (SBTD) இனங்காணப்பட்ட விடயங்கள்

4.4 அடுத்த ஆண்டுக்கான திட்டத்தில் உள்ளடக்குவதற்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்

இப் படிமுறைகள் ஊடாக செயலாற்றுகை தரக்கணிப்பீட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வினைத்திறன் மிக்கதாக மாற்றப்பட வேண்டும். இந்த ஆசிரியர்கள் பொருத்தமான வழிமுறைகளில் வழிப்படுத்தப்பட வேண்டும். தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர் பதிவுப் புத்தகத்தில் தரக்கணிப்புச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய விடயங்கள் ஒவ்வொரு வருடமும் பதிவு செய்து உறுதிப்படுத்தப்பட வேண்டும். பின்வரும் விடயங்கள் ஆசிரியர் பதிவுப்புத்தகங்களின் பதிவு செய்யப்பட வேண்டும்.

1. பாடசாலை அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான பங்களிப்பு
2. பாடசாலை விளையாட்டு மற்றும் மாணவர்களின் உடல்விருத்திக்கான வேலைத் திட்டங்கள்
3. சமய மற்றும் விழுமிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்
4. மாணவர் ஆற்றல்கள், ஆக்கத்திறன் மற்றும் ஆளுமை விருத்திக்குரிய வேலைத் திட்டங்கள் (மன்றம்/ சங்கம்) அழகியல் செயற்பாடுகள்.
5. பாடசாலையின் பௌதிக சூழல் விருத்திக்காக மேற்கொள்ளப்படும் விசேட வேலைத் திட்டங்கள்
6. பாடசாலை நிருவாக, முகாமைத்துவ செயற்பாடுகளில் பங்களிப்புச் செய்தல்.
7. சமூக இணைப்புகள் மற்றும் ஏனையவைகள்

(ஆசிரியர் பதிவுப்புத்தகம்)

ஆசிரியர் செயலாற்றுகை, தரக்கணிப்பு, ஆசிரியர் அறிக்கை புத்தகம், பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி ஆகியவை ஒன்றுடன் ஒன்று நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளன இதனை கல்வித்துறை சார்ந்தவர்கள்

சரியாகப் புரிந்து கொண்டு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நடைமுறையில் இச் செயற்பாடுகள் வினைத் திறன்மிக்கதாக காணப்படவில்லை.

ஆசிரியர் தரக்கணிப்பு படிவத்துடன் இணைந்ததாக பகுப்பாய்வுப் புத்தகம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இது வருட இறுதியில் பூரணப்படுத்தப்பட்டு சுயவிபரக் கோவைக்கு அனுப்பப்பட வேண்டும். இது ஆசிரியர் அபிவிருத்தி, தனிப்பட்ட ஆசிரியர் துலங்கல் ஆகிய விடயங்களை உள்ளடக்கியுள்ளது பிரதான கொள்கைகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

-வாண்மைத்துவப் பொறுப்புகள்
- தொழில் அபிவிருத்தி
- பயிற்சித் தேவைகள்
- பாட அவதானிப்பு விளைவுகள்
- வளப்பயன்பாடு

ஆகிய விடயங்களில் துலங்கல் கூற்றுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆசிரியர் செயலாற்றுகை தரக்கணிப்பீட்டில் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

1. தனிநபர் கணிப்பீட்டை நிறுவன மதிப்பீடு, நிறுவன அபிவிருத்தி என்பவற்றில் கவனம் செலுத்துகிறது.
2. தொடர்ச்சியான சுய மதிப்பீட்டினூடாக பாடசாலை அபிவிருத்திக்கு உதவுகின்றது. முகாமைத்துவம், இடைநிலை முகாமைத்துவம் ஆகியவற்றுடன் ஆசிரியர்களின் இணைந்த செயற்பாடுகளை விருத்தி செய்வதுடன் வாண்மையை விருத்தி செய்வதாக அமைந்துள்ளது.
3. தனியாள் அபிவிருத்தி நிறுவன முகாமைத்துவம் பாடசாலையின் கட்டிணைக்கப்பட்ட நோக்கங்களையும் அடைவுகளையும் அடிப்படையாகக் கொண்டது.
4. ஆசிரியர்களின் பாடசாலை மட்ட கற்றலையும் மற்றும் ஆற்றுகை ஊக்குவிப்புக்கான சந்தர்ப்பங்களையும் வழங்குதல்.
5. பாடசாலை மட்ட மேம்பாட்டுத் திட்டத்தின் (PSI) இலக்குகளை அடைவதற்கான தனிநபர் பொறுப்புகள் இதனூடாக இணைக்கப்படுகிறது.
6. ஆசிரியரின் ஆற்றுகை மதிப்பீட்டுக்கும் இணக்கம் காணப்பட்ட இலக்குகளுக்கும் விளைவுகளுக்கும் அடிப்படையாக அமைவதுடன் பாடசாலை தனது இலக்குகளை அடைய உதவுகிறது.

**பாடசாலைகளின் இதன் தற்போதைய நிலை**

1. பாடசாலை மட்டத்தில் செயலாற்றுகை தரக்கணிப்பு படிவங்கள் உரிய காலத்தில், உரிய முறைப்படி பூரணப்படுத்துவதில்லை.
2. உரிய வழிகாட்டல் நடைமுறைகள் பின் பற்றப்படாமல் எழுந்தமானமாக படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டிருத்தல்.
3. அதிபர், ஆசிரியர்கள் இவை தொடர்பான அறிவும், ஆர்வமும், விளக்கமும் கொண்டிருக்காத நிலை
4. பணி இலக்குகள், பட்டியல்கள் தயாரிப்பில் போதுமான விளக்கமின்மை ஆசிரியர்கள் மத்தியில் காணப்படுதல்.
5. பொருத்தமான கண்காணிப்பு, மதிப்பீட்டு செயற்பாடுகள் உரியவகையில் அமையவில்லை.
6. சம்பள ஏற்றத்திற்கான காலம் வரும் போது மட்டும் அவசர அவசரமாக படிவம் பூரணப்படுத்தப்படுகின்றது.
7. 05 விடயத்தலைப்புகள் ஒரு ஆசிரியரால் பணியிலக்குகளில் குறிப்பிடப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அவை கவனத்தில் கொள்ளப்படவில்லை. பாடசாலை மட்ட முகாமைத்துவத்தில் இவை பலமான ஒரு அம்சமாகக் காணப்பட்ட போதும் நடைமுறையாக்கத்தில் இது

பலவீனமான நிலை யிலேயே பாடசாலைகளில் காணப்படுகின்றன. இதனை மாற்றுவதற்கு பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துவது பொருத்தமானது.

1. கல்வித்துறை சிறந்த கல்வி நிருவாக மட்டங்களில் பணியாற்றுபவருக்கு இத் துறைகள் தொடர்பான வழிகாட்டல்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
2. அதிபர்களின் செயலாற்றுகை தரக்கணிப் பீட்டில் இவ் விடயங்களைத் தெரிவு செய்ய வழிகாட்டப்பட வேண்டும்.
3. கல்வியின் அண்மைக்காலப் போக்குகள் தொடர்பாக புதிய மாற்றங்கள் தொடர்பாக போதுமான பயிற்சிகள் அதிபர்களுக்கு வழங்குதல்.
4. ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளில் விடயத் தலைப்புகளில் இவை புகுத்தப் படுதல் முக்கியம். பெருமளவு நிதி இதற்கு செலவிடப்படுகின்ற போதும் தேவை அடிப்படையில் கருத்தரங்குகள் அவசியமான கருத்தமைக்க வேண்டும்.
5. ஆசிரியர்களின் பயிற்சித் தேவைகளின் அடிப்படையில் கருத்தரங்கு விடயத் தலைப்புகள் தெரிவு செய்யப்பட வேண்டும்
6. விடயத்தலைப்புகள் தொடர்பாக பொருத்தமான வளவாளர்கள் ஈடுபடுத் தப்பட வேண்டும்.

   இன்று அநேகமான கருத்தரங்குகள் வலய உத்தியோகத்தர்களே வருடம் முழுவதும் வளவாளர்களாகக் காணப்படுகின்றனர். இந்நிலை மாற்றப்பட வேண்டும்.
7. ஆசிரியர்களுக்குரிய கருத்தரங்குகள் புதிய செல் நெறியில் முன்னெடுக்கப்பட வேண்டும். பாரம்பரியமான நடைமுறை யில் இருந்து விலகி புதிய முறையியல்கள் கையாளப்படவேண்டும்.
8. புதிய தேடல்களுக்காக அதிபர், ஆசிரியர்கள் வழிகாட்டப்பட வேண்டும்.
9. ஒவ்வொரு செயற்பாடுகள் தொடர்பாகவும் தரக்கணிப்பு, மதிப்பீடு, செயன்முறைகள் புதிய பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.
10. 21 ஆம் நூற்றாண்டுக்கான கற்போரை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் கல்வி துறையில் இருந்துள்ள அனைவருக்கும் மென் திறன்கள், வன்திறன்கள் தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
11. புதிய கருவிகளை தமது பணிகளில் பயன்படுத்துவதாக ஏற்ற வகையில் தொழில்நுட்பம்சார்ந்த பயிற்சிகளில் அதிக கவனம் செலுத்துதல்.

இவற்றின் மூலம் பாடசாலை மட்ட முகாமைத்துவத்தை வலுவூட்டுவதன் ஊடாக பாடசாலைகள் தன்னாதிக்கமுள்ள நிறுவனமாக மாற்ற வேண்டும். புதிய 21 ஆம் நூற்றாண்டுக்குரிய தகைமைகள் கொண்ட சமூகத்தை உருவாக்குவதற்கு புதிய பொறிமுறைகளைக் கல்வித்துறையில் உருவாக்க வேண்டும். மரபு ரீதியான இத்தகைய செயற்பாடுகளில் இருந்து விடுபட்டு புதிய செல் நெறியில் கல்வித்துறையை முன் னெடுக்க வேண்டும். அப்போதுதான் கல்வி அடைவுகளை நாம் மேம்படுத்த முடியும். காலத்திற்கு பொருத்தமான நிலைகள் வளர வேண்டும்.

**துணை ஆதாரங்கள்**


1. கல்வி அமைச்சு சுற்று நிருபங்கள்
2. பாடசாலை மட்ட கைநூல், கல்வி அமைச்சு - 2013 ஆசிரியர் அபிவிருத்தி வழிகாட்டல்
3. செயலாற்றுகை தரக்கணிப்பு தொடர்பான வழிகாட்டல் கையேடுகள்



# தமிழ் மாணவர்களின் கல்வி நிலை பற்றிய ஆய்வு





**பி. முத்துலிங்கம்,**
ஒய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.

கல்வி நிலை தொடர்பாக ஆராய்வதானால் ஆரம்பக் கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்நிலைக்கல்வி தொடர்பான விடயங்களை புள்ளிவிபர ரீதியாகப் பகுப்பாய்வு செய்ய வேண்டும். குறிப்பாக வடமாகாணத்தை எமது ஆய்வுக்களமாக எடுப்பின் முதலில் ஆரம்பக்கல்வி தரமாக இருந்தால்தான் ஏனைய இடைநிலை, உயர்நிலைக்கல்வி தரமாக வளர முடியும். இத்தகு கல்வி நிலைகளின் சுட்டிகளாக இருப்பவை தரம் 5 புலமைப்பரிசில், க. பொ. த (சா. தர), க. பொ. த (உயர்தர) பரீட்சைகளின் அடைவுகளாகும். வடமாகாணம் 2015தரம் 5 புலமைப்பரீட்சையில் 68.88% இனை பெற்றபோதும்க.பொ.த(சா.தர)ப் பரீட்சையில் 60.38 % இனைப்பெற்றுள்ளது. இதன்படி தரம் 5 பரீட்சையில் 70 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவர்களில் ஏறத்தாழ 9 % ஆனவர்கள் க. பொ. த(சா. தர)ப் பரீட்சையில் சித்தியடையத் தவறிவிட்டார்கள் எனவும், இதனை இன்னும் 70% ஆக உயர்த்தியிருக்கலாம் என்பதும் எமது ஆதங்கம்.

இதனை மாகாணரீதியாக ஒப்பீடு செய்து பார்க்கும்போது மேலும் பல விடயங்களைப் புரிந்து கொள்ளலாம். கிழக்கு மாகாணத்தைத் தவிர ஏனைய அனைத்து மாகாணங்களிலும் தரம் 5 சித்தி வீதத்திற்கும் க. பொ.த. (சா.தர) சித்தி வீதத்திற்கும் இடையேயான வித்தியாசம் 6

தேசிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2015

| மாகாணம் | தோற்றியோர் | 70இற்கு மேல் | வீதம் | 100இற்கு மேல் | வீதம் |
|---|---|---|---|---|---|
| தெற்கு | 41638 | 33960 | 81.56 | 25227 | 60.59 |
| வடமேற்கு | 39464 | 32083 | 81.30 | 23655 | 59.94 |
| சப்ரகமுவ | 30691 | 24306 | 79.20 | 18041 | 58.78 |
| மேற்கு | 83678 | 65917 | 78.77 | 48131 | 57.52 |
| வடமத்தி | 22672 | 17592 | 77.59 | 12537 | 55.30 |
| ஊவா | 22353 | 16648 | 74.48 | 11409 | 51.04 |
| மத்திய | 43002 | 31462 | 73.16 | 21119 | 49.11 |
| வடக்கு | 18871 | 12999 | 68.88 | 8593 | 45.54 |
| கிழக்கு | 31303 | 19723 | 63.01 | 12773 | 40.80 |

*க. பொ. த (சா. தர)ப் பரீட்சைப் பெறுபேறுகள் 2015*

| மாகாணம் | தோற்றியோர் | சித்தி | வீதம் | ALL F | வீதம் |
|---|---|---|---|---|---|
| தெற்கு | 34801 | 26173 | 75.21 | 722 | 2.07 |
| மேல் | 73017 | 53062 | 72.67 | 2232 | 3.06 |
| சப்ரகமுவ | 24785 | 17342 | 69.97 | 869 | 3.01 |
| வடமேல் | 31733 | 22104 | 69.69 | 849 | 2.68 |
| மத்தி | 34652 | 23209 | 66.98 | 1133 | 3.27 |
| வடமத்தி | 16560 | 11030 | 66.61 | 706 | 4.26 |
| ஊவா | 18231 | 12005 | 65.85 | 741 | 4.06 |
| கிழக்கு | 21693 | 13784 | 63.54 | 641 | 2.95 |
| வடக்கு | 17752 | 10719 | 60.38 | 805 | 4.53 |
| இலங்கை | 273224 | 189428 | 69.33 | 8698 | 3.18 |

இருந்து 11 வரை குறைந்துள்ளது. கிழக்கு மாகாணம் மாத்திரம் 1% இனால் கூடியுள்ளது.

இவ்வதஅட்டவணைகளிலிருந்து நாம் அறிந்து கொள்வது. தரம் 5 புலமைப்பரீட்சைப் பெறுபேற்று சதவீதம் உயர்வாக இருக்கும் போது அதற்கேற்ப க.பொ. த (சா. தர)ப் பரீட்சைப் பெறுபேற்று சதவீதமும் உயர்வாக இருப்பதை அவதானிக்கலாம். எனவே வடமாகாணத்தின் ஆரம்பக்கல்வியின் இறுதிச் சுட்டியாகிய தரம் 5 அடைவை மேலும் உயர்த்துவதன் மூலமே க. பொ. த(சா.தர) அடைவை அதற்கேற்ப உயர்த்த முடியும் என்பதை உணர முடிகின்றது.

தேசிய தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெறுபேறுகளை பெற்றுக்கொண்ட விபரம்

| ஆண்டு | 2012 | | 2013 | | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாகாணம் | 70 புள்ளி % | நிலை | 70 புள்ளி % | நிலை | 70 புள்ளி % | நிலை | 70 புள்ளி % | நிலை |
| வடமேற்கு | 70.42 | 1 | 75.70 | 1 | 83.65 | 1 | 81.30 | 2 |
| தெற்கு | 68.98 | 2 | 74.64 | 2 | 83.10 | 2 | 81.56 | 1 |
| சப்ரகமுவ | 67.97 | 3 | 72.08 | 3 | 81.48 | 3 | 79.20 | 3 |
| மேற்கு | 66.71 | 4 | 71.74 | 4 | 80.89 | 4 | 78.77 | 4 |
| வடமத்தி | 63.36 | 5 | 67.11 | 5 | 80.87 | 5 | 77.59 | 5 |
| ஊவா | 60.77 | 6 | 66.95 | 6 | 76.96 | 6 | 74.48 | 6 |
| மத்திய | 59.70 | 7 | 65.30 | 7 | 76.45 | 7 | 73.16 | 7 |
| வடக்கு | 56.05 | 8 | 62.62 | 8 | 70.57 | 8 | 68.88 | 8 |
| கிழக்கு | 55.05 | 9 | 57.52 | 9 | 68.05 | 9 | 63.01 | 9 |
| இலங்கை | 64.39 | | 69.44 | | 78.96 | | 76.33 | |

இவ்வட்டவணையின்படி ஆரம்பக் கல்வியில் வடமேல்மாகாணம், தென்மாகாணம், சப்ரகமுவ ஆகிய மூன்று மாகாணங்களும் முதல் மூன்று நிலைகளிலும் இருக்க வடக்கு, கிழக்கு ஆகிய மாகாணங்கள் முறையே 8ஆம், 9ஆம் இடங்களில் தொடர்ந்து இருப்பதை அவதானிக்கலாம். வடமேல், தென், சப்ரகமுவ, மேல் மாகாணங்களில் 70 புள்ளிகளுக்குமேல் பெற்ற சத வீதம் படிப்படியாக அதிகரித்து 80 இற்கு மேல் உயர்ந்துள்ளன. 1997 பொதுக்கல்விச்சீர்திருத்தத்திற்கு அமைய 1998, 1999 களில் ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி மறுசீரமைப்புகள் ஏற்பட்டன. அதன்படி முதன்மை நிலை I, II, III என்பவற்றில் முறையே 40, 52, 55 தேர்ச்சிகளை மாணவர்கள் அடைய வேண்டும். மாணவர்கள் யாவரும் இத்தேர்ச்சிகளை கட்டாயம் அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

உண்மையில் குறித்த சில ஆண்டுகளில் மாணவர்கள் அனைவரும் தரம் 6 பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று தகைமை அடைவார்கள் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முதல் நான்கு மாகாணங்களில் 80% மாணவர்களே சித்தியடைய வடக்கு, கிழக்கு முறையே 70%, 60% சித்தியடைந்துள்ளார்கள். இதற்கான காரணங்களாக ஆசிரியர் பற்றாக்குறை பொருத்தமான பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் கற்பிக்காமை என்பவற்றைக் குறிப்பிடலாம். அத்தோடு வகுப்பறையில் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிக்கு அமைய எண்ணக்கருக்களை, தரமான உள்ளீடுகளை பயன்படுத்தி செயன்முறை ரீதியாக மகிழ்ச்சிகரமான சூழலில் புரிய வைக்க வேண்டும். மாணவர்கள் நிலைக்கேற்ப அலகு ரீதியான கணிப்பீடுகள், மதிப்பீடுகள் வைத்துப் பின்னூட்டல் செய்யவேண்டும். ஆனால் அதற்கு அப்பால் பல மட்டங்களில் ஏட்டிக்குப் போட்டியாக பரீட்சைகளும் தனியார் கல்வி நிலையங்களில் விரிவுரைளை, செயற்பாடுகளை நிகழ்த்துவதும் பிள்ளைமையம், தேர்ச்சி மையம் என்பவற்றை பரீட்சை மையம் நோக்கியே நகர்த்த உதவுகின்றது எனலாம். இருந்தும் பல கிராமங்களில் தரமான ஆரம்ப, பிள்ளைநேயப்

பாடசாலைகள் உருவாகி அவை மாவட்ட. தேசிய நிலைகளில் சாதனை படைத்து வருவதை யாமறிவோம்.

தரம் 5 அனைத்து மாணவர்களும் தரம் 6இற்கு வகுப்பேற்றம் செய்யப்படுகின்றார்கள். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் எடுத்த மாணவர்களும், 100, 70, புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர் களும் சரி, தரம் 7,8 வகுப்புக்களில் அவர் களின் தவணைப்பரீட்சைப் புள்ளிகள் குறைவடைவதை அவதானித்த மாகாணக் கல்வித் திணைக்களம் முன்னர் BESU என்னும் செயற்றிட்டத்தை அமுல்படுத்தி அவர்களை ஊக்கப்படுத்தினாரர்கள். இடைநிலைக்கல்வி 6 ஆண்டுகளைக் கொண்டது. மாணவர் கற்கும் பாடங்களின் எண்ணிக்கை 10 ஆக அதிகரிக்கின்றது. பாட உள்ளடக்கம் விரி வானது, ஆழமானது, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பிரதான பாடங்களுக்கு ஆசிரியர் இன்மை மற்றும் பாடச்சுமை, ஒழுங்கான கற்றல் - கற்பித்தல் இன்மை காரணமாக இன்றும் பல மாணவர்கள் இடை விலகுகின்றார்கள். வரலாறு, புவியியல், குடியுரிமைக்கல்வி போன்ற பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர் கள் பொருத்தமான கற்பித்தல் முறை களைப் பயன்படுத்த வேண்டும். கணிதத்தில் கேத்திரகணிதப்பகுதியும் , வரலாற்றில் உலகில் நடைபெற்ற புரட்சிகள் போன்ற பாடங்களும் விளக்கமாக கற்பிக்கப்படுவ தில்லை என்ற குறைபாடுகள் சுட்டிக் காட்டப்படுவதுண்டு. இதனால் கணிதம் போன்று வரலாறு பாடத்திலும் மாணவர் அடைவு குறைவாகவே உள்ளது. தரம் 9 இல் மாகாணமட்ட பரீட்சை நடைபெற்று புள்ளிப் பகுப்பாய்வின் அடிப்படையில் தரம் 10, 11 இல் மாணவர்கள் ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும். இங்கு புள்ளி என்ற ஒன்றை மாத்திரம் வைத்து மாணவர்களை மதிப்பிடக்கூடாது. ஏனெனில் வெட்டுப்புள்ளிக்கு மேல், 70 புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர்களை விட 70 புள்ளிகளுக்கு கீழ் எடுத்த மாணவர்கள் சிலர் க.பொ. த (சா. த) , க. பொ. த (உயர்தர) பரீட்சைகளில் உயர்வான பெறுபேறுகளைப் பெற்றிருக்கிறார்கள். எனவே உளவியலாளர் புளூம் (Bloom) இன் கருத்துப்படி பிள்ளை களின் உடல் இயக்கம், உள இயக்கம், மன எழுச்சி இயக்கம். என்பவற்றை ஆசிரியர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். இத்தகு காரணங்களினால் வடமாகாணத்தில் உள்ள பன்னிரண்டு வலயங்களும், இலங்கை பூராக வுள்ள 98 வலயங்களில் பின்னிலையில் நிற்பதை இவ்வட்டவணை காட்டுகின்றது.

க.பொ.த. (உயர்தர) பரீட்சையைப் பொறுத்தவரை அட்டவணையின்படி சித்திவீதம்

| ஆண்டு | தோற்றியோர் | 3A | சித்தி | 3A | 3A% | ALLF | % |
|---|---|---|---|---|---|---|---|
| 2012 | 10865 | 6828 | 62.84 | 199 | 1.83 | 852 | 784 |
| 2013 | 12052 | 7699 | 63.88 | 117 | 0.97 | 1281 | 10.63 |
| 2014 | 12330 | 7910 | 64.15 | 190 | 1.54 | 979 | 7.86 |
| 2015 | 12684 | 8274 | 65.23 | 214 | 1.69 | 1012 | 7.98 |

க. பொ. த(சா/தர) பரீட்சை 2014

| வலயம் | நிலை |
|---|---|
| யாழ்ப்பாணம் | 21 |
| மன்னார் | 06 |
| வவுனியா தெற்கு | 13 |
| வடமராட்சி | 46 |
| மடு | 53 |
| வலிகாமம் | 83 |
| தென்மராட்சி | 62 |
| வவுனியா வடக்கு | 92 |
| முல்லைத்தீவு | 84 |
| துணுக்காய் | 94 |
| கிளிநொச்சி | 93 |
| தீவகம் | 97 |

க. பொ. த(சா/தர(பரீட்சை) 2015

| வலயம் | நிலை |
|---|---|
| யாழ்ப்பாணம் | 27 |
| மன்னார் | 35 |
| வவுனியா தெற்கு | 57 |
| வடமராட்சி | 60 |
| மடு | 61 |
| வலிகாமம் | 84 |
| தென்மராட்சி | 85 |
| வவுனியா வடக்கு | 90 |
| முல்லைத்தீவு | 93 |
| துணுக்காய் | 94 |
| கிளிநொச்சி | 96 |
| தீவகம் | 97 |

க. பொ. த (உயர்தர)ப் பரீட்சையைப் பொறுத்தவரை அட்டவணையின்படி சித்திவீதம் உயர்வடைந்துள்ளதோடு, தேசிய ரீதியிலும் முன்னிலை வகிப்பது குறிப்பிடத்தக்கது. வடமாகாணத்தில் உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்களில் ஏறக்குறைய 10% ஆனோர் கணிதப் பிரிவிலும் ஏறக்குறைய 10.1% ஆனோர் உயிரியல் பிரிவிலும், 10.10% ஆனோர் தொழில்நுட்பப் பிரிவிலும் ஆக மொத்தம் 30.1% ஆனோர் விஞ்ஞானத்துறையில் கற்கின்றார்கள். மற்றும் 19% ஆனோர் முகாமைத்துவத் துறையிலும் 49.9% ஆனோர் கலைத்துறையிலும் கற்பது குறிப்பிடத்தக்கது. எனவே இங்கு சித்திவீதம் கலைத்துறை மாணவர்களினாலேயே அதிகரிப்பது குறிப்பிடத்தக்கது. 1972ம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழக அனுமதியில் மாவட்ட பங்கீட்டு முறை அமுலில் உள்ளது. 45 வருடங்களின் பின்னராவது அனுமதி முறையை 100% உயர்புள்ளி மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்க வேண்டும் என்ற வாதம் வலுப்பெற்று வருகின்றது. அவ்வாறானால் யாழ் மாவட்டத்தில் கணிதப்பிரிவு மாணவர்கள் மாத்திரம் 100% உயர்புள்ளி மதிப்பீட்டு முறையில் நன்மை அடைவர் ஏனைய பிரிவு மாணவர்களும் ஏனைய மாவட்ட மாணவர்களும் மிகவும் பாதிப்புக்கு உள்ளாவர் எனப் பேராசிரியர் வி. பி. சிவநாதன் அவர்களின் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன

முதலாளித்துவப் பொருளாதார முறையில் பண்ட உற்பத்தி மிகையாகவுள்ளது. ஆனால் அவை சரியாகப் பங்கீடு செய்யப்படுவதில்லை. அவ்வாறில்லாமல் மத்திய, மாகாண, வலய மட்டத்தில் பௌதிக, ஆசிரிய, ஏனைய வளங்கள், தர உள்ளீடுகள் போன்று கணிதப் புள்ளிவிபரவியல் அடிப்படையில் பங்கீடு செய்யப்பட்டு, உரிய கண்காணிப்பு, மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டால் மாத்திரமே வடக்கு, கிழக்கு மாணவர்களின் கல்விநிலை உயரும் என்பது திண்ணம்.






# பாலர் கல்விக் கலைத்திட்ட வடிவமைப்பும் வடிவமைப்புத் தந்திரோபாயங்களும்



மு. வரதராஜன்,
(B.A.(Hons), PGDE (Merit), M.Ed (Distinction)
பகுதி நேர விரிவுரையாளர்,
கல்விமாணி பட்டக் கற்கை நெறி,
ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

அனைவருக்கும் கல்வி என்பதற்கமைவாக கல்விக் கட்டமைப்பில் குழந்தைக் கல்வியானது இன்றியமையாத கல்வியமைப்பாகக் காணப்படுவது அந்தக் கல்வி முறையின் ஆழ்ந்த நோக்கில் சிந்திக்கும் போது எல்லாக் கல்வியமைப்புக்களுக்கும் முகங் கொடுக்கக் கூடிய வகையில் பாலர்களின் பருவத்தில் ஊட்டப்படுகின்ற ஒரு கல்வியாக இருப்பதனால் இடப்படுகின்ற அத்திவாரமானது உரமானதாக அமைய வேண்டும் என்று பல கல்விமான்களாலும் சிந்தனை யாளர்களாலும் மற்றும் பல்வேறுபட்ட தரப்பினர்களாலும் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைவதற்கு வழிசமைக்கின்ற கல்வியாக பாலர் கல்வி விளங்குகின்றது. பாலர் கல்வியானது குழந்தைகளை மையப்படுத்தியதாக அமைவதனால் அவர்கள் விருப்புக்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் கலைத்திட்ட அமைப்புக்களும் உருவாக்கப்பட வேண்டும். பாலர் கல்விக் கலைத்திட்டமானது செம்மையானதாக வடிவமைக்கப்படும் போது குழந்தைகளின் நலன்களுக்கும் அறிவாற்றல் சிந்தனைகளுக்கும் விருந்தளிப்பதாக அமைகின்றது. பாலர்களின் பல்வேறுபட்ட ஆற்றல்களையும் திறன்களையும் தூண்டக் கூடிய கலைத்திட்ட அமைப்பு விரும்பப்படுகின்ற ஒன்றாகவும் பரந்துபட்ட விடயங்களைக் குழந்தைகள் அறிந்து கொள்வதற்கும் செயன்முறைவடிவம் கொடுக்கப்பட்டதாக

அமைக்கப்படுவதும் சிறந்ததொன்றாகும். பால் மணம் மாறாத பச்சிளம் குழந்தைகளின் பாலர் கல்வியானது பலம் மிக்க சிந்தனை ஆற்றல்களையும் ஆளுமைகளையும் வளர்ப்பதற்கும் சமூகம் நோக்கிய உயிர்த் துடிப்பான பொருத்தப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்கும் வடிவமைக்கப்படுகின்ற கலைத்திட்டமானது அடிப்படைத்திறன்களுக் கான அத்திவாரமாக அமைகின்ற கல்விக்கு வளம் சேர்ப்பதாக இருப்பதனால் பாலர் கல்வி கலைத்திட்ட அமைப்பில் கவனம் செலுத்தப்படும் பல்வேறுபட்ட காரணிகளை அலசி ஆராய்ந்து விபரிப்பதாகவே இது அமைகின்றது.

**பாலர் கல்வி**

ஒழுங்கமைந்த கல்வி முறைச் செயற்பாடு களின் முதன் நிலை அம்சமாக பாலர் கல்வி அமைகின்றது. இது குழந்தைக்கல்வி, முன் பள்ளிக்கல்வி, தொடக்கக்கல்வி என்ற பல்வேறு பெயர்களில் பல நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு வழங்கப்படுகின்ற ஆரம்பநிலைக் கல்வியே பாலர் கல்வியா கும். குழந்தைகள் வாழும் சூழல், உடல் உள வளர்ச்சி, மனப்பாங்கு வளர்ச்சி போன்ற வைகள் இப்பருவத்திலே கவனத்திற் கொள் ளப்பட்டு கல்வி வழங்கப்படும் போது குழந்தைகளினுடைய ஆகக் குறைந்த அடைவு மட்டத்தை அடைந்து அதனைச் சம அளவிலான மட்டத்திற்கு உயர்த்துவதை நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

பள்ளிப் பிள்ளைகள் வீட்டிலிருந்து சமூ கத்திற்கு எடுத்துச் செல்வதற்கான முதல் முயற்சியில்முன்பள்ளிநிறுவனங்கள்காணப்படு கின்றன. பிள்ளையின் சூழல், கவனம், ஈடு பாடு என்பவற்றை விசாரிப்பதற்கான ஒரு முயற்சியாக இக் கல்வி காணப்படுகின்றது. இது பிள்ளைகளிடம் சமூகம் நோக்கிய கவனக் குறைப்பை உருவாக்கும் தொடக்க முயற்சியாகவும் இதுவுள்ளது. பாலர் கல்விக் குழந்தைகளை சமூகமயப்படுத்துகின்ற முன் முயற்சிகளில் ஒன்றாகவும் அதே சமயம் குழந்தைகளின் உரிமை, பாதுகாப்பு, நலமேம்பாடு, ஆளுமை விருத்திப் பண்புகள் என்பவற்றை முன்னேற்றக் கூடிய முதன் நிலையாகவும் இனங்காணப்பட்டுள்ளது. இத்தகைய பாலர் கல்வியில் வினைத்திறன் மற்றும் விளைதிறன் மிக்க செயற்பாடுகள் பல்வேறு கூறுகளில் தங்கியுள்ளன. குறிப்பாக இத்தகைய கல்விக்கான அரச அங்கீகாரமும், வள ஒதுக்கீடுகள், கட்டமைப்பு ஏற்பாடுகள், பெற்றோரின் வசதி, பெற்றோரிடமும் சமூ கத்திடமும் காணப்படும் குழந்தைக் கல்வி பற்றிய விழிப்புணர்வு, ஆசிரியர்களின் ஆளுமை, தொழில் ஈடுபாடு போன்ற பல காரணிகள் இதில் பங்குவகிக்கின்றன. ஆயினும் இவற்றுள் ஆசிரியர் செயற்பாடுகளே முன் கல்விச் செயற்பாட்டின் மைய விசைச் சக்கரமாக விளங்குகின்றது.

பாலர் கல்வி முறையானது பல முக்கிய நோக்கங்களை உடையதாயினும் நான்கு நோக்கங்களைக் குறிப்பிடக் கூடியதாக உள்ளது.

- தன்னுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
- பிறராலே விரும்பத் தகுந்த மனோபாவங் களை வளர்த்தல்.
- நன்னடத்தை தேக ஆரோக்கியம் போன்றவற்றை வளர்த்தல்.
- பிள்ளைகளை அடுத்த நிலைக்குத் தள்ளி விடல் அதாவது கற்றலுக்காகக் கற்றல்

பொதுவாக பாலர் கல்விப் பருவம் 3 - 5 வயது வரை உள்ளிட்ட மாணவர்களைக் கொண்ட பருவமாகும். இப்பருவத்தில் அவர்கள் பார்ப் பவைகள் அனைத்தையுமே துருவி ஆராயும் தன்மையுடையவர்கள். கற்பனைத் திறன் அதிகமாகக் கொண்டவர்கள். இதனால் இவர்களினுடைய இயல்புக்கேற்ற வகையில் பெற்றோர்களினுடைய, ஆசிரியர்களினுடைய

செயற்பாடுகள் அமைய வேண்டியிருப்பதனால் அமைக்கப்படுகின்ற கலைத்திட்டமும் செம்மையானதாக இருத்தல் வேண்டும்.

### பாலர் கல்விக் கலைத்திட்டம்

கல்வி இலக்குகளை வினையாற்றலுடன் நடைமுறைப்படுத்தும் இயக்க வடிவமாக அமைவதே கலைத்திட்டமாகும். ஒரு புறம் கோட்பாட்டுப் பரிமாணங்களையும் மறுபுறம் நடைமுறைப் பரிமாணங்களையும் உள்ளடக்கிய இயங்கு வடிவமாக இது அமைகின்றது. மாணவர்களின் வளர்ச்சி நிலைகளுக்கேற்றவாறு கையளிக்கப்பட வேண்டிய அறிவை ஒழுங்கமைத்தல், அனுபவங்களை ஒழுங்கமைத்தல் முதலியவை கலைத்திட்டத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த வகையில் குழந்தைகளின் உடல்வளர்ச்சி, உள வளர்ச்சி, மனவெழுச்சி, சமூகவளர்ச்சி, இடைவினைகளின் வளர்ச்சி என்ற அனைத்தையும் கருத்திலே கொண்டு வடிவமைக்கப்படும் கலைத்திட்டமாகப் பாலர் கல்விக் கலைத்திட்டம் அமைகிறது.

பாலர் கல்விக் கலைத்திட்டமானது குழந்தைகளின் புலன்களைத் தழுவிய வகையிலும் அவர்களின் சிந்தனைத்திறன், சமூகத்திறன், சுயதிறன்கள் போன்றவற்றை வளர்த்தெடுக்கக்கூடிய வகையிலும் கலைத்திட்டம் அமைதல் வேண்டும். அத்துடன் பேச்சுத் திறன், விளங்கும்திறன் என்பவற்றையும் உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும். கலைத்திட்டமானது சமூகத்தின் உடைய ஒருவிளை பொருளாகக் (Social Product) குறிப்பிடப்படும். அதே நேரம் தனிமனித சமூக எதிர்பார்ப்புக்களின் வடிவமாக இயங்கவும் கொள்கின்றது.

கலைத்திட்டம் என்பதற்கு நவீன ஆய்வாளர்கள் பல்வேறுபட்ட வினாக்களை அளித்துள்ளனர். குழந்தைகளுக்கு வழங்கப்படும அறிவின் உள்ளடக்கமே கலைத்திட்டம் என்றும், ஆற்றுகை செய்வதற்குரிய கல்வி இலக்குகளின் தொகுதியே கலைத்திட்டம் என்றும், வாழ்க்கையில் எவை அடையப்பட வேண்டுமோ அவற்றைக் கல்வியில் அடையச் செய்வதற்குரிய ஆற்றல்களை ஒழுங்கமைத்துக் கொடுப்பதே கலைத்திட்டம் என்றும் பல்வேறு விளக்கங்களை அளித்துள்ளனர். இந்த வகையில் கலைத்திட்ட வரைவிலக்கணங்கள் பற்றி விளக்க வந்தவர்கள் மூன்று பரிமாணங்களில் நோக்கியிருப்பதனை அவதானிக்கக் கூடியதாக வுள்ளது.

- குழந்தைகளும் ஆசிரியரும் ஒன்றுசேர்ந்து அணுகும் விடயங்கள்.
- கற்பதற்கும் பயில்வதற்கும் ஆசிரியரும் மாணவரும் கல்விச் சமூகமும் முக்கியமானதாகக் கருதும் விடயங்கள்.
- மேற்குறித்த விடயங்கள் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன என்பதன் இயல்பு.

இவ்வகையில் கற்கை நெறியின் அமைப்பே கலைத்திட்டமாகின்றது. அந்தவகையில் குழந்தைகளின் உடல், உள, சமூக, மனவெழுச்சி நிலைமைகளுக்கு ஏற்றவாறு கற்றல் சூழமைவுகள் உருவாக்கப்படுகின்றன. கற்றல் உள்ளடக்கம், இலக்குகள், ஒழுங்கமைப்பு ஆகிய மூன்றினதும் இணைப்பிலே கலைத்திட்டம் உருவாக்கப்படுகின்ற போது அது குழந்தைகளுக்கான பாலர் கல்விக் கலைத்திட்டமாக மிளிர்கின்றது.

### பாலர் கல்விக் கலைத்திட்டத்தின் நோக்கங்கள்

குழந்தைக் கல்வி முறைகளை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்படுகின்ற கலைத்திட்டமானது குறித்த இலக்குகளையும் நோக்கங்களையும் எய்துவதாக இருத்தல் வேண்டும். இந்த வகையில் பாலர்களின் பல்வேறுபட்ட விருத்தி நிலைமைகளையும் கருத்தில் கொண்டதாக அதனை அடைந்து கொள்ளும் வகையில் கலைத்திட்டம் அமைந்திருத்தல் வேண்டும். இவ்வகையில் பின்வரும் நோக்கங்களைச் சுட்டிக் காட்டலாம்.

- பாடக்கல்வி நோக்கங்கள் அதன் செயற்பாடுகள், குழந்தையின் மொழி, உடல், சமூக மயமாக்கல் முயற்சியை முன்னெடுப்பதாக இருத்தல்.
- நிறையுணவு, பொருத்தமான சுகாதாரப் பழக்கவழக்கங்கள் உருவாக்கப்பட வேண்டும். ஒரு பிள்ளையினுடைய பாதுகாப்பும், கண்காணிப்பும் உறுதிப் படுத்தப்பட வேண்டும்.
- பாடசாலை செல்வதற்கான பழக்க வழக்கங்கள் உருவாக்கப்படுவதற்கான அத்திவாரங்கள் இடப்படுதல் வேண்டும்.
- பாடசாலைக்குச் செல்வதற்கான ஆயத் தத்தைச் செய்யுமிடமாக இருத்தல்.
- ஆரம்பக் கல்விக்கான பழக்க வழக்கங்கள், அடிப்படைத்திறன்கள், மனப்பாங்குகள் வளர்க்கப்படுதல்.
- குழந்தைகளின் பூரண வளர்ச்சியின் மூலம் அவர்களது ஆற்றல்களை உச்சமட்டத்திற்கு விருத்தி செய்தல்.
- குழந்தைகளின் உரிமைகளையும் சுதந்தி ரத்தையும் உறுதிப்படுத்துவதற்கு விரிந்த விளக்கமுள்ள சமூகத்திறனும் அறிவும் உள்ள மனித நேயம் கொண்ட தனி யாட்களை சமூகத்தில் உருவாக்குதல்.
- சமூகத்தினதும், தனியாளினதும் நிலைப்பாட்டிற்கும் அபிவிருத்திக்கும் ஆதாரமாகவுள்ள உற்பத்தி நடவடிக்கை களிலே பங்கு கொள்ளும் ஆற்றலும் திறமையும் உள்ள குழந்தைகளுக்கான அடிப்படை உணர்வுகளை ஊட்டுதல்.
- பரஸ்பர விளக்கத்துடன் ஒற்றுமை, சமாதானம், நட்பு ஆகியவற்றுடன் கூடிய கூட்டு வாழ்க்கையை மதிக்கும் மனித சமூகம் ஒன்றைத் தோற்றுவிப்பதற்கான அடிப்படைகளை ஆரம்பத்திலேயே கட்டியெழுப்புதல்.

கலைத்திட்டமானது இத்தகைய நோக்கங் களைக் குழந்தைகள் பெறும் வகையில் வடிவ மைக்கப்படும் போது எந்தக் காலத்திலும் அவர்களுக்கு அது அனுகூலமானதாகவே அமைகின்றது. இவ்வகையில் பின்வரும் அனுகூலங்களைக் குழந்தைகள் பெறக் கூடியதாக உள்ளது.

- குழந்தைகளின் ஆளுமை உருவாக்கவிருத்தி
- உடல், உள வளர்ச்சி
- மொழி, எண், அறிவு விருத்தி
- சிறப்பான பயனுள்ள பொழுதுபோக்கு
- பல்வேறு மனித விழுமியங்களை அறிதல்
- சமூக மயமாக்கல் முறையைப் பெறுதல்
- பொது ஆற்றல்கள், ஊக்கங்களை வளர்த்தல்
- ஆரம்பக் கல்விக்கான பொருத்தமான அத்திவாரம் இடப்படல்

இன்றைய சூழலில் பல்வேறு ஆய்வு முடிவுகளும் பாலர் கல்வியினுடைய அவசியம் பற்றி ஆரம்பக் கல்வியாக, அதனால் இடப்படுகின்ற நல்ல அத்திவாரத்தை வலியுறுத்தி நிணிக்கின்ற பிள்ளையினுடைய முதல் ஆறுவருட பருவமானது மிகச் சிக்கல் நிறைந்த பருவமாகக் கொள்ளத்தக்கது. ஆயினும் இப்பருவமே குழந்தையினுடைய உளப்பாங்கான வளர்ச்சியைத் தீர்மானிக்கின்ற பருவமாகவும் கொள்ளத்தக்கதாகவும் குறிப்பிடப்படுகின்ற வகையில் பாலர் கல்விக் கலைத்திட்ட வடிவமைப்புக்களும் வரவேற்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

**பாலர் கல்விக் கலைத்திட்ட வடிவமைப்பு**

கல்விக் கருத்துக்கள் தனித்துக் கோட் பாட்டளவில் மட்டும் இருப்பதில்லை. அதனை நடைமுறையில் செயற்பாடுகளுக்குள்ளாக்கி அதன்மூலம் பெறும் அனுபவங்களின் அடிப்படையில் நோக்கிய போதுகலைத்திட்ட வடிவமைப்புகள் தோற்றம் பெற்றன. குழந்தைகளின் பல்வேறுவகையான பாட அலகுகள், மகிழ்ச்சிகரமான செயற்பாடுகள், அவர்களின் உடல், உள, மனப்பாங்கு, ஆளுமை வளர்ச்சிகள் போன்றவற்றை முக்கியமாகக் கவனத்திற் கொண்டு பாலர் கல்விக் கலைத்திட்டமானது வடிவமைக்கப்படல் வேண்டும்.

கலைத்திட்ட வடிவமைப்பு பல்வேறு திசைகளுக்குட்பட்டு கல்வி வரலாற்றின் போது கூர்ப்பு நிலைகளை அடையலாயிற்று. பாட உள்ளடக்க வளர்ச்சி, மெய்யியல், உளவியல், கற்பித்தலியல், தொழில்நுட்பவியல், கணிப்பீட்டியல், முகாமைத்துவ இயல் முதலானவற்றின் வளர்ச்சிகள் கலைத்திட்ட உருவாக்கத்திலே பங்கு கொள்கின்றன. அண்மைக் காலமாகத் தகவல் தொழில் நுட்பவியலின் வளர்ச்சியும் கலைத்திட்ட வடிவமைப்பிலே செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியுள்ளது. வரன் முறையான (Formal) கல்விச் செயற்பாடு கலைத்திட்டமின்றி முன்னெடுத்துச் செல்லப்பட முடியாது.

காலத்தையும் கால இடைவெளிக்குள்ளே கற்கவேண்டிய அறிவையும் அனுபவங்களையும் கலைத்திட்டம் ஒன்றிணைத்து நிற்கின்றது. இத்தகைய இயல்புகளைக் கொண்ட பொதுவான கலைத்திட்ட அமைப்பு முறைகளுக்கேற்ப பாலர் கல்விக் கலைத்திட்ட வடிவமைப்புக்களிலும் பல்வேறுபட்ட தொழிற்பாட்டு அம்சங்களைக் கவனத்திற் கொண்டு உருவாக்க வேண்டிய தேவையும் அவசியமும் ஏற்பட்டுள்ளதெனலாம்.

**கலைத்திட்ட வடிவமைப்பில் கவனத்திற் கொள்ளப்படும் அம்சங்கள்**


பாலர் கல்விக் கலைத்திட்டம் ஒன்னைத் தயாரிக்கும் போது பல்வேறுபட்ட அம்சங்களைக் கவனத்திற் கொண்டதாகத் தயாரித்தல் வேண்டும். அந்தவகையில் பாலர் கல்விக் கலைத்திட்ட அமைப்பில் கவனத்திற் கொள்ளப்படும் பல்வேறுபட்ட விடயங்கள், காரணிகள் என்பவற்றை ஒவ்வொரு விடயங்களாக அவதானிக்கலாம்.

**01) கலைத்திட்டம் திட்டமிடப்படல்**

குழந்தையினுடைய சகல விதமான விருத்தியும் கருத்திற்கொண்டு பாலர் கல்விக் கலைத்திட்டம் திட்டமிடப்பட வேண்டும். குழந்தைக் கல்விக்கான தேவைகளும் அவற்றைப் பொருத்தமான வகையில் வழங்குவதற்கான உதாரணங்களும் திட்டமிடப்பட்டு வழங்கப்படுதல் வேண்டும். உண்மையில் குழந்தைகளிடம் உள்ள சகல ஆளுமைகளையும் விருத்தி செய்யக் கூடியதாகக் கலைத்திட்டம் திட்டமிடப்படல் வேண்டும்.

பாலர் கல்வி மூலமாக அடையப்பட வேண்டிய இலக்குகளை அடிப்படையாகக் கொண்டதாகக் கலைத்திட்டம் திட்டமிடப்பட வேண்டும். குழந்தைகளின் உடல், உள வளர்ச்சி, மொழி, எண், அறிவு, ஆற்றல்கள், ஊக்கல்கள் என்பவற்றை ஏற்படுத்துவதாக அமைதல் வேண்டும். அறிக்கை சார்ந்த, திறன் சார்ந்த, மனப்பாங்கு சார்ந்த பல்வேறு தேர்ச்சிகளினுடைய அத்திவாரமாகப் பாலர் கல்வி அமைவதனால் அவற்றைப் பெறும் வகையிலும் திட்டமிடப்படல் வேண்டும். இவ்வகையில் திட்டமிடல் சிறப்பானதாக அமையும் போது பாலர்களின் செயற்றிறனும் வளரக்கூடியதாக அமையும் என்கின்ற அடிப்படைச் செல்நெறியினைப் பின்வருமாறு காட்டலாம்.

### பாலர் கல்வியினூடாகப் பாலர்களின் செயற்றிறன் வளரும் அடிப்படைச் செல்நெறி



இன்றைய பாலர்களே நாளை பிரஜைகள் இந்த உணர்வு பாலர் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் சமூகப் பொது நிறுவனங் களுக்கும் தவறாது இருத்தல் வேண்டும். நாளை நற்பிரஜைகளாக வாழ விரும்பும் பாலர்களுக்கு அடிப்படையான பாலர் கல்வி அனுபவங்கள் மேற்குறிப்பிட்டவாறு மனிதவளம், பௌதிக வளம் என்பவற்றிற்கேற்பத் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

**2) பாட உள்ளடக்கங்களை ஒழுங்கமைத்தல்**

பாலர்கல்விக்கலைத்திட்டத்தைவடிவமைக் கப்படும் போது கவனத்திற் கொள்ளப்படும் அம்சங்களில் அடுத்து முக்கியத்துவம் பெறுவது பாட உள்ளடக்கங்களைத் தீர்மானிப்பதாகும். குழந்தைகளின் புலன்களைத் தழுவிய வகையில் சுய முயற்சிகளுக்கு உற்சாகமளித்தல், சமூக உணர்ச்சிகளை வளர்த்தல், விளையாடும் போதும் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் போதும் ஆர்வமாக இருத்தல், ஒவ்வொரு செயற்பாடும் ஒன்றைவிட மற்றொன்று புதுமையாக, கவர்ச்சியாக அமையும் வகையில் பாட உள்ளடக்கங்களைத் தீர் மானித்தல் வேண்டும். இவ்வகையில் பாட உள்ளடங்கலானது குழந்தைகளுக்கு ஏற்றவாறு பின்வருமாறு முக்கிய அம்சங்களைக் கொண்டு ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

1. பாலர்களின் விருப்பங்களுக்கும் தனித் துவங்களுக்கும் மதிப்பளித்தல். அவர்களின் உணர்வுகளைச் சரியாகக் கணிக்கக் கூடிய தாக அமைத்தல்.
2. பாலர்களின் எதிர்காலத்திற்கு வளம் சேர்க்கும் வகையில் நல்ல விடயங்களைச் சேர்த்தல்.
3. பிள்ளைகள் சுறுசுறுப்பாகவும், மகிழ்ச் சியுடனும், ஆர்வத்துடனும் இயங்கச் செய்வதாக இருத்தல்.
4. நல்ல நடத்தைகளையும், பேச்சுத் திறன்களையும், பழக்கவழக்கங்களையும் ஏற்படுத்தக் கூடியதாக இருத்தல்.
5. தமக்குரிய பண்புகளைக் குழந்தைகள் தாமே ஆற்றும்படியான திறன்களை வளர்க்கக் கூடியதாக இருத்தல்.
6. குழந்தைகள் முன்மாதிரியான நடத்தைகளில் ஈடுபடக் கூடியதாகவும் தொடர்ச்சியான நேர்மாற்றங்களைப் பெறக்கூடியதாகவும் இருத்தல்.
7. பாலர்களின் அழகியல் உணர்வுகளைத் தூண்டக் கூடியதான ஆடுதல், பாடுதல் போன்றன.
8. குழந்தைகளின் மனவெழுச்சிக்குப் பயிற்சியளித்தல், அறிகை, எழுச்சி இயக்க ஆட்சிகளை ஏற்படுத்தக் கூடியதாக இருத்தல்.
9. சூழலை அறியும் ஊக்கம், ஆராய்வூக்கம் முதலியவற்றை வளர்க்கக் கூடியதாக இருத்தல்.
10. ஆக்க சிந்தனைகளையும், செயல்களையும் வளம்படுத்தல், நாடகம், பொம்மலாட்ட நிகழ்வுகள்.
11. கணிதம், மொழி, விஞ்ஞானம், சுகாதாரம், சமயத்துறைகளின் அடிப்படையில் எண்ணக்கருத்துக்களை வளர்க்கும் தன்மையுடையதாக இருத்தல்.
12. நவீன கற்பித்தல் முறையியல்கள், சாதனங் களை உபயோகிக்கும் திறன் இருத்தல்.
13. உடற்பயிற்சி இலகுவான உடற்பயிற்சியும், நடனமும்.
14. கை வேலைகளும், வரைதல் செயற்பாடு களும்
15. தங்களைத் தாங்களே கட்டுப்படுத்தும் திறனும் முகாமை செய்தலும்
16. பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான திறன்களை வளர்க்கும் செயற்பாடுகள்

இந்த அடிப்படையில் பாலர் கல்வியினைப் பொறுத்தவரையில் பாட உள்ளடக்கங்களை மேற்குறிப்பிட்ட வகையில் ஒழுங்கமைத்து வடிவமைக்கப்படுகின்ற போது பாலர்களின் ஆளுமை விருத்தியும் வினைத்திறனுடையதாக அமையும் என்பது திண்ணம்.

### 03) பாலர் கல்விக் கற்பித்தற் செயற்பாடு

பாலர் கல்வி முறைகளின் கற்பித்தற் செயற்பாடானது வாண்மை மிக்க ஆசிரியர்களினால் மேற்கொள்ளப்படுவதாக இருத்தல் வேண்டும். பாலர் கல்வியைப் பொறுத்தவரையில் முதன் முதலாக ஒரு குழந்தை தனது வீட்டுச் சூழலிலிருந்து புறச்சூழலுக்கு வருகிறது. ஆனால் அக்குழந்தை பராமரிப்பது அவசியம். குழந்தையின் உளப் பாதுகாப்பு போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டும். பாலர் கல்வியைப் பொறுத்தவரையில் ஆசிரியர் செயற்பாடு வெறுமனே அறிவால் நிரப்புவது அல்ல. உபகரணங்களைக் கையாளப் பழக்குவதல்ல. பதிலாகக் குழந்தையிடமுள்ள இயற்கையான ஆற்றல்கள் வெளிக்கொணர்வது அதனால் ஒரு ஆசிரியர் பொறுமையும் அன்பும் ஆதரவும் உள்ளவராகச் செயற்பட வேண்டும். ஆசிரியர்கள் தங்கள் நிலையை விட்டு கீழ் இறங்கி வந்து செயற்படுதல் வேண்டும். மாணவர்கள் ஒவ்வொருவரையும் அவர்கள் ஊக்கங்களை அறிந்து அவை வெளிப்பட உதவ வேண்டும். பாலர் கல்விக் குழந்தைகளிடம் பின்வரும் பண்புகள் காணப்படுகின்றன.

- புதியன அறியும் ஆர்வம்
- வேலை செய்யும் துணிவு
- ஓடியாடுவதில் நாட்டம்
- விளையாட்டுக்களில் அதிக விருப்பு
- எந்நேரமும் வினா எழுப்புதல், சோதித்துப் பார்த்தல், கோபித்தல், சண்டை போடுதல், கணிப்புப் போடுதலில் அக்கறை
- சிக்கலான உலகை எதிர்கொள்ள அஞ்சாமை

இத்தகைய பண்புகளைக் கொண்ட குழந்தையிடம் ஆசிரியர் குழந்தை உளவியல் பற்றி நன்கு அறிந்தவராக செயற்பட வேண்டும். ஒரு குழந்தை அறிவைப் பெற உதவும் சிந்தனை, ஞாபகம், புலக்காட்சி ஆகிய செயன்முறை பற்றியும் அக்குழந்தையின் எழுச்சிப் போக்குப் பற்றியும் மனிதத் தொடர்புகள் பற்றியும் விளக்கமளிப்பது உளவியலாகும். அத்துடன் குழந்தைகளின் தொடர்பாடல் திறனை மேம்படுத்துபவராகவும் ஆசிரியர் செயற்பட வேண்டும்.

பாலர் கல்விச் செயற்பாட்டில் ஆசிரியர் ஒருவர் குழந்தையினுடைய மொழிவிருத்திக்கு உதவுவதாகத் தன் செயற்பாடுகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துபவராகப் பின்வரும் வகையில் மொழி விருத்திக்கு உதவலாம்.

- பல விதிகளை விளக்கி விளையாட்டுக்களில் பங்குபெறச் செய்தல்
- குழந்தை கதைக்கும் போது பொறுமையாக செவிமடுத்தல்
- குழந்தைகளை ஒருவரோடு ஒருவர் கதைக்கத் தூண்டல்
- பெரியவர்களோடு பேசச் செய்தல்
- பல்வேறு வினாக்களை எழுப்பத்தூண்டுதல்
- பாடங்களுடன் கூடிய நூல்களைக் கையாள இடமளித்தல்
- பாடவிடுதல், கதைசொல்லுதல், நாடகம் நடித்தல் போன்றவற்றின் மூலம் மொழிவிருத்தி பெறுதல்

இத்தகைய செயற்பாடுகள் தவிர மேலும் பாலர் கல்வி ஆசிரியர் ஒருவர் மாணவர் ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்க உதவுதல் வேண்டும்.

- பள்ளி நேரத் தொடக்கம் சமூகமளித்தல்
- காலை வணக்கம் தெரிவித்தல்
- உணவுப் பழக்க வழக்கங்களைக் கண்காணித்தல்
- பெற்றோரை இணைத்தல்
- வகுப்பறை நிர்வாகத்தில் அக்கறை செலுத்துதல்

இவ்வகையில் பாலர் ஆசிரியரே பாலர்களின் கற்றல் செயற்பாடுகளின் திறவுகோல், வகுப்பறையில் மகிழ்ச்சியானதும் மிகவும் விரும்பத்தக்கதுமான நல்ல சூழ்நிலைகளைப் பாலர்களுக்கு அமைத்துக் கொடுக்க வேண்டும். பாலர்களது செயற்பாடுகளை முன்னெடுத்து நெறிப்படுத்துவதுடன் அவர்களது ஆர்வங்

களைத் தூண்டி சிந்திக்கவும், அதுபற்றிப் பேசவும், செய்தவற்றையும் கற்றவற்றையும் விளக்கம் பெறவும் செய்தல் வேண்டும். ஆசிரியர் தனது செயற்பாடுகளின் நெகிழ்வு அல்லது வளைந்து கொடுக்கும் தன்மையும் மாணவர்கள் சார்பாகக் கடைப்பிடிக்க வேண்டும். ஆசிரியர் தனது வகுப்புப் பிள்ளைகளை அறிந்து வைத்திருப்பது போல பாலர்களின் பெற்றோர்களையும் சமூகத்தையும் அறிந்து கொள்ளலாம். இவ்வாறாகப் பல்வேறு பயிற்சிகள், கற்றல் அனுபவங்கள் என்பவற்றினூடாகப் பரிணமிக்கலாம். இப்பரிணமிப்பினூடாகப் பின்வரும் நடிபங்குகளை ஆசிரியர் கொண்டுள்ளவராகத் திகழ்கின்ற போது கற்பித்தற் செயற்பாடும் மகிழ்ச்சிகரமானதாக அமைகின்றது.

- தீர்மானம் மேற்கொள்பவர் - செயற்படுத்துபவர் - முகாமையாளர்
- குழுப் பொறுப்பாளர், ஆலோசனை கூறி வழிகாட்டுபவர்
- அழகியலுணர்வுள்ள கலைஞன், கல்வியூட்டுபவர், மகிழ்ச்சியூட்டுபவர், பாதுகாப்பாளர்
- இணைப்பாளர், குழு உறுப்பினர், உத்தியோகத்தர்
- திட்டமிடுபவர், சிறப்பறிஞர், புதுமை படைப்பவர்
- பொதுசன ஊழியர், சமூகத்தலைவர், தோழர்
- மதிப்பீடு செய்பவர், சுறுசுறுப்பானவர், சேவையாளர்
- சமூகமாற்ற முகவர், தொழிற்சங்க வாதி
- தியாக உணர்வு உடையவர், துணிவுள்ளவர்
- அபிவிருத்தி முகாமையாளர், சமூக முன்னோடி

ஆகிய பாத்திர நடிபங்குகளுக்கேற்ப பாலர் பள்ளி ஆசிரியர் கற்பித்தல் செயற்பாடுகள் நவீன முறையியல்களினூடாக வழங்கப்படும் வகையில் அமைத்தல் வேண்டும். இவ்வகையில் முன்பள்ளி ஆசிரியர் சிறந்த வாண்மை மிக்கவராக செயற்படும் வகையில் அவர்கள் பயிற்சிகளும் இடம்பெறுவதன் மூலம் கற்பித்தற் செயற்பாடானது சிறந்த வளம் மிக்கதொன்றாக அமையும் என்பதில் ஐயமில்லை.

### 04) பாலர் கல்வி கற்றல் அனுபவங்கள்

குழந்தைக் கல்விக் கலைத்திட்டமானது கற்பித்தல் செயற்பாட்டுடன் நின்றுவிடாமல் குழந்தைகளுக்கான சிறந்த கற்றல் அனுபவங்களை வழங்குவதாகவும் இருத்தல் வேண்டும். இந்தவகையில் இக்கல்வி முறைகள் முறைசார்ந்த அமைப்போடு தொடர்புபடுத்தப்படுவதன் மூலம் சிறப்பாகச் செயற்படும் அதேவேளையில் பல பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றன. அத்தகைய கற்றல் அனுபவங்களையும் உள்ளடக்கியதாகக் கலைத்திட்டம் அமைக்கப்படுதல் வேண்டும்.

குழந்தைகளினுடைய இயற்கையை மையமாகக் கொண்ட கல்வி முறைகள் அமைக்கப்பட வேண்டும் எனும் போது கூடுதலாக விளையாட்டு முறை பொருத்தமானதாக அமைகின்றது. விளையாட்டுக்கள் மூலம் பிள்ளைகள் தம்முடைய ஆற்றலை இனங்கண்டு கொள்வதோடு தாம் வாழும் சூழலையும் அறிந்து கொள்கின்றான். குழந்தைக்குப் பாடசாலை (முன்பள்ளி) என்பது வீடு போன்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் இவை அமைய வேண்டும். ஆனால் பொருத்தமான விளையாட்டுக்களை உபகரணங்களைத் தெரிவு செய்து ஆசிரியர் நோக்கமாகும். விளையாட்டுக்கள் ஆபத்தில்லாமல் அமைய வேண்டும். விளையாட்டின் இடையே குழந்தைகளுக்கு ஓய்வு வேண்டும். அந்நேரத்தில் கதைகள், பாட்டுக்கள் என்பவற்றைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

ஒரு குழந்தை பிறக்கும் போது எப்படியான துன்ப உணர்வுடன் பிறக்கின்றதோ இதே போன்று கல்விக் காலமும் துன்பமாக அமையக் கூடாது. இதனால் பாடசாலைச் சூழலை ஒரு

இன்பகரமான நிகழ்வாக்குவது ஆசிரியரின் கடமையாகவும் உள்ளது. பள்ளிகளிலே பிள்ளைகள் விளையாட்டின் மூலம் கற்ப தால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. இதனால் முறையான பாடசாலை ஒன்றிற்குச் செல்லும் வயதிற்கு முன்னரே குழந்தைகள் கற்க வேண்டியதன் அவசியத்தைக் கல்வியி யலாளர்கள் வலியுறுத்தினர். இப்பருவத்தில் பெற்றுக் கொள்ளும் உணர்வுகள் சிந்தகைள் பிள்ளைகளிடம் நிலையாகப் பதிந்துவிடும் அனுபவங்களை வழங்குகின்றது.

பொதுவாக இரண்டரை வயது தொடக்கம் ஐந்து வயது வரையுள்ள பருவம் சிறந்த அறிவாற்றலோடு கல்வி அனுபவங்கள் பெறும் காலமாகும். முதன் முதல் வீட்டிற்கு வெளியே வீட்டைப் போன்ற ஒரு அன்பான சூழலிலே பிள்ளைகள் புதிய அனுபவங்கள் பெறும் இடம் பாலர் கல்வி நிலையங்களாகும். இங்கு குழந்தையின் இயற்கைகைக் கருத்திற் கொண்டு இணைந்த கல்வி குழந்தையின் ஆளுமை விருத்திக்கு உதவுவதோடு அவர்களைச் சிறந்த பண்புள்ளவர்களாக ஆக்குகின்றது. குழந்தையின் சிறந்த பழக்க வழக்கம் முறையான உடலமைப்பு, மனவுறுதி போன்றவை ஏற்படு கின்றன. இயற்கை மூலம் கற்பிக்கப்படும் போது குழந்தைகள் தமது எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தவும் தமக்குத் தாமே சுய கட்டுப்பாட்டை ஏற்படுத்தவும் பழகிக் கொள்கின்றனர். குழந்தையினுடைய ஒவ்வொரு வளர்ச்சியையும் கருத்திற் கொண்டு கல்வி நடவடிக்கைகள் திட்டமிடப்பட வேண்டும். எல்லாப் புலன்ளும் கற்றலில் ஈடுபட வேண்டும். இதனால் குழந்தைகளினுடைய எதிர்காலம் சிறப்பாக அமைவதோடு ஆளுமை விருத்தி, ஆக்கத்திறன், கற்பனை சக்தி போன்றவையும் வளர்கின்றன. அத்துடன் உடலியக்கம், மனவெழுச்சி, சமூகவளர்ச்சி, மொழி வளர்ச்சி, அறிவு போன்றவற்றையும் வளர்ப்பதற்கான நெறிகளை இயற்கையோடு இணைந்த கல்வி வழங்குகின்றது.

இவ்வாறு பாலர் கல்விக் கலைத்திட்டமானது குழந்தைகளுக்கு இயற்கையோடு இணைந்த மகிழ்ச்சிகரமான கற்றல் அனுபவங்களையும் விளையாட்டு செயன்முறை கதைகள், பாடுக்கள் போன்ற அனுபவங்களையும் வழங்கும் வகையில் அமைவதே சாலச் சிறந்ததாகையால் இது எதிர்கால சுய கற்றல் அனுபவங்களுக்கும் குழந்தைகளின் விருத்தி நிலைமைகளுக்கும் வழிசமைப்பதாக இருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

### 05) குழந்தைக் கல்வி மதிப்பீட்டு முறைகளும் பின்னூட்டல்களும்

பாலர் கல்விக் கலைத்திட்ட வடிவமைப்பில் கவனம் செலுத்தப்பட வேண்டிய அம்சங்களில் மதிப்பீடு முறைகளும் பின்னூட்டல்களும் முக்கியமானதாகும். மதிப்பீடு என்று கொள்ளும் போது வெறுமனே நினைவாற்றலைப் பரிசோதித்தல் மட்டுமன்றி பிற கல்விக் குறிக் கோள்களை அளவிடுவதாகவும் மாணவர் விடும் குறைநிறைகளை ஆராய உதவுவதாகவும் இடம்பெறும் செய்பாடுகள் மதீப்பீடு எனலாம். கல்விசார் முயற்சிகள், பணிகள் என்பவற்றின் வினைத்திறனான நோக்கற் பேறுகளைத் தொகையளவில். வடிவமைத்துப் பெற்ற அளவீடுகளுக்கு விளக்கமளிக்க முயல்வது மதிப்பீடாகும். மாணவர் அடைவு நிலைக்கு விளக்கம் மதிப்பீடு என்று குறிப்பிடப்படும். கல்வி இலக்குகளை மாணவர் எவ்வளவு தூரம் அடையப் பெற்றுள்ளனர் என்பதை வரையறை செய்யும் முறைகளே மதிப்பீடாகும்.

பொதுவாப் பாலர் கல்வியைப் பொறுத்த வரையில் வாய்மொழியிலான மதிப்பீடு எழுத்து வழி மதிப்பீடு, செய்முறை மதிப்பீடு எனக் குறிப்பிட முடியும். வாய்மொழி மதிப்பீடு என்னும் போது கதை சொல்லுதல், பேசுதல், பாடுதல் போன்றனவும் எழுத்து முறை மதிப்பீடு எனும் போது இடைவெளி நிரப்புதல், பார்த்து எழுதுதல், தொடர்புபடுத்துதல், எழுதிக் காட்டுதல் போன்றனவும் செய்முறை என்னும் போது பல சொற்களாக்குதல், படம்

பார்த்துச் சொல்லல். அபிநயம், அசைவும் இசையும் போன்ற மதிப்பீடு முறைகளினைக் குறிப்பிடலாம்.

இத்தகைய மதிப்பீடுகளை மாணவர்கள் மத்தியில் மேற்கொள்கின்ற போது பின்வரும் நோக்கங்களையும் அடைந்து கொள்ளக் கூடியதாகக் காணப்படும்.

1. பாலர் கல்வி பிள்ளைகளுடைய தேர்ச்சி பற்றிய தகவல்களைப் பெறுதல்
2. ஆசிரியர் தன் கற்பித்தல் சார்ந்த பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்தல்
3. நோக்கங்கள் பொருத்தமாக இடம் பெற்றதை அறிந்து கொள்வதற்கு உதவுதல்
4. பாலர் கல்வியினுடைய பாடவிதானம் பொருத்தமானதாக அமைந்துள்ளதைக் கண்டு கொள்வதற்கு உதவுதல்.
5. மேலதிகமாக மாணவர்கள் அடைய வேண்டியதைத் தீர்மானித்தல்

இன்று கல்வி அறிவினாலேயே மனித வாழ்க்கையின் சகல அபிவிருத்திகளும் தீர்மானிக்கப்படுகின்றன. மனிதனை வள மாக்கக் கல்வி மீதான முதலீடு உதவும் என்ற கருத்து இன்று வலுப்பெற்றுள்ளது. அந்தவகையில் கல்வியின் செயற்பாட்டு இலக்குகளாகப் பின்வருவனவற்றைக் குறிப் பிடலாம்.

- ஒரு பிள்ளையின் பூரண வளர்ச்சி மூலம் கற்றல்களை முடிந்தவகையில் விருத்தி செய்தல்
- மனித உரிமைகள், சுதந்திரம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு சமூகத்திறனும் அறிவும் மனித நேயமும் கொண்ட தனி யாட்கள் உருவாக்குதல்.
- சமூகத்தின் தனியாளின் நிலைப்பாட்டிற்கும் அபிவிருத்திக்கும் ஆதாரமாக உள்ள உற்பத்தி நடவடிக்கைகளிலே பங்கு கொள்ளும் ஆற்றலும் திறனும் கொண்ட நபர்களைத் தோற்றுவித்தல்.
- ஒற்றுமை, சமாதானம், நட்பு ஆகிய வற்றுடன் கூடிய கூட்டு வாழ்க்கையை அளிக்கும் சமூகத்தைத் தோற்றுவித்தல் என்பனவாகும்.

மேற்கூறிய இலக்குகள் யாவும் குழந்தை யினுடைய ஆரம்ப பருவத்திலேயே வளர்த்தெடுக்க வேண்டியன. எனவே அதற்கேற்றவாறான செயற்பாடுகள். மதிப்பீடு கள், பின்னூட்டல்கள் இடம்பெற்று கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது அவசியம். உண்மையில் அசைவுக் கல்வி, இசைவுக் கல்வி, பேச்சுத் திறன், கதை சொல் லல், சிந்தனை வெளிப்பாடு, வாசிப்பு, எழுத்து, கவிதை புனைதல் போன்றன யாவும் பாலர் கல்வியில் வளர்க்க வேண்டியன. குழந்தையினுடைய கற்றல் சுய கற்றல்களாக நிகழ வேண்டும். சுயசிந்தனை ஊடாகவே ஒரு குழந்தை பொருத்தமான வளர்ச்சி காணமுடியும் என்பதனால் இத்தகைய கற்றல் முறைகளில் மதிப்பீடு மட்டுமன்றி பின்னூட்டல்களும் வழங்கக் கூடியதாகக் கலைத்திட்ட வடிவமைப்பில் கவனத்தில் கொள்ளப்படுகின்ற அம்சங்களினை மேலும் பொதுவாகப் பின்வருமாறு சுருக்கமாக நோக்க லாம்.

இவ்வாறு பாலர் கல்விக் கலைத்திட்ட வடிவமைப்பில் கவனத்தில் கொள்ளப்படுகின்ற அம்சங்களினை மேலும் பொதுவாகப் பின்வருமாறு சுருக்கமாக நோக்கலாம்.

- பாலர் கல்வியினூடாக அடையப்பட வேண்டிய நோக்கங்கள் கருத்தில் கொள் ளப்படல்
- கற்கை நெறிகளுக்குப் பொருத்தமான வகையில் பாலர் கல்விக்கான கால அளவு உள்வாங்கப்பட்டு திட்டமிடப்படல்.
- கிடைக்கக்கூடிய பௌதிக வளங்கள், மனித வளங்கள் கவனத்திற் கொள்ளப்படல்.
- பாலர்களுக்கான பல்வேறு அனுபவங்களை வழங்கக் கூடியவகையில் வடிவமைக்கப் படல்.
- பிள்ளையினுடைய பயன்படு தன்மைகளும் தொழில்சார் தேவைகளும் கருத்திற் கொள் ளப்படல்.

- பிள்ளையினுடைய ஆக்கத்திறனை விருத்தி செய்யக் கூடியதாக இருத்தல்.
- உள்ளார்ந்த ஆற்றலை வெளிப்படுத்தல்.
- செயல்முறை சார்ந்த வகையில் அனுபவங்கள் திட்டமிடப்பட வேண்டும்.
- விழுமியப் பெறுமானங்கள் உணரப் படத்தக்கதாகக் கலைத்திட்டம் வடிவமைக்கப்படல்.
- முன்நோக்கிய பார்வையுடையதாக இருத்தல்.
- சமூகத்தின் தேவைகள், விருப்புக்கள் என்பவற்றை நிறைவு செய்யக் கூடியதாக இருத்தல்.
- அதாவது தொழில் வாய்ப்புக்கள், இனங்களுக்கிடையிலான சமூகப் புரிந்துணர்வுகள் என்பவற்றை ஏற்படுத்துதல்.
- அறிவியல் சார்ந்த நோக்கும் வாழ்வியல் சார்ந்த நோக்கும் கருத்தில் கொள்ளப்படல்
- மற்றவர்களுடன் தொடர்பாடல் செய்யும் திறன்கள் உள்ளடக்கப்படல்.
- பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுப்பதாக இருத்தல்.
- நாட்டிற்கு நல்ல பிரஜைகளை உருவாக்குவதாக இருத்தல்.
- உலகளாவிய ரீதியிலான நவீன மாற்றங்கள், புதிய போக்குகள் என்பவற்றையும் கவனத்திற் கொண்டதாக இருத்தல்.

இவ்வாறு பாலர் கல்விக் கலைத்திட்ட வடிவமைப்பில் பல்வேறுபட்ட அம்சங்களைக் கருத்திலும் கவனத்திலும் கொண்டதாக வடிவமைக்கும் போது அவற்றில் சில இடர்பாடுகளும் பிரச்சினைகளும் முகம் கொடுக்க வேண்டியதாகவும் காணப்படுகின்றது.

**கலைத்திட்ட வடிவமைப்பின் போது எதிர்கொள்ளப்படும் இடர்பாடுகள்**

பாலர் கல்விக் கலைத்திட்டமானது மிக நுட்பமாக இலக்குகளை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்படுதல் வேண்டும். அதற்கேற்ப எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளை இடர்பாடுகள் போன்றவற்றையும் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

போதியளவிலான உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படாமை. உதாரணமாகக் கட்டடம், தளபாடம், மலசலகூடம், விளையாட்டு முற்றம் இன்மை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

- சமநிலையற்ற வளப் பகிர்வுகள் காணப்படல்.
- கல்வித் தரம் போதியதாக இல்லை
- சரியான முகாமைத்துவக் கட்டமைப்பு இல்லாமை
- பயிற்சி பெற்ற தரமான ஆசிரியர்கள் இல்லாமை
- அரசு பொறுப்பேற்காமையால் நிதி வளங்கள் போதியதாக இல்லாமை
- சம்பளக் கொடுப்பனவுகள் போதாமை
- கலைத்திட்டம் சரியான முறையில் திட்டமிடப்படாமை
- பாலர் கல்வி நிலையங்கள் உருவாக்கப்படாமை
- முன்பள்ளிச் சமூகத்தினருக்கும் பெற்றோருக்குமிடையில் சுமூகமான தொடர்புகள் இல்லாமை
- பிள்ளையிடம் காணப்படும் உடல், உளம் சார்ந்த குறைபாடுகள்

இவ்வாறு பாலர் கல்விக் கலைத்திட்ட வடிவமைப்பின் போது பாலர் கல்விப் பிரச்சினைகளினையும் கவனத்திற் கொண்டு உருவாக்கப்படுதல் வேண்டும். அப்போதுதான் அவ் இடர்பாடுகளிலிருந்து விடுபட்ட வகையிற் பாலர் கல்விக் கலைத்திட்டத்தை வடிவமைத்துக் கொள்ளலாம். இந்தவகையில் நல்லதொரு கலைத்திட்டமாக பாலர் கல்விச் சிந்தனைகள் மிளிரும் வகையில் அதன் அபிவிருத்தியினை முன்னெடுக்கக் கூடியதாக வகுக்கப்பட வேண்டிய விருத்திசார் செயன்முறைகளையும் தந்திரோபாயங்களையும் உற்று நோக்குவது ஓர் வரப்பிரசாதமாக அமைகின்றது.

**பாலர் கல்விக் கலைத்திட்டம் வடிவமைப்பு விருத்திக்கான தந்திரோபாயங்கள்**

பாலர் கல்விச் செயற்பாடுகள் முனைப்புடன் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டியவையாகும். அதனால் வடிவமைக்கப்படும் கலைத்திட்டமானது பல்வேறுபட்ட அம்சங்களைக் கவனத்திற் கொண்டதாக உருவாக்கப்படினும் மேலும் அதன் சிறந்த வடிவமைப்பிற்கு பாலர் கல்வி இடர்பாடுகளையும் களையக்கூடிய வகையில் சில வழிமுறைகளையும் தந்திரோபாயங்களையும் பின்வருமாறு குறிப்பிடலாம்.

- புதிய பாலர் கல்விக் கொள்கைகளை வடிவமைத்தல், பாலர் பாடசாலைகளை ஒழுங்கமைத்தல், தேவையான இடங்களில் புதியவற்றை உருவாக்குதல்.
- பாலர் கல்வியின் புத்தாக்க ஆசிரியர்களுக்கு சிறந்த முன்சேவை உள்ளகப் பயிற்சியை வழங்குதல், திருப்தியான ஊதியம் பெறல்.
- பாலர் கல்விக் கலைத்திட்டம் விளையாட்டுக்களுடன் கூடிய கற்றல் செயன்முறைகளை சூழலுடனும் அனுபவங்களுடனும் இணைத்தல்.
- பாலர் பாடசாலைகள் முகாமைத்துவ ஒழுங்கமைப்புக்குள் கொண்டுவருதல், விசேட வினைத்திறன்களையும் அதிகரிக்கும் செயலாய்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- குறிப்பாக அபிவிருத்தி அலகுகளில் பாலர் பாடசாலைத் திட்டங்களை அரச அதிகாரிகளின் உதவிகளுடன் அமுலாக்கல்.
- பாலர் கல்வித் துறைசார்ந்த வலயங்கள், பாலர் ஆசிரியர் கலாசாலைகள், பாலர்கள் பயனடைந்துள்ள நிலைகளை இத்துறை சார்ந்தவர்களும் தகவல் தொடர்புச் சாதனங்கள் மூலம் ஏற்படுத்தல்.
- பாலர்களுக்கான பல்வேறு கற்றல் முறைகளையும் புதிய நுண்மதிவிருத்தி விளையாட்டுக்களையும் அறிமுகம் செய்தல்.
- பிரதேச ரீதியாக பாலர் பாடசாலை அபிவிருத்தித் திட்டங்களை விரிவாக்குதல்.

இவ்வாறான நவீன தரமான பாலர் கல்வியை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் அவசியமாக எமது பிரதேசங்களிலும் விரிவாக்கப்பட வேண்டும். ஆனாலும் பாலர் கல்விக் கல்வித் துறையில் எமது கல்வியியலாளர்களும் கவனமெடுக்காமல் உள்ளமை நீண்ட கால நோக்கில் சமூக ரீதியாகப் பல பாதிப்புக்களை ஏற்படுத்தும். தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 21 ஆம் நூற்றாண்டு அறிவுமைய, தகவல் மைய நூற்றாண்டு என்றும் இந்நூற்றாண்டின் சமூகம் அறிவுசார் சமூகம் என்றும் வர்ணிக்கப்படுகின்றது. இன்றைய மனித வாழ்வின் சகல அம்சங்களின் அபிவிருத்தியும் முன்னேற்றமும் கல்வி அறிவினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. மனிதவளவிருத்தியானது கல்வி அபிவிருத்தியின் நோக்கமாகவும் வழிமுறையாகவும் உள்ளது. குறிப்பாக அபிவிருத்தி செயன்முறை நோக்கில் ஒழுங்கமைக்கப்பட்ட பாலர் கல்வி அபிவிருத்தித் திறன் முறைகளை மேற்கொள்ள பின்வரும் அடிப்படை விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

- முதலில் அபிவிருத்தி அடைந்து கொள்ளப்பட வேண்டிய பிரதேசத்தில் உள்ள பாலர் கல்வி, பாலர் பாடசாலை அபிவிருத்திக் கொள்கை இலக்குகளை வரையறை செய்தல்.
- இவ் இலக்குகளை அடையக் கூடிய வகையில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை ஒழுங்கமைத்தல்.
- பாலர்பாடசாலைகளிடையேயும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்பை ஏற்படுத்துதல். புதிய

பாடசாலைகளைத் தேவைக்கு ஏற்ப உருவாக்குதல்.

- பாலர் பாடசாலைக்கு அயலில் உள்ள பாடசாலைப் பெற்றோர் சமூகத்தவர்கள் மத்தியில் இத்துறையினர் முக்கியத்துவம் உணர்த்தப்படல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல். இத்துறையின் அபிவிருத்திக்கு அவர்களையும் பங்காளராக்குதல்.
- பாலர் பாடசாலையின் நடவடிக்கைகளை வினைத்திறனோடும் பயனுறுதியோடும் நிறைவேற்ற உகந்த ஒரு முறையாக முகாமைத்துவக் கோலம் ஒன்றைப் பாலர் ஆசிரியரினூடாகக் கட்டியெழுப்புதல்.
- பாலர் ஆசிரியர்களுக்குப் பயிற்சிக் கலாசாலை ஒன்றை உருவாக்கி அதில் கல்வித் தொழில்நுட்பப் பிரிவு, கவின்கலைப் பிரிவு, வாண்மைப் பிரிவு, மொழியியல் பிரிவு, சுற்றாடல் கணிதவியல் பிரிவு, விளையாட்டியல் பிரிவு, சுகாதார சேவைப் பிரிவு என்பன ஒருங்கிணைக்கப்படுவதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.
- பிள்ளைகளின் சகல ஆளுமைத் திறன்களையும் கட்டியெழுப்பக் கூடியதாக இருத்தல்.

இந்த அடிப்படையில் வளர்முக நோக்குத் தன்மைகளுக்குட்பட்ட தந்திரோபாயங்களையும் நெறிப்படுத்தப்பட்ட வழிமுறைகளையும் கவனத்திற் கொண்டு கலைத்திட்டம் வடிவமைக்கப்படும் போது இடர்களும் பிரச்சினைகளும் களையப்பட்ட வகையிலான செழுமைபெற்ற கலைத்திட்டமாக முகிழ்ந்தெழச் செய்ய முடியும் என்பது திண்ணம்.

### முடிவுரை

இவ்வாறு பாலர் பாடசாலைகளில் சரியான ஒரு களத்தை அமைத்துக் கொடுப்பதற்கு பாலர் கல்விக் கலைத்திட்டம் இன்றியமையாததாக உள்ளது. இந்தக் கட்டமைப்பானது பிள்ளையின் சுய தேடலுக்கும் சுய இயல்பூக்கத்திற்கும் சுயதிறனியல் விருத்திக்கும் உதவுவதாக கலைத்திட்டம் அமைக்கப்படுவதானது குழந்தைகளின் முழுவலுவுக்கும் உரமூட்டுவதாகவுள்ளது. குழந்தையின் உடல், உளம், மனவெழுச்சி, சமூக மனப்பாங்கு, சமூக விழிப்புணர்வு, பிரதேசவியல் அபிவிருத்திசார் திறன்கள் என்பவற்றின் எழுச்சிக்கும் மகிமைக்கும் மகுடம் சூட்டுவதாக இக்கல்வி முறை அமைந்திருப்பதனால் மனித உள்ளங்களைப் பண்படுத்தி, தூய்மைப்படுத்தி, களங்கமற்ற உணர்வுகளைத் தோற்றுவிப்பதற்கும் பாலர் கல்வி வழிசமைப்பதனால், உருவாக்கப்படுகின்ற கலைத்திட்டமானது ஆற்றுகைத் திறன்களுடன் கூடியதாக சுய விழிப்புணர்வையும் சுய கற்றலையும் தூண்டுவதாக அமைதல் வேண்டும்.

முடிவாக நோக்குகின்ற போது பல படிநிலை கொண்ட கல்வி எனும் ஏணியின் முதற்படியாக பாலர் கல்வி அமைவதனால் கலைத்திட்ட வடிவமைப்பின் திட்டமிடல்களும், உள்ளடக்கப்பட வேண்டிய பாடத் தீர்மானங்களும், குழந்தைகளின் செயற்பாடுகளும் குறிப்பாக விளையாட்டு, ஆக்கச் செயற்பாடு, கதை புனைதல், கவிதை ஆக்கம், மொழித்திறன் விருத்தி, தொடர் பாடல் திறன், சிந்தனைத்திறன் போன்ற பல்வேறுபட்ட திறன்களின் திறவுகோலாகவும் பாலர் கல்விக் கலைத்திட்டம் விளங்குவதனால் பல தந்திரோபாயங்களையும் நெறிப்படுத்தப்பட்ட ஆற்றுகைகளையும் சிந்திக்க வேண்டிய தேவையும் அவசியமும் உணரப்பட்டுள்ளது. இதனால் நவீன கல்வியியல் சிந்தனைகளுக்கமைவாக குழந்தைகளின் ஒன்றிணைந்த ஆளுமையானது சுய திறன்கள், சிந்தனைத் திறன்கள், சமூகத் திறன்கள் என இனங்காணப்பட்டுள்ளன. இந்தத் திறன்களில் ஒருவர் பிறப்புரிமையாகப் பெற்றுவாழ்க்கையினூடாக வெவ்வேறு அளவுகளில் விருத்திசெய்து கொள்ளும் திறன்களான சுயதிறன்களே முக்கியமானதாகும். அதாவது மனவெழுச்சிச் சமநிலை,

உள்நெருக்கீட்டு முகாமை, தான் தொடர் கற்றல், மாற்றங்களை ஏற்படுத்தும் திறன், முயற்சியாண்மை, பொறுப்பு வகித்தலும் வகை கூறலும், அர்ப்பணிப்பு, சுய ஒழுக்கம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதாகவும் வாழ்வில் அவற்றை மலரச் செய்வதாகவும், மகிழ்வூட்டுவதாகவும் அமையும் வகையில் பாலர் கல்விக் கலைத்திட்டம் வடிவமைக்கப்படின் அதுவே வாழ்வின் வசந்தம் எனில் மிகையாகாது.

**உசாத்துணை நூல்கள்**


1. ஜெயராசா. சபா. பாலர் கல்வி, (1997), வெளியீடு: யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியம், யாழ்ப்பாணம்.
2. ஆரம்பக் கல்விச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் (2000), தேசிய கல்வி நிறுவகம்.
3. சத்தியசீலன். அனுசா, (2003), கல்வியியலாளன் - முன்பள்ளிக் கல்வியும் ஆசிரியர் பயிற்சித் தேவையும், கல்வியியல் வெளியீட்டு நிலையம், யாழ்ப்பாணம்.
4. சந்தானம். எஸ். கணபதி. வி. (2003), கல்விமனவியலும் குழந்தைக் கல்வியும், சாந்தா பப்பிளிக்கேசன்.
5. தற்பரன். வி. (2005). முன்பள்ளிக் கல்வியும் ஆசிரியரும், அகவிழி வெளியீடு.
6. இராஜேஸ்வரன். ப. (2005), தேச அபிவிருத்தியில் தமிழர் கல்வி "முன்பள்ளிக் கல்விசார் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டியவை", கல்வியியல் வெளியீட்டு நிலையம், யாழ்ப்பாணம்.
7. செல்வராசா. மா. (2005) தொடக்கக் கல்வி பற்றிய சிந்தனைகளும் பாடத்திட்டமும், மணிமேகலைப் பிரசுரம்.
8. ஜெயராசா. சபா. (2007), கலைத்திட்டம், அகவிழி வெளியீடு.
9. சுவர்ணராசா. க, (2007), ஆரம்பப் பாடசாலை கலைத்திட்ட விருத்தியும் ஆசிரியர்களின் புலக்காட்சியும் அகவிழி.
10. கினிகே. ஐ. எல். (2008), புதிய கலைத்திட்ட நோக்கும் பாடசாலைக் கல்வியில் எதிர்பார்க்கப்படும் மாற்றமும், கல்வி வாண்மைத்தேர்ச்சி விருத்தி மையவெளியீடு.
11. புண்ணியமூர்த்தி. கி. (2010). கலைத்திட்ட மாதிரிகைகள், வெளியீடு: சேமமடு பதிப்பகம், கொழும்பு.
12. இஸ்மாயில் முஹமத் அஸி ஜின்னாத், (2016). ஒப்பீட்டுக்கல்வி, அயோனி வெளியீட்டகம், கொலன்னாவ.
13. www./wikpedia-org







# இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் மனித வள அபிவிருத்திச் சுட்டிகளின் பங்களிப்பு






**சிதம்பரநாதன் உதயகுமார்**
BA Econ (Hons), MA. M.Phil.
தலைவர்,
பொருளியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**திருமதி கௌதமி உதயகுமார்,**
BA Econ (Hons), PGDE, MEd.
இ.ஆ.சே. 2-I,
யா/ அல்லைப்பிட்டி பராசக்தி
வித்தியாலயம்,
கல்வி வலயம்
தீவகம் .


1950 தொடக்கம் 1980 வரையிலான காலப்பகுதியில் அபிவிருத்தி தொடர்பாக அவதானிக்கப்பட்ட மிக முக்கியமான விடயம் யாதெனில் பல நாடுகளில் அவை அடைந்து கொண்ட பொருளாதார வளர்ச்சியின் பலாபலன்கள் அந்நாட்டு மக்களைச் சென்றடையாமை என்பதாகும். வறுமை, வேலையின்மை, மனிதஉரிமை மீறல்கள், சுற்றுச் சூழலின் அழிவு போன்ற விடயங்களால் உலக நாடுகள் பிரச்சினைகளை அனுபவிக்கத் தொடங்கின. அபிவிருத்திக்கும் மக்களுக்குமிடையே ஒரு இடைவெளி அவதானிக்கப்பட்டது. இது மனித அபிவிருத்தியின் நிலைப்பாடு பற்றிச் சிந்திப்பதற்குக் காரணமாக அமைந்தது.

கடந்த நூற்றாண்டின் இறுதித் தசாப்தத்தில் மனித அபிவிருத்தி தொடர்பான எண்ணக்கரு வளர்ச்சியடைந்தது. அபிவிருத்தி தொடர்பான கருத்தியல் வளர்ச்சியில் மனிதவள அபிவிருத்தி தொடர்பான சிந்தனை ஒரு புதிய பரிமாணமாக அமைந்தது. உலகின் பௌதீக அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் மனித அபிவிருத்திக்குமிடையே சமச்சீரற்ற தொடர்புகள் காணப்படுவதாக மனித வள அறிக்கைகள் மூலம் எடுத்துக் காட்டப்பட்டது.

1990 ஆம் ஆண்டுகளில் மனித அபிவிருத்தி தொடர்பான சிந்தனைகள் சர்வதேச அரங்குகளில் முன்வைக்கப்பட்டன.

பல நாடுகளின் அனுபவங்களிலிருந்து பொருளாதார அபிவிருத்திக்கும் மனித அபிவிருத்திக்கும்இடையேபாரியஇடைவெளி அவதானிக்கப்பட்டன. பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றின் நலன்கள் மக்களில் பெரும்பாலானோரைச் சென்றடையவில்லை. உண்மையில் அபிவிருத்திச் செயற்பாடுகள், மனித மூல வளத்தை மேலும் அபிவிருத்தி அடையக் கூடிய வகையில் அபிவிருத்தி செய்யத் தவறிவிட்டன. அபிவிருத்திக்கும் மனித அபிவிருத்திக்கும் இடையிலான இடைவெளி நீக்கப்பட வேண்டும் என்பதில் மனித அபிவிருத்திப் பொருளியலாளர்கள் மிகக் கவனமாக இருந்தனர்.

அபிவிருத்தி நடவடிக்கைகள் மனிதனுடைய தெரிவுகளை விரிவுபடுத்த வேண்டும் என்பது மனித அபிவிருத்திப் பொருளியலாளர்களின் அடிப்படை எண்ணக்கருவாக இருந்தது.

பொருளாதார வளர்ச்சியின் முக்கிய இலக்குகளில் ஒன்றாக மனித வள அபிவிருத்தி காணப்படுகின்றது. மனித அபிவிருத்தியின் அனைத்துப்பரிமாணங்களையும் உயர்த்துவதே சிறந்த பொருளாதார வளர்ச்சியின் அறிகுறியாகும். ஆனால் பெரும்பாலான நாடுகளின் கடந்த நான்கு தசாப்தகால பொருளாதார வளர்ச்சி அனுபவங்கள் அந்நாடுகள் அவற்றின் சரியான இலக்குகளை அடையத் தவறியுள்ளன என்பதை எடுத்துக்காட்டின. சிறந்த பொருளாதார வளர்ச்சி காணப்பட்ட போதும் அவ்வளர்ச்சியின் நன்மைகள் அனைத்து மக்களையும் சரியான முறையில் சென்றடையாமையினால் அப் பொருளாதாரங்களில் பொருளாதார சமத்துவம் பாதிக்கப்பட்டு மனித அபிவிருத்தி மட்டம் குறைவாகக் காணப்படுகின்றது.

பொருளாதார வளர்ச்சிக்கும் மனித அபிவிருத்திக்கும் இடையே தன்னிச்சையான தொடர்புகள் காணப்படவில்லை என்பதனை பல நாடுகளின் கடந்த கால அனுபவங்கள் காட்டிநிற்கின்றன. ஒரு நாடு பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு மனித வளத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற வாதம் இரு அடிப்படைகளைக் கொண்டிருந்தது.

முதலாவது எண்ணக்கரு உலகில் நடைபெறும் அனைத்து அபிவிருத்தி முயற்சிகளினதும் பெறுபேறுகளை அனுபவிக்கும் உரிமை மனிதர்களுக்குரியது என்ற கருத்தைக் கொண்டுள்ளது. சூழல் பொருளியல் கண்ணோட்டத்தில் இதனை ஆதிக்க உரிமை என்பர். எனவே அபிவிருத்தி தொடர்பான அனைத்துக் கொள்கைத் திட்டமிடல்களிலும் மனிதவளம் முதன்மைப்படுத்தப்படல் வேண்டும். மேலும் அபிவிருத்தியின் அடைவுகள் முழு மனித சமுதாயத்தையும் பரவலான முறையில் சென்றடைவதற்குரிய வழிமுறைகள் உருவாக்கப்படல் வேண்டும் என்பது மனித அபிவிருத்திப் பொருளியலாளர்களின் எதிர்பார்க்கையாகும்.

இரண்டாவது எண்ணக்கரு உலக அபிவிருத்திக்கு மனித வளத்தின் பங்களிப்பை வலியுறுத்தும் ஒன்றாகும். மனித வளத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் பொருளதார அபிவிருத்திச் செயன்முறைகளைச் சிறந்த முறையில் இயக்க முடியும் என்பது மனித அபிவிருத்திப் பொருளியலாளர்களினால் எதிர்பார்க்கப்படும் ஒரு விடயமாகும். இவர்கள் பின்வரும் இருபக்க அணுகு முறைகள் மூலம் தமது வாதத்தை வலியுறுத்துகின்றனர்.

1. பங்களிப்பு தொடர்பான மனித வள எண்ணக்கரு. இதனை நிரம்பல் பக்க அணுகுமுறை எனவும் கூறலாம்.
2. பயன்பாடு தொடர்பான மனித வள அணுகுமுறை. இதனைக் கேள்விப் பக்க அணுகுமுறை எனவும் கூறுவர்.

இவ்விரு கருத்துக்களும் மனிதனை ஒரு சொத்தாக அல்லது மூலதனமாகக் கருதி வெளியிடப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் மிகப்பெரும் சொத்து மனிதனாகும்.

ஒரு நாட்டின் மனிதவளம் அந்நாடு விரும்புகின்ற இலக்குகளை அடையக்கூடிய தகைமையற்றதாக இருக்குமாயின் அந்நாடு அதன் வளங்களிலிருந்து சிறந்த விளைவுகளைப் பெற்றுக்கொள்ள முடியாததாக இருக்கும் என ஏ.எஸ்.பா. தா (A.S.Bad tha) என்பவர் சுட்டிக்காட்டுகின்றார்.

மனித வளத்தின் பெறுமதி, முக்கியத்துவம் என்பன இரு முகத்தன்மை கொண்டிருப்பதாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ஒன்று மனித மூலதனத்தின் பொருளாதாரப் பரிமாணத்தை விளக்குதல். மற்றொன்று அதன் சமூகப் பரிமாணத்தை விளக்குவதாகும். பின்வரும் விளக்கப்படம் மனித வளத்தின் இருமுகத் தன்மையைக் காட்டுகின்றது.

| மனித அபிவிருத்தி | |
|---|---|
| **நிரம்பல் பக்கம்** | **கேள்விப் பக்கம்** |
| உள்ளீடு | நுகர்வு |
| அபிவிருத்தி செயன்முறை | அபிவிருத்தியின் பயனாளிகள் |
| பொருளாதார உபகரணங்கள் | நுகர்வை ஊக்குவித்தல் மீதான முதலீடு |
| மனித மூலதனத்தின் பொருளாதார | மனித மூலதனத்தின் |
| பரிமாற்றத்தை வளப்படுத்துதல் | சமூப் பரிமாற்றத்தை வளப்படுத்துதல் |

நிரம்பல் பக்க அணுகுமுறையானது மனித வளத்தைச் சிறந்த உள்ளீடாக அதாவது மனித மூலதனமாகக் கருதி பொருளாதாரத்தை இயக்குவதற்கான ஒரு முக்கிய உள்ளீடாக் கொள்ளுதல் அணுகுமுறையாகும். இதனால் இதனை மானிடமூலதன அணுகுமுறை(Human capital approach) எனக்கூறுவர். கேள்விப் பக்க அணுகுமுறையானது அபிவிருத்தியின் பயனாளியாக மனித வளத்தைக் கருதி நுகர்வின் மூலம் அபிவிருத்திக்குத் தேவையான தூண்டுதலை வழங்குவதை ஆராய்கின்றது. மேலும் அபிவிருத்தியின் அடைவுகளைப் பயன்படுத்துவதன்மூலம்சமூகப்பரிமாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இதனால் இதனை சமூக அபிவிருத்தி அணுகுமுறை (Social development approach) எனக் கூறுவர்.

இவ்விரு அணுகுமுறைகளும் மனித அபிவிருத்தியின் இருவேறு பரிமாணங்களாகக் கொள்ளப்படுகின்றன. மிக நீண்டகாலமாக இவ்விரு அணுகுமுறைகளும் இருந்து வந்துள்ளன. எனினும் மனித அபிவிருத்தி தொடர்பான புதிய அணுகுமுறை இவ்விரு அணுகுமுறைகளை இணைப்பதையும் அவற்றிற்கிடையே சமாந்தரமான வளர்ச்சியைப் பேணுவதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

மனித மூலவள அபிவிருத்தி தொடர்பான புதிய கண்டுபிடிப்புக்கள் முடிவுக்கும் வழிமுறைக்குமிடையிலான வித்தியாசங்களையும் பொருளாதாரப் பரிமாணங்களுக்கும் சமூகப்பரிமாணங்களுக்குமிடையிலான வித்தியாசங்களையும்பகுப்பாய்வுசெய்கின்றன. அபிவிருத்தியின் பயனாளி, அபிவிருத்தியின் பங்காளி என்ற இரு அடிப்படைகளையும் இணைப்பதன் மூலம் மனித வள அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே மனித வள அபிவிருத்தி தொடர்பான புதிய அணுகுமுறையின் இலக்காக உள்ளது.

உறுதியான ஒரு சமூக அடித்தளம் இன்றி பொருளாதார முன்னேற்றத்தை அடைந்து கொள்வது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். ஏனெனில் சமூக அபிவிருத்தியானது பொருளாதார பங்கேற்பில் தாக்கத்தை வழங்குகின்றது. பொருளாதாரப் பங்கேற்பு

சமூக அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்து கின்றது. அபிவிருத்திக்குச் சாதகமான தன்மைகளைக்கொண்ட மனித வளம் பாரிய பொருளாதார அபிவிருத்திக்கு இட்டுச் செல்கின்றது. புதிய கைத்தொழில் நாடுகளாகிய மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளின் அபிவிருத்தி அனுபவங்கள் மனித வள அபிவிருத்தியின் பொருளாதாரப் பங்களிப்புக்குச் சிறந்த உதாரணங்களாக உள்ளன.

1960 தொடக்கம் 1990 வரையிலான காலப் பகுதியின் உலக அபிவிருத்தி வாய்ப்பாடுகள் மனித அபிவிருத்தி தொடர்பான பல முரண் பட்ட அனுபங்களை வெளியிட்டன. மூன்று தசாப்தங்களுக்குரிய அபிவிருத்திச் சூத்திரமானது ஒவ்வொரு தசாப்தங்களுக்குரிய அபிவிருத்தி இலக்குகள், அக்காலப்பகுதியில் எதிர் நோக்கிய தடங்கல்கள், அத்தடங்கல் களைக் கையாள்வதற் காக முன்வைக்கப்பட்ட யுக்திகள், இவற்றுக்கான மாற்று வாய்ப்புக்கள் என்பவற்றை அடிப் படையாகக் கொண்டி ருந்தது.

இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பிற்பட்ட இரு தசாப்தங்களில் பொருளாதார வளர்ச்சி உலக நாடுகளின் முக்கிய இலக்காக இருந்தது. பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்வதில் வளர்முக நாடுகளில் உள்நாட்டு மூலதனவாக்கம் பிரதான தடையாக இருந்தது. இத்தடையை நீக்குவதற்கு வெளிநாட்டு முதலீடுகளும் உதவிகளும் பிரதான மாற்று யுக்திகளாக முன்வைக்கப்பட்டன. இது பொருளாதார வளர்ச்சிக்கு உதவிய அதே வேளை நவகாலணித்துவப் பாதிப்புக் களையும் ஏற்படுத்தியது. போல்பரன், சஅமீன், அன்ட்ரூ குண்டர் பிராங் போன்றவர்களால் முன்வைக்கப்பட்ட நவ மார்க்ஸீய தங்கிநிற்றல் கோட்பாடும் சுற்றயல் - மைய அணுகுமுறையும் வளர்முக நாடுகளில் காணப்பட்ட நவ காலணித்துவத்தை வெளிப்படுத்தும் அணுகு முறைகளாக இருந்தன.

1970 தொடக்கம் 1980 களில் அமைப்பு வாதமும் 1890 - 1990 களில் நவதாராளவாதமும் அபிவிருத்திக்கான புதிய தந்திரோபாயங்களாக முன்வைக்கப்பட்டன. 1970 களில் அபிவிருத்தியின் பிரதான தடைகளான அரச தலையீடு, சந்தைத் தோல்வி, சொத்துரிமை முரண்பாடுகள், தேசியமயமாக்கல் போன்றன அடையாளம் காணப்பட்டன. வளர்முக நாடுகளில் அரச சோஸலிசம் கவர்ச்சியான அரசியல் பொருளாதாரமாக வளர்ச்சியடையத் தொடங்கியது. அதிகரித்த தங்கிநிற்றல், நவமார்க்ஸிசம் போன்ற சிந்தனைப் போக்குகள் வளர்ச்சியைத் தடைசெய்யும் காரணிகளாக இருந்தன. இக்காலப்பகுதியில் மனித மூலதன வாக்கம் பிரதான மாற்று யுக்தியாக அமைந்திருந்தது.

1980 - 1990 களில் நவதாராளவாம் வளர்ச்சியடையத் தொடங்கியது. அரச தலையீடு குறைக்கப்படல் வேண்டும் என்ற கருத்து சர்வதேச அமைப்புக்களால் வலியுறுத்தப்பட்டது. அதன் காரணமாக அரச தலையீடுகள் குறைக்கப்பட்டு அமைப்புரீதியான சீராக்கல்கள் முன்வைக் கப்பட்டன. சந்தைத் தொழிற்பாடு பிரதான மாற்று யுக்தியாக முன்வைக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் மனிதமுகத்துடன் கூடிய சீராக்கங்கள் தொடர்பான பிரேரணைகள் முன் மொழியப்பட்டன.

1990 களிலான தசாப்தத்தின் அபிவிருத்தி வாய்ப்பாடுகள் மனித வள அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு என்பவற்றைப் பிரதான இலக்காகக் கொண்டிருந்தன. இவற்றை அடைந்து கொள்வதில் பொருளாதார மந்தம், அதிகரித்த வறுமை, பொருளாதாரத் தேக்கநிலை என்பன தடையாக இருந்தன. இக்காலப்பகுதியில் மனித அபிவிருத்திக்கான அடிப்படைச் தேவைகளில் முதலீடு செய்வது பிரதான யுக்தியாக அமைந்திருந்தது.

1988 ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் தலைநகரான ஜகர்த்தாவில் நடைபெற்ற

ஆசியப் பிராந்தியங்களுக்கான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சமூகப் பொருளாதார ஆணைக்குழுவின் மகாநாட்டில் மனித மூல வள அபிவிருத்தி தொடர்பான ஜகர்த்தாப் பிரகடனம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இப் பிரகடனம் மனித மூலவள அபிவிருத்தியானது சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு அடிப்படையானதும் அத்தியாவசியமானதுமான ஒரு கூறாக இருந்து வருகின்றது என்ற கருத்தை வெளிப்படுத்தியது. மேலும் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயம் செய்யும் இயற்கைப் பண்புகளும் மனித மூலதனத்தை நிர்ணயம் செய்யும் பண்புகளும் பெருமளவுக்கு ஒத்துள்ளன என இப்பிரகடனம் கருதியது.

1988இல் ஜகார்த்த மாநாடு முன்வைத்த மனிதவள அபிவிருத்திக்கான செயற்றிட்டத்தில் 106 செயலாக்க ஆலோசனைகள் உள்வாங்கப்பட்டன. அதன் பின்னர் உலக நாடுகளில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பொறுப்புடையவர்கள் மனித வள அபிவிருத்தி பற்றிய எண்ணக்கருவில் அதிக அக்கறை காட்டத் தொடங்கினர்.

ஜகர்த்தாப் பிரகடனத்தின் முக்கிய இலக்குகளில் ஒன்று நுண்பாக மட்டத்திலான மனித வள அபிவிருத்திக்கும் பெரும்பாக மட்டத்திலான அபிவிருத்திக்குமிடையே கொள்கை வகுப்பதில் இணக்கம் காண்பதாகும். தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் வீட்டுத்துறைத் தீர்மானங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட மனித அபிவிருத்திச் செயற்பாடுகள் தேசியமட்டத்திலான கல்வி, சுகாதாரம், தொழில்வாய்ப்புக்கள் தொடர்பான மனித அபிவிருத்தி செயற்பாடுகளுடன் இணைந்து செல்லக்கூடிய வகையில் கொள்கைத் திட்டங்கள் வகுக்கப்படல் வேண்டும் என்பது இப் பிரகடனத்தின் எதிர்பார்க்கையாக இருந்தது.

ஜகர்த்தாப் பிரகடனங்கள் முன்வைத்த மற்றொரு விடயம் மனித மூலவளத்தின் உற்பத்தி சார்நிலையினை மனித மூலவளத்தின் நுகர்வுப்பங்குடன் ஒருங்கிணைக்கக் கூடியதாக மனித வள அபிவிருத்திக் கொள்கைகள் அமைந்திருக்க வேண்டும் என்பதாகும். ஏனெனில் மனித நுகர்வினை அதிகரிப்பதன் மூலம் தெரிவிக்கப்படும தனிநபர் மற்றும் குடும்ப விருப்பங்கள் உற்பத்திக்கான தூண்டுதல்களாகவும் இலாபமாகவும் அமைகின்றன. இது மனித வளம் நுகர்வினூடாக உற்பத்தியில் பங்கேற்கும் ஒரு செயற்பாடாக அமையும். மனித அபிவிருத்தியின் மூலம் இது தூண்டப்படுவதால் இதனை வெகுமதியுடன் கூடிய பங்கேற்பு எனக் கூறப்படுகின்றது.

நுகர்வுப் பண்புகளும் நடத்தைகளும் தனிநபரின் வாழ்க்கைத் தரத்தைப் பிரதிபலிக்கின்றன. வெகுமதியுடன் கூடிய பங்கேற்பு அதாவது வேலைவாய்ப்பு, சம்பளம், கூலியல்லா வருமானங்கள் போன்ற பல சலுகைகளைப் பெற்றுக்கொள்ளும் ஒரு தொழிலாளி நுகர்வோனாக மாறும் போது பெரும்பாக மட்டத்திலான நுகர்வு மாற்றம் பெறுகின்றது. தொகை வாரியாவும் பண்பு ரீதியாகவும் நுகர்வு மாற்றம் பெறுகின்றது. இது உற்பத்திகள் மீதான கேள்வியில் செல்வாக்குச் செலுத்துகின்றது. இதேவேளை மனித மூலவளம் மீதான முதலீடுகள் அவர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்வதனூடாக உற்பத்தியைப் பெருக்குவதற்கு உறுதுணையாக அமைவதுடன் நுகர்வுப் பாங்குகளையும் மாற்றியமைக்கின்றன. எனவே பொருளாதார கொள்கை வகுப்பில் நுகர்வு உற்பத்தி என்பவற்றிற்கிடையே சமாந்தரமான இணைப்பு நிலை உருவாக்கப்பட வேண்டும் என்பதும் இப்பிரகடனத்தின் முக்கிய அம்சமாகும்.

மனித மூலவள அபிவிருத்தியின் மூலம் முன்னேற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அல்லது சமூக முன்னேற்றத்துக்கு உதவக்கூடிய பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் அதே வேளை, பொருளாதார வளர்ச்சி மற்றும்

அபிவிருத்தியுடன் ஒத்துப்போகக்கூடிய சமூக அபிவிருத்தியை ஏற்படுத்தும் வகையில் மனித மூலவள அபிவிருத்திக்கான உத்திகள் அமைந்திருத்தல் வேண்டும்.

பருநிலைப் பொருளியல் மட்டத்தில் மனித அபிவிருத்தி தொடர்பான உபாயங்களைச் செயற்படுத்துவதில் வேலைவாய்ப்பு முக்கிய காரணியாக உள்ளது. வேலைவாய்ப்பு வளங்களின் தொழில் பங்கேற்பினை உறுதிப் படுத்துகின்றது. உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்வதனூடாக பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்றது. மேலும் தனி மனிதர்களின் வருமானம், வாழ்கைத்தரம், சுயமரியாதை, சமூக அந்தஸ்து போன்ற விடயங்களையும் தீர்மானின்கின்றது. எனவே தொழில் வாய்ப்புக்களின் அதிகரிப்பு நுண்பாக மட்டத்தி லும் பெரும்பாக மட்டத்திலும் மனித வள அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்கின்றது. எனவே நாடுகள் தொழில் வாய்ப்பினை உறுதிப் படுத்துதல் ஐகர்த்தாப் பிரகடனங்களில் முக்கியமானதாக அமைகின்றது.

மனித அபிவிருத்தி என்ற எண்ணக்கரு பிறக்கக்கூடிய ஒவ்வொரு மனிதனையும் வளமாகவும் பெறுமதிமிக்க சொத்தாகவும் கருதி அவற்றை வளர்த்தல், பாதுகாத்தல், பொருளாதார அபிவிருத்திக்குப் பயன் படுத்துதல் என்ற அடிப்படையில் மேற்கொள் ளக்கூடிய நடவடிக்கையின் தொழிற்பாடுகளை சுட்டிக்காட்கின்றது என மனித அபிவிருத்தி அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

மனித அபிவிருத்தியும் பொருளாதார அபிவிருத்தியும் பரஸ்பரம் தங்கிநிற்கும் தன்மை கொண்டவை என்பதையும் இவ்வெண்ணக்கரு வலியுத்துகின்றது. இவ்விடைத் தொடர்புகள் எவ்வாறு ஏற்படலாம் என்பது பற்றி வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டையும் இணைப்பதில் தன்னிச்சை யான இயக்கப்பாடுகளைக் கொண்ட சுதந்திர சந்தைப்பொறி அமைப்பு உதவமுடியும் என்ற கருத்து நடைமுறை அனுபவங்கள் மூலம் பலவீனமாக்கப்பட்டுள்ளது. இவ்விணைப்பை ஏற்படுத்துவதில் ஒரு நடுநிலையான ஊடகம் அவசியமானது என்ற கருத்து வலியுறுத் தப்பட்டுள்ளது. 1980 களில் மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, கொங்கொங் போன்ற தென்கிழக்கு மற்றும் கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார மனிதவள அபிவிருத்தி தொடர்பான அனுபவங்கள் இதனை உண்மைப்படுத்தியுள்ளன.

மனித அபிவிருத்தி மீதான பாரிய முதலீடுகளே திலைத்து நிற்கும் தன்மை யுள்ள பொருளாதார வளர்ச்சியை உறுதிப் படுத்தியுள்ளன. கிழக்காசிய நாடுகளில் இணைப்புத் தொடர்பூடகமாகப் பெரும் பாலும் அரசாங்கமே செயற்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. பழம் பொருளிய லாளர்களின் சிந்தனைகளின் தலையிடாத தன்னியக்கத் தொடர்பை விட கெயின் சியவாதத்தின் அடிப்படைகளைக் கொண்ட தலையீட்டு வாதத் தொடர்புகள் இந்நாடுகளில் பய னளித்திருப்பதைக் காணமுடிகின்றது. இவ்விடையத்தொடர்பு ஊடகங்களாக அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் துறை போன்றன பங்களிப்புச் செய்ய முடியும். இப்பங்களிப்பு மூலம் பொருளாதார வளர்ச்சியை மனித நலன்களுக்கும் மனித வள அபிவிருத்தியை பொருளாதார வளர்ச் சிக்கும் பரஸ்பரம் பயன்படுத்தக்கூடிய சிறந்த திட்டமிடல்கள் இந்நாடுகளில் அமுல்படுத்தப்பட்டுள்ளன என்பதனைக் காணக்கூடியதாக உள்ளது.

பொருளாதாரத்தின் பல்வேறு கூறுகளை அளவிடுவதற்காகப் பல்வேறு சுட்டிகள் பயன் படுத்தப்படுவது போல் மனித அபிவிருத்தியை அளவிடுவதற்காக மனித அபிவிருத்திச் சுட் டெண் (Human Develoment Index - HDI), பால்நிலை அபிவிருத்தி சுட்டெண் (Gender Related - Development Index - GDI) பால்நிலை மேலாதிக்க அளவீடு (Gender Empowerment Measure - GEM) ஆகிய சுட்டெண்கள்

அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. 1990 ஆம் ஆண்டு முதல் மனித அபிவிருத்தியின் பல்வேறு பகுதிகளை ஒன்று சேர்க்கப்பட்ட வகையில் அல்லது இவற்றினை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய வகையில் பல விடயங்களை ஒன்று சேர்த்த சுட்டெண்களை ஐக்கிய நாடுகள் சபை அறிமுகம் செய்துள்ளது. ஏனைய சுட்டெண்கள், புள்ளி விபரக் குறிகாட்டிகளை விட மனித அபிவிருத்திச் சுட்டெண் ஆழமான கருத்துக்களைக் கொண்டதாக அமைக்கப்படுள்ளது.

வருமான அளவீடுகளை மனித அபிவிருத்தியின் அடிப்படையாகக் கொள்வதைவிட விரிவான உள்ளடக்கங்களை மனித அபிவிருத்திச் சுட்டெண் கொண்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) பொருளாதார நலன்களை அளவிடுவதற்கான ஒற்றையான குறிகாட்டியாக உள்ளது. இச்சுட்டெண் மனித அபிவிருத்தியை அளவிடுவதற்கான போதுமான குறிகாட்டியாக இருக்கமாட்டாது. ஏனெனில் மனித அபிவிருத்தி பரந்துபட்ட கருத்தையும் மனித வாழ்வின் பல கூறுகளைக் காட்டும் எண்ணக்கருக்களையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. நீளமான ஆரோக்கியமான வாழ்க்கை, அறிவுடமை, கௌரவமான வாழ்க்கைக்கும் தேவையான வளங்கள், உற்பத்திக்கான வினைத்திறன், அரசியல் பொருளாதார வாய்ப்புக்களை அனுபவிப்பதற்கான சுதந்திரமும் பாதுகாப்பும், பயத்திலிருந்து பாதுகாப்பு, சுயகௌரவத்தை நிலை நிறுத்தல், பொருத்தமான மேலாதிக்கத்தைக் கடைப்பிடித்தல், மக்களின் சமூகப் பங்கேற்புப் போன்ற பல விடயங்களை உள்வாங்குவதன் மூலம் மனித அபிவிருத்தியைச் சரியான முறையில் அளவிடமுடியும்.

மனித அபிவிருத்தி சுட்டெண் பல்வேறு நாடுகள், பிராந்தியங்களுக்கிடையிலான மனித வள அபிவிருத்தியின் அடைவுகளை வரிசைப்படுத்தும் நோக்கில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சுட்டெண் மூன்று அடிப்படைப் பரிமாணங்களினை மனித ஆற்றலின் அடைவுகளின் அடிப்படையில் கொண்டிருக்கின்றது. அவையாவன.

1. நீண்ட ஆரோக்கியமான வாழ்வு
2. கல்வியுடமை / அறிவு
3. கௌரவமான வாழ்க்கைத்தரம்

இம் மூன்று விடயங்களினையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில்

1. ஆயுள் எதிர்பார்க்கை
2. கல்வித்தரம்
3. கௌரவமான வாழ்க்கை

இங்கு நீண்ட ஆயுள் என்பது பிறப்பிலிருந்து இறக்கும் வரை அவன் வாழுகின்ற சராசரி காலத்தினைக் குறித்து நின்கின்றது.

கல்வி அறிவு என்பது வயது வந்தோர் எழுத்தறிவு விகிதத்துடன் ஆரம்ப இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைக் கல்வியில் மக்களின் பங்கேற்பு என்பவற்றைத் தொகுத்ததாகக் கணிக்கப் படுகின்றது.

கௌரவமான வாழ்க்கை என்பது வாழ்க்கை தரத்தை குறிக்கின்றது. இது தலா உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படும். அதாவது ஐக்கிய அமெரிக்க டொலர்களினால் இது கணிக்கப்படுகின்றது.

மனித அபிவிருத்தி சுட்டெண்ணின் படி உலகில் உள்ள நாடுகளை மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. சுட்டெண் 0.5ஐ விடக் குறைவாக உள்ள நாடுகள் குறைந்த மனித அபிவிருத்தியைக் கொண்ட நாடுகள் எனப்படும்.
2. சுட்டெண் 0.5 - 0.799 க்கும் இடைப்பட்ட நாடுகள் நடுத்தர மனித அபிவிருத்தியை கொண்ட நாடுகள் எனப்படும்.
3. சுட்டெண் 0.8 அல்லது அதைவிட அதிகமாக உள்ள நாடுகள் உயர்ந்த மனித அபிவிருத் தியைக் கொண்ட நாடுகள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

மனித அபிவிருத்திச் சுட்டெண் மனித அபிவிருத்தியைப் பல்வேறு கோணங்களில் அறிமுகம்செய்தபோதும்சிலகுறைபாடுகளைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. இச்சுட்டெண் ஒரு புள்ளிவிபரச்சராசரியாகும். மனித அபிவிருத்தியின் முழு விபரங்களையும் இச்சுட்டெண்பிரதிபலிக்கும்எனக்கூறமுடியாது. இச்சுட்டெண்ணைப் பயன்படுத்த வேறுபட்ட குழுக்களின் தராதரங்களை அறியமுடியாது. இனம், மதம், பால்நிலைசார்ந்த பலகுழுக்களின் அபிவிருத்தி நிலையினை இச்சுட்டெண் பிரதிபலிக்கமாட்டாது.

தென்னாபிரிக்கா, வெனிசூலா. மொரோக்கோ, இந்தியா போன்ற நாடுகளில் பிராந்திய இன, மத அடிப்படையிலான மனித அபிவிருத்தி முரண்பாடுகள் காணப்படுகின்றன எனக் குறை கூறப்படுகின்றது. மனிதனின் தீர்மானம் எடுத்தல், சமூக மற்றும் அபிவிருத்திப் பங்கேற்றல் போன்வற்றை இச்சுட்டெண்ணின் கூறுகள் உள்வாங்கவில்லை எனவும் மனிதன் பார்வையாளராக இருக்கிறானா அல்லது பங்காளிகளாக இருக்கிறானா என்பதனை HDI ஐ கொண்டு அறிய முடியாது எனவும் விமர்சனங்களில் தெரிவிக்கப்படுகின்றன.

மனித அபிவிருத்திச் சுட்டெண் முழு மனித சமுதாயத்துக்குமான பொதுவான குறிகாட்டியாகும். பால் அடிப்படையில் ஆண், பெண்களின் அபிவிருத்தி நிலையை இச்சுட்டெண் சரியாகப் பிரதிபலிக்கமாட்டாது. 1990 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மனித அபிவிருத்திச் சுட்டெண்ணானது ஆண்கள், பெண்கள் ஆகியோரின் ஒட்டு மொத்தக் கணிப்பாகவே கணிக்கப்பட்டு வந்தது. பெண்களின் அபிவிருத்தி, ஆண்களின் அபிவிருத்தி என்று பிரித்து சராசரி வீதங் களினைக் கணிப்பிடத் தவறி விட்டது. இன்றைய காலகட்டங்களில் பெண்களின் அபிவிருத்தி என்பது மிகமுக்கியமானது. பொருளாதாரச் செயற்பாடுகள் மற்றும் பல்வேறுபட்ட துறைகளில் பெண்களின் நுழைவு பெண்களின் அபிவிருத்திக்கான பங்களிப்பு பெறுமதியிட முடியாததாகும். இதற்குப் பெறுமதியிடல் நடவடிக்கைகள் தற்போது நடைமுறையிலுள்ள அரசியல் சமூக பொருளாதாரக் கட்டமைப்பினை மாற்றியமைப்பதாக அமையக்கூடும் என மனிதவள அறிக்கை கூறுகின்றது.

பால் நிலை அபிவிருத்தியைச் சரியான முறையில் அளவிடுவதற்காக இரண்டு சுட்டெண்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அவை பால்நிலை அபிவிருத்தி சுட்டெண் (Gender Related - Development Index - GDI). பால்நிலை மேலாதிக்க அளவீடு (Gender Empowerment Measure - GEM) ஆகிய சுட்டெண்களாகும். GDI பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

1. ஆயுள் எதிர்பார்க்கை
2. கல்வி அறிவு வீதம்
3. ஆரம்ப, இடைநிலை, மூன்றாம் நிலைக் கல்வியில் ஆண், பெண்களின் பங்களிப்பு வீதம்

மேற்கூறப்பட்ட மூன்று விடயங்களிலும் ஆண்கள், பெண்கள் என்பவற்றின் பங்களிப்பு வீதங்களை அளவிட்டுக் கூறுவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டதாகும். கல்வியைப் பொறுத்தவரை கல்வியின் மூன்று படித் தரங்களிலும் பெண்களின் தேறிய பங்களிப்பு கணக்கில் கொள்ளப்படுகின்றது. பிறப்பில் ஆயுள் எதிர்பார்க்கை, மொத்தக்கருவளம், கர்ப்பிணிப் பெண்களின் மரணவீதம் என்பனவும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. குடும்ப வருமானத்தில் பெண்கள் உழைப்பின் பங்கும் உள்வாங்கப்பட்டுள்ளது.

பெண்களின் அபிவிருத்தி நிலையை அளவிடுவதற்கு அறிமுகம் செய்யப்பட்ட மற்றொரு சுட்டெண் பால்நிலை மேலாதிக்க அளவீடு (Gender Empowerment Measure - GEM) ஆகும். பால் நிலை மேலாதிக்க

அளவீடு என்பது முகாமைத்துவம், நிர்வாகம் போன்ற தலைமைத்துவப் பொறுப்புக்களில் பெண்களின் பங்களிப்பினைச் சுட்டிக் காட்டு கின்றது. இது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

1. பெண்களின் பாராளுமன்றப் பிரதி நிதித்துவம், இது பெண்களின் அரசியல் பங்கேற்பை உறுதிப்படுத்தும் ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. பாராளுமன்ற அங்கத்துவம் மட்டுமன்றி மாகாண சபைகள், மாநகர மற்றும் நகர, பிரதேச சபைகளின் பிரதிநிதித்துவத்தையும் கவனத்தில் கொள்கின்றது.
2. பெண்களின் நிர்வாக தலைமைத்துவப் பொறுப்புகள், நிறுவனங்கள், திணைக் களங்கள், அமைச்சுச் செயலாளர் பொறுப் புக்கள் என்பவற்றில் பெண்கள் தலைமை நிர்வாகிகளாக, முகாமையாளர்களாக எந்தளவு பணிபுரிகின்றனர் என்பதனைக் குறிப்பிட்டு நிற்கின்றது.
3. உயர் மட்ட பதவிநிலைத் தொழில்கள் மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளில் பெண்களின் பங்களிப்பு, உயர்பதவிகள், நிர்வாக கட்டத்திலான பதவிகள், வெளிநாட்டு சேவைகளில் பங்கேற்பு, தொழில்நுட்ப அறிவியல் பங்களிப்பு, தொழில்நுட்ப ஆய்வுகளில் ஈடுபாடு போன்றவற்றில் பெண்கள் எந்தளவு பங்கேற்று வருகின்றனர் என்பதனை இது காட்டுகின்றது.
4. உழைக்கும் வருமானத்தில் தேசிய மட்டத்திலோ குடும்ப மட்டத்திலோ பெண்களின் பங்கு, மொத்தத் தேசிய வருமானத்தில் பெண்களின் பங்கு என்ன, தமது குடும்ப வருமானத்தில் அவர்களின் பங்கு என்ன என்பதனை இது குறிப்பிடுகின்றது. அதாவது குடும்ப அடிப்படையிலானநுண்பாகமட்டத்திலும் தேசிய ரீதியாக பேரண்ட மட்டத்திலும் பெண்களின் வருமானப் பங்களிப்பு எவ்வாறு காணப்படுகின்றது என்ற விடயம் இங்கு கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

பொதுவாக இவ்விடயகள் ஒரு நாட்டின் சமூக பொருளாதார அரசியல் விடயங்களில் பெண்களின் பங்கேற்பு எந்தளவு காணப்படுகின்றது என்பதை அறிந்து கொள்ள உதவுகின்றன. இதுவரை அளவிடப்பட்ட சுட்டெண்களில் மிக உயர்ந்த அளவு 0.8 ஆகக் காணப்படுகின்றது. பத்து நாடுகளிலேயே இச்சுட்டெண் 0.6 ஐ விட உயர்வாகக் காணப் பட்டது. நோர்வே. சுவீடன், பின்லாந்து போன்ற நாடுகள் உயர்ந்த சுட்டெண்ணைக் கொண்டுள்ளன.

மனித அபிவிருத்தியை அளவிடுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையால் அறிமுகப்படுத் தப்பட்ட மனித அபிவிருத்திச் சுட்டெண் ஆனது சில குறைபாடுகளைக் கொண்டு காணப் பட்டாலும் இச்சுட்டிகளின் செயற்பாடானது பயனுள்ள வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (Human Development Reports 2000 - 2007), (மனித உரிமைகளும் அபிவிருத்தியும் - 2006)

தற்போது இலங்கையின் தலாவரு மானமானது 3530 U$ ஆகக் காணப்படுகின்றது. இலங்கையின் ஆள்வீத வருமான அதி கரிப்பு, மானிய முறைக்கொள்கை, சனசவிய, சமுர்த்தி போன்ற திட்டங்கள் தொழில் வாய்ப்புக்களை அரசாங்கம் வழங்குகின்றமை, வெளிநாட்டுக்காரணி வருமானங்கள், உலகமயமாதல் போன்றனவும் இலங்கையில் வருமான மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தி யுள்ளது. இலங்கையின் மனித அபிவிருத்தியில் இலங்கையின் அரசியல் நெருக்கடிகள், மனித பாதுகாப்புக்கு உத்தரவில்லாத நிலை, அரசியல் மாற்றங்கள் அரசியல் ஸ்திரமற்ற தன்மை, அரசியல் பழிவாங்கல்கள், சர்வ தேச பொருளாதார நெருக்கடிகள், அதி கரித்து வருகின்ற குற்றச்செயல்களும் அதனால் ஏற்பட்டுள்ள மன அழுத்தங்கள் போன்ற தடையாக காணப்பட்டாலும்,

இலங்கையினுடைய மனித அபிவிருத்தியானது ஏனைய நாடுகளுடனும் உலகளவிலும் நோக்குகின்றபோது குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றது. மனித அபிவிருத்திச் சுட்டிகளில் அண்மைய ஆண்டுகளில் ஏற்பட்ட அபிவிருத்தியானது அபிவிருத்தி அடைந்த ஒரு நாட்டின் மட்டத்தை நெருங்கியதாகக் காணப்படுகின்றது.

## Bibliography


1. ஹேறவாவிதாரண, பீ. 1994 ஒட்டுமொத்த அபிவிருத்திக்கான ஒரு அணுகுமுறை என்ற வகையில் மனித மூலவளங்களின் அபிவிருத்தி, பொருளியல் நோக்கு, மார்ச் 1994
2. விஜய ஜயதிலக 2000 மனித உரிமைகளின் பிற்புலத்தில் வறுமை ஒழிப்பு. பொருளியல் நோக்கு, நவம்பர் - டிசம்பர் 2000, மக்கள் வங்கி வெளியீடு, கொழும்பு.
3. சண்முகலிங்கம். க. (2006) "மனித உரிமைகளும் அபிவிருத்தியும்", அகவிழி பதிப்பகம், கொழும்பு 07
4. இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் (2005 - 2015)
5. UNDP, Human Development Reports (1999)
6. UNDP, Human Development Reports (2007)
7. UNDP, Human Development Reports (2008)
8. www.koodal.com
9. www.wikipedia.org

# சிங்கப்பூரும் இலங்கையும்: லீ குவான் யீயின் குறிப்புக்களில் அனுபவ பகிர்வு

## (Singapore and Sri Lanka: Experiences in Notes from Lee Kuan Yew)



1. அறிமுகம்

1960 களில் சிங்கப்பூரில் இருந்து இலண்டனுக்குப் பயணம் செய்பவர்கள் சிங்கப்பூரில் இருந்து நேரடியான விமான சேவை இல்லாத காரணத்தால் இலங்கை ஊடாகவே பயணம் செய்தார்கள். சிங்கப்பூர் பாராளுமன்றத்தில் இலங்கை போன்று சிங்கப்பூர் பொருளாதாரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என சில உறுப்பினர்கள் குறிப்பிட்டு உள்ளனர். 1961 இல் இலங்கையின் தலா வருமானத்துக்கும் சிங்கப்பூரின் தலா வருமானத்துக்கும் இடையிலான வேறுபாடு US$ 300 ஆகும். இது 2015இல் US$ 48217 ஆகும்.

பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக சிங்கப்பூரையும் இலங்கையையும் தொடர்பு படுத்தி ஒப்பிட்டு வேறுபடுத்தி நோக்க முடியும். இலங்கையில் உள்ள இனக்குழுமங்களின் விகிதாசாரமும் சிங்கப்பூருடன் ஏறத்தாழ ஒத்து இருக்கின்றது. இலங்கையில் 75 வீதமான பெரும்பான்மை மக்களாக சிங்களவர் இருக்கின்றனர். சிங்கப்பூரில் 74 வீதமான பெரும்பான்மை இனத்தவர்களாக சீனர்கள் இருக்கின்றனர். இலங்கையில் சிறுபான்மை இனமாக தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் காணப்படுகின்றனர். இது சிங்கப்பூரில் மலே மற்றும் தமிழர்களாகக் காணப்படுகின்றனர். மலே மக்கள் மலேசியாவைத் தளமாகக்

கலாநிதி **செ. சந்திரசேகரம்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொருளியற் துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கொண்டவர்களாகவும் தமிழர்கள் இந்தியாவைத் தாயகமாகவும் கொண்டுள்ளனர். இலங்கையில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் தாய்மொழியாகக் காணப்படுவது போன்று சிங்கப்பூரில் சீனமொழி, தமிழ்மொழி மற்றும் மலே போன்றன தாய்மொழியாகக் காணப்படுகின்றன. ஆங்கிலம் அரச கரும மொழியாகும்.

இலங்கை நீண்டகாலம் ஆங்கிலேயரின் ஆட்சியில் இருந்தது போன்று சிங்கப்பூரும் நீண்ட காலம் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் இருந்து மேலைத்தேசக் கலாசாரத்தின் செல்வாக்குக்கு உட்பட்டு இருந்துள்ளது. இரு நாடுகளில் உள்ள அரசியல் உயர்குழாம் ஆங்கிலேய மோகத்தின் கீழ் இருந்து ஆங்கிலேய பொருளாதார மற்றும் சமூக மாற்றத்துக்கு உட்பட்டிருந்தது.

இரண்டு நாடுகளுக்கு இடையில் பொருளாதார அபிவிருத்தியை ஒப்பீடு செய்வதற்குப் பல ஒற்றுமைகள் இருப்பினும் பல வேறுபாடுகளையும் சுட்டிக் காட்ட முடியும்.

1. இலங்கையின் வரலாறு நீண்டகால குடியியல் மரபுரிமையைக் கொண்டிருக்கின்றது. சிங்கப்பூரின் வரலாறு மிகக் குறுகியதாகும்.
2. சிங்கப்பூர் ஓர் நகர அரசுக்குரிய பண்புகளைக் கொண்டிருக்கின்றது. சிறிய சனத்தொகை, கைத்தொழில் மற்றும் சேவைத்துறையில் அதிகம் தங்கியிருக்கின்றது. இலங்கை ஒப்பீட்டு ரீதியில் பெரிய பரப்பளவைக் கொண்ட நாடாகவும், விவசாயமும், அதில் தங்கியிருக்கும் மக்கள் அதிகமாகவும் காணப்படுகின்றது.

சிங்கப்பூருக்கு சீனாவின் பின்னணி இருப்பது போன்று இலங்கைக்கு இந்தியாவின் பின்னணி இருக்கின்றது. 1950களில் இலங்கையின் பொருளாதாரம் சிங்கப்பூரின் பொருளாதாரத்தைவிட பல்வேறு குறிகாட்டிகளில் உயர்நிலையில் இருந்துள்ளது.

## 02. உள்கட்டுமானங்கள்

இலங்கை மிகப்பெரிய இளமையான பெருந்தோட்டத்துறையையும் அதில் இருந்து சிறந்த வெளிநாட்டுச் செலாவணியையும் ஈட்டிக் கொண்டிருந்தது. இந்தக்கொடை சிங்கப்பூருக்கு பூச்சியமாகும். இலங்கையின் உள்கட்டுமான வசதிகள் 1950, 60களில் சிங்கப்பூரை விட சிறந்ததாகக் காணப்பட்டுள்ளது. கல்வி, சுகாதாரம் ஏனைய மனிதவள மேம்பாட்டுக் குறிகாட்டிகளிலும் சிங்கப்பூரை விட இலங்கை உயர்நிலையில் இருந்தது. இவ்விடயத்தை லீ குவான் யூ பின்வருமாறு விபரிக்கின்றார்.

*''இலங்கைக்கான எனது முதலாவது பயணம் இலண்டனுக்குச் செல்கின்ற வழியில் 1956 ஏப்ரல் மாதத்தில் இருந்தது. காலிமுகத்திடலில் உல்லாசப் பயணிகள் விடுதியில் தங்கியிருந்தேன். கொழும்பு நகரத்தை வலம் வந்த போது யுத்தத்தால் (இரண்டாம் உலகப் போரால்) பாதிக்கப் படாத பல பொதுக்கட்டடங்களால் பிரமை யடைந்தேன்''*[1] என்றார்.

1956இல் சிங்கப்பூர் நகரத்தைவிட கொழும்பு நகரம் சிறப்பாக இருந்துள்ளது[2].

1. My first visit to Sri Lanka was in April 1956 on my way to London. I Sayed at Galle face Hotel,........ I Walked around the city of Colombo impressed by the public buildings, many with stone facing undamaged by war.Because Mountbatten had based his south east Asia Command in Kandy. Ceylon had more resource and better infrastructure than Singapore Lee Kuan Yew (2011) p.413

2. ''We have got to live with the consequences of our actions and we are responsible for our own people and we take the right decisions for them. You look at the old Phillippines. The old Ceylon The old East Pakistan and several others. I have been to these countries and places. When I went to Colombo for the first time in 1956 it was a better city than singapore because singapore had three and a half years of Japanese occupation and Colombo was the centre of HQ of Mountbattens Sou theast Asia command........ One -man one-vote led to the domination of the Sinhalese majority over the minority Tamils Who were the active and intelligent fellows who worked hard and got themselves penalised. And English was out. They were educated in English. Sinhalese was in They got quotas. in two universities and now they have become fanatical Tigers. And the country will never be put together again" By Han Fook K wang Warren Fernandez and Sumiko Tan (1998) Lee Kuan Yew: the Man and His Ideas .

**03. அரசியல்வாதிகளின் சுயநலக் கொள்கைகள்**

இலங்கையின் உச்சமான பொருளாதார நிலையை சிதைத்து முரண்பாடுகளையும் யுத்தத்தையும் ஏற்படுத்திய அரசியல் தலைவர்களில் S.R.W பண்டாரநாயக்காவை எவரும் எளிதில் மறக்க முடியாது. லீ (Lee Kuan Yew) இலங்கைக்கு முதல் முதல் பயணம் செய்து ஓரிரண்டு ஆண்டுக்குள் இலங்கையில் சிங்கள மொழிச்சட்டமும் பௌத்த மதச் சட்டமும் நடைமுறைக்கு வந்தது. இலங்கையில் தனிச் சிங்களச் சட்டத்தையும் தேசிய மதமாக பௌத்த சமயத்தையும் பிரகடனப் படுத்திய பண்டாரநாயக்கா பிறப்பில் ஓர் கிறிஸ்தவர் ஆவார். இவருடைய முழுப்பெயர் West Ridgeway Dias Bandaranaike ஆகும். அடிப்படையில் ஆங்கில மொழியையும் கிறிஸ்தவ மதத்தையும் பின்பற்றிய பண்டாரநாயக்கா தாராளஜனநாயகத்தில் வாக்குகளைப் பெறுவதற்காக இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தியவர் ஆவார். இது பற்றி லீ குறிப்பிடும் போது,

"இவர் பௌத்த மதத்துக்கு மாற்றப்பட்டு சிங்கள மொழிக்கு வீரரானார்." என்கிறார்[3].

பல இனம், மதம், மொழி சார்ந்த மக்கள் வாழ்கின்ற ஓர் நாட்டில் தாராளஜனநாயகத்தை செயற்படுத்துகின்றபோது ஓர் நாடு எவ்வாறு இன, மத, மற்றும் மொழி வேறுபாட்டுக்கு ஊடாக முரண்பாடுகளை ஏற்படுத்தி பொருளாதார அபிவிருத்தியை சீர்குலைக்கும் என்பதற்கு இலங்கையின் அரசியல் நிகழ்வுகள் லீ குவான் யுவுக்கு ஓர் பாடத்தைக் கற்பித்துக் கொடுத்துள்ளது. இன ஒற்றுமைக்கான கொள்கைகளை இலங்கையின் அனுபவத்தில் இருந்து லீ சிங்கப்பூருக்கு வடிவமைத்துள்ளார்.

இலங்கையின் சுதந்திரத்தின்போது இருந்த தரமான மனித வள மேம்பாட்டுக்கான கல்வியைப் பற்றி குறிப்பிடும்போது,

"இது கொழும்பிலும் கண்டியிலும் ஆங்கிலத்தில் கல்வி கற்பிக்கப்படும் தரமான இரண்டு பல்கலைக்கழகங்களைக் கொண்ட கல்வியைக் கொண்டிருந்தது" என்கிறார்.[4]

உண்மையில் இலங்கை சுதந்திரமடைந்த போது இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி சிங்கப்பூரை மட்டும் அல்ல பல குறைவிருத்தி நாடுகளைக் கவர்ந்து உயர் நிலையில் இருந்தது. இலங்கையானது மலேசியா, தாய்வான், தென்கொரியா போன்ற நாடுகளைவிட அபிவிருத்தியில் உயர்ஸ்தானத்தில் இருந்தது.

இருப்பினும் சுதந்திரம் அடைந்து 30, 40 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கையின் அரசியல் பொருளாதார அபிவிருத்தியானது கீழ் நிலைக்குச் சென்றதைப் பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றார்.

இது கடந்த காலங்களில் சிறப்பாகத் தொழிற்படவில்லை. ஒரு உன்னதமான வளம் நிறைந்த நாடு அழிவை நோக்கிச் சென்று கொண்டிருப்பதை அவதானித்தேன். ஒரு மனிதனுக்கு ஒரு வாக்கு என்பது அடிப்படைப் பிரச்சினையையே தீர்க்கவில்லை. அலுவலக மொழி என்பது ஆங்கில மொழியில் இருந்து சிங்கள மொழிக்கு மாற்றப்பட்டதால் 8 மில்லியன் சிங்களவர்கள் எப்போதும் ஆட்சியமைப்பதால் 2 மில்லியன் யாழ்ப்பாணத் தமிழர்கள் தீமையடைந்தார்கள்"[5] என்கிறார்.

3. He had decided on nativism and converted to Buddhism, and had become a champion of the Sinhalese Language. Lee kuan Yew (2011) P.413

4. " It had a relatively good standard of education with two universities of high quality in Colombo and Kandy teaching in English" ........ when Ceylon gained independence ``in 1948, It was the Classic model of gradual evolution of independence" Lee Kuan Yew (2011) P.414

5. ``Alas it did not work out during my over the years, I watched a promising country go to waste. One - man - one - vote did not solve a basic Problem. The Majority of some 8 million Sinhalese could always outvote due 2 million jaffna Tamils who had been disadvantaged by the switch from English to Singhalese as the official Language" Lee Kuan Yew (2011) P.414

## 4. ஜனநாயகத்தின் எதிர்மறையாக தாக்கம்

இலங்கையின் பெரும்பான்மை மக்களுக்குள்ள தாராள ஜனநாயக அரசியல்தான் இலங்கையை அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்றது என்பதை குறிப்பிட்ட லீ, இலங்கைத் தலைவர்கள் இதை 1966இல் ஒப்புக் கொண்டிருந்ததையும் எடுத்துக் காட்டுகின்றார். லீ 1956க்குப் பின்னர் டட்லி சேனநாயக்கா பிரதம மந்திரியாக இருந்தபோது 1966இல் பிரதம மந்திரிகளின் மகாநாட்டுக்காக இலங்கைக்குப் பயணம் செய்துள்ளார். அப்போது டட்லி சேனநாயக்கா இன பேதப்படுத்தல் உட்பட ஜனநாயகத்தில் இருந்த தவிர்க்க முடியாத நிகழ்வுகளை ஒப்புக் கொண்டு இருக்கிறார்.[6]

சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கை அரசியல் சுதந்திரத்துக்குப் பின்னர் சமூகங்களைப் பிளவுபடுத்தி இனஒற்றுமையை ஜனநாயகத்தின் வழி சீரழித்தமை மட்டுமன்றி ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட தொடர்ச்சியான வருமானம் பெற்றுக் கொடுத்த பெருந்தோட்ட பொருளாதாரம் மற்றும் ஏனைய அரச முயற்சிகளை அரசியல்வாதிகள் தங்கள் ஆதரவாளர்களை நிரப்பி வினைத்திறனற்ற நிலைக்கு இட்டுச் சென்றதையும் எடுத்துக் காட்டுகின்றார்.

இலங்கையில் 1957இல் சமஷ்டி ஆட்சி அமுல்படுத்துவதற்கு ஓர் ஜனநாயக வழியில் பயணிக்காமல் சிங்கப்பூர் போன்று மென்மையான சர்வாதிகாரத்தின்படி ஓர் அரசியல் தலைவர் இலங்கையை இட்டுச் சென்று இருந்தால், இலங்கை ஓர் குறிப்பிடக்கூடிய அரசியல் பொருளாதார அபிவிருத்தியை அரசியலில் அடைந்து இருக்கும். தாராள ஜனநாயகம் சிறுபான்மை மக்களை ஓரம் கட்டியதன் விளைவாகப் பல இன முரண்பாடுகளை இலங்கையில் நீடிக்கச் செய்திருக்கின்றது. நீண்டகாலத்தில் இந்த துர்ப்பாக்கிய நிலைமை மோசமடைந்து நாடு அழிவுப்பாதைக்குச் சென்றது. எனவே இலங்கை பிரித்தானிய அரசியல் கொள்கைகளை நேரடியாக இங்கு கண்மூடித்தனமாக அமுல் படுத்தியன் விளைவுதான் இலங்கையின் அரசியல் தோல்விக்கு காரணமாக நாம் எடுத்துக் காட்ட முடியும். பிரித்தானியாவில் பல காலம் பல போராட்டங்களின் பின்னர் கிடைத்த சர்வசன வாக்குரிமையானது இலங்கையில் மிகவும் ஆரம்ப அரசியல் நிலையில் 1931இல் கிடைத்தமைதான் இலங்கையின் பொருளாதாரத்தை உண்மையான நிலைத்து நிற்கக்கூடிய துரித வளர்ச்சியைத் தளமாகக் கொண்ட அபிவிருத்தி வாதத்திலான பொருளாதார அபிவிருத்தியில் (Developmentalism) இருந்து நீங்கி வாக்கு வங்கியை நோக்கிய பங்கீட்டை முதன்மைப்படுத்திய பொது நிதியை சுயநல அரசியலுக்கு பயன்படுத்தும் பொறிமுறைக்கு (Pork Barrel Politics) இட்டுச் சென்று சமூக நலவாதத்தை (Social Democracric welfarism) முதன்மைப்படுத்தியிருந்தது.[7]

## 5. முரண்பாடான அபிவிருத்தி தந்திரோபாயம்

பொருளாதார அபிவிருத்தி ஒன்றுக்கு பங்கீடும் சமூக நலச் சேவைகளும் அத்தியாவசியமான ஒன்றாக இருந்தபோதும் அவை அபிவிருத்தியின் இறுதிக்கட்டத்திலேயே அடையப்பட வேண்டும். அபிவிருத்தியில் பொருளாதார வளர்ச்சியைத்தான் ஒரு நாடு முதன்மைப்படுத்த வேண்டும். சமூக அபிவிருத்தி என்பது இரண்டாம் நிலையில் இருக்க வேண்டும். வேறு ஓர் வார்த்தையில் கூறுவதனால்,

---

6. "... I was Inevitable with democracy and elections" Dudly Senanayake, Lee Kuan Yew (2011), P-414

7. The term pork barrel politics to spending usually refers which is intended to benefit constituents of a politician in return for their political support, either in the form of campaign contributions or votes.

அபிவிருத்தியில் பொருளாதார வளர்ச்சியை (GDP Growth) குதிரை என்றும் சமூக அபிவிருத்தியை (கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்பு, ஏனைய நலச்சேவைகள்) வண்டி என்றும் குறிப்பிடலாம். அபிவிருத்தியில் வெற்றி பெற்ற பல நாடுகளின் அனுபவத்தில் குறிப்பாக சிங்கப்பூரின் அனுபவத்தில் வளர்ச்சிக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றது. குதிரைதான் வண்டியை இழுக்கும். வண்டி ஒருபோதும் குதிரையை இழுப்பதில்லை. வண்டிக்கு முன்னால்தான் குதிரை செல்லும் குதிரைக்கு முன்னால் வண்டி செல்வதில்லை. பொருளாதார வளர்ச்சியைக் கொண்டுதான் சமூக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். சமூக அபிவிருத்தி வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் என்பதற்கு ஓர் உறுதியான கோட்பாட்டு பின்னணியைப் பொருளியலில் காணமுடியாது. இலங்கையின் அபிவிருத்தி செல்நெறியானது குதிரை வண்டியை இழுப்பதற்கு மாறாக வண்டி குதிரையை இழுப்பது போன்றது. இதன் விளைவு இலங்கை மந்தமான ஒரு பொருளாதார அபிவிருத்தியை அடைய முற்பட்டமை ஆகும். பொருளாதார வளர்ச்சியில்லாத சமூக அபிவிருத்தியானது வேரில்லாத மரம் போன்றது. நிலைத்து நிற்காது. இக்கருத்தை இலங்கையின் பெரும்பான்மை புலமையாளர்கள் ஏற்பதில்லை. அவர்கள் இலங்கை உயர்ந்த வளர்ச்சியை அடையாது சுதந்திரம் அடைந்தவுடன் பங்கீட்டுக்குச் சென்றதைப் பங்கீட்டுடன் இணைந்த வளர்ச்சிக்கான அபிவிருத்தி எனக் குறிப்பிடுகின்றனர். இது ஒரு புதுவகையான சிங்களமயமாக்கத்தை நியாயப்படுத்துவதற்கான அபிவிருத்தி கொள்கை ஆகும்.

இலங்கையின் சமூக நல அபிவிருத்தியின் பாதகமான விளைவு பற்றி பிரபல்யமான பொருளியலாளர் ரொபின்சன் அம்மையார் 1960களில் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். இலங்கை சமூக நலச் செலவீடுகளில் அதிகம் செலவு செய்வதற்கான செலவை ஈடு செய்வதற்கு உறுதியான உற்பத்தி அடித்தளத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டது என்றும் இது இலங்கைப் பொருளாதாரத்தை நெருக்கடிக்கு இட்டுச் செல்லும் என்றும் குறிப்பிட்டு இருக்கின்றார்.

''இலங்கை மரத்தை (பொருளாதார வளர்ச்சியை) வளர்ப்பதற்கு முன்னர் அதன் பழத்தை (சமூக அபிவிருத்தியை) சுவைத்து விட்டது'' என்கிறார்.

றொபின்சனின் கருத்தை நோக்குகின்றபோது இலங்கையின் சமூக நலச் செலவீடுகளின் வழியான அபிவிருத்தியின் பெறுபேற்றை எடைபோட முடியும். இச்சமூக நல செலவீடுகளின் வழி இலங்கையின் பௌதிக வாழ்க்கைப் பண்பு சுட்டெண் ஜப்பானை அண்மித்துவிட்டது. இலங்கை இதை அடைவதற்கு ஜப்பானைப் போன்று பொருளாதார வளர்ச்சியைப் பெறவில்லை என்பதற்கு அப்பால் இந்த மனித வள மேம்பாட்டின் தரத்தை ஜப்பானுடன் ஒப்பிட முடியும். இலங்கையில் ஒரு தொழிலாளியின் உற்பத்தித்திறன் ஜப்பானின் ஒரு தொழிலாளியின் உற்பத்தித் திறனுக்கு அண்மித்துவிட்டதா? என்பது கேள்விகுறிதான். எனவே சமூக நல அபிவிருத்திக்கான பொருளாதார வெளியீட்டை இலங்கை அடித்தளமாகப் பெறவில்லை என்பதற்கு அப்பால், இலங்கையின் சமூகநல செலவீட்டின் அடிப்படையிலான மனித வள மேம்பாட்டின் தரம் அரசியல்வாதிகளின் சுயநல அரசியலுக்காகப் பலிகடா ஆக்கப்பட்டது என்பது தெளிவாகின்றது.

### 06. அரச தொழில் முயற்சிகள்

இலங்கையின் ஜனநாயகம் வழிசார்ந்த பொருளாதார அபிவிருத்தியானது இலங்கையின் அரச தொழில்முயற்சிகளை நட்டத்தில் பல ஆண்டுகளாக இயங்கச் செய்துள்ளது. அரசியல்வாதிகளின் ஒவ்வொரு அரசியல் தேர்தல் வெற்றியிலும் பதவிக்கு வந்த பின்னர் அரச தொழில் முயற்சிகளைத் தங்களின் ஆதரவாளர்களுக்கு தொழில்

வழங்கி சேவையாற்றும் ஓர் மடமாக மாற்றினார்கள். அரசியல் மயப்படுத்தப்பட்ட பொதுத்துறை முதலீடுகள் மூலம் வருடா வருடம் இலங்கைக்கு பல மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டது, ஏற்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்நட்டத்தின் மத்தியிலும் அவற்றைப் புனரமைத்து மீளக் கட்டியெழுப்புதற்கு இலங்கையின் ஜனநாயக அரசியல் இடம்கொடுக்கவில்லை. வெற்றி பெற்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அரசுக்கு வருமானத்தை ஈட்டித்தருகின்ற போக்குவரத்து, மின்சாரம், தொலைத்தொடர்பு, வீடமைப்பு, உயர்கல்வி என்பன இலங்கையில் அரசுக்கு கடன்சுமையை ஏற்படுத்தும் ஓர் பாரிய தொழில்முயற்சிகளாக மாற்றமடைந்துள்ளது.

லீ தனது இலங்கைப் பயணத்தில் இதை நேரடியாகக் கண்டுள்ளார். இலங்கையின் புகையிரத போக்குவரத்துக்கான மூலதனம் பிரித்தானியரால் இடப்பட்டது. இந்த அரச தொழில் முயற்சியை அரசின் பிரதான வருமான மூலமாக மாற்றுவதற்குப் பதிலாக அரசுக்கு கடன் சுமையை ஏற்படுத்தும் தொழில்முயற்சியாக அரசியல்வாதிகள் மாற்றியுள்ளனர். லீ கொழும்பில் இருந்து நுவரெலியாவில் புகையிரதத்தில் பயணித்துக் கொண்டிருக்கும்போது புகையிரத சேவையின் தரம் மோசமாக இருந்ததை எடுத்துக்காட்டியுள்ளார்.[8]

புகையிரதத்தை விட்டு விரைவாக உல்லாச விடுதிக்குச் சென்றார். விடுதியானது முன்னாள் பிரித்தானிய ஆளுநரின் மலைநாட்டு வாசல்தலமாகும். இது முன்னர் நன்றாக ரோஜா மலர்கள் நிறைந்ததாக பராமரிக்கப்பட்டிருந்தது. ஆங்கில மாளிகையாக (English woodland) குறிப்பிடக்கூடியளவுக்கு அழகாக இருந்தது. தற்போது இது மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு மிகக் கீழ் நிலையில் இருந்தது. இவ்வாறு ஆங்கிலேயர் எங்கள் நாட்டின் வளங்களைச் சுரண்டிச் சென்றாலும் அவர்கள் உருவாக்கிய எத்தனையோ தொழில்முயற்சிகளை அரசியல்வாதிகள் இலங்கையில் நாசப்படுத்தியுள்ளனர். இலங்கையில் கோட்டை புகையிரத நிலையம் சுதந்திரம் அடைந்து 65 ஆண்டுகள் நீங்கியும் ஆங்கிலேயரால் இடப்பட்ட கூரை மற்றும் தரை மேடைகளைக் கொண்டமைந்து காணப்படுகின்றது. நுவரெலியாவில் இரவைக் கழித்து லீ அங்கு வேலை செய்த சிங்கள ஊழியர் ஊடாக நாட்டின் துர்ப்பாக்கிய நிலையை எடுத்துக்காட்டுகிறார்.[9]

கண்டியில் பல்கலைக்கழகத்தில் தன்னை கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தின் வெளியீடு என அவர் அணிந்திருந்த கழுத்துப்பட்டி மூலம் அடையாளப்படுத்திக் கொண்டிருந்த துணைவேந்தரைப் பார்த்து லீ

*"வேறுபட்ட மூன்று மொழிகளில் (சிங்களம் - சிங்களவர், தமிழ் - தமிழர், ஆங்கிலம் - ப்பேசர்)"*

*வெளியேறுகின்ற என்ஜினியர்கள் ஓர் பாலத்தை எப்படிக் கட்டி முடிப்பார்கள்*[10]

எனக் கேட்டார். அதற்கு உபவேந்தர் "இது மந்திரிகளைக் கேட்க வேண்டிய ஓர் அரசியல் வினா என்றார்."

பெருந்தோட்டத் துறையும் நன்றாக முகாமை செய்யப்படாமல் அழிவை நோக்கிச் சென்றதை 1966இல் லீ அவதானித்து இருக்கின்றார். பிறர் உருவாக்கிக் கொடுத்ததை

8. I was a most intrusive lesson on what had happned after in dependence. The food on the train in a special carriage was poisonous. The crab badly contaminated and stank Lee Kuan Yew (2011), P.415

9. At dinner, a wise and sad - looing elderly Sinhalese explained that what was happened was inevitable with popular elections. The sinhalese wanted to be dominant race, They wanted to take over form the British as managers in the tea and Coconut plantations and from the Tamils who were the senior civil servants Lee kuan yew (2011), .415

10 மேலது ப. 415

நன்றாகப் பராமரித்து வருமானத்தைப் பெறாத இலங்கை, உற்பத்தியைப் பெருக்கக்கூடிய புதிய முதலீடுகளை எப்படிச் செய்ய முடியும். இலங்கையில் இன்று பெருந்தோட்டத்துறை மீள்நடுகை இல்லாமல் மற்றும் நன்றாகப் பராமரிக்கப்படாமல் மிகவும் குறைந்த அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்றது.[11]

இலங்கை இவ்வாறு அரசியல்வாதிகளால் ஜனநாயகம் மற்றும் அபிவிருத்தி என்ற போர்வையில் சின்னாபின்னமாகிக் கொண்டிருந்தபோது சிறீமா பண்டாரநாயக்க இலங்கையின் பெயர் சிலோன் என இருப்பதுதான் அதிர்ஷ்டமில்லை எனக்கூறி இலங்கையை சிறி லங்கா என மாற்றினார். நிலைமை முன்னர் இருந்ததைவிட மோசமாகச் சென்றது.

**7. J.R.ஜெயவர்த்தனா பற்றிய லீயின் பார்வை**

இலங்கையின் அடுத்த அரசியல் தலைமைத்துவமான, இலங்கையின் சிங்கள மொழி மற்றும் பௌத்த மதம் மீது சுய நல அரசியலுக்காக அன்பு செலுத்திய J.R.ஜெயவர்த்தனா கூட ஓர் கிறிஸ்தவனாகவே பிறந்துள்ளார்.[12] இவர்தான் இலங்கையின் இன முரண்பாட்டை இன யுத்தமாக மாற்றிய அரசியல் தலைவர் ஆவார். இவருடைய பொருளாதார அபிவிருத்தி முகாமை பற்றி லீ குறிப்பிட்டுள்ளார்.

முதலாவதாக ஜெயவர்த்தனாவின் இன முரண்பாடு மற்றும் யுத்த விடயங்களுக்கு அப்பால், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி முகாமைத்துவத்தில் கூட இத்தலைவரை ஓர் சிறந்த தலைவராகக் கொள்ள முடியுமா? என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. ஓர் பொருளாதாரம் மூடப்பட்ட பொருளாதாரமாக இருந்து திறந்த பொருளாதாரமாக மாறுதல் என்பது பல படிநிலைகளைக் கொண்டதாகும். இலங்கை 1978இல் தாராளமயமாக்கத்தை உள்வாங்குவதற்கான பக்குவத்தைக் கொண்டிருந்ததா? என்பது கேள்விக்குறியாகும். இலங்கையின் பொருளாதாரம் J.R ஜெயவர்த்தனா கொண்டுவந்த திறந்த பொருளாதார விடயங்களை உள்வாங்கக்கூடிய பக்குவத்தை அடைவதற்கு முன்னர் திறந்து விடப்பட்டமை ஓர் சாபக் கேடாக அமைகின்றது. அதுவும் கடுமையான கட்டுப்பாடுகளுக்குப் பின்னர் இலங்கைப் பொருளாதாரத்தை திடீர் என அறுவைச் சிகிச்சை மாதிரியான தாராளமயமாக்கல் ஓர் சிறந்த பொருளாதார அணுகுமுறையல்ல என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பல குழந்தைப் பருவ கைத்தொழில்கள் போட்டியை எதிர்கொள்ள முடியாமல் அழிவடைந்தன. இலங்கை ஓர் விவசாய நாடு ஆகும். பிரித்தானியர் விட்டுச் சென்ற பெருந்தோட்டத்தை நன்றாகப் பராமரித்து அதன் வழி கிடைத்த அந்நியச் செலாவணியை கைத்தொழில்துறை மற்றும் ஏனைய உள்கட்டுமானங்களிலும் முதலீடு செய்யப்படாது, இலங்கை திடீரென ஓர் திறந்த பொருளாதார பொறிமுறைக்கு மாறுதல் என்பது 75 சதவீதமான விவசாயத்துறையில் தங்கியிருந்த மக்களை ஏமாற்றுவதாகும். இலங்கையில் உள்நாட்டு விவசாயம் மூலம் வெளிநாட்டு உணவு இறக்குமதிகளை கட்டுப்படுத்தலாம். அதாவது நெல், மரக்கறி, பழவகைகள், ஏனைய தானியங்களை உற்பத்தி செய்து அதன்வழி ஓர் விவசாய புரட்சிக்குப் பின்னர் கைத்தொழில் புரட்சியை உலகில் பல நாடுகள் அடைந்தது போன்று இலங்கையும் அடைந்து இருக்கலாம். இப்படியான ஒரு அணுகுமுறையை விடுத்து J.R.ஜெயவர்த்தன கைத்தொழில் மயமாக்கத்துக்குச் சென்றமை பொருளாதார

11. ``Without strict discipline, The tea puckers were piciking not only young shoots, but also full - grown leaves which would not brew good tea. There coconut plantation... also suffered. It was said The old Sinhalese, The price people had to pay to learn how to run the country" Lee Kuan Yew (2011), P.415

12. Junius Richard Jayawardene

அபிவிருத்தியில் ஓர் கேலிக்கூத்தாகும். விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் வெளிநாட்டு உதவிகளைப் பெற்று உலர்வலய குடியேற்றத் திட்டங்களுக்கு வாரி இறைத்து சிங்கள குடியேற்றங்கள் மூலம் இனமுரண்பாட்டுக்கு வித்திட்டு விவசாயத்துறையை என்றுமே அரசியல்வாதிகளில் தங்கியிருக்கும் ஒரு ஏழ்மையான துறையாக வைத்துக்கொண்டு திறந்த பொருளாதாரத்திலான கைத்தொழில் துறை அபிவிருத்திக்கு சென்றது இரண்டு துறைகளையும் சீரழிக்கின்ற நடவடிக்கை ஆகும்.

J.R.ஜெயவர்த்தனா அரசியலில் மட்டும் அல்ல, பொருளாதாரத்திலும் பலவீனமான ஓர் தலைவர் என்பதை லீ குறிப்பிட்டு இருக்கிறார். J.R.ஜெயவர்த்தனா ஓர் விமான சேவையை உருவாக்க விரும்பினார். புதிய விமான சேவை என்பது ஓர் அரசியல் தலைமையின் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை ஓர் குறிகாட்டியாக பலரால் பார்க்கப்பட்டது. அந்தக் காலத்தில் சிங்கப்பூர் விமான சேவை இலங்கையைச் சேர்ந்த J.R. ஜெயவர்த்தனவின் உறவினரான ஓர் சிறந்த கப்டினை விமான ஓட்டியாக வைத்திருந்தது. J.R.ஜெயவர்த்தனா லீஐப் பார்த்து அந்த கப்டினை தனது சேவைக்கு விட்டுத்தந்து விமான சேவை தொடங்குவதற்கு உதவி செய்யும்படி கேட்டிருந்தார். இந்தக் கப்டின் பின்னர் J.R.ஜெயவர்த்தனா தொடங்கிய விமான சேவையின் (Ari Lanka) தலைவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஓர் நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியல் தலைவர் ஓர் விமான ஓட்டியைக் கொண்டு விமான சேவையைத் தொடங்க முற்பட்டமை இவருடைய பொருளாதார அபிவிருத்தியின் பலவீனத்தை எடுத்துக் காட்டுகிறது. இலங்கையில் இருக்கின்ற வளங் களைப் பயன்படுத்தி திறமையாளர்களை உள்வாங்கி நாட்டை விவசாயம், கைத்தொழில் என முன்னேற்றுவதை விடுத்து, ஓர் விமான சேவையைத் தொடங்குவது என்பது இலங்கை அப்போது இருந்த நிலையில் தேவையா? என்ற வினா எழுகின்றது. ஓர் அபிவிருத்தி குறித்த நாட்டுக்கு குறித்த காலப்பகுதியில் குறித்த பொருளாதார நிலையில் தேவையா? என்பதைக் கவனத்தில் கொள்ளாது ஏதோ மற்றவர்கள் செய்கிறார்கள் நாங்களும் என்ன விலை கொடுத்தாவது அதை நமது நாட்டிலும் இணைக்க வேண்டும் என வேண்டுவது ஓர் சிறந்த தலைமைத்துவத்தின் பண்பு அல்ல. இத்தலைமைகள் நாட்டுக்கு அபிவிருத்தி செய்வதை விடுத்து தமக்கும் தம்மைச் சுற்றி உள்ள கூட்டத்தினருக்கும் ஏதாவது வாய்ப்புக்களை அபிவிருத்தி என்ற போர்வையில் கொடுக்கும் நோக்கத்துக் காகவே பல அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி நாட்டின் அபிவிருத்தி என்ற பெயரில் அரசியல்வாதிகளை சார்ந் தோர்களை வாழ வைப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இந்நோக் கத்துக்காகவே பல அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி நாட்டின் வளங்களை வீண்விரயம் செய்கின்றனர். J.R. ஜெயவர்த்தனாவுக்கு இதில் உள்ள பிரச்சினைகளை எடுத்துக்கூறினார்.[13] இவர்கள் எப்படி அரசியலில் நிலைத்து இருக்கலாம் என்ற, அரசியல் கலை தெரிந்த தலைவரே ஒழிய மாறாக எப்படி நாட்டை அபிவிருத்தி செய்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம் என்பதை தெரியாதவர்கள்.[14]

13. "Would I release him of course, but how could an air line pilot run an airline? It wanted Singapore airline to help we did. I advised him that an Airline Should not be his priority because it required to many talented and good administrators to he needed there for irrigation, agriculture, housing, industrial promotion and development, ands so many other projects An Airline was a glom our project, not of great value for developing Sri Lanka. But he insisted". We helped Lee Kuwan yew (2011), P.416

14. Just as chiang and other military and kuominatang officials in Taiwan recognized "that economics matters required skilled specialists" in South Korea an economically - aware and technically trained elite was pivotal. By contrast, almost everywhere else in post - colonial Asia, leaders "seldom had technical or specialized training of any sort . They were generalists, skilled primarily in the art of politics. The new leaders rarely sought counsel from trained economists, scientists, and technicians. For example, in Indonesia, Sukarno's" immense oratorical talent and his great charisma... were not complemented by the ability to recognise and use good economic advice The acceptance of "high quality economic policy advice" now said to be a feature of Indonesian development did not become characteristic until the post-1966 New Order. Economic realism among Singapores leadership from the start opened the way to successful economic planning. Huff.W.G. (1995).P.1433

சிங்கப்பூரின் குறிப்பாக லீயின் புத்தி மதிகளுக்கு மத்தியிலும் J.R.ஜெயவர்த்தன ஏயர்லங்கா நிறுவனத்தை ஆரம்பித்தார். சிங்கப்பூர் 80 சிங்கப்பூர் ஏயர்லைன் நிறுவனத்தின் ஊழியர்களை 2 வருடத்துக்குக் கொடுத்தும், உலகளாவிய ரீதியில் சிங்கப்பூர் ஏயர்லைன்சின் விற்பனைப் பிரதிகளை ஈடுபடுத்தியும் புதிய ஊழியர்களுக்கு பயிற்சி கொடுத்தும் உயர்மட்ட முகாமைத்துவத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாக இவ்விமான சேவை நட்டத்துக்குச் சென்றது.

*"எங்களுடைய அறிவுரைகளுக்கு எதிராக விமான ஓட்டியை தலைவராக நியமித்து அவர் இரண்டு பழைய விமானங்களைக் கொள்வனவு செய்து நட்டத்தில் இயங்கியது. லீ(2011)ப.417*

இறுதியாக சிங்கப்பூர் தனது பங்கினை விலக்கிக் கொண்டது. அதற்குப் பின்னர் இவ்விமான சேவை நட்டத்தில் இயங்கி பின்னர் சிறிலங்கன் விமான சேவையாக எமிரேற்ஸ் நிறுவனத்துடன் இணைந்து செயற்படுகின்றது. இன்றுகூட சிறிலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான கடனை அரசாங்கம் பொறுப்பேற்பதாக அறிவித்தும் இந்நிறுவனத்தை எவரும் கொள்வனவு செய்யத் தயாராக இருக்காத அளவுக்கு இது செயற்றிறனற்றுக் காணப்படுகின்றது.

## 8. வீடமைப்புத் திட்டம்

இதேபோன்று சிங்கப்பூரின் வீடமைப்புத் திட்டத்தை மாதிரியாகக் கொண்டு இலங்கையும் 1982இல் வீடமைப்புத் திட்டத்தை உருவாக்கியது. சிங்கப்பூரின் வீடமைப்புத் திட்டம் உலகத்துக்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியபோது இலங்கையின் வீடமைப்புத் திட்டம் இலவச திட்டமாக மாறி அருமையான அரச நிதியை அரசியல்வாதிகளின் ஆதரவாளர்களுக்கு தாரைவார்க்கும் வீட்டுத்திட்டமாக மாறியுள்ளது. சிங்கப்பூரில் அரசாங்கத்தால் வழங்கப்படும் வீடு ஓர் தூய தனியார் பண்டமாகும். இலங்கையில் இது இலவசப் பண்டமாகும். சிங்கப்பூரின் வீடமைப்புத் திட்டத்தில் அரசியல் தலையீடு அல்லது அரசியல் இன பேதப்படுதல்மிகக்குறைவாகும். இலங்கையின் வீடமைப்புத் திட்டத்தில் இவைகள் உச்சநிலையில் இருந்துள்ளன. சிங்கப்பூரின் வீடமைப்புத் திட்டம் சட்டம், ஒழுங்கு, சூழல் விதிகளை மிகவும் நேர்த்தியாகப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது. இலங்கையில் அவ்வாறான விதிகள் எழுத்தில் மட்டும் இருக்கின்றன. ஆமர் வீதியில் ஓர் தொடர் மாடிமனையையும் சிங்கப்பூரில் ஓர் தொடர் மாடியினையும் ஒப்பிடுவதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான வேறுபாட்டினை அறிந்து கொள்ள முடியும்.

## 09. சுதந்திர வர்த்தக வலயம்

இலங்கையில் J.R.ஜெயவர்த்தனா சிங்கப்பூரின் நிலப்பரப்பைவிட சற்று சிறிய நிலப்பரப்பில் ஓர் பெரிய சுதந்திர வர்த்தக வலயத்தை உருவாக்கினார். இறுதியாக இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயத்தைவிட, சிங்கப்பூரின் சுதந்திர வலயங்கள் பன்மடங்கு பொருளாதார நன்மைகளை மக்களுக்கு ஏற்படுத்தி இருக்கின்றன.

சிங்கப்பூரின் சுதந்திர வர்த்தக வலயங்கள் அதீத வெற்றியைப் பெற்றமைக்கு அவர்களுக்குக் கிடைத்த வெளிநாட்டு முதலீடுகளின் அதிகரிப்பு காரணமாகும். சிங்கப்பூர் அரசு ஓர் அரசியல் கட்சி என்றுமே தலைமை தாங்கக்கூடிய வகையில் அரசியல் பொறிமுறையை ஓர் மென்மையான சர்வாதிகாரத்தின் மூலம் ஏற்படுத்தியது. நல்லாட்சி, இன ஒற்றுமை, ஊழல் இன்மை போன்ற பல விடயங்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களை சிங்கப்பூரை நோக்கி இழுத்தது. இலங்கையில் இவ்வாறான ஓர் சூழலை J.R.ஜெயவர்த்தனா ஏற்படுத்துவதற்கு மாறாக அரசியல் மற்றும் சமூக ஸ்திரமற்ற தன்மையை மென்மேலும் அதிகரிக்கச் செய்தார். இது J.R.ஜெயவர்த்தனாவின் தலைமைத்துவப் பண்பில் இருந்த இன ரீதியான காழ்ப்புணர்வு

ஆகும். 1958இல் பண்டா-செல்வா உடன்படிக்கைக்கு எதிராக கண்டிக்கும் கொழும்புக்கும் இடையில் பாதயாத்திரை சென்று இனவாத அரசியலை வளர்த்த அரசியல் தலைமைத்துவத்தால் எவ்வாறு ஓர் இன ரீதியான ஒற்றுமையை வெளிப்படுத்தி வெளிநாட்டு முதலீடுகளை வரவழைக்க முடியும். மாறாக இத்தலைமைத்துவம் நாட்டின் இனபேதப்படுத்தலைத்தூண்டுவதன் ஊடாகவே நாட்டின் ஆட்சியதிகாரத்தைத் தொடர்ந்தது. 1983இல் இடம்பெற்ற கறுப்பு யூலைக்கலவரம், யாழ்ப்பாண பொது நூலக எரிப்பு போன்ற பல விடயங்கள் J.R.ஜெயவர்த்தனாவின் தலைமைத்துவத்தின் தரத்தினைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. விடுதலைப்புலிகளின் எழுச்சியும் அதன் அடிப்படையிலான ஆயுதப் போராட்டமும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சிவப்பு சமிஞ்சையைக் கொடுத்தன. இதன்காரணமாக வெளிநாட்டு முதலீட்டு வலயங்களில் முதலீடுகள் எதிர்பார்த்த அளவைவிட, குறைந்தன. புதிய கைத்தொழில் மயமாக்க கொள்கையானது இலங்கையில் புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்கத் தவறிவிட்டது. மறுபுறத்தில்தாராளமயமாக்கம் உள்நாட்டு விவசாயத்துறையை மோசமாகப் பாதித்தது. கிராமிய மக்களின் சீவனோபாய வருமானம் வீழ்ச்சியடைந்து வேலையின்மை அதிகரித்து வறுமையும் அதிகரிக்கத் தொடங்கியது. இது தென் பகுதியில் ஜனதா விமுக்தி பிரமுன (JVP) மூலமான இன்னொரு ஆயுதப் போராட்டத்தையும் தூண்டியது. எனவே இலங்கையில் J.R. உருவாக்கிய சுதந்திர வர்த்தக வலயங்கள் எதிர்பார்த்த இலக்கை அடையத் தவறிவிட்டன மட்டுமல்ல அதன் பக்க விளைவுகள் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மீது எதிர்க்கனியமான ஓர் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. இலங்கையின் அழிவுக்குக் காரணமாய் இருந்த யுத்தத்தையும் புலிகளின் பயங்கரவாதத்தையும் உருவாக்கிய பெருமையில் J.R.ஜெயவர்த்தனாவுக்கு அதிக பங்கு உண்டு. உலர் வலய குடியேற்றத் திட்டங்கள் இதில் குறிப்பிடக்கூடிய பங்களிப்பைச் செய்தன[15]. J.R.ஜெயவர்த்தனா ஆரம்பித்து வைத்த பாதயாத்திரையை இன்று மகிந்த ராஜபக்ஷ செய்துள்ளார்.

இலங்கையில் J.R.ஜெயவர்த்தனாவின் பொருளாதார அபிவிருத்திக்கான தந்திரோபாயங்கள் இன யுத்தத்தைத் தவிர்த்து, வடக்கு கிழக்கு மக்களுக்கு அதிகாரத்தை பகிர்ந்து கொடுத்தும் மக்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கு வெளிநாட்டு முதலீட்டு வலயங்களை வடக்கு மற்றும் கிழக்கில் நிறுவி அபிவிருத்தியில் இன வேறுபாட்டைக் காட்டாமல் முன்னெடுத்துச் சென்று இருந்தால் இலங்கை குட்டி சிங்கப்பூராக மாற்றமடையா விட்டாலும் அந்த இலகுக்கான புறச்சூழலும் பின்னணியும் கிடைத்திருக்கும். தூரதிஸ்டவசமாக J.R.ஜெயவர்த்தனாவின் அரசியல் பின்னணி இவ்வாறான அணுகுமுறைக்கு இடம்கொடுக்காமல் அவரை ஏனைய தலைவர்கள் முன்னெடுத்ததற்கு மேலாக இன ஒடுக்குமுறைக்கான கொள்கைகளைக் கடைப்பிடிக்கதூண்டியுள்ளது. அதன் விளைவு இலங்கை அபிவிருத்தியில் பல ஆண்டுகள் பின்னோக்கி நிற்கின்றது.

## 10. ஏனைய தலைவர்கள்

இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியல் தலைமையான பிறேமதாசவை, லீ பல தடைவைகள் சந்தித்து இருக்கின்றார். இலங்கையின் இனமுரண்பாடு மற்றும் இனப்பிரச்சினை (யுத்தம் அல்ல) ஆயுதப் படைகளால் ஒருபோதும் தீர்க்கப்பட

15. " The greatest mistake jeyawardena made was over the distribution of reclined land in the dry zone... unfortunately he gone reclaimed land to the Sinhalese not to the Tamils who had his tropically been the farmers of this dry zone. Dispossessed and squeezed They launched the Tamil tigers. Jeyawardenas private secretary a Jaffna Tamil loyal to him told me this was a crucial mistake P.417

முடியாது என்றும் ஓர் அரசியல் தீர்வுக்கு அணுகுமுறையை தேடும்படி பல முறை லீயால் எடுத்துக் கூறப்பட்டது.[16]

சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்க அரசியல் தீர்வுக்கான வழிமுறைகளைக் கையாண்டார். இதுவும் இறுதியில் வெற்றி பெறவில்லை. மேலும் இலங்கை சுபீட்சம் இல்லாத நம்பிக்கைகள் அற்ற நாடாகச் செல்கின்றது.[17]

இலங்கையில் எந்தத் தலைவரும் அழிக்க முடியாத தமிழ்ப் புலிகளை இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 2009இல் அழித்தார் எனக் கூறப்படுகின்றது. இவரைப் பற்றி லீ குவான் யீ பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> *"ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் இலங்கை மகிழ்ச்சியான ஐக்கியப்பட்ட நாடு அல்ல. ஆம், இவர்கள் தமிழ்ப் புலிகளை இம்முறை தோற்கடித்துள்ளனர். ஆனால் குறைந்த ஆற்றல் உள்ள சிங்களவர்கள் யாழ்ப்பாணத் தமிழர்களை கீழ் நிலைக்குக் கொண்டு சென்று விட்டனர். அவர்கள் தமிழர்களை நசுக்கி அகற்றி விட்டனர். அதனால்த்தான் தமிழர்கள் புரட்சியாளர்களானார்கள். ஆனால் இரண்டு மில்லியனுக்கு மேலான யாழ்ப்பாணத் தமிழர்களை அவ்வாறு இன அகற்றல் செய்வார்கள் என நான் கருதவில்லை. இலங்கையில் சிங்களவர்கள் இருந்த காலத்தில் இருந்து யாழ்ப்பாணத் தமிழர்களும் வாழ்ந்து வருகின்றனர்.[18]*
> Thomas Plate (2011)

இவர் இலங்கையின் யுத்தத்துக்கு முடிவு கொண்டு வந்த பெருமைக்குரியவர் என தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் புலிகளை அழித்தது கூட சந்தேகத்துக்கு இடமாக இருக்கின்ற போது, இவர் இலங்கையின் இன முரண்பாட்டுக்கு முடிவு காணவில்லை [19]. மாறாக இன முரண்பாட்டை மேன்மேலும் தூண்டுகின்றார். 1957இல் இனப்பிரச்சினையின் தீர்வாக முன்வைக்கப்பட்ட பண்டா-செல்வா உடன்படிக்கைக்கு எதிராக ஜயவர்த்தன கண்டியில் இருந்து கொழும்புக்கு பாதயாத்திரை சென்றது போன்று 2016இல் இவ்வளவு அழிவுக்குப் பின்னரும் மகிந்த ராஜபக்ச கூட்டு அரசாங்கத்தின் நல்லிணக்க முயற்சிகளுக்கு எதிராக கூட்டு எதிரணியாக பாதயாத்திரை சென்றுள்ளார். இலங்கையை 1983க்கு இருந்த நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளார். ஆனால் இலங்கையின் இனமுரண்பாடு 1950களில் உருவாகிவிட்டது. இலங்கையின் சமூக நலச் செலவீடுகள் இன முரண்பாட்டை உருவாக்கியது போன்று தற்போது பாதுகாப்புச் செலவீனமும் இராணுவ மயமாக்கமும் இன முரண்பாட்டை வலுவடையச் செய்கிறது. இலங்கையில் யுத்தம் முடிவடைந்து ஏறத்தாழ ஆறு ஆண்டு கள் நீங்கியும் இனமுரண்பாட்டுக்கான அடிப் படைக் காரணிகளுக்கு இன்னும் பரிகாரம் தேடப்படவில்லை. உலகில் சுவிஸ்லாந்து, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் சமஷ்டி ஆட்சி முறையில் ஒரே நாடாக பல ஆண்டுகள் பயணித்துக் கொண்டிருக்கின்றன. இலங்கையில் இன முரண்பாட்டுக்கான அரசியல் தீர்வுகளைக் கண்டு நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக இன

16. "I met him Ranasinghe premadasa on several occasions in Singapore after he become president and tried to convice him that this that this conflict could not be solved by force of arms a political considered fair by the Jaffna Tamil and rest of world" Lee Kuan Yew (2011), P.417
17. "It is sad that the wonder whose ancient name serendip has given the English language. The word "Serendipity" Lee Kuan yew (2011), P.418
18. President Rajapaksa and Sri Lanka, (Sri Lanka) is not a happy, united country. Yes they have beaten the Tamil Tigers this time, but the Sinhalese who are less capable are putting down a minority of jaffna Tamils who are more capable. They were squeezing them out. Thats why the Tamils rebel. But I do not see them ethinc cleansing all two million-plus jaffna Tamils. The Jaffna Tamils have been in Sri Lanka as long as the Sinhalese. By Prof.Thomas Plate, Citizen Singapore: How To Build A Nation - Conversations with Lee Kwan Yew, Marshall Cavendish, 2011.
19. Plate: "They (the Tigers) will come back, you think?" Lee; " I dont think they are going to be submissive or go away. The present President of Sri Lanka believes he has settledthe problem; Tamil Tigers are killed and that is that."


முரண்பாட்டுக்கான காரணிகள் மேன்மேலும் தூண்டப்படுகின்றன. உதாரணமாக உலர் வலயக் குடியேற்றங்கள் இன முரண்பாட்டுக்கு ஓர் பிரதான காரணமாகப் பலரால் இனங் காணப்பட்டது.

இக்குடியேற்றங்கள் இராணுவத்துக்கான வீடுகள் என்ற திட்டத்தில் வன்னியில் இடம்பெறுகின்றன. சிங்கள மக்களும் வடக்கு மற்றும் கிழக்கில் சில பகுதிகளில் குடியேற்றப்படுகின்றனர். வடக்கு - கிழக்கில் நிலை கொண்டுள்ள இராணுவமும் பொலிசாரும் பல சந்தர்ப்பங்களில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டுவதில் இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸ் என்ற நியதியில் இருந்து விலகி சிங்கள இராணுவம் பொலிஸ் என்ற நிலையில் செயற்படுகின்றனர். உதாரணமாக தம்புளையில் முஸ்லிம் பள்ளிவாசல், அளுத்கம மற்றும் அம்பாந்தோட்டை கிறிஸ்தவ தேவாலயம் மீது 2012 மற்றும் 2014இல் பயங்கரவாதத் தாக்குதல் நடத்திய பெரும்பான்மையின சிங்கள மக்கள் மீது எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இறந்த மக்களின் நினைவுக்காக சுடர் ஏற்றிய மாணவர்களைக் கைது செய்து சிறையிலிட்டு புனர்வாழ்வு கொடுப்பதற்காக வெலிகந்த முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு பிரிப்பு சட்டத்துக்கு முரணானது எனக் கூறி ஓர் மாதத்துக்குள் சட்டத்தின் வழியான தீர்ப்பு மூலம் பிரித்து அமுலாக்கப்படுகிறது. அரச தமிழ்மொழி அமுலாக்கம் சட்டமாகியும் 25 வருடங்கள் கழிந்தும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தமிழர்களின் இன அடையாளங்கள் தமிழ் மாணவர்கள் கல்வி கற்கின்ற தென் பல்கலைக்கழகங்களில் புறக்கணிக்கப்படுவது போன்று வடக்கு கிழக்கு பல்கலைக்கழகங் களில் சிங்கள மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து தமிழ் மாணவர்களை சிறுபான்மை யாக்கி பெரும்பான்மை சமூகங்களின் கலை கலாசார விடயங்களை முதன்மைப்படுத்த அரசு முனைகின்றது. தமிழ் இன அகற்றல் இன நல்லிணக்கம் என்ற பெயரில் அமைதியாக நடைபெறுகின்றது. இவ்வாறு பல சம்பவங்கள் யுத்தத்துக்குப் பின்னரும் இன முரண்பாட்டை மென்மேலும் தூண்டுகின்றன.

## 11. தொகுப்புரை

அனுபவங்கள் மாற்றங்களை ஏற்படுத்து கின்றன. இது உலக வரலாறு. சிங்கப்பூரின் அனுபவங்களை இலங்கைத் தலைவர்கள் தெரிந்திருந்தும் இலங்கையின் கடந்தகால அனுபவங்கள் வாயிலாக இலங்கையில் அரசியல் பொருளாதார மாற்றங்கள் இடம்பெற்றனவா? என்பது கேள்விக்குறியாக தொடர்கின்றது. இலங்கையில் வடக்கு கிழக்குப் பகுதியில் யுத்தம் முடிவடைந்த பின்னர் பல புதிய பௌத்த கோயில்களை இலங்கை இராணுவ பாதுகாப்புடன் முப்படைகள் உருவாக்குகின்றன. எனவே இனம், மொழி, சமயம் போன்றவற்றின் அடிப் படையில் அரசாங்கத்தின் ஆதரவுடன் அரச படைகளின் உதவியுடன் சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப் படுகின்றன மட்டுமல்ல, திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன. பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு அறுதிப் பெரும்பான்மை ஆதரவு இருந்தும் அரசியல் அதிகாரப் பரவலாக்கம் மேற்கொள்ளப்படவில்லை. இவையாவும் தற்போதைய தலைவர்களும் பழைய தலைவர்கள் பின்பற்றிய கொள் கைகளை சற்றுமேலாக இராணுவ மேலாதிக் கத்துடன் செய்து கொண்டிருப்பதை எடுத்துக் காட்டுகின்றன. சிங்கள தலைவர்களின் தமிழ் மக்கள் மீதான அணுகுமுறை மோதகமும் கொழுக்கட்டையும் போன்றது என பலர் அங்கலாய்க்கின்றனர். இலங்கையின் 2012இல் தலா ஒருவருக்கு ஓர் நாள் ஒன்றுக்கான பாதுகாப்புச் செலவு ரூபா 30.12 ஆகும். இது 2013இல் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் ரூபா 40.32 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 30 ஆண்டு யுத்தம் இலங்கையின் அரசியல் தலைவர்களுக்கு எந்தவித அனுபவத்தையும் பெற்றுக்கொடுக்கவில்லை என்பதை இப்புள்ளி விபரங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இலங்கையின் யுத்தம் முடிவடைந்த நிலையிலும் ஓர் நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு பாதுகாப்புச் செலவு ஒரு கிலோ அரிசியின் விலையின் 70 வீதத்துக்கு சமமாகும். இந்நிலையில் இலங்கை ஆசியாவின் அதிசயமாக மாறும் என தலைவர்கள் குறிப்பிடுகின்றனர் இங்கு யாதெனில் என்ன விடயத்தில் அதிசயம் என்பதாகும். ஆசியாவின் அதிசயம் பற்றிக் குறிப்பிடும் தலைவர்கள் இலங்கையை 1978இல் குட்டி சிங்கப்பூராக மாற்றும் இலக்கு தோல்வியடைந்தமைக்கான காரணங்களை இனம்கண்டு அவற்றைக் களைவார்களானால் ஆசியாவின் அதிசயம் என்ற இலக்கு மிக இலகுவாக அடையப்படும் என்பது யதார்த்தமாகும்.



# இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் : வாய்ப்புக்களும் சவால்களும்

# Tourist Industry in Sri Lanka : Prospects and Challenges

வே. கருணாகரன்
பொருளியல் ஆசிரியர்

**அறிமுகம்**

"இந்து சமுத்திரத்தின் முத்து" (Pearl of Indian Ocean) என அழைக்கப்பட்ட இலங்கைத்தீவானது அடிக்கடி நிகழ்ந்த இனக்கலவரங்கள் மற்றும் முப்ப தாண்டு நீடித்த கொடிய யுத்தம் என்பவற்றால் "இந்து சமுத்திரத்தின் இரத்தம்" ஆக மாறியிருந்தது. யுத்த முடிவினைத் தொடர்ந்து சுற்றுலாக் கைத்தொழிலில் வளர்ச்சி ஏற்படத் தொடங்கியது.

நீடித்த சமாதானம் நிலவுமாயின், சிகிரியா, அநுராதபுரம், பொலநறுவை போன்ற உலக மரபுரிமைகள் மட்டுமன்றி, அழகான கரையோரம், இயற்கையின் விந்தைகள் நிறைந்த இயற்கை மழைக்காடுகள் மற்றும் நட்புறவு மிக்க உபசரிப்புக்களைக் கொண்ட மக்கள் சமுதாயத்தைக் கொண்டுள்ள இலங்கையானது உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய ஒரு சொர்க்கமாகும்.

வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித் தருகின்ற பிரதான மூலம் என்ற வகையில் இலங்கையின் பொருளாதாரத்திற்குப் பெரும் பங்களிப்பை வழங்குகின்றது. இன்று சுற்றுலாக் கைத்தொழிலானது உலகில் மிகப் பெரியதும் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றதுமான ஒரு கைத்தொழிலாக விளங்குகின்றது.

எதிர்வரும் வருடங்களில் இலங்கையின் சுற்றுலாத் துறை பொருளாதாரத்தில் முக்கிய

பங்கினை வகிக்குமென எதிர்பார்த்து இலங்கையை ஆசியாவின் முக்கியமான சுற்றுலா மையமாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வகையில் இக்கட்டுரை இரு பெரும் பிரிவுகளாக,

**(அ) வாய்ப்புக்கள்**

1. சுற்றுலாப்பயணிகள் வருகையில் அதிகரிப்பு
2. வெளிநாட்டு செலாவணி வருமானத்தில் அதிகரிப்பு
3. உற்பத்தியில் உயர் வளர்ச்சி
4. தொழில் வாய்ப்புக்களில் அதிகரிப்பு
5. *5 + 1* சுற்றுலா மைய உருவாக்கம்

**(ஆ) எதிர்நோக்கும் சவால்கள்**

ஆகிய உபதலைப்புகளின் கீழ் இலங்கையின் சுற்றுலாத்துறை பற்றி ஆராய்கின்றது.

**(அ) சுற்றுலாக் கைத்தொழில் வாய்ப்புக்கள்**

- இலங்கை சுற்றுலாக் கைத்தொழில் பல பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்கு மத்தியிலும் மோதலுக்குப் பின்னராக 2009 இல் பொருளாதாரத்தின் மிகப் பெரியதும் விரைவாக வளர்ச்சியடைந்துவரும் துறைகளில் ஒன்றாகவும் வருவதற்கு விரைந்த விரிவாக்கத்தையும் பன்முகப்படுத்தலையும் அனுபவித்து வருகிறது.
  - இலங்கைக்கான சுற்றுலா வருகைகள் 2009 இன் 448000 இலிருந்து 2015 இல் 1.8 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது.
  - சுற்றுலாவிலிருந்தான வருமானமும் 2009 இல் ஐ. அ. டொலர் 349 மில்லியனில் இருந்து 2015 இல் ஐக்கிய அமெரிக்காடொலர் 2981 மில்லியனுக்கு பெருமளவில் அதிகரித்து நாட்டின் முன்றாவது மிகப்பெரிய வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளராக வந்து தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருமானத்தைவிட மட்டுமே குறைந்து காணப்பட்டது.
- இந்தியாவில் இருந்தான வருகைகள் கடந்த ஆண்டுகளில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தியிருக்கையில் சீனா ஐக்கிய இராச்சியத்தை மிஞ்சி இரண்டாவதாக வந்ததுடன் ஜேர்மனி மற்றும் மாலைதீவிலிருந்தான வருகைகளும் 2015 இல் அவற்றின் இருப்பை ஏற்படுத்தின. இலங்கை சுற்றுலாக் கைத்தொழில் லோன்சி பிளனற் சஞ்சிகை மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் சண்டே ரைம்ஸ் போன்ற உலகில் பிரபல்யமான ஊடக நிறுவனங்களில் இருந்து அதிகரித்த விருதுகளைப் பெற்று வருகிறது.
- இலங்கை சுற்றுலாக் கைத்தொழில் வளர்ச்சிடையவதற்கான அளவிட முடியாத உள்ளார்ந்த வளத்தைக் கொண்டுள்ளது. இலங்கை உலகின் மொத்த சுற்றுலா வருவாய்களில் 0.2 சதவீதத்தையும் கொண்டுள்ளது. எனவே இலங்கைதற்போது உலகச் சுற்றுலாவில் ஒரு சிறு பகுதியைப் பிடித்துள்ளதால் முன்னால் பாரிய உள்ளார்ந்த வளம் காணப்படுகின்றது.
- உலகப்பயணம் மற்றும் சுற்றுலா சபையால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் படி இலங்கையில் பயண மற்றும் சுற்றுலாத் துறையால் மொ. உ. உற்பத்தி மற்றும் தொழில் நிலைக்குச் செய்யப்பட்ட நேரடி மற்றும் மறைமுக தொழில் நிலை இரண்டிற்கும் நேரடி மற்றும் மொத்தப் பங்களிப்பு மாலைதீவு. கம்போடியா, தாய்லாந்து மற்றும் மலேசியா போன்ற பிராந்திய போட்டியாளர்களைவிட ஒப்பீட்டு ரீதியில் குறைவானதாகும்.
- மரபுரீதியான இயற்கை அழகு, சுகமான காலநிலை, வரலாற்று ரீதியான மற்றும் கலாசார பரம்பரை சொத்து மற்றும் சமய பல்வகை இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் வளர்ச்சி உள்ளார்ந்த வளங்களின் முக்கிய துறைகளாகக் கருதப்படுகின்றது. மேலும் சுற்றுலாவின் வெற்றி நாட்டின் பாதுகாப்பு மற்றும் ஆபத்தின்மை

யில் பெருமளவில் தங்கியுள்ளது. தற்போது இலங்கை எந்தவிதமான பயங்கரவாத அச்சுறுத்தல்களின்றி உலகில் உள்ள ஒரு சில சுற்றுலா சேரும் இடங்களிலேயே காணப்படுகிறது.

- உலக பயண மற்றும் சுற்றுலாச் சபையின்படி மொ. உ. உற்பத்திக்கான பயண மற்றும் சுற்றுலாவின் நேரடிப் பங்களிப்பு வியாபார மற்றும் சுற்றுலா நோக்கங்கள் தொடர்பாக வதிவோர் மற்றும் வதியாதோரால் பயணம் மற்றும் சுற்றுலா மீது குறிப்பிட்ட நாட்டினுள் மேற்கொள்ளப்பட்ட செலவிடலையும் அது போல் நூதனசாலை, தேசிய பூங்காக்கள், சுற்றுலா விடுதிகள், வான் நிறுவனங்கள், விமான நிலையங்கள், பயண முகவர்கள் மற்றும் பொழுதுபோக்கு மற்றும் களியாட்டப் பணிகள்போன்றவற்றுடன் விருந்தினர்களை நேரடியாக இணைக்கும் பயண மற்றும் சுற்றுலாப் பணிகள் மீது அரசால் மேற்கொள்ளப்பட்ட செலவிடலையும் பிரதிபலிக்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பயணம் மற்றும் சுற்றுலாவின் மொத்தப் பங்களிப்பு பொருளாதாரத்தின் மீதான அதன் பரந்த தாக்கங்களையும் (அதாவது மறை முகமான மற்றும் தூண்டப்பட்ட தாக்கங்கள்) உள்ளடக்குகிறது.
- அத்துடன் இலங்கை 1500 கிலோமீற்றர் கரையோரத்துடன் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. எனினும் இதுவரை இதன் உண்மையான உள்ளார்ந்த வளத்தை அடைவதற்கு இது பயன்படுத்தப்படவில்லை. எனவே இலங்கை (கூட்டங்கள், ஊக்குவிப்புக்கள், மாநாடுகள் மற்றும் நிகழ்ச்சி) சுற்றுலா, நலச்சுற்றுலா, சினேகபூர்வமான சுற்றுலா, புதியவற்றை கண்டு பிடிக்கும் சுற்றுலா, பொழுதுபோக்குச் சுற்றுலா, வேளாண்மைச் சுற்றுலா, உல்லாசமான கப்பற் பிரயாணம் மற்றும் ஆழ்கடல் சுற்றுலா, கிராமிய மற்றும் நகரச் சுற்றுலா மற்றும் களியாட்ட சுற்றுலா போன்ற சுற்றுலாவின் முன்பு அறியப்படாத மிகச் சிறிய பிரிவுகளில் உயர் உள்ளார்ந்த வளம் காணப்படுகிறது.
- சுற்றுலாவின் முன்பு அறியப்படாத இச்சிறு பிரிவுகளின் உள்ளார்ந்த வளத்தை அடையும் பொருட்டு தேசிய பரம்பரைச் சொத்து மற்றும் சூழலைப் பாதுகாக்கும் அதேவேளையில் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளை உள்ளடக்கும் அமைப்பு ரீதியிலான உருமாற்றத்திற்கு மேலதிகமாக மிகப்பெரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களில் இருந்து பாரிய அதிகரிப்பு தேவைப்படுகிறது. ஊக்கப்படுத்தும் விதத்தில் அரசின் உத்தேசிக்கப்பட்ட மேல்மாகாண பாரிய அபிவிருத்தி பிரதான திட்டம் 2016 இல் வெளியிடப்பட்டதுடன் 2016 இற்கான அரசின் வரவுசெலவுத் திட்டம் புதிய உள்ளார்ந்த வளம் மிக்க துறைகளிலான நேரடிக் கவனத்துடன் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கான முன்மொழிவுகளை உள்ளடக்கியுள்ளது.

உள்நாட்டு மோதல்கள் முடிவடைந்ததைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுற்றுலா தொழில்துறை செழிப்படைந்து வருவதால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஏற்கனவே இம்மாகாணங்களை நோக்கி படிப்படியாக நகரத் தொடங்கியுள்ளனர். இச் சூழ்நிலையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மோதல் முடிவடைந்ததிலிருந்து 2015 வரை சுற்றுலா அபிவிருத்தி தொடர்பில் முறையே 56 மற்றும் 18 செயற்றிட்டங்கள் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் நிறைவுபெற்றுள்ளன. மேலும், இலங்கை முதலீட்டுச் சபை கற்பிட்டியில் ஒருங்கிணைக்கப்பட்ட சுற்றுலா வாசஸ்தலங்களையும் தெத்துவவில் சுற்றுலா வாசஸ்தலம் மற்றும் பொழுதுபோக்கு அபிவிருத்தி மற்றும் குச்சவெளியில் கடற்கரை சுற்றுலா வாசஸ்தலம் என்பவற்றை அபிவிருத்தி செய்ய முன்மொழிந்திருக்கிறது.

**(01) சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் அதிகரிப்பு**

இலங்கையில் சுற்றுலாப்பயணிகளின் வருகையானது மிகவேகமாகவளர்ச்சியடைந்து வருவதை பின்வரும் அட்டவணை காட்டி நிற்கின்றது.

இவ்வளர்ச்சிக்கு வழிவகுத்த முக்கிய காரணிகளாவன

1. யுத்தம் முடிவுக்கு வந்தமை
2. உட்கட்டமைப்பு விருத்தி

**சுற்றுலாப் பயணிகள் வருகை**

| ஆண்டு | வருகைகள் (ஆட்கள்) |
|---|---|
| 1987 | 182,620 |
| 2008 | 438,475 |
| 2009 | 447,890 |
| 2010 | 654,476 |
| 2011 | 855,975 |
| 2012 | 1005,605 |
| 2013 | 1,274,593 |
| 2014 | 1,527,153 |
| 2015 | 1,798,380 |

**நாடுகள் ரீதியில் சுற்றுலாப் பயணிகள் வருகை**

| நாடுகள் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 126,882 | 171,374 | 176,340 | 208,795 | 242734 | 316,247 |
| ஐக்கிய இராச்சியம் | 105,496 | 106,082 | 114,218 | 137,416 | 144168 | 161845 |
| ஜேர்மனி | 45,727 | 55,882 | 71,642 | 85,470 | 102977 | 115865 |
| பிரான்ஸ் | 35,791 | 44,018 | 47,572 | 64,388 | 78883 | 86126 |
| அவுஸ்திரேலியா | 33,456 | 41,728 | 51,614 | 60,836 | 65252 | 71672 |
| மாலைதீவ | 31,285 | 48,695 | 56,863 | 79,474 | 86356 | 90617 |
| சீனா | | 16,308 | 25781 | 54288 | 128166 | 214783 |

இந்தியா பிரதான சுற்றுலாச் சந்தையாகக் காணப்படுகின்றது. இரண்டாவது, மூன்றாவது, நான்காவது நாடுகளாக முறையே சீனா, ஐக்கிய ராச்சியம் மற்றும் ஜேர்மனி, என்பன விளங்குகின்றன. சீனா, ரஷ்யா போன்ற பாரம்பரியமற்ற சந்தைகளிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. பிராந்தியங்கள் ரீதியில் மேற்கு ஐரோப்பா சுற்றுலாப் பயணிகளின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது.

**(02) வெளிநாட்டுச் செலாவணி வருமானத்தில் அதிகரிப்பு**

சுற்றுலாப் பயணிகள் நாள் ஒன்றுக்கு செலவிடுகின்ற பணத்துடன் அவர்கள் இலங்கையில் சராசரியாகக் கழிக்கின்ற காலத்தைக் கவனத்தில் கொண்டு, சுற்றுலாக் கைத்தொழிலின் ஊடாக இலங்கை ஈட்டிக் கொள்ளக்கூடிய வெளிநாட்டுச் செலாவணியைக் கணிப்பிடக்கூடியதாகவுள்ளது.

**சராசரி ஒரு சுற்றுலாப் பயணி ஒரு நாளில் செலவளித்துள்ள பணம்**

| ஆண்டு | ஐக்கிய அமெரிக்க டொலரில் |
|---|---|
| 2010 | 88 |
| 2011 | 97 |
| 2012 | 103 |
| 2013 | 156 |
| 2014 | 161 |
| 2015 | 164 |

**சுற்றுலா வருவாய்கள்**

| ஆண்டு | ஐக்கிய அமெரிக்க டொலரில் |
|---|---|
| 2012 | 1.0 பில்லியன் |
| 2013 | 1.7 பில்லியன் |
| 2014 | 2.4 பில்லியன் |
| 2015 | 2.9 பில்லியன் |

சுற்றுலாப் பயணி ஒருவர் சராசரியாக இலங்கையில் கழிக்கின்ற காலம் 10 நாட்களாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி மூலங் களில் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு மூன்றாவது இடம் கிடைக்கின்றது.

**2015 இல் வெளிநாட்டுச் செலாவணி வருவாயின் முக்கிய மூலங்கள்**

| **2015** இல் வெளிநாட்டுச் செலாவணி வருவாயின் முக்கிய மூலங்கள் |
|---|
| 1. தொழிலாளர் பணவலுப்பல்கள் |
| 2. ஆடைகளும் புடவைகளும் |
| 3. சுற்றுலா |
| 4. தேயிலை |
| 5. இறப்பர் உற்பத்தி |

இனி வரும் காலங்களில் இதன் முக்கியத்துவம் முன்னேற்றம் அடையும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

**(03) உற்பத்தியில் உயர் வளர்ச்சி**

அண்மையாண்டுகளில் மொத்த உள் நாட்டு உற்பத்தியில் சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துணைத்துறை உயர் வளர்ச்சியைக் காட்டியுள்ளது.

*2011 இல் :- 26.4 %*

*2012 இல் :- 20.2 %*

*2013 இல் :- 22.3 %*

*2014 இல் :- 23.3 %*

*2015 இல் :- 23.2 %*

**(04) தொழில் வாய்ப்பில் அதிகரிப்பு**

சுற்றுலாக் கைத்தொழிலின் பொருளாதார நலன்கள் வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுவதில் மட்டுமன்றி தொழில் உருவாக்கத்திலும் பிரதானமானதொரு மூலமாக இதனைக் கருதலாம். ஹோட்டல்கள் துறை சுற்றுலா முகவர் சேவைகள், பொழுதுபோக்கு சம்பந்தமான தொழில் முயற்சிகள், போக்கு வரத்து வசதிகளை வழங்குதல் ஆகிய துறைகளின் பொருட்டு சுற்றுலாக் கைத்தொழிலினூடாக நேரடி தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. அத்துடன் நேரடியல்லாத தொழில் வாய்ப்புக்களும் குறிப்பிடதக்களவு காணப்படுகின்றன.

| ஆண்டு | நேரடி | மறைமுக |
|---|---|---|
| 2008 | 51,306 | 71,828 |
| 2009 | 52,071 | 72,899 |
| 2010 | 55,023 | 77,032 |
| 2011 | 57,786 | 80,899 |
| 2012 | 67,862 | 95,007 |
| 2013 | 112,550 | 157,600 |
| 2014 | 129,790 | 170100 |
| 2015 | 135,930 | 183506 |

**சுற்றுலா - தொழில் வாய்ப்புக்கள்**

சுற்றுலாக் கைத்தொழிலில் நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்து வருகின்றமை வெளிக்காட்டப்பட்டுள்ளது.

**(05) மையஉபாயம் : சுற்றுலாமைய உருவாக்கம் (Tourism hub)**

மகிந்த சிந்தனையின் கீழ் ஆரம்ப கால ஐந்து மையக் கொள்கை உபாயத்தில் ஆறாவது மையமாக சுற்றுலாத்துறை இனணக்கப்பட்டு தற்போது அதற்கு ஊக்குவிப்புக்கள் அதிகளவு வழங்கப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | கடல் போக்குவத்து மையம் | Naval / Maritime hub |
| 2. | விமான போக்குவரத்து மையம் | Aviation hub |
| 3. | வர்த்தக மையம் | Commercial hub |
| 4. | சக்தி வள மையம் | Energy hub |
| 5. | அறிவு மையம் | Knowledge hub |
| 6. | சுற்றுலா மையம் | Tourism hub |

**(ஆ) சுற்றுலாக் கைத்தொழிலில் எதிர்நோக்கும் சவால்கள்**

எதிர்வரும் வருடங்களில் இலங்கையின் சுற்றுலாத் துறை பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பங்கினை வகிக்குமென எதிர்பார்க்கப் படுகின்றது.

ஆசியாவின் முக்கியமான சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்வதில் இலங்கை பல்வேறு சவால்களை எதிர்நோக்குகிறது.

அவையாவன :-

1. நாட்டில்சுற்றுலாத்துறைக்கு உகந்தசூழலை உருவாக்க வேண்டும். இலங்கை மேற்குலக நாடுகளில் தனது தோற்றப்பாட்டினை பிம்பத்தை (Image) விருத்தி செய்ய வேண்டும் ஒரு சுற்றுலா இடமாகத் திகழ எதிர்பார்க்கும் ஒரு நாட்டிற்கு அந்நாடு பற்றிய உலகளாவிய அபிப்பிராயம் மிகவும் முக்கியமாகும். தற்போது உலக அபிப்பிராயம் மிகவும் பாதகமாக உள்ளது.

2. சந்தையினால் இயக்கிச் செல்லப்படும் தெளிவான சுற்றுலா தந்திரோபாயமானது உடனடித் தேவையாக உள்ளது. இத் தந்திரோபாயம் சந்தை விரிவாக்கத்தை ஏற்படுத்துவதாயும் பரந்த அடிப்படையில் பரவலாக்கப்பட்ட வகையில் முக்கிய சுற்றுலா மையங்களை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டும் அமைய வேண்டும். தற்போதுள்ள அணுகு முறையானது நிரம்பலால் வழி நடாத்தப்படுவதாக உள்ளதுடன் கேள்விப் பக்க போக்குகளுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்காததாகவும் உள்ளது.

3. சாத்தியமான பரந்த வகையினரான சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் வண்ணம் சுற்றுலா மையங்களைச் சென்றடையக் கூடிய வகையில் உட்கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்யக் கணிசமானளவு அரசாங்க முதலீடு அவசியமாகும். அதாவது நெடுஞ்சாலைகள் புகையிரதப்பாதை என்பவற்றை அபிவிருத்தி செய்தல் விமான ஓடுபாதைகளை விருத்தி செய்தல் போன்றன. இதன் பொருட்டு புதிய முதலீட்டாளர்களைக் கவர்வது அவசியமாகும்.

4. எதிர்பார்க்கப்படும் சுற்றுலா வளர்ச்சி தொடர்பாக சுற்றுலா விடுதி அறைகளின் போதுமானதற்ற தன்மை - இலங்கைச் சுற்றலா ஊக்குவிப்பு பணியகத்தின்படி 2016 இல் 20.2 மில்லியனுக்கும் கூடுதலான சுற்றுலாப் பயணிகள் எதிர்பார்க்கப்படுகின்றனர். அத்தகைய உயர் எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கிட்டத்தட்ட 40,000 இலிருந்து 50,000 வரையான அறைகள் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் 2015 இறுதியில் சுற்றுலா விடுதிகள் மற்றும் துணை நிறுவனங்கள் இரண்டிலும் கிட்டத்தட்ட 30,000 அறைகள் மட்டுமே

காணப்படுகிறது. இதன் பொருட்டு புதிய முதலீட்டாளர்களைக் கவருவது அவசிய மாகும்.

5. தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களின் தேவைப் பாடு மற்றும் தொழிலாளர் குடிப்பெயர்வு - விருந்தோம்பல் கைத்தொழிலில் பயிற்றுவிக்கப்பட்ட பல எண்ணிக்கையான இலங்கை மனிதவலு உயர் கூலிகளுக்காக ஏனைய நாடுகளில் தொழிலுக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். சுற்றுலாக் கைத்தொழிலுக்கான கிரமமான மனிதவலு வழங்கலும் இக்கைத்தொழிலில் உயர் உள்ளார்ந்த வளத்துக்குப் பணி யாற்ற போதுமானதல்ல அரசால் மட்டும் தேவையான பயிற்சியை வழங்க முடியாததால் தனியார் துறை யுடனான பங்குடமை சுற்றுலாக் கைத்தொழிலில் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களின் வளர்ந்து வரும் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வ தற்கு அவசியமாகிறது.

6. இலங்கையின் அநேகமான பிரசித்தி பெற்ற சுற்றுலாப் பகுதி சங்கிலியால் போதுமானதற்ற ஆர்வம் மற்றும் கொழும்பு சுற்றுலா விடுதிகளுக்கு விதிக்கப்பட்ட ஆகக் குறைந்த வீதம் வளர்ச்சி யடைந்து வரும் இக்கைத்தொழிலின் பின்னணியில் கடுமையாகப் பரிசீலிக்க வேண்டும்.

7. உயர்ந்தளவில் நடுத்தர அளவில் மற்றும் குறைந்த மட்டத்தில் செலவழிக்கும் சுற்றுலாப் பயணிகளை இலக்கிடும் சுற்றுலா உபாயத்தில் கவனம் செலுத்தல். இலங்கை சார்பு ரீதியில் குறைந்த பணத்திற்கான பெறுமதி சேருமிடமாகக் கருதப் பட்ட போதிலும் அனைத்து வகை சுற்றுலாப் பயணிகளையும் கவர்வதை நோக்கி கொள்கை வழிமுறைகளை நெறிப் படுத்துவது பாதுகாப்பானதாகும்.

8. முறைசாராத்துறையை உள்வாங்கல் - சுற்றுலாக் கைத்தொழிலின் முறைசார்துறை உயர்ந்தளவில் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டதற்கு மத்தியிலும் இக்கைத்தொழிலினுள் குறிப்பிடத்தக்களவு முறைசாரத்துறை தொழிற்படுகிறது. எனவே முறைசார்ந்த துறையினுள் பிந்தியதை உள்வாங்குவதற்கு கவனம் செலுத்துவதன் மூலம் உரிய ஒழுங்கு விதியை இயலச்செய்கிறது. முறைசாராத்துறை சுற்றுலாத் தொடர்பாக பாதுகாப்பு மற்றும் நீதிநெறியை முன்னேற்ற வேண்டியிருப்பதால் இதைச் செய்யத் தவறின் நாட்டின் சாதகமான நற்பெயரைக் குறைவடை யச் செய்யும். மேலும் முறைசாராத்துறை தொடர்பான நம்பத்தகுந்த தரவு இல்லாமையும் கைத்தொழில் தொடர்பான திட்டமிடல் சம்பந்தமாக பிரச்சினைகளையும் உருவாக் கும்.

9. பாரிய உள்ளார்ந்த வளத்தைக் கொண்டுள்ள சீனாவில் இருந்தான வளர்ச்சியடைந்துவரும் சுற்றுலா வருகை களைப் பூர்த்தி செய்யும் ஆற்றல் சுற்றுலாக் கைத்தொழிலிலான தற்போதைய அபிவிருத்திகள் வளர்ச்சியடைந்துவரும் சீனா சுற்றுலாப் பயணிகளின் தேவை யைப் பூர்த்தி செய்வதில் புதிய சவால் களை உருவாக்கியுள்ளது. இங்கு அர்ப் பணிக்கப்பட்ட சீன மொழியிலான தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசை மற்றும் சீன மொழி பேசும் சுற்றுலா வழிகாட்டிகள் போன்றவை தேவைப்படுகிறது.

10. இரவுகளின் எண்ணிக்கையான கணிக் கப்படும் அறைகளிலான சராசரி தங்கும் வீதம் - கடந்த ஆண்டுகளாக 10 விருந்தினர் இரவுகளாக நிலையில்காணப்பட்டது. இது பெரும்பாலும் இலங்கையின் சுற்றுலாச் செயற்பாடுகளின் கிடைப்பனவைப் பன்முகப்படுத்துவதற்கான கொள்கை முன்னெடுப்புத் தேவைப்படுகிறது. இங்கு ஆகக் குறைந்தது இரண்டு வாரங்கள்

கொண்ட சராசரி விருந்தினர் இரவுகளை இலக்கிடும் பொருட்டு ஆழ்கடல் மற்றும் ஆடம்பரக் கப்பல் பயணச் சுற்றுலா, பொழுது போக்குச் சுற்றுலா, களியாட்டச் சுற்றுலா போன்ற சுற்றுலாக் கைத் தொழிலின் பின்தங்கிய துறைகளை நோக்கி கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும்.

11. புதியவற்றைக் கண்டுபிடிப்பதற்கான அணுகு முறைக்கான தேவை - உயர் வேகத்தையுடைய இணையத்துடன் முழுநாட்டையும் உள்ளடக்கும் வீதத்தில் கூகுள்லூன் செயற்றிட்டம் போன்ற புதியவற்றைக் கண்டு பிடிக்கும் செயற்றிட்டங்கள் ஊடாகச் செல்லிட மற்றும் இணையப்பரப்பு எல்லையை அதிகரிக்கிறது. இது இணைப்பு மற்றும் குறிப்பாகச் சுற்றுலாப் பயணிகளுக்கான பாதுகாப்பை அதிகரிக்கும். சுற்றுலா அனுமதி மற்றும் காட்சி வழித்தடங்களில் சிறப்புச் சுற்றுலா தொடரூந்து மற்றும் பேரூந்து விநோதமான புகையிரத வழித்தடங்களில் கேபிள் கார் தரத்திலான குதூகலமான பூங்காக்கள் உள்நாட்டு ஆடம்ப க் கப்பல் பயணம் மற்றும் படகோட்டி சேவைகள் போன்ற பயண அட்டை வசதிகளுடனான உரிய சுற்றுலாப் பயணி சிநேகபூர்வமான போக்குவரத்துப் பணியும் கூடிய சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கான முக்கிய துறைகளாக விளங்கின.

12. மேலும் தனியார்துறையுடன் சேர்ந்து சுற்றுலா சார்ந்த அரச நிறுவனங்கள் உள்ளிட்ட சுற்றுலாக் கைத்தொழிலின் அனைத்து ஆர்வலரை மேற்பார்வை செய்வதற்கு உயர் மட்டத்திலான அரச நிறுவனம் தேவைப்படுகிறது - இதன் மூலம் உயர்மட்ட உபாயங்களைக் கூடிய இசைவுடன் நடைமுறைப்படுத்துவதை அனுமதிக்கிறது. இத்துடன் சிறந்த வீதிப் பாதுகாப்பு மற்றும் உபசாரத்திற்கான சமூக உருமாற்றம் உரிய கழிவகற்றல் பழக்க வழக்கங்கள் மற்றும் முன்னேற்றமடைந்த மனப்பாங்கு மற்றும் சுற்றுலாப் பயணிகளை நோக்கிய கலாசார ஒப்புதல் அழிப்பு சுற்றுலாக் கைத்தொழிலின் வளர்ச்சி மற்றும் நீடித்து நிலைத்து நிற்றலையும். இறுதியாக முழுச் சமுதாயத்திற்கும் மறைமுகமாக உதவும்.

13. தற்போதுள்ள சவால்களுக்கு முகங் கொடுக்கவும் புதிய அபிவிருத்திகளை ஆரம்பிக்கும் பொருட்டு 2016 இற்கான அரசின் வரவுசெலவுத்திட்டம் சுற்றுலாக் கைத்தொழில் சம்பந்தமான பல முன்மொழிவுகளை இனங்கண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக 2035 அளவில் சுற்றுலா வருகை களை 4.5 மில்லியனுக்கு அதிகரிப்பதற்கும் மேல் மாகாணத்தை உயர்ந்தளவில் செலவழிக்கும் சுற்றுலா முடிவிடமாக முன்னேற்றுவதற்கும் அரசின் புதிய மேல்மாகாணத்திற்குரிய பாரிய பிரதானதிட்டமாக உபாயப்படுத்தப்பட்ட நீண்ட காலத்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. வான், கடல் சார்ந்த வர்த்தக மையம் மிக உயர்ந்த மத்திய வர்த்தக மாவட்டம் கைத்தொழில் மற்றும் சுற்றுலா நகரங்கள் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சூழல் சிநேக பூர்வமான இயற்கையான மற்றும் பெருந்தோட்ட நகர மற்றும் பல்புடை மாதிரிப் போக்குவரத்து மையங்கள் போன்ற எண்ணக்கருவான செயற்றிட்டங்கள் என்பன இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலை நேரடியாகவும் மறை முகமாகவும் நன்மையடையச் செய்யக்கூடிய செயற்றிட்டங்கள் சிலவாகும். இப்புதிய உபாயங்கள் மற்றும் முன்மொழியப்பட்ட திட்டம் சுற்றுலாக் கைத்தொழில் முகங் கொடுக்கும் பிரச்சினைகளில் இருந்து விடுபட உதவுவதுடன் அடுத்த தசாப்தத்தினுள் நீடித்து

நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தியை அடையும் பொருட்டு வளர்ச்சிப் பாதையை நோக்கி சுற்றுலாக் கைத்தொழிலை ஒழுங்கு படுத்தும்.

**முடிவுரை**

சுற்றுலாக் கைத்தொழிலுடன் தொடர்புடைய "லோன்சி பிளன்ற் - Lonely planet" எனும் சஞ்சிகையானது "2013 இல் சுற்றுலாவுக்கான மிகச் சிறந்த இடம் இலங்கை - Best Place to Visit in 2013" எனக் குறிப்பிட்டுள்ளது. பிரித்தானிய விமான நிறுவனமான British Airways 2013 இல் சுற்றுலாவுக்கான மிகச் சிறந்த சேரிடம் இலங்கை - Best desti nation to visitin 2013" எனக் குறிப்பிட்டுள்ளது. இவை இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு ஒளிமயமான எதிர்காலத்தைப் பிரதிபலிக்கின்றன. இலங்கைச் சுற்றுலாக் கைத்தொழில் உலகில் பிரபல்யமான ஊடக நிறுவனங்களிலிருந்து அதிக விருதுகளைப் பெற்று வருகிறது. நீடித்த சமாதானமும் சகவாழ்வும் மனிதநேயமும் நாட்டில் தோற்றுவிக்கப்படுமாயின் இலங்கை ஆசியாவின் முக்கியமான சுற்றுலா மையமாக மாறும்.

References :-


1. ROAD MAP 2014 - Monetary and financial sector policies for 2014 and beyond - Ajith Niward Cabral (02.01.2014) CBSL. LK
2. Tourism Research and Statistics - Sri Lanka Tourism Development Authority htm
3. குறிப்பேடு : 2012 நவம்பர் - டிசம்பர் இலங்கை மத்திய வங்கி வெளியீடு பக். 2-9
4. பொருளியல் நோக்கு : மாசி / பங்குனி 2011, மக்கள் வங்கி வெளியீடு பக். 3-38
5. கா. பொ. த உயர்தரப் பரீட்சை - 2013 புள்ளித்திட்டம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்.
6. இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2015 - பக். 161-165



# Enhancing Content Schemata Supportive Strategies (C3S) – A Constructive Approach to $L_2$ Reading Skills.






**V.Paranthaman,**
*Senior Lecturer , English Language Teaching Centre, University of Jaffna.*
Email: van_paran@yahoo.com
(Researcher)



## ABSTRACT

Automatizing $L_2$ readers' Comprehension Monitoring Competence (CMC) is one of the herculean tasks in the field of teaching English as a second language. Facilitating the learner's content schemata is one of the strategies employed by the ELT practitioners to activate, the learner's comprehension monitoring abilities. This paper focuses on the specific role of the content schemata - a type of knowledge which activates or promotes the learners to interact with the content and the themes and sub-themes of the texts they process. The study included 39 first year Engineering students attached to Faculty of Engineering of University of Jaffna. Two stories extracted from Reader's Digest magazines were used for the purpose of this study. The duration of the study was three days. The main objective was to identify whether the activation of various content words and phrases promoted the learner's comprehension monitoring abilities. Initially the students were introduced to a story and some comprehension questions. Their answers were marked and the mean was calculated. The second day of the lesson began with a list of words and phrases taken from another story. The students were instructed to create three different stories, using those words provided in the list.(The real story was not provided). The learners functioning in three groups created three different stories with the content words they interacted with. The real story and the comprehension questions were given during the third day and the answers of the learners were marked and the mean was calculated. The mean obtained by the learners in the second stage was higher than the previous attempt. The gain the

learners achieved was proved significant. It can be concluded that the prior knowledge in content schemata provided a better processing capabilities and the learners are activated in a proper way to comprehend the story successful.

**Keywords:** automaticity, content schemata, comprehension, processing, Schema theory, second language, spotting.

## Introduction

Current research studies related to $L_2$ reading have been strongly rooted in the field of cognitive science which investigates how and in what level text-processing capabilities are utilized by the readers. Cognitive information processing models in reading provide a series of strategies to be employed by the $L_2$ readers. Due to the poor access to text - processing strategies, $L_2$ readers face numerous challenges in comprehending general and academic texts in English.

As a result of this, we have plenty of low - capacity level $L_2$ readers whose comprehension monitoring abilities are not automatized. These readers are exposed to various challenges while processing information given in the text.

Recent studies have brought out the two levels of comprehension, in $L_2$ academic reading, particularly in the undergraduate level.

1. Text model of comprehension or local comprehension- (dealing with linguistic information).
2. Situation model of comprehension or global comprehension(dealing with schematic knowledge).

Models supporting text - model of comprehension demands for a successful automatization of the linguistic skills or the bottom - up processing strategies such as grapho - phonemic awareness, morphological awareness, syntactic discourse and semantic awareness.

On the other hand, situation, model of comprehension emphasizes the activation of the readers' background knowledge (or schema). This paper relies on this second factor which needs closer attention towards the ESL reading research. Because, situation model of comprehension is the real reading. Others are the preparations for reading which are used to fine time the strategies to activate the processing capabilities.

Much has been investigated on the first type of comprehension. However, activating the schematic level (background knowledge) has been largely ignored in the horizons of research studies on $L_2$ reading.

Therefore, this study (action research based on ESL classroom observation) related to the activation of the content schemata was geared upon among the first year undergraduates who were at the time reading for the degree of engineering in University of Jaffna.

Following section of the paper provides a brief literature on Schema and its implications on reading.

## Literature Review

Apart from the learners' language proficiency, there are some other social and connective factors which determine the acquisition of reading. A reader is expected to utilize three level processors to negotiate meaning from the provided discourse of the text.

1. Low-level processors depending on the linguistic competence of the readers, usually drawn from their implicit knowledge.
2. Top-down processors - drawn from readers' vast experience of reading.
3. Schematic processors – based on the readers' paralinguistic knowledge, knowledge about the world and the pragmatic competence of reflecting the stored (implicit) knowledge to the society around (Usually an academic society is targeted by the reader working on academic disciplines, and multiple academic contexts.

Current research studies have outlined and emphasized that a novice academic reader has to automatize all those three levels of processors mentioned above to activate his processing capabilities. These readers have to face immense challenges in developing their zone of reflective skills or capacities (Anderson,1978) which are manifested through academic speaking and writing. Lack of automaticity in the processing or receptive skills will ultimately affect the learners' reflective capacity in various academic contexts. Exposing themselves to vast input related to academic reading and listening is the key step towards sharpening their zone of reflective capacities in any needed academic contexts.

Having the above serious issue as a major set-back for the academic advancement, the research undertaken here provides some models to be practiced among the undergraduates (no voice readers in $L_2$) to facilitate them acquiring some essential processors in academic reading to reach the level of automaticity. Among those three processors mentioned above, the last one, the schematic knowledge is the key factor for this section. Some literature related to Schema theory and automaticity and reading are reviewed here with the purpose of structuring a comprehensive automatic training programme for the undergraduates.

## What is Schema theory?

Readers in any context should posses a knowledge system which facilitates the process of reading any text. Reading has been called a passive activity but in fact involves the reader in much the same way as listening includes the hearer (Adams, 1979). A student learning to read in a second language has the benefit of access to the patterns and information gathered by experience in first language use and from first cultural norms.

Schema theory originated with studies of cognition and developed as computer scientists attempted to produce programmes that mimic human processing (Laurence, 2002) Schemata are the underlying connections that allow new experiences and information to be aligned with previous knowledge (Grabe, 2002). Coherent relationships are required to make sense of text.

The three types of schemata are content formal and abstract. Content refers to clearly evident relationships obvious from a topic. Formal are distant connections based on understanding of generalization and mindset. Abstract involve hidden factors and thematic considerations. All these types are found in any text and a

reader's experience affects interpretation. A reader with good schematic automatization simply interprets the text of complex ideas. Not possessing the proper schema or being unable to activate it leads to inaccurate constructs. (Bargh, J.A. (1988).

Let's now look at some perceptual definitions of Schema.

A strong view of schemata sees them as something influencing the reader's opinion even before a text is read.

According to Anderson, (1977) schemata are higher – level complex knowledge structures that function as 'ideational scaffolding'.

Schemata whether fixed or flexible are a way to account for interpretation and production of discourse (Brown & Yule, 1983).

Logan,G.D (1989) feel schemata as knowledge structures used for understanding what is read.

Carell, P.L defines schema as "the kind of organization that enables it's user to handle certain kinds of tasks more efficiently than would otherwise be possible."

Bartlett (1932) who initiated the term 'Schema' claimed that explicit information in a text is insufficient for the specification of the meaning of the text. Rather, the complete meaning is constructed by combining information from the various sources that comprise the context of the text, e.g prior knowledge, linguistic, situational and task contexts.

Spiro (1984) states that reading comprehension is a constructive process. It is the act of combining information to produce a text's understood meaning that is referred to as construction. He further mentions that "...... of the various impinging contextual factors, a central role belongs to the pre-existing knowledge, the comprehender brings to bear to inform the understanding of a given text.

Availability of supportive background knowledge is necessary for comprehension, and many reading problems may be traceable to mismatches between background knowledge presumed in a given text and that actually possessed by the reader (Spiro, 1980).

**Automatizing schematic knowledge**

Acquiring schema is a life – long process. Following stages have been identified during the process of automatizing schematic knowledge of the reader.

1. Schema acquisition
2. Schema selection
3. Schema instantiation and refinement
4. Schema change and maintenance
5. Schema combination
6. Non – analytic aspects of Schema – based processing.

(Spiro , 1980)

According to Spiro (1980), if a learner is having problems with comprehension, they are caused by a deficiency of requisite knowledge. The only solution for this problem is to build in that knowledge. She further states that availability of appropriate background knowledge is necessary for comprehension, and many reading problems may be traceable to mismatches between background knowledge presumed

in a given text and that actually possessed by the reader. But, schema availability is not a sufficient condition for comprehension. More attention needs to be paid to top-down processing difficulties usually referred as knowledge – based that go beyond schema availability. The opposite to top-down processing is bottom –up processing which is equated with text-based aspects. (Both will be further elaborated in a separate section of this chapter).

It has been understand that various difficulties could result from problems of schema acquisition. In reading, readers usually fluctuate in between availability and unavailability of schema. If schemata are not acquired in great enough quantity, they may tend to be frequently absent (Spiro, 1980). If the schemata tend to be insufficiently general and overly tied to personal experience, they may not be readily enough applicable to a sufficiently wide range of situations.

This is the case with the poor $L_2$ readers in various academic contexts. The level of schemata they acquire from various academic contexts promotes their academic reading. Poor readers due to various inadequate linguistic and learning facilities, are usually refrained from requiring appropriate schematic knowledge.

It is unreasonable and difficult to think that these poor readers will have a pre-packaged knowledge structure for every situation that may be encountered. Schema selection depends on the specific reading situation. The knowledge of utilizing the appropriate schema is automatic, and entirely learner-centred and text-driven. Inaccessibility to relevant schema occurs due to the poor involvements.

In academic reading, the readers have to face numerous discourse complexities. As discourse proceeds, the variables or slots in generic structures must receive specific instantiation (Rumelhart, 1980). Depending on signals from the text and the discourse progress, different schemata will have to be brought to bear at different times. In some cases individual knowledge structures will not suffice for understanding a given part of a discourse. Rather, various schemata will have to be combined.

According to Spiro (1980) schema processing is entirely a hidden activity of the learner, and as teachers and researchers we know very little about how they all work. Comprehension is a kind of problem solving, but we still are in the primitive stages of discovering where the solutions to complex problems come from.

Research findings have recommended that the components of knowledge - based processes must be complemented by further investigation of the composition of the knowledge structures themselves. Readers have to multiply their subject area knowledge and the content through the second language. Efficient representation of knowledge in the various subject area domains will naturally activate schematic processing.

**Criticisms of Schema Theory**

The issue of discourse processing cannot be discussed only with the dichotomy of availability and unavailability of schematic

processing. We must also consider the etiology of an individual's style and how he/she constructs meaning from the text.

The above concept is clearly illustrated by Spiro,(1984).

1. A learner may lack the requisite schema for understanding particular passages. This situation is known as local schema unavailability. On the other hand, a learner may tend to be knowledge – deficient across a range of situations which is referred as general schema unavailability. In later case, a text – based reading style may develop.

   (Most of our second language readers belong to the second category as they are judged as bottom-up or text-based readers).

2. Some readers seem to have a misconception about reading. They think (as the $L_2$ readers) that reading is a bottom –up process, and that top-down, extra – textual activities are inappropriate. Bottom –up based readers are less automatic. They are the ones needed with the training of automaticity).

3. Automatic readers are top-down readers with automated schematic processing. They can dictate and control their own discourse processing style.

While arguing that schema theory is only a loosely generalized theory both Carver (1992) and Sadoski, Paivo and Goets (1991) have described alternative views of mental represent- tations for reading comprehension.

Carver (1992) argued that basic reading processes do not call extensively on arrays of background knowledge as suggested by schema theory because basic comprehension does not require detailed interpretation and learning processes.

At this juncture, one factor has to be analysed.Carver's criticism on schema theory relies on bottom–up readers. They are the ones involved with basic reading processes. In this study we are concerned with the academic readers (second language readers) who have to negotiate with academic discourses which are schematically complex. The readers with appropriate top-down processing styles or automated schematic processing capabilities will achieve their academic targets and goals. The notion of automatizing schemata among the poor $L_2$ academic readers is a 'must' level step towards gaining automaticity in academic reading.

Carver (1992) also admits the above factor later when he impresses that much of the evidence for schema theory involves reading difficult texts and engaging in problem-solving comprehension activities that do not reflect basic reading – comprehension processes.

Logan (1997, 2002) in, his 'Instance theory of automaticity' has proposed that mental representation are made up primarily of memories of past experiences and repeated encounters with similar input.

He argues that readers encounter words, sentences and concepts and create memory traces for them. The information that is then retrieved from memory is not a generalized schema but rather the most recent, the most updated or the strongest set of traces of past memories.

Kintsch (1998) argues that schema representations exist but only in the form of meaning –proposition frames to elaborate the propositional text model and situation models of comprehension. In this view, schemas are not fixed generalized structures but rather variable and messy networks of knowledge that are called up or activated by cues from the active information in working memory. In any given instance, differing sets of knowledge are called up as part of a loose knowledge net. Then the information most relevant to the context being processed in working memory is integrated as support for comprehension.

On the whole, the role of schema theory and the automatization of schematic processing are vital procedures towards activating the bottom-up and top down processors of the readers. It has been clearly supported by theories and models that all these cognitive processors can be automatized through systematic practice and rehearsal. Once these training series are provided, the low proficiency $L_2$ readers' working memory will be further enhanced and more information would be stored in the long term memory and later retrieved automatically during the performance session.

## Key objectives of the study

This micro - study on enhancing content Schemata Supportive Strategies (C3S) was conducted to reach the following objectives.

- to activate the basic schematic knowledge of the readers.
- to automatize the processing of content words in the narrative texts.
- to provide an idea of how background knowledge is utilized in reading.
- to enhance the $L_2$ readers acquiring the essential content schemata supportive strategies to develop their comprehension monitoring abilities.

## Methodology

The study was an action research drawn from a series of ESL reading classroom observations. Thirty students from the first year of engineering faculty were the informants for the study. The duration of the study was three days only.

Following steps were used while the study was navigated.

- Two narrative texts (stories) were extracted from the 'Story Corner' of the magazine 'Readers' Digest'.
- These two stories were dealing with the themes related to adult undergraduate readers.

The entire class was divided into five groups which consist of 06 informants for each. All theses five groups were given the same narrative texts. They were asked to read and answer the questions below the story. The time given to answer those questions was 40 minutes. The task was performed individually.

- Finally their performance was assessed. The mean they obtained was 36.80%.
- A new story on similar nature was used for the second day. Thirty content words taken from this story were given to all those five groups. The story was not issued during the day. Instead of that

the words written on cards were given and all these five groups and they were asked to construct their own stories using those thirty content words taken from the second story.

- At the end of the class, all these five groups presented their own stories. They maximally collaborated those thirty content words to construct their own stories.
- Third day was a post – testing day. During this period, the story from which the content words were used for the second day activity was given individually with reading comprehension questions. Finally the performance was marked individually. The mean obtain was 73.8% .
- The immediate activation session during the second day brought out a surface for the readers to automatize their content schemata supportive strategies through which they were able to comprehend the second story more successfully.

**Variables**

Readers' comprehension monitoring competence is the dependent variable since it is influenced by several text – processing strategies. Here, the independent variable is the content schemata supportive strategies (C3S). There is a strong interaction in between these two variables.

**Recommendation and Conclusion**

From the above findings, it has been evidenced that the activation of C3S has heavily contributed for the rapid automatization of the following text-processing components.

-Readers' background knowledge related to the content words were supported by the appropriate contexts.

Readers were able to negotiate the appropriate meaning of those content words through maximum interaction.

- As a result of this cognitive activation, readers' vocabulary accessing skills increased.
- They were able to infer the correct contexts of those content words during their preparations of their own stories.
- C3S session has led these readers to comprehend the second story for more successfully than the first one.
- C3S increased the discourse monitoring abilities of the readers.
- Readers developed some advanced strategies to improve their situation model of comprehension which lead to global understanding.
- C3S also activates semantic proposition formation. Readers arrive to certain conclusions regarding the meaning of certain words in the story.
- C3S reduced the attentional and cognitive energy of the readers when they saw new words in the story, as these words have been made familiar through C3S session.

Teachers of ESL reading have to prepare their content schematic supportive strategies (C3S) in their own classes before introducing new texts. The same procedure can be followed even for academic reading where the content is much discussed in their routine instructions.

## References

Adams, M.J and Collins, A.M.(1979). "A schema - theoretic view of reading. Norwood N.J. Allex.

Anderson, R.C. (1978). "Schema directed proccsses in language comprehension. New York: Plenum.

Anderson, R.C. et.al (1977). "Frame works for comprehending discourse". American Educational Research Journal 14.

Bargh,J.A., Tota,M.E.(1988). Context - dependent automatic processing in depression: Accessibility of negative constructs with regard to self but not others. Journal of Personality and social Psychology. 54, 925-939.

Bartlett,F.C. (1932). Remembering A study in Experimental and social Psychology. London: New Psychological Linguistics.

Carell,P.L.(1987). Some issue in studying the role of schemata or background knowledge in second language comprehension.

Carver, R.P. (1990). Reading rate: A review of research and theory. New York. Academic Press.

Coyone,J.C.,& Gotlib,I.H. (1983). The role of cognition in depression. A critical appraisal. Psychological Bulletin.

Grabe, W. (2002). Ditemmas for the development of second language reading abilities. Cambridge University Press.

Logan,G.D., (1989). Toward an instance theory of automatization Psychological Review, 95, 492-527.

Perfetti,C.A.,(1994). Psycholinguistics and reading ability. Handbook of Psycholinguistics. New York, Academic Press.

Spiro,R.J., (1984). Individual differences and underlying cognitive processes. Handbook of reading research. New York: Longman.





# உற்பத்தித்திறன் உத்திகளினூடாக உயரிய வாழ்வு

# Better Life through Productivity

உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் நீண்ட காலமாகவே பல்வேறு பொருளாதார முகாமைத்துவ உற்பத்திக் கருத்துக்களுடன் தொடர் புறுத்திப் பேசப்பட்டுவந்துள்ளன. இன்று பல்வேறு நாடுகளும் உற்பத்தித்திறனுக்கு மதிப்பளிக்கின்றன. பல்வேறு தொழிலாளர்களை அவதானித்தால் அவர்களுடைய கல்வித்தரம், தொழிற்றிறன் என்பன ஒரே தரமாக இருப்பினும் அவர்களுடைய உற்பத்தித்திறன், மனோபாவம் என்பனவற்றுள் பல முரண்பாடுகள் உள்ளன. மனிதர்களை முகாமை செய்தல் என்பது மிகவும் கடினமான பணியாகும். உற்பத்தி வளங்களுள் மனித வளமொன்றே நிர்வகிப்பதற்குக் கடினமானதெனப் பல்வேறு முகாமைத்தரத்தினரும் ஒப்புக் கொள்கின்றனர். மனிதவிருப்பங்கள், எண்ணங்களை அறிந்துகொள்வது கடினமாகும். மனிதரது உற்பத்தித்திறனை மேம்படுத்தப் பணியாளர்களது மனோநிலையை அறிந்து ஊக்குவித்தல் மூலமே உற்பத்தித்திறனை மேம்படுத்தமுடியுமென இன்றுள்ள பலமுகாமையாளர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். இன்று உற்பத்தித்திறன் பற்றிப் பேசும் போது தரம், தொழில்நுட்பம், நிறுவனஅமைப்பு, நிறுவனகலாசாரம், மாறிவரும் பொருளாதார சூழ்நிலை, முகாமைக் கண்ணோட்டங்களில் மாற்றம் என்பன பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

அந்தவகையில் உற்பத்தித்திறன் என்பது குறிப்பிட்ட உள்ளீட்டைக் கொண்டு எத்தகைய வெளியீடு பெறப்படலாம் என்பதாகும். இதனடிப்படையில் இவ் எண்ணக்கருவை முதலில் தோற்றுவித்து



**சி. மதீஸ்வரன்**
**BA(Hons), Econ.PGDE,**
**MA(merit)Development Studies.**
அபிவிருத்தி உத்தியோகத்தர்

வழிப்படுத்தியவர்கள் யப்பானியர்களே. இரண்டாம் உலகமகாயுத்தத்தின் பின்னர் யப்பான் அதிவேகமாக கைத்தொழிலை அபிவிருத்தி செய்து கொண்டிருக்கையில் யப்பானில் தொழிற்சாலைகள், பாடசாலைகள், அரசநிறுவனங்கள் என்று அனைத்திலும் உச்சளவு மட்டத்தினை குறிக்கோளாகக் கொண்ட முகாமைத்துவத்தினை எப்பொழுதும் பின்பற்றியுள்ளனர். அந்தவகையிலேயே கொள்கைவகுப்போர், வியாபாரிகள், தொழிலாளிகள், உத்தியோகத்தர்கள், மனைப் பெண்கள், ஆசிரியர்கள்மாணவர்கள் ஆகியோர் இவ் உற்பத்தித்திறன் அடிப்படையைப் பின்பற்றி தம் வாழ்வியலை மேம்படுத்தி உள்ளனர்.

உற்பத்தித்திறனை ஊக்குவிக்கப் பயன்படும் கருவிகளாக நேர்சிந்தனை, 5S, தரவட்டம், Kaizen, நேரமுகாமைத்துவம், Just in Time, தலைமைத்துவம் போன்றவை சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. இதனடிப்படையிலேயே 5S என்ற எண்ணக்கருவானது முகாமைத்துவத்தினை மேம்படுத்த முக்கிய இடத்தை வகிக்கின்றது. நாம் எவ்வாறு காலையில் எழுந்து உரிய ஒழுங்கு முறையில் வேலைகளை ஒழுங்கமைக்கின்றோமோ அதே போலவே அலுவலகங்களிலும் வீடுகளிலும் முகாமைத்துவத்தினைச் சிறப்பாகச் செயற்படுத்த உற்பத்தித்திறன் உத்திகளில் ஒன்றாகிய 5S வழிவகுக்கின்றது. உறுதியான கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்கு அத்திபாரம் எவ்வளவு முக்கியமானதோ அதே போன்றே பலமான நிறுவனமொன்றின் வளர்ச்சிக்கு அத்திபாரமாக 5S முறையினை நடைமுறைப்படுத்தல் அவசியமானதாகும்.

5S முறையினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் குழுச்செயற்பாடு, தலைமைத்துவப் பண்பு, பங்களிப்பு, நேர்சிந்தனை போன்ற பல்வேறு விடயங்களைக் கட்டியெழுப்ப முடிகின்றது. 5S நடைமுறையைப் பின்பற்றிய யப்பான் தமது நாட்டின் மொத்த தேசிய வருமானத்தினை அதிகரித்ததோடு அவர்களின் ஒவ்வொருவரினது வீட்டிலும் வாழ்க்கைத் தரம் உயர்வடைந்தது. இக்காரணத்தினால் இன்றும் சகலரும் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். இந்த நடைமுறையைப் பின்பற்றி இன்று எத்தனையோ நாடுகள் பொருளாதார ரீதியாக உயர்வடைந்துள்ளது. அதேபோல நமது நாடும் இந்நடைமுறையைப் பின்பற்றி பொருளாதார ரீதியாக வலுவடைய வேண்டுமேயானால் ஒவ்வொரு மனிதரது எண்ணத்திலும் சிந்தனையிலும் இவ் எண்ணக்கரு உதயமாகிச் செயற்படவேண்டும்.

5S முறைபற்றி நோக்குவோம்




1. செய்ரி—**Seiri**(தேவையற்றவற்றை நீக்குதல்)

